வெளியீடு 22-3-99 Issued 22-3-99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மே 14, 1998 - தொகுதி 53 - எண் 1

Thursday the 14th May, 1998—Volume 53 - No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

D
V2;1,31'N98.
N98.53.1
219099

14–05–1998

# உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| (i) | தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| (ii) | Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| (iii) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| (iv) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| 1. | ***வினாக்கள்-விடைகள்--*** | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-42 |
| 2. | ***கவன ஈர்ப்பு--*** | |
| | தஞ்சாவூர் நூற்பாலை நிர்வாகம் ஆலையைக் கதவடைப்பு செய்துள்ளதால் தொழிலாளர்கள் பாதிப்பு | 43-47 |
| 3. | ***அறிவிப்பு--*** | |
| | கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்த உறுப்பினர் அவையில் இல்லாததால் எடுத்துக் கொள்ளப்படாதது | 48 |
| 4. | ***அறிக்கைகள் அளித்தல்--*** | |
| | (அ) பொதுக் கணக்குக் குழு | 48 |
| | (ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு | 48 |
| 5. | ***மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி*** | |
| | (அ) கோரிக்கை எண் 24 - தொழில்கள் | 49-155 |
| | (ஆ) கோரிக்கை எண் 53 - தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | |

| | பக்கங்கள் |
|---|---|
| 5. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 49,54,56,70,81, 82,92,94,112-149,150,151 |
| திரு. ப. ரங்கநாதன் | 57-60 |
| *திரு. தங்கம் தென்னரசு | 60-65 |
| *திரு. கே. சுப்பராயன் | 65-72 |
| திரு. ஆர். சிவானந்தம் | 72-75 |
| *டாக்டர் க. கிருஷ்ணசாமி | 75-78 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 78-81,82, 83-84,89 |
| *திரு. என்.ஆர். அழகராஜா | 84-88 |
| *திரு. பி.ஆர். சுந்தரம் | 88-90,91-92, 93,94,95,96,97 |
| *திரு. லா. சந்தானம் | 95,96,97-99 |
| திரு. ஜி.கே. மணி | 99-105 |
| *திரு. டி. மணி | 105-106 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 106-112 |
| 6. அரசினர் தீர்மானம்-- | |
| விதி 32-ஐத் தளர்த்தல் | 156 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 157-158 |




## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன் :
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற்திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா. நா. நேரு :
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம் :
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா :
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :
வனம், சின்கோனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம்.

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :
கால்நடைப் பராமரிப்பு.

22. சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் :
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

| | | |
|---|---|---|
| 6. | **Minister for Agriculture** | .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 7. | **Minister for Public Works** | .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works. |
| 8. | **Minister for Transport** | .. **The Hon. Dr. K. Ponmudi :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| 9. | **Minister for Highways** | .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports. |
| 10. | **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 11. | **Minister for Food, Public Distribution System and Co-operation** | .. **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 12. | **Minister for Milk** | .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |



| | | |
|---|---|---|
| 13. | **Minister for Labour** | .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| 14. | **Minister for Law** | .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits. |
| 15. | **Minister for Handlooms** | .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control. |
| 16. | **Minister for Backward Classes** | .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 17. | **Minister for Forest and Printing** | .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona, Stationery and Printing and Government Press. |
| 18. | **Minister for Housing** | .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 19. | **Minister for Rural Industries and Registration** | .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 20. | **Minister for Information and Publicity** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act. |

| | | |
|---|---|---|
| 21. | **Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. | **Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. | **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. | **Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. | **Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 26. | **Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

திரு. ரா. சேதுநாதன்

திரு. கு. மனோகரன்

திரு. வ. வேலுசாமி

திரு. சி. ஞானசேகரன்

திரு. நா. பெரியசாமி

திரு. முகம்மது கோதர் மைதீன்

**செயலாளர்**

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| *1.* | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| *2.* | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| *3.* | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| *4.* | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| *5.* | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| *6.* | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| *7.* | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| *8.* | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| *9.* | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| *10.* | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| *11.* | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| *12.* | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| *13.* | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| *14.* | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| *15.* | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| *16.* | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |

| | | | |
|---|---|---|---|
| 17. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 18. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 19. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 20. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 25. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 30. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| 31. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 32. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 33. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 35. | திருமதி கே. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 36. | திரு. நா. நடராஜன், பி.ஏ. | .. | தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. | இராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. வி. | .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. | பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. | நத்தம் |
| 19. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |

| | | |
|---|---|---|
| 21. | ஆல்பன், டாக்டர் வே. | .. திருவட்டாறு |
| 22. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 23. | ஆறுமுகம், திரு. தி.ப. | .. திருச்செங்கோடு |
| 24. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 25. | ஆனந்தன், திரு. பால. | .. வந்தவாசி (செ.வ.) |
| 26. | இரகுமான்கான், திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 27. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | .. மேலூர் |
| 28. | இராசமாணிக்கம், திரு. பி. | .. ஒரத்தநாடு |
| 29. | இராசன், திரு. வி. பி. | .. ராஜபாளையம் (செ.வ.) |
| 30. | இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. | .. ஆண்டிமடம் |
| 31. | இராமசாமி, டாக்டர் வை. | .. பண்ருட்டி |
| 32. | இராமசாமி, திரு. கே.ஆர். | .. திருவாடானை |
| 33. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | .. கம்பம் |
| 34. | இராமச்சந்திரன், திரு. சி.இரா. | .. தொண்டாமுத்தூர் |
| 35. | இராமச்சந்திரன், திரு. மா. | .. திருவோணம் |
| 36. | இராமலிங்கம், திரு. ஏ. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 37. | இராமலிங்கம், திரு. செ. | .. திருவிடைமருதூர் |
| 38. | இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். | .. பள்ளிப்பட்டு |
| 39. | இராமஜெயம், திரு. ந.பூ. | .. மயிலாப்பூர் |
| 40. | இராஜ ரெட்டி, திரு. ச. | .. தளி |
| 41. | இராஜேந்தர், திரு. டி. | .. பூங்கா நகர் |
| 42. | இளங்கோ, திரு. கோ. | .. அவினாசி (செ.வ.) |
| 43. | ஈஸ்வரன், திரு. ரா. | .. வாசுதேவநல்லூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 44. | உதயசூரியன், திரு. தா. | .. சங்கராபுரம் |
| 45. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. தஞ்சாவூர் |
| 46. | கணேசன், திரு. ஐ. | .. எடப்பாடி |
| 47. | கணேசன், திரு. கே. சி. | .. ஜெயங்கொண்டம் |
| 48. | கருணாநிதி, கலைஞர் மு. | .. சேப்பாக்கம் |
| 49. | கருப்பசாமி, திரு. சொ. | .. சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 50. | கருப்பண்ண உடையார், திரு. ந. | .. பாபநாசம் |
| 51. | கருப்புசாமி, திரு. டி. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 52. | கன்னையன், திரு. சு. | .. தொட்டியம் |
| 53. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் | .. கிருஷ்ணகிரி |
| 54. | காந்தி, திரு. ஆர். | .. இராணிப்பேட்டை |
| 55. | கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 56. | கிருஷ்ணன், திரு. எஸ். வி. | .. நாங்குநேரி |
| 57. | கிருஷ்ணன், திரு. சி. வெ. | .. வேடசந்தூர் |
| 58. | குண்டன், திரு. டி. | .. உதகமண்டலம் |
| 59. | குத்தாலம் பி. கல்யாணம், திரு. | .. குத்தாலம் |
| 60. | குமாரதாஸ், டாக்டர் தே. | .. கிள்ளியூர் |
| 61. | குழந்தை தமிழரசன், திரு. | .. விருத்தாசலம் |
| 62. | கோதண்டம், திரு. ஏ. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 63. | கோபால், திரு. பா. | .. மேட்டூர் |
| 64. | கோபு, திரு. சி. | .. அணைக்கட்டு |
| 65. | கோமதி சீனிவாசன், திருமதி | .. வலங்கைமான் (செ.வ.) |
| 66. | கோவிந்தன், திரு. ப. | .. தாரமங்கலம் |

| | | |
|---|---|---|
| 67. | கோவிந்தன், திரு. வெ. | .. பேரணாம்பட்டு (செ.வ.) |
| 68. | சக்ரபாணி, திரு. ஆர். | .. ஒட்டன்சத்திரம் |
| 69. | சண்முகம், திரு. கோ. | .. திருப்பத்தூர் |
| 70. | சண்முகம், திரு. சி. | .. ஆலந்தூர் |
| 71. | சண்முகம், திரு. ம. | .. கிணத்துக்கடவு |
| 72. | சந்தானம், திரு. வா. | .. சோழவந்தான் |
| 73. | சந்திரசேகரன், திரு. சி. | .. சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 74. | சந்திரசேகரன், திரு. துரை. | .. திருவையாறு |
| 75. | சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. | .. சமயநல்லூர் (செ.வ.) |
| 76. | சம்பத், திரு. ஏ.ஜி. | .. முகையூர் |
| 77. | சரஸ்வதி, திருமதி ஆர். | .. தாராபுரம் (செ.வ.) |
| 78. | சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. | .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 79. | சாமிநாதன், திரு. மு.பெ. | .. வெள்ளக்கோவில் |
| 80. | சிங்காரவேலு, திரு. வி.பி. | .. வால்பாறை (செ.வ.) |
| 81. | சிவபுண்ணியம், திரு. வை. | .. மன்னார்குடி |
| 82. | சிவராமன், திரு. ஆர். | .. திருப்பத்தூர் |
| 83. | சிவராஜ், திரு. சு. | .. ரிஷிவந்தியம் |
| 84. | சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். | .. பனமரத்துப்பட்டி |
| 85. | சிவானந்தம், திரு. ஆர். | .. ஆரணி |
| 86. | சிவாஜி, திரு. இ.ஏ.பி. | .. திருத்தணி |
| 87. | சின்னய்யா, திரு. வெ. | .. திருமயம் |
| 88. | சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். | .. விருதுநகர் |



| | | |
|---|---|---|
| 89. | சுகவனம், திரு. இ.ஜி. | .. பர்கூர் |
| 90. | சுடலைமுத்து, திரு. அ. | .. போடிநாயக்கனூர் |
| 91. | சுதர்சனம், திரு. டி. | .. பூந்தமல்லி |
| 92. | சுந்தரம், திரு. க. | .. பொன்னேரி (செ.வ.) |
| 93. | சுந்தரம், திரு. ந. | .. காரைக்குடி |
| 94. | சுந்தரம், திரு. பி.ஆர். | .. ராசிபுரம் |
| 95. | சுந்தர், திரு. கே. | .. உத்திரமேரூர் |
| 96. | சுப்பராயன், திரு. கே. | .. திருப்பூர் |
| 97. | சுப்பிரமணி என்கிற சி.சு.மணி, திரு. சி. | .. திருவள்ளூர் |
| 98. | சுப்பிரமணி, திரு. பி.என். | .. ஆற்காடு |
| 99. | சுப்பிரமணியன், திரு. அ.லெ. | .. திருநெல்வேலி |
| 100. | சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | .. மொடக்குறிச்சி |
| 101. | சுரேஷ் ராஜன், திரு. என். | .. கன்னியாகுமரி |
| 102. | செங்குட்டுவன், புலவர் பூ.ம. | .. மருங்காபுரி |
| 103. | செங்கை சிவம், திரு. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 104. | செல்லக்குமார், டாக்டர் அ. | .. தியாகராய நகர் |
| 105. | செல்வம், திரு. ரெ. | .. குளித்தலை |
| 106. | செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. | .. கொளத்தூர் (செ.வ.) |
| 107. | செல்வராஜ், திரு. து. | .. உடுமலைப்பேட்டை |
| 108. | சேகரன், திரு. ஆர்.ஆர். | .. ஓமலூர் |
| 109. | சேதுநாதன், திரு. ரா. | .. திண்டிவனம் |
| 110. | சைதை கா. கிட்டு, திரு. | .. சைதாப்பேட்டை |

111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கு.ர.கோ. .. சேலம்-1
126. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ். வி. .. பேராவூரணி
130. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
131. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
132. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
133. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
134. துரைமுருகன், திரு. .. காட்பாடி



135. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
136. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
137. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
138. நடராஜன், திரு. த. .. செஞ்சி
139. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
140. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)
141. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
144. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
145. நேரு, திரு. கா. நா. .. லால்குடி
146. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
147. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
148. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
149. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
152. பன்னீர்செல்வம், திரு. எம். ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
154. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
155. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
157. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

158. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
159. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
160. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
161. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
162. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
163. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
164. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
165. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
166. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
167. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
171. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
172. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
173. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பென்னாகரம்
178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
179. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



180. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
181. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
182. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
183. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
184. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
185. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
186. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
188. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
189. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
190. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
191. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
192. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
193. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
194. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
195. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
196. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
197. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
198. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
199. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
200. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
201. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
202. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

| | | |
|---|---|---|
| 203. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 204. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 205. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 206. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 207. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 208. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 209. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 211. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 212. வல்லரசு, திரு. பி.என். | .. | உசிலம்பட்டி |
| 213. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 214. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 215. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 217. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 218. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 221. வெங்கடேசன், திரு.ச. க. | .. | மதுராந்தகம் |
| 222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 223. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 225. வேணு, திரு. கி. | .. | கும்மிடிப்பூண்டி |
| 226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 227. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 228. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 229. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 230. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 231. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 234. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 235. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. கே.வி. வெங்கடபதி | .. | அரசு தலைமை வழக்கறிஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 31, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2029**
**1998 மே 14, வியாழக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"பொருள்கருவி காலம் வினையிடனொ(டு) ஐந்தும்*
*இருள்தீர எண்ணிச் செயல்."*

ஒரு காரியத்தில் ஈடுபடுவதற்கு முன்பு, அதற்குத் தேவையான பொருள், ஏற்ற கருவி, காலம், மேற்கொள்ளப் போகும் செயல்முறை, உகந்த இடம் ஆகிய ஐந்தையும் குறையில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள், வினா எண் 501, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**501—**

### பணிமூப்பு அடிப்படையில் விரிவுரையாளர்கள் நியமனம்

***8868—திரு. ப. ரங்கநாதன்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆசிரியர் தேர்வாணையம் மூலம் பணிமூப்பு அடிப்படையில் இளநிலைப் பட்டதாரி, முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களைத் தேர்வு செய்வதுபோல், கல்லூரி விரிவுரையாளர்கள் பணிக்கும் பணிமூப்பு அடிப்படையில் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

[1998 மே 14

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆசிரியர் தேர்வாணையம் மூலம் இளநிலை/முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பணிமூப்பு அடிப்படையில் தேர்வு செய்யப்படுவதில்லை. வேலை வாய்ப்பகத்தில் அவ்வாசிரியர்கள் செய்துள்ள பதிவு முன்னுரிமை அடிப்படையில், அவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ஆசிரியர் தேர்வு வாரியம் நேர்முகத் தேர்வு நடத்தி அவர்களைத் தெரிவு செய்கிறது. கல்லூரி விரிவுரையாளர்களைப் பொறுத்தமட்டில் பல்கலைக்கழக நல்கை நிதிக் குழு நிர்ணயித்துள்ள கல்வித் தகுதிகளைப் பெற்று, இதற்கான திறனாய்வுத் தேர்வுகளில் (Screening Test) தேர்ச்சி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ஆசிரியர் தேர்வு வாரியத்தால் எழுத்துத் தேர்வு/நேர்முகத் தேர்வு நடத்தி, கல்லூரி விரிவுரையாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகளில் ரீடர்கள் பதவிகள் எத்தனை காலியாக உள்ளன? அதேபோன்று விரிவுரையாளர்கள் பதவிகள் எத்தனை காலியாக உள்ளன? எவ்வளவு காலத்திற்குள் அவை நிரப்பப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரியான விடையாக நான் தெரிவிக்க வாய்ப்பு இல்லை. அந்த விவரம் இப்போது என்னுடைய கையில் இல்லை. இருந்தாலும், ஏறத்தாழ 200 ஆசிரியர்கள் தேர்வு வாரியத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தக் கல்லூரிகளில் நியமிக்கப்பட இருக்கின்றார்கள். அது விரைவில் நிறைவேறும் என்று எதிர்பார்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி:

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைநிலை ஆசிரியர்களை சீனியாரிட்டி அடிப்படையிலே தேர்வு செய்வதைப்போல உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு பட்டதாரி ஆசிரியர்கள், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், ஆசிரியர்கள் தேர்வு வாரியத்தின் மூலம் அல்லாமல் சீனியாரிட்டி அடிப்படையிலே தேர்வு செய்ய வாய்ப்பு இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் ஒரு பட்டியலிலே உள்ள



1998 மே 14]

முன்னுரிமை அடிப்படையிலேயே நியமனம் செய்வது என்று சொன்னால், தகுதிகள் உள்ளவர்கள், திறமை உள்ளவர்கள் இன்னும் சொல்லப்போனால் கல்வியை மேம்படுத்தக்கூடியவர்கள் இடம்பெறுகிற வாய்ப்பு மிகவும் குறையும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.ப. ஆறுமுகம்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு சில பாடப்பிரிவுகளுக்கு ஸ்டேட் லெவல் ஸ்கிரீனிங் டெஸ்ட் நீண்ட நாட்களாக நடத்தப்படவில்லை. குறிப்பாக மைக்ரோ பயாலஜி, பயோ-கெமிஸ்ட்ரி, எலக்ட்ரானிக்ஸ் ஆகியவைகளுக்கு விரைவில் ஸ்டேட் லெவல் ஸ்கிரீனிங் டெஸ்ட் நடத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி அடிப்படையில் அந்தத் துறைக்கு ஆலோசனை வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளிலே கெஸ்ட் லெக்ச்சரர்களாகப் பணி புரிகின்றவர்கள், தேர்வு செய்யப்படுகிறபொழுது, அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்துத் தேர்வு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ள அரசிடம் குறிப்பு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெஸ்ட் லெக்ச்சரர் என்பது ஆண்டு முழுவதும் மாத ஊதியத்தில் வழங்கப்படுகிற பதவி அல்ல. 10(ஏ) (1) என்று அழைக்கப்படுகிற தற்காலிக வேலையாகக்கூட அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஒரு வாரத்திற்கு 10, 12 மணி நேரம் அளவுக்குக்கூட வேலை இருக்காது. மணி நேரப் பணிக்கு ஊதியம் வழங்கப்படுகிற ஒரு முறையில் அவர்கள் பணியாற்றுகிறார்கள். அடுத்து யார் அந்தப் பகுதியில் குறிப்பிடத்தக்க பட்டம் உள்ளவர்கள் கிடைக்கிறார்களோ அவர்களை நியமிக்கலாம் என்ற முறை இப்போது இருக்கிறது. மேலும், தேர்வு செய்யப்படுகிறபோது வகுப்புவாரி அடிப்படையிலும், பிரையாரிட்டி உரிமைகள் அடிப்படையிலும் கருதப்பட வேண்டிய கட்டாயமான நிலை இருக்கிறது. இல்லையென்றால் இப்படிப்பட்ட பதவிகளில் எல்லா வகுப்புகளுக்கும்

[1998 மே 14

கிடைக்கவேண்டிய நீதி கிடைக்காமல் போய்விடும். அதோடு பல்கலைக் கழக நல்கை நிதிக் குழு தெரிவித்திருக்கிற விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டியிருக்கிறது.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி விரிவுரையாளர்கள் பற்றாக்குறையைப் போக்கிட அரசு படிப்படியாக பணி நியமனம் செய்து வருகிறது. ஆனாலும்கூட பெரும் அளவு விரிவுரையாளர்கள் பற்றாக்குறை இருக்கிறது. தற்காலிகமாக இதைப் போக்கிட தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஊதியம் வழங்கி விரிவுரையாளர்களை நியமித்துக்கொள்ள அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி மேம்பாட்டு நிதி என்பதை மிகப் பெரும் அளவுக்குக் கிராமத்து மக்கள், பின்தங்கிய வட்டாரங்களின் சமூகக் கடமைக்குப் பயன்படுத்துவதுதான் நல்லது. கல்லூரி ஆசிரியர்களை நியமிப்பதைப் பொறுத்து அவர்களுக்குத் தரப்பட வேண்டிய சம்பளம் கொடுப்பதற்கு அந்த நிதியை வழங்குவது பொருந்தாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே படித்துவிட்டு அவர்கள் ஆசிரியர் பயிற்சி முடித்தபிறகு, பழைய காலத்தில் 1967-க்கு முன்பு எல்லாம் அப்படி வரிசையில் நின்று அந்த டிபார்ட்மெண்டில் பதிவு செய்து வைத்திருந்தார்கள். பதிவு செய்து இருப்பதைப் பார்த்து எங்கெங்கே இடம் காலியாக இருக்கிறதோ, கல்லூரிகளானாலும் சரி, பள்ளிகளானாலும் சரி, காலியாகக்கூடிய இடங்களுக்கு வரிசையாக நியமனம் செய்து வந்தார்களே அந்த முறை மீண்டும் பின்பற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்களின் கேள்வியின் அடிப்படையில் சமூக நீதி வேண்டாம் என்றால் அந்த அடிப்படையை ஏற்றுக்கொள்ளலாம்.



1998 மே 14]

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதியோடுதான்.......

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** சமூக நீதியோடு என்று சொன்னால் எல்லா இடத்திலும் சமூக நீதியைக் காத்திட ஏற்ற அளவில் தகுதி உடையவர்கள் கிடைக்கமாட்டார்கள். குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த தோழர்கள் அந்த அளவுக்கு எங்கும் கிடைக்கமாட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரி பேராசிரியர் நியமனம் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அரசு உதவியோடு இயங்குகின்ற தனியார் கல்லூரிகளில் நிறைய ஆசிரியர் இடங்கள் காலியாக இருக்கின்றன. அவைகளை நிரப்புவதற்கு அரசு ஆவன செய்யுமா எனத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதவி பெறுகிற தனியார் கல்வி நிலையங்களில், கல்லூரிகளில் எந்த அளவுக்கு ஆசிரியர்கள் தேவைப்பட்டாலும்கூட, மாணவர்களுடைய எண்ணிக்கை விகிதாச்சார அடிப்படையில் அவ்வப்போது தீர்மானித்து வழங்க வேண்டிய ஒரு கட்டாயமான நிலை இருக்கிறது. சில இடங்களில் ஆசிரியர் சில பாடங்களுக்குத் தேவைப்படாமலேயேகூடப் பணியாற்றுகின்ற நிலை ஏற்படுகிறது. அதனால் அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுகிறது. எனவே, அது ஒரு கட்டுப்பாட்டில் இருக்கிறது. தொடர்ந்து பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது, தமிழகத்தில் இருக்கக்கூடிய இளநிலைப் பட்டதாரிகள் எத்தனை பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள்? முதுநிலைப் பட்டதாரிகள் எத்தனை பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள்? தமிழகத்தில் இப்போது பள்ளிகளில், கல்லூரிகளில் எத்தனை இடங்கள்

காலியாக இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்குத் தெரிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு முக்கியமான கேள்விக்காகக்கூட ஒரு தனிக் கேள்வி போடுவதற்கு மாண்புமிகு உறுப்பினருக்கு முடியாமல் போனது வருத்தமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 502, திரு. இ.ஜி. சுகவனம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**502—**

## மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக்கூட வசதி

***9413-திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி, அஞ்சூர் ஜெகதேவி, சாமல்பட்டி, பர்கூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக்கூட வசதி இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஆய்வுக்கூட வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக்கூடம் கட்டும் பணியில் பர்கூர் தொகுதி அஞ்சூர் ஜெகதேவி, சாமல்பட்டி, பர்கூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய மேல்நிலைப் பள்ளிகளைத் தேர்வு செய்து ஆய்வுக்கூடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு அரசாணை நிலை எண் 350, பள்ளிக் கல்வி, நாள் 14-8-1997-இல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.





**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் எங்கள் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் இதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது துணை வினாவிற்கு வாருங்கள்.'

**திரு. இ.ஜி. சுகவனம்:** பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கேட்கிறேன், ஒரு வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதில் சொல்லிவிட்டார், நீங்கள் அதன்பேரில் நன்றி சொல்கிறீர்களா? அல்லது துணை வினா ஏதாவது இருந்தால் கேளுங்கள்.

முற்பகல் 9-40

**திரு. இ. ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக ஆட்சி பொறுப்பு ஏற்ற பிறகு இந்த 3 பள்ளிகளுக்கும் இன்றைக்கு ஆய்வுக்கூடங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இது மட்டுமல்ல. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் தொகுதிக்கு வந்திருந்தபோது இன்னும் 2 ஆய்வுக்கூடங்கள் வேண்டும் என்று கேட்டேன். இன்றைக்கு ஐந்து ஆய்வுக்கூடங்களுக்கு உண்டான கட்டடங்களுக்குப் பணிகள் நடைபெற்று முடியும் தருவாயிலே இருக்கின்றன. ஆகவே, எங்களுடைய தொகுதியின் சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும், அந்தப் பள்ளியிலே படிக்கின்ற மாணவ மாணவிகளின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, இதே அவையிலே கடந்த நிதிநிலை அறிக்கையின்போது நம்முடைய அமைச்சரவர்கள் 'இந்த அப்பேரட்டஸ், லேப் எக்யூப்மெண்ட்ஸ் எல்லாம் வாங்குவதற்கு கடந்த ஆட்சிக் காலத்திலே ஊழல் செய்திருந்தார்கள், அதனால் அந்த அப்பேரட்டஸ் இன்னும் வாங்கப்படவில்லை; அதாவது ஆய்வுக்கூட உபகரணங்கள் தரவில்லை' என்று சொன்னார்கள். ஆனால், அந்த ஆய்வுக்கூட உபகரணங்கள், அந்த ஊழல் செய்தவர்கள்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புவதோடு, இன்றைக்கு அந்த ஆய்வுக்கூடங்கள் கட்டி முடிக்கப்படுகின்ற இந்தத் தருவாயிலே ஆய்வுக்கூட உபகரணங்களை உடனடியாகத் தந்து உதவுவார்களா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[1998 மே 14

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நடைபெற்ற குறைபாடுகள், ஊழல்கள் குறித்து விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விவரம் இன்னும் இந்தத் துறைக்கு முழு அளவில் அனுப்பப்படவில்லை. அதேபோல, கட்டப்பட்ட ஆய்வுக்கூடங்களுக்கு உபகரணங்களும், கருவிகளும் வழங்குவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 503, திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**503—**

### மருத்துவர் பணியிடங்களை நிரப்புதல்

***6538—திரு. செ. இராமலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அரசுத் தலைமை மருத்துவமனையில் நீண்டகாலமாகக் காலியாகவுள்ள மருத்துவர் பணியிடங்களை விரைவில் நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அரசுத் தலைமை மருத்துவமனையில் நீண்டகாலமாகக் காலியாக மருத்துவர்கள் பணியிடம் ஏதும் இல்லை.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் மாவட்டத் தலைமை மருத்துவமனையில் தற்போது சூப்பிரண்டென்டென்ட், ஆர்.எம்.ஓ., உள்பட 8 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. தலைமை மருத்துவமனையில் இரண்டே இரண்டு பெண் மருத்துவர்கள்தான் பணிபுரிகிறார்கள். எனவே, இந்த நிலையில் இந்த



1998 மே 14]

8 பணியிடங்களையும் நிரப்புவதற்கு உடனடியாக அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கும்பகோணம் மருத்துவமனையில் மொத்தம் பொது மற்றும் சிறப்பு மருத்துவர்கள் 24 பேர். அதிலே 18 பேர் ஆண்கள், இப்பொழுது பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பெண் மருத்துவர்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிறார். அதைப்பற்றியும், அதைப்போலவே சூப்பிரண்டென்டென்ட், ஆர்.எம்.ஓ., இவர்களைப் பற்றியும் விசாரித்து, அங்கே அந்தப் பணி இடங்கள் காலியாக இருக்குமானால் உடனடியாக நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைமை மருத்துவமனையாக உயர்த்தப்பட்டதற்குப் பிறகு இருதய நோய் சிகிச்சைப் பிரிவு, தீப்புண் சிகிச்சைக்கான பிரிவு, ஸ்கேன் போன்ற உபகரணங்கள் இல்லை என்பதை அரசு அறியுமா? இந்தக் குறைபாடுகள் களையப்பட அரசு உடன் ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த வசதிகளையெல்லாம் செய்து தர வேண்டுமென்று ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் கோ.சி. மணி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் இராமலிங்கம் அவர்களும் அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். நிதிநிலை காரணமாக எல்லாவற்றையும் ஒரே ஆண்டிலே செய்ய முடியாவிட்டாலும், சில வசதிகளை இந்த ஆண்டு செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 504, திருமதி ஆர். சரஸ்வதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

[1998 மே 14

504—

### மருத்துவமனையில் படுக்கை வசதிகளை விரிவுபடுத்துதல்

***8430—திருமதி ஆர். சரஸ்வதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் நகரில் இயங்கி வரும் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதிகளை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலைகள் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தாராபுரம் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதிகளை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. அவசியம் ஏற்பட்டால் 1999-2000 ஆண்டு பகுதி-2 திட்டத்தில் பரிசீலிக்கப்படும்.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தாராபுரம் நகரில் இயங்கிவரும் அரசு மருத்துவமனை, தாலுகா மருத்துவமனை என்பதாலும், உயர்வகை மாத்திரைகள் கொடுப்பதாலும், மருத்துவர்கள் 24 மணி நேரமும் மருத்துவமனையில் இருந்து நல்லமுறையில் பணியாற்றி வருவதாலும் கடந்த காலத்தைவிட தற்போது வெளி நோயாளிகள் வருகை அதிகமாக உள்ளது. ஆகவே, குறைவான படுக்கை வசதிகள் உள்ள தாராபுரம் அரசு மருத்துவமனைக்குப் படுக்கை வசதிகளை அதிகப்படுத்துவதோடு, தனியாக குழந்தைகள் பிரிவு ஒன்றும், கூடுதல் கட்டடமும் கட்டித்தர மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாராபுரம் அரசு மருத்துவமனையில் தற்போதைய படுக்கை எண்ணிக்கை 98. சராசரி உள் நோயாளிகளுடைய எண்ணிக்கை 89. வெளி நோயாளிகளுடைய எண்ணிக்கை 987.



1998 மே 14]

இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல இந்த அரசு தாலுகா மருத்துவமனைகளைத் தரம் உயர்த்த வேண்டுமென்று எண்ணி, ஏற்கெனவே ஒவ்வொரு தாலுகா மருத்துவமனைக்கும் ஸ்கேன் போன்ற வசதிகளையெல்லாம் செய்து கொடுத்திருக்கிறது. இன்னமும் தாலுகா மருத்துவமனையினுடைய தரத்தை உயர்த்த வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு எடுத்து, மத்திய அரசாங்கத்திடம் 150 கோடி ரூபாய் நிதியைக் கேட்டிருக்கிறார்கள். அந்த நிதி கிடைத்தவுடன் தமிழகத்திலேயுள்ள எல்லா தாலுகா மருத்துவமனைகளினுடைய தரத்தையும் உயர்த்தி, படுக்கை எண்ணிக்கையும் உயர்த்தப்படும்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 505, திரு. டி. இராஜேந்தர், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

505—

### மாமல்லபுரம் கலைச் சின்னங்களைப் பாதுகாத்தல்

***1337—திரு. டி. இராஜேந்தர்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரம் சிற்பக் காட்சிகளை மறைக்கும் வகையில் சுவர்கள் எழுப்பப்பட்டு இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) மாமல்லபுரம் கலைச் சின்னங்களைப் பாதுகாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாமல்லபுரத்திலுள்ள கலைச் சின்னங்கள் யாவும் இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையால்

பாதுகாக்கப்படுகின்றன. மாமல்லபுரம் சிற்பக் காட்சிகளை மறைக்கும் வகையில் கடற்கரைக் கோவிலுக்கு அருகில் இந்தியச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் கட்டப்பட்டு வந்த சுவர் கட்டும் பணி நிறுத்தப்பட்டுள்ளது. அருள்மிகு ஸ்தலசயனப் பெருமாள் கோவிலைச் சுற்றி 3 அடி உயரத்துக்குச் சுவர் கட்ட இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அர்ச்சுனன் தபசு சிற்பத்திற்கும் அருள்மிகு ஸ்தலசயனப் பெருமாள் கோவில் சுவருக்கும் இடையில் சுமார் 80 அடி முதல் 100 அடி நீள தூரம் உள்ளதால் கோவிலைச் சுற்றிக் கட்டப்பட்ட மதில் சுவரால் அர்ச்சுனன் தபசு சிற்பக் காட்சிகளைப் பார்ப்பதற்கு எவ்வித இடையூறுகளும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சுப்புலட்சுமி செகதீசன்.

**திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தில் எத்தனை வகையான மரபுச் சின்னங்கள் தொல்பொருள் ஆய்வுத் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 32 வகையான கலைச் சிற்பங்களை தொல் பொருள் துறை மாமல்லபுரத்திலே பாதுகாத்து வருகிறது. அதிலே அர்ச்சுனன் தவம், அர்ச்சுனன் தேர், பீமன் தேர், தருமராஜன் தேர், தருமராஜன் குடவறை சிம்மாசனம், தல உற்சவ மண்டபம், திரௌபதி தேர், திரௌபதி குளிப்பிடம், பிடாரியர் எழுவர், கல்லில் வடிக்கப்பட்ட சிம்மம், யானை, எருது பெரிய உருவங்கள், கோடிக்கல் மண்டபம், உழக்கு எண்ணெய் ஈஸ்வரர் கோவில், கிருஷ்ணன் வெண்ணெய் உருண்டை, கிருஷ்ண மண்டபம், கலங்கரை விளக்கத்திற்கு அருகேயுள்ள அர்ச்சுனன் தவம், மகிடாசுரமர்த்தனி குடவறை, கடற்கரைக் கோவிலின் வடக்கே கடலில் உள்ள மகிஷாசுரன் பாறை, முகுந்த நாயனார் கோவில், கணேசன் தேர் குடவறைக் கோவில், மித்துவர் அவதாரங்களான வராகம், வாயனம் ஆகிய சிற்பங்கள் உள்ள வராக மண்டபம் குடவறை கோவில், யானைகள், குரங்குகள், மயில் ஆகிய பாறை சிற்பத் தொகுப்பு, இராச கோபுரம் — இது முற்றுப்பெறவில்லை — சகாதேவன் தேர், கடற்கரைக் கோவில், வளையன்குட்டை தேர் — இதுவும் முற்றுப்பெறவில்லை— குரங்குக் கூட்டத்தைச் சித்தரிக்கும் கற்சிற்பம், முன்றில் தயிர் கடையும் களம் உள்ள மும்மூர்த்திக்கு



குடவறை, கோனேரிப்பள்ளம் குட்டையின் வடகிழக்கு மூலையிலுள்ள இரண்டு குடவறைக் கோவில்கள், கடற்கரைக் கோவில்களுக்குத் தெற்கே சிற்பங்கள் செதுக்கப்பட்ட சிறிய இரு பாறைகள், பிடாரியம்மன் தேர் என்று அழைக்கப்படுகிற இரண்டு ஒற்றைக் கற்கோவில்கள், இவை முற்றுப்பெறவில்லை. முற்றுப்பெறாத தேரும் கற்படுக்கையும், 32-ஆவது கிருஷ்ண மண்டபத்திற்கு வடக்கே உள்ள முற்றுப்பெறாத குடவறை ஆகியவையும் பாதுகாக்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய, மாநில தொல்பொருள் ஆராய்ச்சிக்கு சம்பந்தப்பட்ட கட்டடங்களை அனுமதிபெற்று வாடகைக்குக் கொடுக்கிறார்கள். வாடகைக்கு வாங்கி, அரசு அனுமதி இல்லாமல், பி.டபிள்யூ.டி. அனுமதி இல்லாமல் வாடகைக்கு இருக்கின்றவர்கள் மெயின்டெய்ன் பண்ணுகிறார்கள். இந்தமாதிரி மெயின்டெய்ன் பண்ணுவதைத் தடுப்பதற்கு ஏதாவது அரசு நடவடிக்கை எடுக்குமா? அதுமட்டுமல்லாமல், மாமல்லபுரம் சிற்பக் காட்சிகள், தமிழ்நாட்டில் உள்ள கோவில்களில் உள்ள சிற்பங்கள், தேர்களில் உள்ள சிற்பங்கள் போன்றவற்றையெல்லாம் அரசியல் கட்சிகள் 'வால் போஸ்டர்' ஒட்டி அசிங்கப்படுத்துகின்றன. ஆகவே, இப்படி 'வால் போஸ்டர்' ஒட்டுவதையும் தடுப்பதற்கும் கடுமையான சட்டங்கள் கொண்டுவருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின்கீழ் வருகின்ற எதிலும் எந்த நிருவாகத்திலும் தமிழக அரசோ தமிழகத்தினுடைய தொல்பொருள் ஆய்வுத் துறையோ தலையிட முடியாது. எனவே, இதுகுறித்து முறையீடுகள் வருமானால், முறைப்படி அதை நாங்களே அவர்களுக்கு அனுப்பி வைத்து நடவடிக்கை எடுக்கக் கோருவோம். இது ஒன்று. இரண்டாவது, சுவர் ஒட்டிகள் தொடர்பான அந்தக் குறிப்பு இந்தத் துறையின் சார்பில் வரவில்லை. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கட்சி சார்பில் தமிழகத்தில் இருக்கின்ற இதுபோன்ற கோவில் சுவர், பள்ளிச் சுவர்,

[1998 மே 14

தேர்கள், இன்னும் வழிகாட்டியாக இருக்கின்ற நெடுஞ்சாலைத் துறையினுடைய அந்த ஊர்ப் பெயர் இருக்கின்ற சிமெண்ட் பலகை ஆகிய அனைத்திலும் சுவர் ஒட்டிகள் ஒட்டாமல் இருக்க ஒரு முடிவு எடுப்பார்களானால், அதை வழிகாட்டியாக வைத்து மற்ற கட்சிகளும் முடிவு எடுக்க வாய்ப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. திருவேங்கடம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தில் உள்ள சிற்பங்களைப் பார்ப்பதற்குச் செல்கின்ற சுற்றுலாப் பயணிகளிடம் மத்திய தொல்பொருள் இலாகா தற்சமயம் கட்டணம் வசூலிப்பதை அரசு அறியுமா? அதை நீக்க வேண்டுமென மத்திய அரசுக்கு மாநில அரசு அறிவுறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து நேரடிக் குறிப்பு இப்போது இல்லை. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து கவனிக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ. தமிழ்மணி.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிற்பங்களையெல்லாம் பாதுகாக்க வேண்டியது நமது உண்மையான கடமையாகும். சிற்பங்களைவிட அங்கே வாழ்கின்ற மனிதர்கள் அங்கு இருந்தால்தான் அந்தச் சிற்பங்கள் அங்கே பிரசித்தி பெற முடியும். ஆனால், அங்கு வாழ்கின்ற மனிதர்களுக்கு சிறிய குடில்கள்கூட கட்டிக்கொள்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது. அந்தச் சிற்பங்களை எந்தவிதத்திலும் பாதிக்காத வண்ணம் வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு தொல்பொருள் ஆராய்ச்சித் துறை அவர்களுக்கு அனுமதி வழங்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தில் இதற்கு எந்த இடமும் இல்லை.



1998 மே 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 506, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**506—**

**தமிழிசைக் கல்லூரி அமைத்தல்**

***7454—திரு. இரா. மணிமாறன் :**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில் தமிழிசைக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் நகரில் தமிழிசைக் கல்லூரி அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கின்றபோது, தமிழிசைக் கல்லூரி பல்வேறு மாவட்டங்களில் இருப்பதாகவும், வருங்காலங்களில் பல்வேறு இடங்களிலே அவை மேலும் அமைக்கப்படவிருப்பதாகவும் சொன்னார்கள். அதனுடைய தொடர்ச்சியாக, இளைஞர்கள் இப்போது தமிழிசையைப் பயில்வதற்கு ஆர்வமாக இருக்கின்ற இந்த காலகட்டத்தில், திண்டுக்கல் மாவட்டத்தில், திண்டுக்கல் தலைநகரில், வருங்காலத்தில் - அதாவது இந்த ஆண்டோ அல்லது அடுத்த ஆண்டோ - மறுபரிசீலனை செய்து அதை நிறைவேற்றித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலேயும் இசைப் பள்ளி போன்றவற்றை அமைக்க வேண்டுமென்பது அரசினுடைய

விருப்பம் என்று நேற்றுத் தெரிவித்திருந்தேன். அந்த அடிப்படையில் திண்டுக்கல்லை தலைநகராகக் கொண்டு சவகர் சிறுவர் இல்லம் நேற்று அறிவிக்கப்பட்டது. ஏற்கெனவே, பழனியில் அருங்காட்சியகம் இருக்கிறது. எஞ்சியிருப்பது, இசைப்பள்ளி ஒன்றுதான். வருங்காலம் என்பது இன்றிலிருந்து தொடங்குகிறது, ஆனால் முடிவது அடுத்த 13-5-1999-இல்தான். எனவே, அதற்குள் கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே, தமிழிசைக் கல்லூரி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் ஆண்டுதோறும் இசை விழாக்களில் கலந்துகொண்டு மகிழ்கின்றவன். நான் தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம், தமிழிசைக் கல்லூரி என்று சொன்னால், அங்கே தமிழிசை மட்டும் சொல்லிக் கொடுக்கப்படுமா? தமிழிசை என்று சொல்வது தமிழ்ப் பாட்டு மட்டும்தானா அல்லது தமிழிசையா என்பதை விளக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இசைக் கல்லூரி, இசைப் பள்ளி யாவற்றுக்கும் தனியே பாடத் திட்டங்கள் இருக்கின்றன. அதிலே குரலிசை சொல்லிக் கொடுக்கப்படுகிறது. பரதநாட்டியம், தேவார இசை இதுபோன்ற பல்வேறு கலைகளும் முழுமையாகப் பயிற்றுவிக்கப்படுகின்றன. அதிலே, நீங்கள் சொல்வதுபோல், நேரடியாகத் தமிழிசைப் பாடல்கள், அதனோடு தொடர்புடைய கர்நாடக இசைப்பாடல்கள் அனைத்துமே சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. எனவே, இந்த இசைப் பள்ளிகளும் இசைக் கல்லூரிகளும் முழு அளவிலே இயங்குகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 507, திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

507—

**நடைபாதைவாசிகளுக்கு விடு கட்டுதல்**

***11743—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், சேலம் போன்ற மாநகரங்களில் நடைபாதைவாசிகளுக்கு வீடுகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையினை அளிக்கிறேன். சென்னை நகரில் நடைபாதைவாசிகளுக்காக மத்திய அரசு, மாநில அரசு மற்றும் ஹட்கோ நிதியுதவியுடன் மாற்றுக் குடியிருப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வந்தது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை சென்னை நகரில் 7,782 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. மற்ற மாநகரங்களில் நடைபாதைவாசிகளுக்கென தற்போது திட்டம் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைப்போல் மற்ற மாநகராட்சிகளிலும் நடைபாதைவாசிகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் விரிவுபடுத்தப்படுமா? ஆம் எனில், எப்போது விரிவுபடுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபாதைவாசிகளுக்கென திட்டம் எதுவும் இல்லை. எனினும், குடிசைப்பகுதிகளில், குடிசைவாசிகளுக்குக் கட்டித்தரப்படும் குடியிருப்புக்களில் நடைபாதைவாசிகளுக்கும் ஒதுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாக, ஈரோடு-பவானி ரோட்டில் கட்டப்பட்டுள்ள 648 வீடுகளில் நடைபாதைவாசிகளுக்கு 312 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. கோயமுத்தூர், மோதிலால் காலனியில் கட்டப்பட்ட வீடுகளில் 115 வீடுகள் நடைபாதைவாசிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால்வள இணையத்திற்கு இன்றுவரை எந்த அளவிற்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்பதை அரசு அறியுமா? அதை விரைவாகப் போக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[1998 மே 14

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி குடிசைமாற்று வாரியம் பற்றியது. இதற்குத் தனிக் கேள்வி போட்டால், உரிய பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 ஆண்டுகால சுதந்திரத்திற்குப் பிறகும் நடைபாதையில் மக்கள் வசிக்கிறார்கள் என்பது ஒரு தேசிய அவல நிலையாக இருக்கிறது. எனவே, இதைப் போக்குவதற்கு, போர்க்கால அடிப்படையில், தமிழ்நாட்டில் நடைபாதையில் எவ்வளவு குடும்பங்கள் இருக்கின்றன என்பதைக் கணக்கெடுத்து, அவர்களுக்குரிய குடியிருப்புகள் வழங்குவதற்கு ஒரு மாஸ்டர் பிளான் போடுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபாதைவாசிகள், நதிக்கரையில் உள்ளவர்கள், இதுபோன்றவர்களுக்கு, ஒட்டுமொத்தமாக நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் 60 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 6,500 வீடுகள் கட்டி ஒதுக்கித் தர ஆணையிட்டுள்ளார்கள். அதில் 1,500 வீடுகள் இந்த நிதி ஆண்டில் கட்டிக் கொடுக்கப்படும். அப்போது இந்த நடைபாதைவாசிகளுக்கும் இடம் ஒதுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் ஹட்கோ நிறுவனம் மூலமாக இடம் கையகப்படுத்தப்பட்டதால், அங்கே வசித்த மக்கள் நடைபாதையில் தங்கும் ஒரு நிலைமை இருக்கிறது. எனவே, அவர்களுக்கு ஏதேனும் இருப்பிட வசதி செய்து கொடுப்பதற்கு தங்களிடம் குறிப்பு இருக்கின்றதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபாதை மற்றும் ஆக்கிரமிப்புப் பகுதிகளிலுள்ள மக்களுக்குத் தேவையான நிலத்தை அந்தப் பகுதி மாநகராட்சி,



1998 மே 14]

குடிசைமாற்று வாரியத்திற்கு ஒப்படைத்தால், கண்டிப்பாகக் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சியில் நடைபாதைவாசிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தில் எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அரசு அறிவிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர், சென்னை நகருக்கு வீடு கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது, மற்ற நகரங்களுக்கு இல்லை என்கிறார். நீங்கள் சேலத்திற்குக் கேட்கிறீர்களே? மாண்புமிகு அமைச்சர் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால், அதற்கான விவரங்கள் அறிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 508, திரு. மீ.அ. வைதியலிங்கம் மற்றும் திரு. உ. திசைவீரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**508—**

**வேலைவாய்ப்புப் பதிவினைப் புதுப்பித்தல்**

***6462—திரு. மீ.அ. வைதியலிங்கம்,**

**திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 1992 முதல் 1996 முடிய புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு புதுப்பித்துக்கொள்ள வாய்ப்பளித்துள்ளதை, 1991-லிருந்து வழங்கிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 1989 முதல் 1992 வரையிலான ஆண்டுகளில் வேலைக்கென பதிவு செய்து, பின்னர் அப்பதிவுகளை

முறையே 1992 முதல் 1995 வரையில் மறுபதிவு செய்யத் தவறியவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளை 1991 ஆம் ஆண்டில் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஓராண்டுச் சலுகையை அரசு மீண்டும் அளிப்பதால், எந்தவிதமான நிதிச் சேதாரமும் ஏற்படப் போவதில்லை. அதே நேரத்திலே வயது வரம்பைக் கடந்துவிட்டவர்களுக்கு இந்த ஓராண்டு காலம் அவர்களுடைய வாழ்க்கைக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து 1991 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கும், இந்தச் சலுகையை அளிக்க உத்தரவிடுவார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தர வேலை கிடைக்கும் வரைக்கும் பதிவுகளைப் புதுப்பித்துக் கொண்டிருக்கவேண்டும். அந்தக் குறிப்பிட்ட கால வரம்பிற்குள் புதுப்பிக்கவில்லையென்றால், மூன்று ஆண்டு காலம் என்று கொடுத்திருக்கிறோம். அதை 1991-க்கும் நீட்டிக்க வேண்டுமென்று சொன்னால், பிறகு 1990, 1980, 1970 என்று அதற்கு முடிவே இல்லாமல் போய்விடும். ஆகையினால், இப்பொழுது இருக்கக்கூடிய நடைமுறையின்படி, நான் ஏற்கெனவே அளித்துள்ள விளக்கத்தின்படி மூன்று ஆண்டுகள், 1992 முதல் 1995 வரை மறுபதிவு செய்யத் தவறியவர்களுக்கு, அவர்களுக்கு அளிக்கப்பட்ட அந்தச் சலுகை 1991 ஆம் ஆண்டிலே புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு மட்டுமே அந்தச் சலுகை வழங்கப்படும். அதற்கு முன்பு உள்ளவர்களுக்கோ, பின்பு உள்ளவர்களுக்கோ தர இயலாது.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்புத் துறையானது வேலை அளிக்காவிட்டாலும் பரவாயில்லை. அவர்களுக்கு அடிக்கடி நேர்முகத் தேர்வாவது வருமா என்ற எண்ணத்தோடு இளைஞர்களெல்லாம் காத்திருக்கிறார்கள். எனவே மூன்று ஆண்டுகள் என்று இருப்பதை 5 ஆண்டுகள் என்று மாற்றி அறிவிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று ஆண்டுகள் அவகாசம் கொடுத்தும்கூட, 



புதுப்பிக்க முடியாதவர்களுக்கு மீண்டும் சலுகை கொடுப்பது என்பது கூடவே கூடாது. ஆகையினால், இதில் மறுபரிசீலனைக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தவர்களை வேலைகளுக்குத் தேர்வு செய்கின்ற நேரத்தில், முறையாக எண்கள் அனுப்பப்படுவதில்லை என்ற பரவலான குறை இருக்கிறது. அதிலும் சில வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் யாரையும் அனுப்ப முடியாத நிலையெல்லாம் இருக்கிறது. ஆகவே, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் நம்பர் கேட்கின்ற நேரத்திலே, முறையாக எல்லா இடங்களிலும் தேர்வு செய்யப்படக்கூடிய வகையிலே எண்கள் அனுப்புவதற்கு ஆவன செய்யப்படுவதோடு, சீனியாரிட்டி இல்லாமல் யாரை வேண்டுமானாலும் அனுப்புகின்ற நிலைமை இருப்பதாக இப்போது சொல்லப்படுகிறது, இதை சரி செய்யவும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லப்படுகிறது, பேசப்படுகிறது என்பது ஒரு தவறான கலாச்சாரத்தின் அடிப்படையில் சொல்லப்படுகின்ற கருத்து. வேலைவாய்ப்பு அலுவலகத்தைப் பொறுத்தமட்டில், ஏற்கெனவே கம்ப்யூட்டர் வைக்கப்பட்டு, முறையாகக் கணக்கிடப்பட்டு சீனியாரிட்டி அடிப்படையிலேதான் முன்னுரிமை அளிக்கப்பட்டு, காலியிடங்களுக்கு நேர்முகத் தேர்விற்காக அனுப்பப்படுகிறது. அதிலே ஏதாவது குறைபாடுகள் இருக்குமேயானால், மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டினால், நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 1996 முடிய மாவட்ட ரீதியாக எவ்வளவு பேர் பதிவு செய்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் முறைகேடுகள் நடப்பது என்பது ஒரு சர்வசாதாரணமான நிகழ்ச்சியாக இருக்கிறது. குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சி. இதைக் களைவதற்கு, உரிய விவரங்களைத் தந்தால், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

[1998 மே 14

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் நீண்ட காலமாக இந்த அவையிலே இருப்பவர்கள். இப்பொழுது அவர் சட்டமன்ற உறுப்பினராகி இரண்டு வருடங்கள் ஆகின்றன. இந்த இரண்டு வருட காலமாக இந்த அவையிலே சொல்கிறாரே தவிர, என்றைக்காவது ஒருநாள் அவர் அந்தப் புகார்களைச் சொல்லியிருந்தால், நான் நடவடிக்கை எடுத்திருப்பேன். ``Yet all is not lost'' இப்பொழுது ஒன்றும் சிரமம் இல்லை. கொடுத்தால் நடவடிக்கை எடுக்கத் தயார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல் அனுப்பும்போது, மற்ற துறைகளுக்கு அனுப்புகின்றபோது ஒரு காலியிடத்திற்கு 20 நபர்கள் அனுப்புகிறார்கள். ஆனால், பட்டதாரி ஆசிரியர்களுக்கு அனுப்பப்படுகின்றபோது மட்டும், ஒரு காலியிடத்திற்கு 4 நபர்களுக்கு மட்டும் அனுப்பப்படுகிறது. ஆகவே, பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்களுக்கும் ஒரு காலியிடத்திற்கு இருபது நபர்களை இன்டர்வியூவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூல வினா ரினிவல் சம்பந்தமானது. எனவே, மற்ற வினாக்களுக்குத் தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 509, திரு. இ. புகழேந்தி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**509—**

### கழிவுநீர் ஆற்றில் கலப்பதைத் தடுத்தல்

***9613—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் நகரில் ஓடும் கெடிலம் ஆற்றினை மாசுபடுத்தும் நெல்லிக்குப்பம் ஈ.ஐ.டி. பாரி கழிவுநீர் ஆற்றில் கலக்காமல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?



1998 மே 14]

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள தர அளவுகளுக்குட்பட்டு செயல்முறைக் கழிவு நீரைச் சுத்திகரிக்க, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தினைச் செம்மையாக, திருவாளர்கள் ஈ.ஐ.டி. பாரி (இ) லிமிடெட் தொழிற்சாலையில் இயக்க உரிய நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், தொடர்ந்து இவ்வாலை கண்காணிக்கப்பட்டும் வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நெல்லிக்குப்பம் அ. மணி.

**திரு. நெல்லிக்குப்பம் அ. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். கடலூர் பகுதியில் ஒருபக்கம் கடல் நீர் உள்ளே வந்து கொண்டிருக்கிறது. மேலும் கெடிலம் ஆற்றிலே, நெல்லிக்குப்பம் ஈ.ஐ.டி. பாரி ஆலையிலிருந்து வருகின்ற அழுக்கு நீர், சாராய ஆலையிலிருந்து வருகின்ற கழிவு நீர் ஆகியவை கலந்து, அந்த ஆற்றையே மாசுபடுத்துவதால், பக்கத்திலுள்ள என்னுடைய தொகுதியான நெல்லிக்குப்பம் தொகுதியிலும், கடலூர் தொகுதியிலும் பாதிப்பு ஏற்பட்டு, மக்கள் குடிப்பதற்கு நல்ல நீர் கிடைக்காமல் அவதிப்படுகின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. அமைச்சர் அவர்களிடம் இது குறித்து மனு ஒன்றை நான் கொடுத்தபோது, அதிகாரிகளை அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ள அவர்கள் பரிசீலித்தார்கள். ஆனால், அந்த நிறுவனத்தினர் குழாய்கள் மூலமாக அந்த அழுக்கு நீரைக் கொண்டுவந்து, சொந்தமாக நிலம் வாங்கி, அந்த நிலத்திலே அந்த நீரை விட்டு சரிசெய்கிறோம் என்று கூறினார்கள். இதுவரையில் அந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, நானும் அவர்களிடம் நேரடியாகச் சென்றும் கேட்டிருக்கிறேன். இதுவரையில் உத்தரவு வரவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாவாகக் கேளுங்கள்.

முற்பகல் 10-05

**திரு. நெல்லிக்குப்பம் அ. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, வினாதான் கேட்கிறேன். நெல்லிக்குப்பம், கடலூர் பகுதி மக்களுக்கு

[1998 மே 14

உடனடியாகக் குடிநீர் கிடைக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், துரித நடவடிக்கை எடுத்து, ஈ.ஐ.டி. பாரி நிறுவனத்தை வற்புறுத்த ஆவன செய்வாரா எனத் தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, அங்கே குழு அனுப்பப்பட்டு, அந்தக் குழு சில நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று அந்த நிறுவனத்திற்குச் சொல்லியிருக்கிறது. அதையொட்டி, 50 ஏக்கர் நிலத்தை அவர்கள் வாங்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அவர்கள் ஆண்டுதோறும் உற்பத்தி செய்கின்ற 45 ஆயிரம் லிட்டர் சாராவியின் மூலம் வெளிவருகின்ற கழிவுநீரை, 'Multiple effect evaporator' என்ற முறையிலே குறைத்து, அதைக் கெட்டிப்படுத்தி, உரத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்றும், எக்காரணம் கொண்டும் கெடிலம் நதியிலே கழிவுநீரைக் கலக்கக் கூடாது என்றும் தெளிவாக அவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு மேலும் அவர்கள் ஏதாவது தவறு செய்வதாக இருந்தால், உடனடியாக நடவடிக்கை எடுப்போம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 510, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

510—

**வெளிநாடுகளுக்கு சந்தனக் கட்டைகள் ஏற்றுமதி**

***5737—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சந்தனக் கட்டைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய தமிழக அரசுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1998 மே 14]

(அ) ஆம்.

(ஆ) தமிழக அரசைப் பொறுத்தவரை 300 டன் சந்தனக் கட்டைகள் சிறிய நறுக்குகளாக ஏற்றுமதி செய்ய மத்திய அரசால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டொன்றுக்குத் தமிழகத்தில் எவ்வளவு கட்டைகள் அரசுக்குக் கிடைக்கின்றன? அவற்றில் 300 டன் போக, மீதியை அரசு என்ன செய்கிறது? எதிர்காலத்தில் இன்னும் அதிகப்படியாகக் கட்டைகளை ஏற்றுமதி செய்ய, மத்திய அரசிடமிருந்து மாநில அரசு அனுமதி பெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரக் கட்டைகள் ஏற்றுமதி, மத்திய அரசின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கொள்கையின் அடிப்படையில்தான் நடைபெறுகிறது. 1978 ஆம் ஆண்டு பிற்பகுதியில், சந்தன மரக் கட்டைகள் ஏற்றுமதி மத்திய அரசினால் தடை செய்யப்பட்டு, பின்பு அதில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு, சந்தன மரக் கட்டைகள் செதுக்கு மற்றும் துகள்கள் என்ற நிலையில் ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டது. அதன்பின், 1-4-1992-இல், சந்தன மரக் கட்டைகளை அனைத்து வகைகளிலும் ஏற்றுமதி செய்ய தடை செய்து, மத்திய அரசு ஆணை பிறப்பித்தது. அந்தத் தடையினால், தமிழக அரசுக்கு ஆண்டுதோறும் ரூபாய் 40 கோடி, அன்னியச் செலாவணி இழப்பு ஏற்பட்டதைச் சுட்டிக்காட்டி, மத்திய அரசுக்குச் செய்த முறையீட்டினால், மத்திய அரசு, தனது கடித எண் 75, 8-12-1995 நாளிட்ட கடிதத்தின்படி, அந்த விதிமுறைகளைத் தளர்த்தி, ஏற்றுமதி செய்வதற்கான சந்தன மர வகைபாடுகள், தரம் மற்றும் எடை ஆகியவற்றை நிர்ணயித்து, 30-9-1996 வரை ஏற்றுமதி செய்ய, கால அளவை நிர்ணயம் செய்து உத்தரவு வழங்கியது. அதன் பிறகு, கழக அரசு பொறுப்பேற்ற பின், ஜூன் 1996-இல், வனத் துறையிலுள்ள 3 சந்தனக் கிடங்குகளிலுள்ள கட்டைகளை விற்க, ஏலம் நடைபெற்று, 790 டன் சந்தனக் கட்டைகள் ஏலத்தில் விற்கப்பட்டு, அதன்மூலம் அரசுக்கு ரூ. 40 கோடி கிடைக்கப்பெற்றிருக்கிறது. தற்போது, ஜூன் 1998-இல் 3 சந்தனக் கிடங்குகளையும் சேர்த்து, ஆயிரம் டன் சந்தனக் கட்டைகளை ஏலம் விட உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த ஏற்றுமதித் தடைகளை அனைத்து

[1998 மே 14

நிலைகளிலும் விலக்கி, முழுக் கட்டைகளையும் ஏற்றுமதி செய்ய அனுமதி கோரி, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முன்னாள் பாரதப் பிரதமர் மாண்புமிகு தேவகவுடா அவர்களுக்கு, தமிழக அரசின் நிலைகளையும் விளக்கி, 2-4-1997 அன்று தெளிவாக நேர்முகக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்கள். மேலும், நமது முன்னாள் மத்திய தொழில் அமைச்சர் திரு. மாறன் அவர்கள், மத்திய அரசின் வனம் மற்றும் வர்த்தகத் துறையிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டு, சந்தனக் கட்டைகள் ஏற்றுமதி தொடர்பாக, அனைத்து நிலைகளிலும் மத்திய அரசு விதித்துள்ள தடைகளை நீக்குமாறு கோரியுள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 511, டாக்டர் காஞ்சனா கமலநாதன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**511—**

### சிட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைத்தல்

***9695—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கெலமங்கலத்தில் 'சிட்கோ' மூலமாக ஒரு தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தற்போது தருமபுரி மாவட்டம் கெலமங்கலத்தில் 'சிட்கோ' தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் ஏதுமில்லை.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில், கெலமங்கலம் பகுதி, தமிழ்நாட்டின் 'மான்செஸ்டர்' என்று அழைக்கக்கூடிய அளவுக்கு இதமான தட்பவெப்ப நிலை கொண்டது. அழகான இயற்கைச் சூழல் கொண்டது. மண்



1998 மே 14]

வளத்தால், வன வளமும், முக்கனி வளமும், மலை வளமும், கனிம வளமும் நிரம்பப் பெற்ற பகுதி. 'வறியார்க்கொன்றீயாதான் பெற்ற செல்வம்' போல அத்தனை வளங்களும் அங்கு பயனற்றுப் போய்க் கொண்டிருக்கின்றன. எனவே, தயவுசெய்து வருங்காலத்தில், அந்தப் பகுதியில் பெரிய தொழிலையும் சேர்த்து, ஊரக சிறுதொழில்களும் வளர, ஒரு தொழிற்பேட்டை அமைக்க, 'சிட்கோ' முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைக்குப் பதிலளிக்கையில் வருங்காலத்தில் 50 புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கும் திட்டம் அரசிடம் இருக்கின்றது என்று நான் தெளிவாகச் சொல்லியிருக்கின்றேன். ஏற்கெனவே கிருஷ்ணகிரி தொகுதியிலே போலப்பள்ளியிலே 86 ஏக்கர் நிலம் கையகப்படுத்துவதற்குரிய நடவடிக்கையை எடுத்து வருகின்ற காரணத்தினால் கெலமங்கலத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் வாய்ப்பு இல்லை.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவும் என்னுடைய தொகுதியில்தான் வருகிறது. போலப்பள்ளி பகுதி கிருஷ்ணகிரியிலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இப்போது நான் குறிப்பிட்டுக் கேட்கின்ற கெலமங்கலம் பகுதி கிருஷ்ணகிரியிலிருந்து 60 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. அது நிறைய வளங்களைக் கொண்ட பகுதி. எனவே அரசு செயற்குறிப்பில் இதை ஏற்றி, வருங்காலத்தில் சிப்காட் மூலமாக அங்கும் ஒரு தொழிற்பேட்டை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை கவனத்தில் கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 512, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

512— [1998 மே 14

## கால்நடை மருந்தகம் தொடங்குதல்

***10900—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூர் ஒன்றியம், கன்னிவாடியில் கால்நடை மருந்தகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கன்னிவாடி ஒரு பேரூராட்சியின் தலைநகரமாகும். அங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையம் கூட இல்லை. அதனால் மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு ஒரு கால்நடைக் கிளை நிலையத்தைத் தொடங்குவதற்கு பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், மூலனூர் ஒன்றியத்தில் தற்போது மூலனூர் மற்றும் வடுகப்பட்டி ஆகிய இரண்டு இடங்களில் கால்நடை மருந்தகங்களும், சாலக்கடை, எரிசனம்பாளையம், மேட்டுவலசு, பெரமியம் மற்றும் மாலமேடு ஆகிய ஐந்து இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. பொதுவாக கால்நடை மருந்தகம் தொடங்கப்பட வேண்டுமானால் அந்த ஊரில் கால்நடைக் கிளை நிலையம் செயல்பட வேண்டும். அக்கிளை நிலையத்திற்கு 40 கால்நடைகளுக்கு மேல் சிகிச்சைக்கு வருமானால் கால்நடை மருந்தகம் அமைப்பது பற்றி தகுதியின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் பகுதி-2 திட்டத்தின்கீழ் பரிசீலிக்கப்படும். ஆனால் வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூர் ஒன்றியம், கன்னிவாடியில் தற்போது கால்நடைக் கிளை நிலையம் இல்லை. எனவே மாண்புமிகு



1998 மே 14]

உறுப்பினர் கேட்டுக்கொண்டபடி கால்நடைக் கிளை நிலையம் அமைப்பது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

**திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளக்கோவில், காங்கேயம், தாராபுரம், பொங்கலூர் ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகள் பயன்பெறும் வகையில் என்னுடைய நீண்டநாள் கோரிக்கையான காங்கேயம் கால்நடை மருந்தகத்தை இந்த நிதியாண்டில் கிளினீஷியன் சென்டராக உயர்த்தும் கருத்துரு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடை மருந்தகம் தொடங்கப்பட வேண்டுமானால் அந்தப் பகுதியிலுள்ள கால்நடைக் கிளை மருத்துவமனைக்கு 40 கால்நடைகளுக்கு மேல் சிகிச்சைக்கு வரவேண்டும். அந்த ஒன்றியத்தில் அது எத்தனையாவது கால்நடை மருந்தகம் என்ற அடிப்படையில் ஒன்றியத்தின் பங்குத் தொகையாக 75 சதவிகிதம், 50 சதவிகிதம் அல்லது 25 சதவிகிதம் என்ற அடிப்படையில் பங்குத் தொகையை வழங்க அந்த ஊராட்சி ஒன்றியத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அது வழங்கப்பட வேண்டும். இவை எல்லாம் தந்திருப்பார்களேயானால் இந்த ஆண்டு பகுதி-2 திட்டத்திலே அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒரு தொகுதிக்கு ஐந்து இடங்களில் பகுதி நேர மருத்துவமனைகள் தொடங்கப்படும் என்று அறிவித்தீர்கள். ஓராண்டு முடிந்தும் இதுவரை அந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. இந்த ஆண்டிலாவது அறிவித்த திட்டத்தை அதாவது கால்நடை பகுதி நேர மருத்துவமனையை அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 2,126 பார்வைக் கிளை நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். அந்த அடிப்படையில் ஒவ்வொரு

சட்டமன்ற உறுப்பினரையும், ஐந்து பார்வைக் கிளை நிலையங்கள் அமைக்க இடங்களைப் பரிந்துரை செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. அந்த அடிப்படையில் 1,516 பார்வைக் கிளை நிலையங்கள் தொடங்கப்பட்டு இருக்கின்றன. மீதியுள்ள இடங்களுக்கு சரியான இடங்கள் கிடைக்காமையினாலும், சில இடங்களில் கால்நடை ஆய்வாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதாலும் அவை தொடங்கப்படாமல் இருக்கின்றன. இந்த ஆண்டு புதிதாக 125 கால்நடை ஆய்வாளர்களைத் தேர்வு செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். அந்தத் தேர்வு முடிந்தவுடனே அந்த இடங்களுக்கு கால்நடை ஆய்வாளர்களை நிரப்பி பார்வைக் கிளை நிலையங்கள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 513, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**513—**

**கால்நடை மருந்தகம் அமைத்தல்**

***12613—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முடச்சிக்காடு கிராமத்தில் ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதுகுறித்து செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முடச்சிக்காடு ஊராட்சியிலும் அதைச் சுற்றியுள்ள கழனிக்கோட்டை, கழனிவாசல், வீரையன்கோட்டை, சோழவனார்வயல் பகுதிகளிலும் மிக அதிகமான கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. அந்தக் கால்நடைகளின் சிகிச்சைக்காக 10 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பேராவூரணி பகுதிக்குச் செல்ல வேண்டியிருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடச்சிக்காடு பகுதியில் ஒரு கால்நடைக் கிளை நிலையத்தை அமைக்க மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடச்சிக்காடு கிராமம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் உள்ளது. அந்த ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் பெருமகளூர், இரண்டாம்புளிக்காடு ஆகிய கால்நடை மருந்தகங்களும், சொக்கநாதபுரம், குருவிக்கரம்பை, அடைக்கத்தேவன், உடையநாடு மற்றும் மணக்காடு ஆகிய பகுதிகளில் கால்நடைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. முடச்சிக்காடு கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு 7 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள இரண்டாம்புளிக்காடு கால்நடை மருந்தகத்திலும், இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள குருவிக்கரம்பை மற்றும் உடையநாடு கால்நடைக் கிளை நிலையங்களிலும் தற்போது சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், முடச்சிக்காடு கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையும் குறைவாக உள்ளது. எனவே, தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முடச்சிக்காடு கிராமத்தில் கால்நடை மருந்தகம் தொடங்கும் செயற்குறிப்பு தற்போது ஏதும் இல்லை. வருங்காலத்தில் நிதிநிலையைக் கருத்தில்கொண்டு இது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 514, திரு. க. மணிவர்மா, திரு. லி. அய்யலுசாமி மற்றும் திரு. ஐ. கணேசன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**514—**

**ஊனமுற்றோருக்கு உதவித் தொகையும், சத்துணவும் வழங்குதல்**

***4238—திரு. க. மணிவர்மா:**

**திரு. லி. அய்யலுசாமி:**

**திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முழுமையாக நடக்க முடியாத உடல் ஊனமுற்றோருக்கு உதவித் தொகையும், மதியம் சத்துணவும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முழுமையாக நடக்க முடியாத உடல் ஊனமுற்றோருக்கு உதவித் தொகையும் மதியம் சத்துணவும் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் முழுமையாக நடக்க முடியாமல் ஊனமுற்றுக் கிடப்பவர்கள் உறவினர்கூட இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அவர்கள் சான்றிதழ் பெற மருத்துவர்களை நாடி நகரங்களுக்கு வருகிறார்கள். ஆகவே அவர்களுக்குச் சான்றிதழ் கொடுப்பதற்குச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், கிராமப்புறங்களில் இருக்கின்ற ஊனமுற்றவர்கள், திருவண்ணாமலை மாவட்டத்தில் எவ்வளவு பேர் பயன் பெறுகிறார்கள் என்பதையும், இந்த ஆண்டு எத்தனைபேர் இதற்காக தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்கள் மாவட்ட மறுவாழ்வு அலுவலகத்தின் மூலமாகப் பதிவு செய்து கொள்ளலாம். வயது முதிர்ந்தோர் என்று கணக்கிட்டுப் பார்க்கிற நேரத்தில், அவர்களுக்கு உதவித் தொகையும் மதிய உணவும் வழங்கப்படுகிறது. அவர்கள் விரும்பினால் அருகில் இருக்கின்ற சத்துணவுக் கூடத்தில் சத்துணவு பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. மதிய உணவு பெறாதவர்களுக்கு வாரம் ஒரு கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது. அங்கே மதிய உணவை ஏற்றுக்கொள்பவர்களுக்கு வாரம் 1/2 கிலோ அரிசியும் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்ட வாரியாக எவ்வளவு பேர் இந்த உதவித் தொகையைப் பெறுகிறார்கள் என்ற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அந்த விவரங்களை நான் அறிவிக்கிறேன்.

**திரு. வி. அய்யலுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றவர்கள் வசதி உள்ள குடும்பத்தில் இருந்தால் அவர்கள் எப்படியாவது பாதுகாக்கப்பட்டு விடுகிறார்கள். ஆனால், கூலி வேலை





செய்யக்கூடிய உழைப்பாளிகள் வீடுகளிலேயும் ஊனமுற்ற குழந்தைகள் இருக்கிறார்கள், வளர்ச்சி அடைந்த ஊனமுற்றவர்களும் இருக்கிறார்கள். எனவே, வயது வரம்பின்றி ஊனமுற்றவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படவேண்டும். தற்போது முதியோர் பென்ஷன் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதைக் கருத்தில்கொண்டு முழுமையாக ஊனமுற்றவர்களுக்கு மாதமொன்றுக்கு தற்போது வழங்கப்படும் ரூ. 150 உதவித் தொகையை உயர்த்தி அளிக்க வேண்டும். மேலும், ஒரு கண் இழந்தவர்களையும் ஊனமுற்றோர் பட்டியலில் சேர்க்கவேண்டும். இவற்றுக்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட் பேருரைக்குப் பிறகுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 100 ரூபாய் என்று இருந்த இந்த உதவித் தொகையை 150 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 7 இலட்சம் பேர்களுக்கு மேல் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. அனைத்து முதியோர்களும், விதவைகளும், ஊனமுற்றோர்களும், விவசாயக் கூலித் தொழிலாளர்களும் இதனைப் பெற்று வருகிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை நிறைவேற்ற இப்போது இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, ஊனமுற்றோருக்கான வயது வரம்பைத் தளர்த்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 50 சதவிகிதம் என்ற அளவிலே ஊனமுற்றவர்களாக இருந்து, 45 வயது நிரம்பியவர்களுக்கு இந்தத் திட்டத்திலே வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்டு இருப்பவர்கள் 2,000 பேர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு ரூ. 150 என்ற அளவிலே உதவித் தொகை வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதையும் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிதாபத்திற்குரிய ஊனமுற்ற நபர்கள் உதவித் தொகை பெறுவதற்கு 45 வயது ஆகியிருக்க வேண்டும் என்ற வயது வரம்பு இருக்கிறது. என்னுடைய எடப்பாடி தொகுதி, வைகுந்தத்தைச் சேர்ந்த மாரிமுத்து என்பவர் ஊனமுற்றவர். அவர் விண்ணப்பம் செய்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகி இருக்கிறது. அவருக்கு இதுவரை உதவித் தொகை வழங்கப்படவில்லை. அதேபோல தமிழ்நாட்டில் எத்தனையோ

பேருக்கு உதவித் தொகை இன்னமும் கிடைக்கவில்லை. தயவுசெய்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதன்மீது தனிக் கவனம் செலுத்தி பாதிக்கப்பட்ட ஊனமுற்றோர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள்களும் உதவித் தொகையும் கிடைக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயது வரம்பைத் தளர்த்த வேண்டுமென்று அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். முற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 40 வயது வரை வேலைக்குரிய வாய்ப்பு வழங்கப்படுகிறது. மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 42 வயது வரை வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர்கட்கு 45 வயது வரை வேலைவாய்ப்பு வழங்கலாம் என்று அரசுக் குறிப்பு இருக்கிறது. எனவே அந்த வாய்ப்பையும் பெற முடியாத நிலைக்கு வருகின்றபோது அவர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்கி வருகின்றது. ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர வண்டி வேண்டும் என்று கேட்டார்கள். அவர்கள் விண்ணப்பித்துக் கொண்டால் இந்த ஆண்டு தாராளமாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 515, திரு. கு. மனோகரன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**515—**

### காது கேளாதோர் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்

***14025—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி அரசினர் காது கேளாதோர் பள்ளிக்கு கூடுதல் பள்ளிக் கட்டடம் மற்றும் விடுதி கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?





**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இதே பள்ளிக்கு கட்டடம் வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரிடம் கேட்டபோது இந்த ஆண்டு பரிசீலித்து அறிவிக்கப்படும் என அறிவித்திருந்தார். தருமபுரி தொகுதியிலே, வைக்கப்பட்டியிலே அரசு காது கேளாதோர் பள்ளியிலே இருக்கும் மாணவ மாணவியர்கள் படுப்பதும் படிப்பதும் ஒரே இடம் என்ற நிலையிலே மிகுந்த சிரமத்திற்குள்ளாகி காது இருந்தும் செவிடர்களாய், வாய் இருந்தும் ஊமைகளாய் வெளியிலே சொல்ல முடியாத நிலையிலே இருக்கும் அந்த அப்பாவி பிள்ளைகளுக்கு அவசியம் தமிழக அரசு சிறப்பு முன்னுரிமை திட்டத்திலே இந்த ஆண்டே அந்தப் பள்ளிக்கு விடுதி கட்டடத்தையும் அதேபோல பள்ளிக்கூடக் கட்டடத்தையும் கட்டித்தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையிடம் கலந்து பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அதற்கான விவரங்களை எடுத்துக்கூறி கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 516, திரு. வீ. தமிழ்மணி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**516—**

### ஆரம்பப் பள்ளியை இடைநிலைப் பள்ளியாக்குதல்

***6045—திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 14

திருக்கழுக்குன்றம் பாமசிவ நகரிலுள்ள ஆதிதிராவிட ஆரம்பப் பள்ளியை, இடைநிலைப் பள்ளியாக உயர்த்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் பேரூராட்சியிலே ஒரே ஒரு ஆதிதிராவிடர் நலப் பள்ளிதான் இருக்கிறது. அந்தப் பள்ளியிலிருந்து ஆறாம் வகுப்பு படிக்க வேண்டுமானால் மூன்று அல்லது நான்கு கிலோ மீட்டர் தூரம் சென்றுதான் ஆறாம் வகுப்பிலே சேர வேண்டும். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு பல்வேறு சலுகைகளை அளித்திருக்கின்ற நாம் இங்கு குழந்தைகள் வெளியே போய் ஆறாம் வகுப்பு படிக்க முடியாமல் நின்றுவிடுவதைக் கருத்திலே கொண்டு இந்த ஆண்டாவது அந்தப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்றுவதற்கும் அதே நேரத்தில் அந்தப் பள்ளியில் படிப்பதற்குப் போதிய கட்டட வசதி இல்லாது இருக்கிற காரணத்தினால் கட்டட வசதியையும் அரசு செய்து கொடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் பரமசிவ நகரிலுள்ள தொடக்கப் பள்ளியில் மாணவர்கள் 83 பேரும் மாணவியர்கள் 94 பேரும் மொத்தம் 177 பேர் உள்ளனர். தற்போது சராசரி 137 மாணவர்கள் பள்ளிக்கு வருகின்றனர். மேலும் திருக்கழுக்குன்றத்தில் மொத்தம் மூன்று பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதிலே ஆறு முதல் எட்டாவது வகுப்பு வரையில் மொத்தம் 319 பேர் பயின்று வருகிறார்கள். அந்த 319 பேரில் 36 பேர் மட்டுமே ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த மாணவர்கள். இவர்களில் ஒரு சிலர் மட்டுமே பரமசிவ நகரில் பள்ளிக்கு வந்து செல்கின்றனர். ஆகவே, பரமசிவ நகரிலுள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்துவதற்குப் போதுமான வருகை இல்லாததால் நடப்பு ஆண்டிலே பள்ளியின் நிலை உயர்த்தும் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், அந்தப் பள்ளி பழுதுபட்டிருப்பதாகக் கூறியிருந்தார். அதுகுறித்துப் பள்ளியினுடைய ஆதிதிராவிட நலத் துறை அலுவலருக்கோ அல்லது மாவட்ட அலுவலருக்கோ கருத்துரு



1998 மே 14]

அனுப்பினால் விரைவில் அது கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 517, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

517—

### ஆதிதிராவிடர்களின் மேம்பாட்டிற்கு நிதியுதவி

***10929—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1991-95 வரை மத்திய அரசால் ஆதிதிராவிடர்களின் மேம்பாட்டிற்கு வழங்கப்பட்ட சுமார் 17.00 கோடி ரூபாய், தாட்கோ அலுவலர்கள் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொண்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், திரும்பப் பெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசாணை (நிலை) எண் 2022, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 4-12-1990-ன்படி தாட்கோவின் வளர்ச்சி மற்றும் தொழில் நுட்பப் பிரிவிற்கான நிர்வாகக் கட்டணத்தை சிறப்பு மைய நிதியுதவியிலிருந்து எடுத்துக்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. அதன்படி, 1990-91 முதல் 1994-95 வரை ரூ. 7.82 கோடி மட்டும் தாட்கோவில் பணியாளர்கள் செலவினத்திற்காக சிறப்பு மைய நிதியுதவியிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) கேள்வி எழாது.

முற்பகல் 10-25

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்திலே மிகவும் நலிந்த நிலையில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கக்கூடிய அந்த நிதியைக் கொண்டு, அவர்களது

[1998 மே 14

பொருளாதார நிலையை மேம்படுத்தாமல், அதிகாரிகள் தங்களது பல்வேறு பணிகளுக்காக அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக்கொள்வதோடு, கடந்த காலத்திலே ரூ. 8.3 கோடி அளவிலே பல துறைகளிலே மானியம் வழங்கப்பட்டும், பணிகள் நடைபெற விடாமல் தடுக்கப்பட்டது. அந்தப் பணத்தை மீண்டும் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகச் செலவினங்கள் இல்லாமல் எந்த ஒரு திட்டத்தையும் அரசு நிறைவேற்றிட இயலாது. அதற்காக மத்திய அரசு ஒதுக்கீடு செய்த நிதியிலிருந்து முறையாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகக் குறிப்பிட்ட ஒரு விழுக்காடு பணத்தைச் செலவிட வேண்டுமென்று மத்திய அரசு ஆணையிட்டுள்ளது. அந்த அடிப்படையில், கடந்த ஆண்டு 8 கோடியே 7 இலட்சத்தைச் செலவு செய்திருக்கிறோம். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறபோது ரூ. 8.3 கோடி பணத்தை வேறு பணிகளுக்காகச் செலவு செய்ததாகக் குறிப்பிட்டார்கள். அதுகுறித்து ஆய்வு செய்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 518, திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**518—**

### டாப்டேசனை சுற்றுலா மையமாக்குதல்

***6072—திரு. அ. சுடலைமுத்து :**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தொகுதி, குரங்கனிக்கு மேல் உள்ள டாப்டேசனை சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும்?



1998 மே 14]

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தொகுதி குரங்கனிக்கு மேல் உள்ள டாப்டேசனை சுற்றுலா மையமாக்கும் திட்டம் தற்பொழுது இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

**திரு. அ. சுடலைமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தொகுதிக்குட்பட்ட குரங்கனி மலை அடிவாரத்திற்கு மேல் 13 கி.மீ. தொலைவில் உள்ள டாப்டேசன், கொடைக்கானல், கொச்சி, எர்ணாகுளம் செல்லும் வழியில், நடுவில் அமையப்பெற்ற இயற்கை எழில் வாய்ந்த இடமாகும். கொடைக்கானல் மலைக்கு இணையான உயரம் கொண்டதால், வெளிநாட்டுப் பயணிகள் அங்கே வந்து போகின்றார்கள். இங்கு சுற்றுலா மையம் அமைத்தால் 1,000 ஏக்கர் நிலத்தை இலவசமாகத் தருவதாகத் தேனி மாவட்ட மக்கள் குறை தீர்க்கும் நாளில் Tata Tea Company மேலாளர் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே, டாப்டேசனை சுற்றுலா மையமாக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில், குரங்கனிக்கு மேல் உள்ள டாப்டேசன் மட்டுமல்ல, சுற்றுலாத் துறையின் மூலம் எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது இல்லை. சுற்றுலாப் பயணிகளுடைய வருகையைக் கணக்கில் கொண்டு, அடிப்படை வசதிகளைச் செய்வதுதான் சுற்றுலாத் துறையின் பணியாக இருந்து வருகிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று, வருங்காலத்தில் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 519, திரு. அ.லெ. சுப்பிரமணியன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

[1998 மே 14

519—

## மகிழ்வுப் படகு விடும் திட்டம்

***6415—திரு. அ.லெ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள "நயினார் குளத்தை" ஆழப்படுத்தி அதில் ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகளுக்காக மகிழ்வுப் படகு விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது முதல் செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள நயினார் குளத்தை ஆழப்படுத்தி அதில் சுற்றுலாப் பயணிகளுக்காக மகிழ்வுப் படகு விடும் திட்டம் தற்போது ஏதும் இல்லை. மேலும், இந்தக் குளத்தில் சில மாதங்கள் தண்ணீர் இல்லாததாலும், தாமரை மற்றும் இதர செடிகள் தொடர்ந்து படர்வதாலும் பயன்படுத்த இயலாததால் படகுப் போக்குவரத்து 1993-இல் சில நாட்கள் நடத்தப்பட்டு, நிறுத்தப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. நயினா முகமது.

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி நகரம் வளர்ந்து வரும் நகரம். மாலைப் பொழுதில் அங்கேயுள்ள மக்கள் பொழுது போக்குவதற்கு எந்த ஒரு சுற்றுலா மையமும் கிடையாது. எனவே, திருநெல்வேலியில் உள்ள பொது மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான நயினார் குளத்தை ஆழப்படுத்தி, படகு விடும் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று தங்கள்மூலம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும்.



1998 மே 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முகம்மது கோதர் மைதீன்.

முற்பகல் 10-30

**திரு. முகம்மது கோதர் மைதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி, பாளையங்கோட்டை ஆகிய பகுதிகளில் திரையரங்குகள் தவிர வேறு பொழுதுபோக்கிற்கு எந்த வசதிகளும் இல்லை. கடந்த காலத்தில் நயினார்குளத்தில் படகு விடப்பட்டது. நல்ல வருவாய் இருந்ததாகவும் சொல்லப்பட்டது. ஆனால் அது திடீரென்று நிறுத்தப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, இந்த நயினார் குளத்திலே படகுகள் விடப்படுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நயினார் குளத்தில் படகுகள் விடவேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆர்வத்தை ஏற்று, நிதிநிலையைப் பொறுத்து, வருங்காலங்களில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 520, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

520—

## சீருடைகள், இலவச சேலைகள் வழங்குதல்

***13489—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் கதர் சாய, சலவை அச்சு அலகில், அரசுத் துறைகளுக்கு வழங்கும் சீருடைகள் மற்றும் ஏழைகளுக்கு வழங்கும் இலவச சேலைகள் போன்றவை சாயமிட்டு, அச்சிட்டு வழங்கும் பணி நடைபெறுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பவானிசாகர் சாயத் தொழிற்சாலையில் கதர் வாரியத்தால் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து இரகங்களும் சாயமிடப்படுகின்றன. மேலும் அரசு நிறுவனமான கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலமும் 1997-98 ஆம் ஆண்டு 41,406 மீட்டர் மினரல் காக்கி சாயமிடப்பட்டது. இந்த ஆண்டு, 4-ஆவது மாதத்தில் மினரல் காக்கி 45,000 மீட்டர் சாயமிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர்த் துறையின்கீழ் இருக்கிற மிகச் சிறந்த தொழிற்கூடமான இந்தத் தொழிற்கூடத்தை மேம்படுத்துவதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடப்பாண்டில் 25 இலட்சம் ரூபாய் நிதி அனுமதித்து இருக்கிறார்கள். ஆனால் வேலை படிப்படியாகக் குறைந்து, 100 பேர் வேலை செய்ய வேண்டிய அந்த இடத்தில், இப்போது 52 பேர்தான் வேலை செய்கிறார்கள். கோ-ஆப்டெக்ஸ்க்காக 85,000 மீட்டர் மினரல் காக்கி சாயம் போட்டதில் 25,000 ரூபாய் அந்தத் தொழிற்கூடத்திற்கு இலாபம் கிடைத்திருக்கிறது. அந்தத் தொழிற்கூடத்தை முழு அளவிற்கு செயல்படுத்தி, வேலைவாய்ப்பு அளிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களேயானால், நல்ல இலாபகரமாக இயக்க வாய்ப்பு ஏற்படும். அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலையில் இருக்கின்ற ஜிகர் இயந்திரம், மடிப்பு இயந்திரம் ஆகியவை பழுதுபட்டுள்ளன. அவை தற்போது பழுதுபார்க்கப்பட்டு வருகின்றன. அந்தப் பழுதுபார்ப்புப் பணி முடிந்தவுடன் மாதம் 1 இலட்சம் மீட்டர் சாயமிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. கவன ஈர்ப்பு

### தஞ்சாவூர் நூற்பாலை நிர்வாகம் ஆலையைக் கதவடைப்பு செய்துள்ளதால் தொழிலாளர்கள் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. மா. இராமச்சந்திரன், ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் நூற்பாலை நிர்வாகம் 25-4-1998 அன்று முதல் ஆலையை கதவடைப்பு செய்துள்ளதால், ஆலைத் தொழிலாளர்கள் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் பீதி ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

**அறிக்கை**

தஞ்சாவூர், டெக்ஸ்டைல்ஸ் லிட். என்ற நூற்பாலையில் 708 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இந்நிறுவனத்தில் கீழ்க்கண்ட 8 தொழிற்சங்கங்கள் உள்ளன:

1. எல்.பி.எப்.
2. ஐ.என்.டி.யு.சி.
3. ஏ.டி.பி.
4. சி.ஐ.டி.யு.
5. பி.எம்.எஸ்.
6. பி.ஜே.பி.

7. கே.என்.எல்.ஓ.

8. ஏ.டி.பி.-2

2. இந்நிறுவனத்தில் பருத்தி நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்நிறுவனத்தின் நிர்வாகம் 30-3-1998 ஆம் தேதியில் தொழிற் தகராறு சட்டம் பிரிவு 9ஏ-இன் கீழ் கீழ்க்கண்ட மாறுதல்களைச் செய்வதற்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறது:

1. தற்போது தொழிலாளர்கள் பெற்றுவரும் அகவிலைப்படியைக் குறைத்து, ரூ. 1,500 என்று பிக்சடாக 26 வேலை நாட்களுக்கு கட்டுப்படுத்தவும்.

2. தற்போதுள்ள வேலைப்பளுவை உயர்த்தி மாற்றியமைக்கவும் அறிவிப்பு வழங்கியது.

3. மேற்கண்ட அறிவிப்பினை அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஆட்சேபித்து உள்ளனர். இந்தச் சூழ்நிலையில், 7-4-1998 அன்று வழங்க வேண்டிய மார்ச் 1998 மாத ஊதியத்தினை நிர்வாகம் தவணை முறையில்தான் வழங்க இயலும் என்று 6-4-1998 அன்று அறிவிப்பு செய்ததாகத் தெரிய வருகிறது. இதன்படி, 7-4-1998 அன்று ஒரு தவணை சம்பளத்தினை நிர்வாகம் வழங்க முன்வந்ததை அனைத்துத் தொழிலாளர்களும் பெற்றுக்கொள்ளாமல் மறுத்து, தங்களுக்கு முழுச்சம்பளம், ஒரே தவணையாக வழங்கக் கோரியதாகவும், இதற்கு நிர்வாகம் தங்களது நிதிநிலை மிகவும் மோசமடைந்துள்ளதால் தங்களால் முழுமையாக வழங்க இயலவில்லை என்று தெரிவித்ததாகவும் தெரிய வருகிறது.

4. தொழிற் தகராறு சட்டம் பிரிவு 9ஏ-இன் கீழ், நிர்வாகம் அளித்த அறிவிப்பின் மீது தொழிற்சங்கங்கள் ஆட்சேபம் எழுப்பி, பிரிவு 2 (கே) இன் கீழ் மனு செய்தும் இருந்ததால், தொழிலாளர் அலுவலர் முன்பு இதுகுறித்துப் பேச்சு வார்த்தை நடைபெற்றது. பேச்சுவார்த்தை நிலுவையில் இருக்கும்போது, பிரிவு 9ஏ-இன்படி, எந்த மாற்றமும் செய்யக்கூடாது என்று நிர்வாகத்திற்குத் தொழிலாளர் அலுவலரால் அறிவுரை வழங்கப்பட்டது. இதற்கிடையில், 20-4-1998 அன்று அனைத்துத் தொழிற்சங்கங்களும் சேர்ந்து 23-4-1998 அன்று சாலை மறியலில் ஈடுபடப் போவதாக அறிவிப்புச் செய்தனர். 22-4-1998 அன்று தஞ்சாவூர் சார் ஆட்சியர் முன்பு அமைதிக் கூட்டம் ஒன்று நடைபெற்றதாகவும், அதில் இருதரப்பினரும் அழைக்கப்பட்டனர் என்றும், மார்ச் 1998 மாதச் சம்பளத்தை ஏப்ரல்



இறுதிக்குள் வழங்க நிர்வாகம் ஏற்று கொண்டது எனவும், வேலைப்பளு மற்றும் அகவிலைப்படியைக் குறைத்து கட்டுப்படுத்துவதுகுறித்து ஒரு மாதத்திற்குள் இருதரப்பினரும் பேசி முடிவெடுப்பது என்றும், அதுவரை எவ்வித நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது என்றும் அறிவுரை வழங்கப்பட்டது என்றும் அறியப்படுகிறது.

5. இருப்பினும் நிர்வாகம் இந்த மாற்றங்களை உடன் அமல்படுத்தினால்தான் ஆலை தொடர்ந்து இயங்கும் என்று தெரிவித்ததாகவும், 22-4-1998 அன்று நிர்வாகம் தங்களது மேஸ்திரிகள் மூலம் வேலைப்பளுவை அதிகரித்துப் பார்க்கத் தெரிவித்து இருந்ததாகவும் இதனை மறுத்து அன்றிலிருந்து அனைத்துத் தொழிலாளர்களும் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர் என்றும் அறியப்படுகிறது.

6. பிரிவு 9ஏ-இன் கீழ் அறிவிக்கப்பட்ட மாற்றத்தை ஆட்சேபித்து, தொழிற்சங்கங்கள் தொழிற் தகராறு சட்டம் பிரிவு 2 (கே) இன் கீழ் எழுப்பிய தொழிற் தகராறில் இருதரப்பினரிடையே ஒரு சுமுக முடிவு ஏற்பட வாய்ப்பில்லாத காரணத்தினால், தஞ்சாவூர், தொழிலாளர் அலுவலர், இத்தாவா மீது தனது சமரச முறிவறிக்கையினை அரசுக்கு அனுப்ப முடிவு செய்ததாகத் தெரிவித்துள்ளார்.

7. உள்ளிருப்பு வேலை நிறுத்தம் குறித்துப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு அனுப்பியிருந்த நிலையில், 25-4-1998 ஆம் தேதிய நிர்வாகக் கடிதத்தில், நிர்வாகம் 26-4-1998 முற்பகல் 7.00 மணியிலிருந்து ஆலையின் இயக்கத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதாக அறிவித்துள்ளது. இதுதொடர்பாக, தஞ்சை மாவட்ட சார் ஆட்சியர் முன்பு 27-4-1998 அன்று அமைதிக் கூட்டம் நடைபெற்றதாகவும், அக்கூட்டத்தில் தொழிலாளர்களுக்கு மார்ச் மாதச் சம்பளத்தை உடன் வழங்க நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டதாக அறியப்படுகிறது. நிர்வாகம் தனது 25-4-1998 ஆம் நாளிட்ட அறிவிப்பில் 30-4-1998 அன்று மார்ச் 1998 மாதத்திற்கான சம்பளம் பட்டுவாடா செய்யப்படும் என அறிவித்துள்ளது. கதவடைப்பு பிரச்சினை சம்பந்தமாக தஞ்சாவூர், தொழிலாளர் அலுவலர் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

**திரு. மா. இராமச்சந்திரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையில் முழுவதுமாகச் சொல்லப்பட்டிருக்கிற பல்வேறு கருத்துக்கள் ஒத்துக்கொள்ளக்கூடியதாக இருந்தாலும் சில கருத்துக்களை மறுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. காரணம் 9ஏ-இன்படி ஒரு தொழிற்சாலைக்கு இருக்கிற பஞ்சப்படியைக் குறைக்கிறார்கள்.

[திரு. மா. இராமச்சந்திரன்] [1998 மே 14

அதேநேரத்தில் வேலைப்பளுவைக் கூடுதலாகச் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். இது சம்பந்தமாகப் பல்வேறு தொழிற்சங்கங்கள். தி.மு.க. உட்பட பல்வேறு இயக்கத்தைச் சேர்ந்த சங்கங்கள் சேர்ந்து பேசியிருக்கின்றன. பேசுகிற சூழ்நிலையில், முற்றுப்புள்ளி வைக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. அதன்காரணமாக சார் ஆட்சியர் அவர்களை வைத்துப் பேசுகிறபோது - 22 ஆம் தேதி பேசுகிறபோது- மாதா மாதமும் 7 ஆம் தேதி கொடுக்கிற சம்பளத்தை, 4-ஆவது மாதத்தில் முழுவதுமாகத் தரமுடியாது, பாதி சம்பளம்தான் தரமுடியும் என்ற காரணத்தாலே - சார் ஆட்சியர் குறுக்கிட்டு 28 ஆம் தேதி அந்தச் சம்பளம் முழுவதுமாகக் கொடுக்கப்படும் என்று ஆலையினுடைய நிர்வாகத்தோடு பேசி முடிக்கப்படுகிறது. நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் வாரம் ஒரு நாள் விடுமுறை அளிக்கப்படும் என்று சொல்கிற சூழ்நிலை வருகிறபோது, 25 ஆம் தேதி அந்த ஆலைக்கு விடுமுறை விடப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொற்பொழிவு ஆற்றக் கூடாது, வினாதான் கேட்க வேண்டும். அதோடு சுருக்கமாகப் பேச வேண்டும். விளக்கத்திற்குமேல் நீங்கள் அதிகம் பேசிக் கொண்டு இருக்கிறீர்கள்.

முற்பகல் 10-35

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் கொஞ்சமாகத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குள்ளேதான் நீங்கள் கேட்க வேண்டும்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரி, அப்படியே கேட்கிறேன். அந்த ஆலைக்கு விடுமுறை விடுகிறபோது 25 ஆம் தேதி இரவே அந்த ஆலையை மூடிவிடுகிறார்கள். 28 ஆம் தேதி சம்பளம் கொடுக்கப்படும் என்கிற சூழ்நிலை வருகிறது. 25 ஆம் தேதி ஆலை மூடப்படுகிறது. ஆலை மூடப்படுகிறபோது அவர்கள் சொல்லி இருக்கிற ஒரு கருத்து, உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்ததாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால், உள்ளிருப்பு வேலை நிறுத்தம் தொழிலாளர்கள் செய்யவே இல்லை. ஆலைத் தொழிலாளிகளுக்கு 25 ஆம் தேதி அந்த விடுமுறை நாளைப் பயன்படுத்தி கதவடைப்பு செய்துவிடுகிறார்கள், இன்றைக்கு அங்கு



1998 மே 14] [திரு. மா. இராமச்சந்திரன்]

708 ஆலைத் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்கள் 1¼ ரூபாயில் இருந்து அங்கு வேலை செய்ய ஆரம்பித்தவர்கள்; கடந்த 35 ஆண்டுகாலமாகப் பணிபுரிகிறவர்கள்; கதவடைப்பு காரணமாக வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அருகில் இருக்கிற மாவட்ட தொழிலாளர் நல அலுவலர் அந்தப் பிரச்சினையில் சரியாகச் செயல்படுகிறாரா என்றால், இல்லை. அவர் இதுவரையிலே அங்கே போய் இருந்து, வேலைப்பளு எப்படி இருக்கிறது என்பதை ஆராய்ந்து நிர்வாகத்தோடு பேசி ஒரு முடிவு எடுக்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறார். ஆகையினாலேதான் நம்முடைய அரசு இங்கிருந்து நம்முடைய தொழிலாளர் நல ஆணையரை அனுப்பி, அந்தத் தொழிற்சாலையில், - அது அங்கு மட்டுமல்ல, இன்னும் கோயமுத்தூரில் வரப் போகிறது; சேலத்தில் வரப்போகிறது;

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தஞ்சாவூர் பற்றி மட்டும் பேசுங்கள்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அந்தத் தொழிற்சாலை நிர்வாகம் இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு வருகிறது என்பதைச் சொல்கிறேன். ஆகையினாலே தொழிலாளர் நல ஆணையர் அவர்கள் நேரில் சென்று நிர்வாகத்தோடு பேசி, தொழிலாளர்களோடு பேசி ஒரு சரியான முடிவை ஏற்படுத்த முன்வருவார்களா என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தப் பிரச்சினை குறித்து துறையின் சார்பாக அலுவலர்கள் பல முறை சமரசம் பேசி வந்து கொண்டு இருக்கிறார்கள். இப்போதும்கூட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. நானும் நேரிடையாகக் கூப்பிட்டு பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறேன். 25-4-1998 ஆம் நாளிட்ட அறிவிப்பில் 30-4-1998 அன்று மார்ச் 1998 மாதத்திற்கான சம்பளப் பட்டுவாடா செய்யப்படும் என நிர்வாகம் அறிவித்து இருக்கிறது. எனினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே அவையிலே வைத்த கருத்துகளைக் கவனத்திலே கொண்டு, உடனடியாக இந்தப் பிரச்சினைக்கான தீர்வு நடைபெறும், தீர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது தொழிலாளர் நல அலுவலர் முன்பு இதுசம்பந்தமான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

## 3. அறிவிப்பு

### கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்த உறுப்பினர் அவையில் இல்லாததால் எடுத்துக் கொள்ளப்படாதது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு கொடுத்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் அவையிலே இல்லை. ஆகவே, அது எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கே.ஆர். இராமசாமி, பொதுக் கணக்கு குழுவின் தலைவர்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவின் 109 முதல் 114 வரையிலான (பதினோராவது சட்டமன்றப் பேரவை) 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை அளித்தல். சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர், திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1997-98 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 10-ஆவது (பதினோராவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.



## 5. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 24 — தொழில்கள்

### (ஆ) கோரிக்கை எண் 53 — தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

### (அ) கோரிக்கை எண் 24 — தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1998-99 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 15,78,35,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 524, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம் பாபநாசம் தொகுதியில் கரும்பு அதிகமாகப் பயிரிடப்படுவதால் கரும்பு சருகை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 15,78,35,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1577, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 15,78,35,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3005, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 15,78,35,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1688, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம் விவசாயத்தையே நம்பியிருக்கும் மாவட்டம் என்பதால் அங்கு பெரிய தொழிற்சாலைகள் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 15,78,35,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1004, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி ஒன்றியத்தை தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 15,78,35,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1767, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை 'டாசிட்' தொழில் வளர்ச்சி மையத்திற்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு அப்பூமியில் இருந்த வேளாண் மின் இணைப்பை 'டாசிட்' எல்லைக்கு வெளியே உள்ள அவர்களுடைய நிலத்திற்கு மாற்றிக் கொள்ள உத்தரவு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 15,78,35,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1977, திரு.ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கைப் பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 15,78,35,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2231, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மணவாளக்குறிச்சியில் ஏற்றுமதியாகும் மணலை மூலப்பொருளாகக் கொண்டு கண்ணாடி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ ஒதுக்கப் பெறுகின்ற ரூ.15,78,35,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2305, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.15,78,35,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 634, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**DR. E.S.S. RAMAN**: Hon. Speaker Sir, 'To discuss the need to establish a TIDCO Complex at R.K. pet Union, Pallipet Taluk' I move-

``That the sum of Rs.15,78,35,000/- allocated under demand No.24 - Industries, be reduced by Rs.100/-."

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1819, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, 'To discuss the need to take necessary steps to reopen the closed 1. Statakil, 2. Elforge and 3.Tools International Industries at Hosur SIPCOT Industrial Complex' I move–

``That the allocation of Rs.15,78,35,000/- under demand No.24 - Industries, be reduced by Rs.100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1342, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையில் மூடப்பட்டுள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனியை மீண்டும் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.15,78,35,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 760, திரு. வை. சிவபுண்ணியம்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டத்தில் வேளாண் மூலப்பொருட்களைக் கொண்ட தொழில் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.15,78,35,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3897, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் மாவட்டம், இராசிபுரத்தில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.15,78,35,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3615, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நலிவடைந்து வரும் அரசுத் தொழில் நிறுவனங்களினால் ஏற்படும் இழப்பைத் தவிர்க்க, தமிழக அரசு தனியாக ஒரு Disinvestment Commission அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.15,78,35,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2137, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரையில் உள்ள சிப்காட் தொழில் வளாகத்தில் மாநில அரசே தொழில்கள் துவங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.15,78,35,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3596, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டைத் தொகுதி, பள்ளப்பட்டி அருகில் அரசு கையகப்படுத்திய 413 ஏக்கர் நிலத்தில் தொழிற்பேட்டை உடனடியாக ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.15,78,35,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3383, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கம் வட்டம், பாலிப்பட்டு, கவிந்திமலை ஆகிய பகுதிகளில் கிடைக்கும் இரும்புத் தாதைப் பயன்படுத்தி, அங்கு உருக்குத் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.15,78,35,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 53– தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 53–தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1,18,64,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 185, திரு. கே. சுப்பராயன்.



**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,18,64,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1637, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,18,64,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3681, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,18,64,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1718, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,18,64,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2301. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,18,64,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1859. திரு.பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, 'To discuss policy' I move–

"That the allocation of Rs.1,18,64,000/- under Demand No.53 - Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்கள் மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பெற்று, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என் பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

@ 159 முதல் 187 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகின்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் 13 பேர் பேச இருக்கின்றார்கள். இந்த எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்று நான் நினைத்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள், விவாதத்தைத் தொடங்கி வைக்கக்கூடியவர், தான் ஐந்து நிமிடத்திற்கு மேல் பேசப் போவதில்லை என்று என்னிடம் கூறியிருக்கின்றார்கள். அதை அவர்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, திரு. ப. ரங்கநாதன் அவர்களைப் பேச அழைக்கின்றேன். திரு. ரங்கநாதன் அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு மற்ற உறுப்பினர்களும் நடந்து கொள்வார்கள் என்று கருதுகின்றேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்கள் மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய இந்த மானியக் கோரிக்கைகளின்மீது தமிழ் மாநிலக் காங்கிரசின் சார்பாக நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகங்களிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தென் மாநிலங்களிலே முதல் முறையாக ஒரு புதிய முயற்சியினைக் கொண்டு வருகின்ற முறையில் 'முந்துதல் துறை' - அதாவது Thrust Sector ஆக அறிவித்து, அதிலே உணவு பதனிடும் துறை (Food Processing) மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை (Information Technology) ஆகிய துறைகளை 'முந்துதல் துறைகள்' என்று அதற்கு முக்கியத்துவம் கொடுத்து இங்கே அறிவித்திருக்கின்றார்கள். அதை வரவேற்பதிலே நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

அதேபோன்று இந்தத் துறைகளுடைய அடிப்படையில் நான்கைந்து பயனுள்ள கொள்கைகளையும் அரசு அறிவித்துள்ளது. பொதுவான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேலும் அதிகப்படுத்துதல், தொழில் முனைவோருக்கு எளிதில் நிலம் கிடைக்கும் வகையில், பல்வேறு தொழிற்பேட்டைகளையும், பூங்காக்களையும் உருவாக்குதல், குறிப்பிட்ட தொழில் வகைகளுக்கெனத் தனியே கொள்கை விளக்கக் குறிப்புகளை உருவாக்குதல், புதிதாகத் தொடங்கப்படும் தொழில்களுக்கும், பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் தொடங்கப்படும் தொழில்களுக்கும் பலதரப்பட்ட சலுகைகளை

அளித்தல், புதிய வழிகாட்டும் நெறிகளை உருவாக்குதல் மற்றும் புதிய தொழில்களில் பங்கேற்றல் ஆகியன சொல்லப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10-45

ஆனால், கடந்த ஆண்டில்கூட இந்த மானியத்திலே பேசுகின்றபோது Single Window System பற்றிக் குறிப்பிட்டேன். குறிப்பாக ஒரு தொழில் முனைவர் தொழில் தொடங்க எண்ணினால் அவர்கள் அதற்குண்டான அடிப்படைப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு, உதாரணமாக மின்சாரம் பெறுவதற்கு, வணிக வரி அனுமதி பெறுவதற்கு, மற்ற தொழில் துறை சம்பந்தமான அனைத்து அனுமதிகளையும் பெறுவதற்கு பல்வேறு நிலைகளில் காலதாமதம் ஏற்படுகிறது. அதற்காக Single Window System நீங்கள் அறிமுகப்படுத்த வேண்டுமென்று கடந்த முறையும் குறிப்பிட்டிருந்தேன். இந்த முறையும் நான் அதை மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இந்த Single Window System என்பதை நீங்கள் உடனடியாக அறிமுகப்படுத்த வேண்டும்.

அதேபோன்று, டிட்கோ மூலமாகப் பல்வேறு தொழிற்சாலைகள் உதாரணமாக, உணவு பதனிடும் தொழிலை அடிப்படையாகக் கொண்டு 100 சதவீதம் ஏற்றுமதி வாய்ப்புள்ள நிறுவனங்களை இங்கே நீங்கள் அறிவித்துள்ளீர்கள். முட்டையை மூலப்பொருளாகக் கொண்டு ரூபாய் 41 கோடியில் ஒரு தொழிற்சாலை, கோழியை மூலப் பொருளாகக் கொண்டு கோழிக்கறி ஏற்றுமதி தொழிற்சாலை, அதேபோன்று உருளைக்கிழங்கை மூலப் பொருளாகக் கொண்டு ஃபிரெஞ்ச் வறுவல் தயாரிக்கின்ற 100 விழுக்காடு ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட ஒரு தொழிற்சாலை, மாம்பழத்தை மூலப் பொருளாகக் கொண்டு தருமபுரியில், ஒசூர் வட்டத்தில் - மிகவும் பின் தங்கிய மாவட்டம் - ஒரு தொழிற்சாலை, அதேபோன்று தேங்காயை மூலப்பொருளாகக் கொண்டு 100 விழுக்காடு ஏற்றுமதி திறனுள்ள தொழிற்சாலை என்று பல்வேறு தொழிற்சாலைகளை நீங்கள் அறிவித்துள்ளீர்கள். நான் பாராட்டுகிறேன். ஆனால் கடந்த ஆட்சியில்கூட இதேபோன்று ஒவ்வோராண்டும் பல தொழிற்சாலைகளை அறிவித்தார்கள். அவைகளை அறிவித்ததோடு சரி, அவைகள் திறக்கப்படவேயில்லை. அந்தத் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டிலே வரவும் இல்லை. அதே நிலைமை உங்களுடைய ஆட்சியிலும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று டிட்கோ பிரிவிலே இன்னும் Software Technology Park அதாவது கணினித் துறையைச் சார்ந்த கம்ப்யூட்டர் பூங்காவை,



140 கோடி ரூபாய் செலவில், 7 ஏக்கர் நிலத்தில் உருவாக்கப் போகிறோம் என்றும் அறிவித்துள்ளீர்கள். அதனையும் இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்திலே குறிப்பிட்டுள்ளீர்கள். அதோடு நிறுத்தி விடாமல் அதையும் தொடங்குவதற்கு நீங்கள் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 1996-97, 1997-98 ஆகிய இரண்டு ஆண்டுகளில் கும்மிடிப்பூண்டி 'டூபான்ட்' தொழிற்சாலை, புதிய கார் தொழிற்சாலைகள், தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை, அதேபோன்று இருங்காட்டுக் கோட்டையிலே கார் தொழிற்சாலைக்குத் தேவையான உதிரிபாகங்கள் தயாரிக்கின்ற தொழிற்சாலை, கண்ணாடித் தொழிற்சாலை, இன்னும் பல சிறிய தொழிற்சாலைகள் எல்லாம் உருவாகியிருக்கின்றன. ஆனால் இந்தத் தொழிற்சாலைகளுக்குப் பின்னால் இந்த ஆண்டில், 1998-99-இல் அல்லது 1997-98-இல் புதிய தொழிற்சாலைகள் எத்தனை தமிழகத்திற்கு வந்திருக்கின்றன. அல்லது நீங்கள் எத்தனை தொழிற்சாலைகளைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்பதை இங்கே நீங்கள் தெளிவுபடுத்த வேண்டும். அதேபோன்று....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசத் தொடங்கி 5 நிமிடங்கள் முடிந்து விட்டன.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோன்று தமிழ்நாடு சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் என்ற பொதுத் துறை நிறுவனம் 1996-97 ஆம் ஆண்டில் மட்டும் 4.63 கோடி ரூபாய் இழப்பு கண்டது. ஆனால் 1997-98 ஆம் ஆண்டில் அந்தத் தொழிற்சாலை அந்த ரூ.4.63 கோடி இழப்பையும் சரிக்கட்டி 10 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது என்று இங்கே குறிப்பிட்டுள்ளீர்கள். அந்தத் தொழிற்சாலை இன்னும் பெருமளவுக்கு இலாபம் ஈட்டுவதற்கு முனைப்புடன் அந்த ஆலை செயல்படுவதற்கு நீங்கள் அங்கே நிர்வாகத்திலிருக்கின்ற அதிகாரிகளை, அங்குள்ள நிர்வாகத்தை முடுக்கி விடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று அரக்கோணம் ஆாக எஃகு ஆலை மூடப்பட்டு 1,020 தொழிலாளர்கள் அங்கே பட்டினியால் வாடுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அது ஒரு மிகப் பெரிய தொழிற்சாலை. அரக்கோணம் ஸ்டீல் பிளான்ட், 10 மாதங்களாக மூடியிருக்கின்றது. நான், தொழிலாளர் மானியத்தில் பேசுகின்றபோது, அந்த தொழிற்சாலையை மூடியுள்ளார்கள், அதற்கு ஏதாவது வாய்ப்பு தந்து, அரசு நிதி உதவி அளித்து அந்தத் தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கு உண்டான

பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டேன். மீண்டும் நான் கேட்டுக்கொள்வது, அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதோடு தொழில் தொடங்க முன்வருவோர்கள்... (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தங்கம் தென்னரசு. (குறுக்கீடு) பேரவைத் தலைவர் 5 நிமிடங்கள் என்று சொன்னார். இரண்டு நிமிடங்கள் அதிகமாகப் பேசி 7 நிமிடங்கள் ஆகிவிட்டன. அவருடைய கட்டளையை நான் மீற முடியாது. திரு தங்கம் தென்னரசு.

**திரு.தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பெருந்தொழில்கள் மீதான மானியக் கோரிக்கையிலே கலந்துகொண்டு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாக 1996-97, 1997-98 இந்த இரண்டு ஆண்டுகளில் தமிழகத்திலே குறிப்பாக பல பெரிய கனரகத் தொழிற்சாலைகள், அதாவது கார் தொழிற்சாலைகள், இன்னும் பல தொழிற்சாலைகள், வந்திருந்தாலும், கடந்த 5 ஆண்டுகளில் முந்தைய ஆட்சியில் ஒரு தொழிற்சாலையும் தமிழகத்திற்கு வரவில்லை. அதைப் போக்குகின்ற வகையில், தமிழகத்திலே வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற வகையில், இன்னும் கூடுதலாக நீங்கள் தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும், அதற்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்புகளுக்கு அதாவது சாலை வசதி, பாலங்கள் கட்டுவது, மின்சாரத்தை உற்பத்தி செய்வது போன்ற அடிப்படைத் தேவைகளுக்கு infrastructure முன்னுரிமை தந்து தமிழகத்தில் தொழில் வளம் பெருக நீங்கள் முனைப்புடன் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தங்கம் தென்னரசு.

***திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பெருந்தொழில்கள் குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு, எனது கருத்துக்களை எடுத்துக்கூற வாய்ப்பளித்த தங்களுக்கும், தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் எனது நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்றான் பாரதி. வெறும் வந்தனையோடு மாத்திரம் நின்றுவிடாமல், தொழில் துறை தமிழகத்திலே வாழ வேண்டுமென்ற தனியாத ஆர்வம் காரணமாக செயல்பட்டு வரக்கூடிய தலைவர் கலைஞருடைய அரசின் நடவடிக்கைகளின் காரணமாக இன்றைக்குத் தமிழகம் தொழில் துறையில் முன்னேறிச் செல்கிறது என்பதை நான் பெருமிதத்தோடு குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் தமிழகம், தொழில் துறையில் எவ்வளவு தூரம் நலிவு அடைந்திருந்தது என்பதையும் தொழில் அதிபர்கள் ஆட்சியாளர்களைச் சந்திப்பதற்கு என்னென்ன நிபந்தனைகள் எல்லாம் விதிக்கப்பட்டன என்பதையும் நாம் நன்றாக அறிவோம். புறநானூற்றிலே 'வெள்ளைக்குடி நாகனார்' அழகாகக் குறிப்பிடுவதுபோல,

"அறம் புரிந்தன்ன செங்கோல் நாட்டத்து
முறைவேண்டு பொழுதின் பதன் எளியோர் ஈண்டு
உறை வேண்டு பொழுதில் பெயல் பெற்றோரே"

அறம் இருக்கக்கூடிய ஒரு செங்கோல் ஆட்சியிலே நீதி வேண்டி ஒருவர் வருகின்றபோது அவருக்கு எளிதில் காட்சியுடையவனாக மன்னன் இருப்பானேயானால் அது மழைத் துளியை வேண்டுகின்றபோது பெருமழை பெய்ததற்கு ஒப்பாக அமையும். அதைப்போல தொழில் அதிபர்கள் முதல்வரைச் சந்திக்க வேண்டுமென்றால் எளிதாகக் காட்சி தரக்கூடிய முதலமைச்சராக இருந்து அவர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் இன்றைக்குத் தீர்த்து வைக்கக்கூடிய மா மழையாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்றார் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்குத் தமிழகம் தொழில் வளர்ச்சியில் தலைவர் கலைஞருடைய ஆட்சியில் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறது என்பதற்கு Evaluation and Applied Research Department மூலமாக வெளியிடப்பட்டு இருக்கக்கூடிய Tamil Nadu - An Economic Appraisal என்ற ஏட்டினைப் பார்ப்போமானால், நாம் விவரங்களை அறிந்துகொள்ள முடியும்.

Index for Industrial Production Growth Rate என்று பார்ப்போமானால் 1982 முதல் 1991-ஆம் ஆண்டு வரையில் 10 ஆண்டு காலத்திலே 7.1 சதவிகிதமாக இருந்த வளர்ச்சி 1991-96-ஆம் ஆண்டிலே, கடந்த ஆட்சிக் காலத்திலே 2 சதவிகிதமாகக் குறைந்து, 1996-97-ஆம் ஆண்டிலே மீண்டும் தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டபிறகுதான், அது 5.5 சதவிகிதமாக இன்றைக்கு வளர்ச்சி கண்டிருக்கிறது என்பதை நான் மெத்தப் பெருமிதத்தோடு இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமாத்திரமல்ல. கடந்த 24 மாதங்களில்தான், தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சியிலே, தொழில் வரலாற்றிலேயே இல்லாத வகையிலே ஒரு சாதனையாக ஏறத்தாழ 35 ஆயிரம் கோடி ரூபாய் இங்கே முதலீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் மெத்த மகிழ்ச்சியோடு நினைவு கூர்கின்றேன். அதிலே ஏறத்தாழ 4 ஆயிரம் கோடிக்கு மேல் Foreign Investment Promotion Board மூலமாக நேரடி அன்னிய முதலீடாக வந்திருக்கிறது என்பதையும் நான் இங்கே நினைவு கூர்கின்றேன்.

முற்பகல் 10-55

Economic Times என்ற ஏட்டில், கடந்த மார்ச் மாதம் வந்திருக்கக்கூடிய ஒரு தகவலின்படி, அமெரிக்க தூதரகம், அமெரிக்காவிலே 132 நிறுவனங்களிடத்திலே நடத்தப்பட்ட அந்த சர்வேயின்படி, இந்தியாவிலேயே தொழில் தொடங்குவதற்கு ஏற்ற மாநிலமாக, முதல் இடத்திலே இருக்கக்கூடிய மாநிலமாக, தமிழகத்தை இன்றைக்குத் தேர்வு செய்திருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவர் அவர்களுடைய அயராத உழைப்பின் காரணமாக, இன்றைக்குக் கொள்கை விளக்கக் குறிப்பிலே தொழிற்சாலைகளினுடைய ஊர்வலங்கள் என்று சொல்லத்தக்க அளவுக்கு, மாபெரும் தொழில்கள் எல்லாம் இன்றைக்கு இங்கே உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் பெருமிதத்தோடு எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் இன்றைக்கு டிட்கோ நிறுவனம் ஆரம்பித்திருக்கக்கூடிய Venture Capital என்பது இந்தியாவிலே முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்ற ஒரு திட்டமாகும். அதிலே இப்போது 30 கோடி ரூபாய் Corpus Fund வைத்து ஆரம்பித்திருக்கக்கூடிய இந்தத் திட்டம் இன்றைக்கு வளர்ச்சி அடைந்திருக்கக்கூடிய அமெரிக்க நாடுகளானாலும் சரி, Asian Countries



என்று சொல்லப்படுகிற நாடுகளானாலும் சரி, அங்கே சாஃப்ட்வேர் தொழிலிலே எல்லாம், கம்ப்யூட்டர் தொழிலிலே எல்லாம் அவர்கள் ஒரு வளர்ச்சியைக் கண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு இந்த Venture Capital, தொழில் மூலதன நிதிதான் ஒரு முக்கியமான காரணமாக இருந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த Venture Capital, மூலமாக High Technology High Risk Area என்று சொல்லக்கூடிய சாஃப்ட்வேர் இன்டஸ்ட்ரியிலே இன்றைக்கு இளம் தொழில் அதிபர்கள், முன் அனுபவமற்ற, தொழில் அதிபர்கள் எல்லாம் ஈடுபட்டு அந்தத் தொழிலை வளர்க்கக்கூடிய ஒரு வாய்ப்பினை உருவாக்கி இருக்கிறார்கள் என்பதை மாத்திரம் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்திலே தொழில் வளர்ச்சி இன்னும் நலம் பெற, இன்னும் வளம்பெற, தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்து, அதிலே அரசாங்க அலுவலர்கள், தொழில் அதிபர்கள், வர்த்தக சங்கத்தினுடைய பிரதிநிதிகள் எல்லோரும் இணைந்து, அந்த உயர்மட்டக் குழு, அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும், குறிப்பாக தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் பயணம் மேற்கொண்டு, அந்நிய தொழில் முதலீட்டை, தமிழகத்தை நோக்கித் திருப்புவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்களுடைய பவள விழாவை முன்னிட்டு, ஏற்படுத்துவதாக அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய 50 தொழிற்பேட்டைகளில் ஒரு தொழிற்பேட்டையை தொழில் வளத்திலே மிகவும் பின்தங்கி இருக்கின்ற எனது தொகுதியான அருப்புக்கோட்டை தொகுதிக்கு அளிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், மதுரை மாநகரம் இன்றைக்குத் தமிழகத்திலே தொழில் வளர்ச்சியிலே பின்தங்கிய ஒரு மாநகரமாக இருக்கின்றது. கோயம்புத்தூரை எடுத்துக்கொள்வோமானால், அதை தென்னிந்தியாவினுடைய மான்செஸ்டர் என்று சொல்கிறார்கள்.

அதேபோல், சென்னையை எடுத்துக்கொள்வோமானால், இது கிழக்கு ஆசியாவினுடைய 'டெட்ராய்ட்' என்று, கார் தொழிற்சாலைகள் எல்லாம் இங்கேதான் வருகின்றன என்று சொல்கிறார்கள். திருச்சியை எடுத்துக்கொள்வோமானால், அது கனரகத் தொழில்களினுடைய காவல் அரணாக இன்றைக்கு இருக்கின்றது. சேலத்தை எடுத்துக்

[திரு. தங்கம் தென்னரசு] [1998 மே 14

கொள்வோமானால், அது இரும்புத் தொழிற்சாலைகளினுடைய இனிய உறைவிடமாக இருக்கின்றது. ஆனால் மதுரை மாத்திரம்தான் இன்னமும், இட்லி கடைகளினுடைய இருப்பிடமாகவும், புரோட்டா கடைகளினுடைய புகலிடமாகவும் இருந்து கொண்டிருக்கிற ஒரு அவலச் சூழ்நிலை இருக்கிறது. எனவே, தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலே இருக்கக்கூடிய இந்த அரசு இந்த அவல நிலையை மாற்றி, மதுரைக்கு ஓர் உரிய முக்கியத்துவத்தைப் பெற்றுத்தரக்கூடிய வகையிலே தொழில் வளர்ச்சியிலே மதுரைக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், விருத்தாசலத்திலே டான்செம் மூலம் சிமென்ட் கட்டும் பாலித்தீன் பைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலையை ரூபாய் 415 இலட்சத்திலே விரைவிலே தொடங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், டான்சி நிறுவனத்திலே அங்கே தொழிலாளர்களாக இருந்து ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு அரசு ஆணை எண் 637-ன்படி, ஓய்வு ஊதியம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என் உரையினுடைய இறுதியாக நான் தலைவர் கலைஞர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது எல்லாம், நம்முடைய மாண்புமிகு முதல்வர் பிறந்த ஊர் திருக்கோளிலி என்ற ஊராகும். கலைஞர் அவர்கள் 'நெஞ்சுக்கு நீதி' எழுதுகின்றபோது, தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற அழகான சிற்றூர்களிலே ஒன்று திருக்கோளிலி. அதனை திருக்குவளை என்றும் அழைப்பார்கள் என்று எழுதியிருக்கின்றார்கள். இதை ஏன் திருக்கோளிலி என்று அழைக்கிறார்கள் என்று கேட்பீர்களானால், அங்கே 9 கோள்கள்—நவக்கிரகங்களினுடைய குற்றங்களை எல்லாம் அந்த இறைவன் போக்கி, அருள்பாலித்த காரணத்தால் அந்த ஊர் திருக்கோளிலி என்று ஆயிற்று. அங்கே இருக்கக்கூடிய இறைவனுக்குப் பெயரே திருக்கோளிலி நாதர். ஞானசம்பந்தர்கூட, தேவாரத்தில் பாடுகின்றபோது, 'கோளாய வினைகள் தீர்க்கும் அவன், கோளிலி எம்பெருமான்' என்று பாடுகிறார். எப்படி திருக்கோளிலி நாதர் அங்கே 9 கோள்களுக்கு அருள்புரிந்தாரோ, அதைப்போல், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த பட்ஜெட்டிலே 9 புதிய தாலுகாக்களுக்கு அருள் புரிந்து இருக்கின்றார்கள். புராண காலத்திலேயே திருக்கோளிலி நாதர், 9 கோள்களுக்கு அருள் புரிந்திருக்கிறார்கள் என்றால், இது கம்ப்யூட்டர் காலமாக இருக்கிறது, எனவே, கோளிலி எம்பெருமான் கொஞ்சம் கூடுதலாக அருள்புரிந்து, எப்படி அங்கேயிருக்கக்கூடிய கோள்கள் எல்லாம் தெற்கு நோக்கிப்



1998 மே 14] [திரு. தங்கம் தென்னரசு]

பார்க்கிறதோ, அதைப்போல, மாண்புமிகு முதல்வர் அவர்களும், தெற்கு நோக்கித் தன் கடைக்கண் பார்வையைச் செலுத்தி, 10ஆவது தாலுகாவாக காரியாபட்டி தாலுகாவை அறிவித்திட வேண்டும் என்றும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கேட்டு, பணிவன்போடு அமர்கிறேன், வணக்கம்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன். கண்டிப்பாக 10 நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ள வேண்டும்.

*** திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியக் கோரிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் முன்வைக்க விரும்புகிறேன். ஒரு நாட்டில் பொருளாதார, சமூக வளர்ச்சிக்கு மிக முக்கியமான அடிப்படை தொழில் வளர்ச்சிதான். தொழில் வளர்ச்சியில் ஏற்படுகிற வேலைவாய்ப்பின் மூலம்தான் சமூக வளர்ச்சி என்பது உறுதிப்படுத்தப்படும். வறுமை ஒழிப்பிற்கும், உற்பத்தித் திறன் சார்ந்த வேலைவாய்ப்பு அளிப்பதற்கும் மிகுந்த முன்னுரிமை கொடுத்து இருக்கிறது ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் என்பதை நாம் அறிவோம். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு 9.3 சத இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதற்குரிய முறையில் நடைமுறைகள், உத்திகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதையொட்டியே தமிழ்நாட்டிலும் அதனுடைய தொழில் கொள்கை உருவாக்கப்பட்டிருக்கும் என்று நான் கருதுகிறேன்.

குறிப்பாக, தொழில் வளர்ச்சிக்கு பிரதான விஷயம் மின் உற்பத்திதான். மின்சார உற்பத்தி என்பது கடந்த 5 ஆண்டுகாலம் தமிழ்நாட்டு வரலாற்றின் மிகக் கடுமையான தேக்க காலமாக இருந்திருக்கிறது என்பதை நாம் அறிவோம். தமிழ்நாட்டின் தொழில் துறை வளர்ச்சியை நாம் பார்த்தோமேயானால் 1957 வாக்கில் நீலகிரி மலையினுடைய ஆற்றுப் பள்ளத்தாக்கின் குந்தா நீர் மின்சாரத்தை நம்பித்தான் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியின் ஆரம்ப காலம் அமைந்திருந்தது. தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி செழித்த காலம், சிறந்த காலம் என்பதே அதையொட்டித்தான். குந்தாநீர் மின்சாரத்திற்குப் பின்னர் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி பெருகி, இந்தியாவிலேயே 3ஆவது இடத்திற்கு – மராட்டியத்தையும், மேற்கு வங்கத்தையும் அடுத்து தமிழ்நாடு 3ஆது இடத்திற்கு வந்திருந்தது. அதற்கடுத்து, 1962 ஆம் ஆண்டு வாக்கில் நாம் பார்த்தோமேயானால், மேற்கு

வங்கத்தைப் பின்னுக்குத் தள்ளி, தமிழ்நாடு 2 ஆம் இடத்தைப் பிடித்ததை நாம் பார்த்தோம். இத்தகைய முயற்சிகளுக்கெல்லாம் அடிப்படையாக இருந்தது மின்சார உற்பத்திதான். ஆனால் அந்த மின்சார உற்பத்தி என்பது கடந்த 1991-லிருந்து 1996 ஆம் ஆண்டு வரையிலும் - நான் ஏதோ ஓர் அரசியல் நிலையிலிருந்து குறிப்பிட விரும்பவில்லை. அரசியல் சார்பற்ற நிலையில் அதற்கு அப்பாற்பட்டு, பொதுவாக நின்று பார்த்தோமேயானால், தமிழ்நாட்டின் 1952 ஆம் ஆண்டிலிருந்து முதல் பொதுத் தேர்தலுக்குப் பின்னர், இன்றைக்கு வரையிலும் பார்த்தால் கடந்த 5 ஆண்டுகாலம்தான் Generation improvement என்பதே இல்லாத காலம். இந்த 5 ஆண்டு காலம்தான் பல்கிப் பெருகிய தொழிற்சாலைகளும், வீடுகளும் வேறு பல வடிவங்களில் மின்சாரத்தைப் பயன்படுத்துகிற முறைகளும் பெருகி, மின்சாரத் தேவையைக் கற்பனை செய்ய முடியாத அளவிற்கு அதிகரித்துக்கொண்டேயிருந்த நிலையில் அவற்றுக்கு ஈடுகொடுக்கிற முறையில், மின் உற்பத்தித் திட்டங்களுக்காகத் திட்டமிடாத ஒரு வறண்ட காலம் என்பதை 1991-லிருந்து 1996 வரையிலான அனுபவமும், விவரங்களும் நமக்கு நிரூபிக்கின்றன. அதனால்தான் இன்றைக்கு நம்முடைய மின்துறை அமைச்சரும் சரி, தமிழக அமைச்சரவையும் சரி, தமிழ்நாட்டிற்குப் பதில் சொல்ல வேண்டிய அளவிற்கு இந்த நெருக்கடியைத் தோற்றுவித்தது முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவினுடைய தவறான கொள்கைகள்தான். கடந்தகால ஆட்சியினுடைய தவறுக்கு இன்றைய அரசு பதில் அளிக்க வேண்டிய ஒரு நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதே இப்போது மின்சாரப் பிரச்சினைகளும் மின்சாரப் பற்றாக்குறைகளும் நிரூபிக்கின்றன. நான் இந்த நேரத்தில் மாநில முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேகூட 50,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு ரூ. 1½ லட்சம் கோடி தேவை என்று ஒரு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இப்படி மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதே தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம் மிகுந்த முக்கியத்துவம் என்று கருதித்தான். எனவே நான் தமிழ்நாட்டைப் பற்றிக் குறிப்பிட விரும்புவது, பல மின் உற்பத்தித் திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டுவிட்டன. இப்படிக் கிடப்பில் போடப்பட்ட மின் உற்பத்தித் திட்டங்கள் முழுவதும் இப்போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அதனுடைய விவரங்கள் முழுமையாக இந்தக் கொள்கைக் குறிப்பிலே இல்லை.



மதுராந்தகத்திலேயே தேசிய அனல் மின் நிலையத்தால் திட்டமிடப்பட்ட 2,000 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட செய்யாறு திட்டம், மத்திய அரசும் மாநில அரசும் Equal share செய்து கொள்வது என்கிற ப்ரபோசல் ஒப்புக் கொள்ளப்படாததால் கைவிடப்பட்டிருக்கிறது. இந்த விஷயம் உண்மையில் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தால் நமக்கு 50% ஷேர் கிடைத்திருக்கும். அது கிடைக்காமல் போனது என்பது ஒரு தவறான முன்னுதாரணம் என்பதையும், அந்த மதுராந்தகம் – செய்யாறு திட்டம் தேசிய அனல் மின் நிலையத்தால் - அதாவது பழுப்பு நிலக்கரியைக் கொண்டு தயாரிக்கப்படுகிற அனல் மின் நிலையம் 2,000 மெகாவாட் கொண்ட திட்டம் கைவிடப்பட்டது உண்மையில் தமிழ்நாட்டிற்கு ஒரு பெரிய நஷ்டம் என்று நான் கருதுகிறேன். இந்த விஷயத்தில் நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்தி.... (குறுக்கீடு)

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தின் சார்பில் அதிகாரிகள் எல்லாம் அங்கே வந்து பார்த்து, 2,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டத்திற்கு நிலம் ஆர்ஜிதம்கூடச் செய்து தர முடியுமா என்று கேட்டு மின்சார வாரியமும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருகிறோம் என்று சொன்னதற்குப் பிறகு, மின்சார உற்பத்திக்கான தண்ணீர் அங்கு கிடைக்காது என்ற ஒரு முடிவிற்கு வந்த காரணத்தினாலே அவர்கள் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முழுப் பங்கையும் மாநில அரசு கேட்டதால் கைவிடப்பட்டுவிட்டது என்ற ஒரு செய்தி வந்ததை மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத்தான் நான் இந்த விஷயத்தை இங்கே குறிப்பிட்டேன். மாநில அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி.

அதேபோல, தமிழ்நாட்டில், வடசென்னையில் 500 மெகாவாட் திறன் கொண்ட 4 பிரிவுகள் தொடங்கப்படுவதாக இருந்தது. அதை இப்பொழுது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட கடந்த சில தினங்களுக்கு முன்னால் இங்கே குறிப்பிட்டார்கள். அந்தத் திட்டத்தையும் மீண்டும் நிறைவேற்றுவதற்கு நாம் மிகுந்த முயற்சி எடுக்க வேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே

கேட்டுக்கொள்வதோடு, நெய்வேலி மூன்றாவது மின் உற்பத்தி நிலையம் 1,500 மெகாவாட் திறன் கொண்டது, இன்றைக்கு வரையிலும் தொடங்கப்படவில்லை. அது தொடங்கப்பட வேண்டும் என்பதையும் நான் இங்கே வற்புறுத்தித் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுவும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் நிதித் துறையும், தொழில் துறையும் முதலமைச்சருடைய அமைச்சகத்தின்கீழ் வருவது என்பது ஒரு சிறப்பான விஷயம்தான். எப்பொழுதுமே தொழில் துறை ஒரு அமைச்சகத்திலும், நிதித் துறை வேறொரு அமைச்சகத்திலும் இருந்தால் தொழில் வளர்ச்சிக்குப் பல்வேறு இடையூறுகள் நிதித் துறையால் ஏற்பட்டு விடக்கூடும். அது தவிர்க்கப்படுவதற்கு இரண்டு துறைகளும் முதலமைச்சரின்கீழ் இருப்பது ஒரு நல்ல அம்சம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பல்வேறு விஷயங்களைச் சொல்வதற்கு நேரம் இல்லை. ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்லிவிடுகிறேன். தமிழ்நாட்டில் இன்றைக்கு மிகப் பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருப்பது பஞ்சாலை. 'சிஸ்பா' கூட - அதாவது சிறுவித தொழிற்சாலை ஏறத்தாழ ஆயிரம் தொழிற்சாலையினர் ஒருநாள் டோக்கன் ஸ்டிரைக் செய்து இருக்கிறார்கள். அதாவது தங்கள் நெருக்கடியை ஒரு அடையாளபூர்வமாக வெளிப்படுத்துவதற்காக, அந்த ஒருநாள் வேலையை நிறுத்தி, வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் தமிழ்நாட்டில், ஜவுளித் தொழிற்சாலைகளுக்கு ஏறத்தாழ 60 இலட்சம் பேல் தேவைப்படுகிறது. இப்போது தமிழ்நாட்டில் பருத்தி உற்பத்தி என்பது ஒரு 6 இலட்சம் பேல்தான். பத்தில் ஒரு பங்குதான் பருத்தி உற்பத்தியாகிறது என்பது ஒரு சிக்கலான விஷயம். மிக சீரியஸான விஷயம். அதுவும் வட இந்திய மாநிலங்களான மகாராஷ்டிராவிலிருந்தும், பஞ்சாபிலிருந்தும், வேறு பல மாநிலங்களிலிருந்தும்தான் தமிழ்நாட்டின் பஞ்சுத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. இப்போது பிரச்சினை என்னவென்றால் வட மாநிலத்தில் மிக அதிக அளவில் பஞ்சாலைகள் தொடங்கப்பட்டு வருகின்றன. அந்தந்த மாநிலங்கள் தங்கள் பஞ்சாலைகளின் பஞ்சுத் தேவைகளை நிறைவு செய்யத் தொடங்கி விட்டால், தமிழ்நாட்டின் பஞ்சாலைகளின் பஞ்சுத் தேவைகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டு இந்தத் தொழில்கள் மூடப்படுகிற அபாயம் ஏற்பட்டுவிடும் என்பதை நான் முன்கூட்டியே தெரிவிக்க விரும்புகிறேன். எனவே, ஒருமுனையில், பருத்தி விளைச்சலை அதிகப்படுத்த வேண்டும்.



பிறிதொரு பக்கத்தில் பஞ்சு பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கான முயற்சியை மாநில அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தது, தொழிற்சாலைகள் தோன்றுவதற்குரிய பல்வேறு விஷயங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அடிப்படை வசதிகளை உருவாக்குவதில், Infrastructure உருவாக்குவதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளதை எல்லாம் நான் வரவேற்கிறேன். இன்னொரு விஷயம் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு தகவல் என்ற முறையில்– அதாவது மரவள்ளிக் கிழங்கிலிருந்து தொழிற்சாலைகளுக்கான சாராயம் செய்வதற்கான ஒரு தொழிற்சாலை சிவகங்கை மாவட்டத்தில், தேவகோட்டை வட்டத்தில், கண்டதேவி கிராமத்தில் தொடங்கப்பட்டிருந்தது. வைரம் நிறுவனம். அந்த வைரம் தொழிற்சாலைக்கான தொழிற்சாலை சாராய நிறுவனத்தின் கட்டடப் பிரச்சினைகளையும் முடித்துவிட்டார்கள். ஆனால், நம்முடைய மாநில அரசு இன்னமும் அதற்கு அனுமதி வழங்கவில்லை, அனுமதி வழங்காமல் இருக்கிற ஒரு விஷயத்தை நான் மனுவாக வைத்திருக்கிறேன். அதை நான் இப்போது நேரம் கருதி விளக்கிப் பேச விரும்பவில்லை. அதை மனுவாக முதலமைச்சரிடம் கொடுத்துவிடுகிறேன். அதற்குரிய அனுமதியைக் கொடுப்பதன் மூலம் அந்தக் கிராமத்தில் மரவள்ளிக் கிழங்கு விவசாயம் வளர்ச்சி அடையும். தொழிற்சாலைக்கான சாராயம்தான், இது குடி சாராயம் அல்ல. இந்தத் தொழிற்சாலைகளுக்கான சாராயத்தை பெட்ரோலோடு கலந்தால் காற்று மாசுபடுவதுகூடத் தடுக்கப்படும் என்பதெல்லாம் உத்தரவாதப்படுத்தப்பட்டு இருக்கிறது. எனவே, அந்தத் தொழிற்சாலைக்குரிய மனுவை நான் முதலமைச்சருக்கு வழங்கி விடுகிறேன். அவர்கள் அதற்குரிய ஆணையை மிக விரைவில் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இரண்டொரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். பதற்றம் ஏற்பட்டால் விஷயங்களைச் சொல்ல முடியாமல் போய்விடும்.

அடுத்து, டான்செம். டான்செம் மிக முக்கியமான பிரச்சினை. நான் இது குறித்து ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு கொண்டு வந்தேன். டான்செம் அரசுத்துறை நிறுவனம். இந்த டான்செம் நிறுவன வளர்ச்சியில் இந்த மாநில அரசுக்கு, குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அதிகப் பங்களிப்பு உண்டு. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையிலும்

தெரிவித்துக் கொள்ள விரும்புவது உங்களுடைய பார்வையாலும் உங்களுடைய கொள்கைத் திறத்தாலும் வளர்க்கப்பட்ட, வளர்ந்து செழித்து நிற்கின்ற இந்த அரசுத் தொழில் நீடித்து நிலைபெறுவது என்பது உங்களுக்குச் சிறப்பைக் கூட்டும் என்பதால்தான் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அரசுத் துறை தன்னுடைய சிமென்ட் தேவைகளை டான்செம் நிறுவனத்திலிருந்துதான் பெற்றுக் கொண்டிருந்தது. அப்படிப் பெற்றுக் கொண்டிருந்தபோது வெளி மார்க்கெட்டில் ஏறத்தாழ மூட்டை ஒன்றுக்கு 20 ரூபாய் 22 ரூபாய் அதிகம் விற்றுக் கொண்டிருந்த போதே மாநில அரசாங்கம் மிகக் குறைந்த விலையை நிர்ணயித்து, இந்த விலைக்குத்தான் டான்செம் அரசு துறைகளுக்கு சப்ளை செய்ய வேண்டும் என்று தீர்மானித்து நல்ல விலை வெளி மார்க்கெட்டில் உயர்ந்து விற்ற காலத்தில் குறைத்து விலை நிர்ணயித்து அழுத்திப் பிடித்து இழுத்து அறுத்து முடித்துவிட்டு, இப்போது குறைந்த விலைக்கு விற்கிறபோது நீயும் அதே விலைக்கு விற்க வேண்டுமென்று சொல்வது எந்த வகையிலும் நியாயம் இல்லை. இது அரசுத் துறையைப் பாழ்படுத்திவிடும். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு......

முற்பகல் 11-10

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது குறித்து ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்பு கொண்டு வந்து பதில் அளித்திருக்கிறேன். அதிலே ஏதாவது இடையூறுகள், சிக்கல்கள் இருக்குமேயானால் அதுபற்றி ஆராய்ந்து மீண்டும் பரிசீலிக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். அந்த உறுதியிலிருந்து நான் மாறவில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுதியளித்த பின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாற மாட்டார்கள் என்பதை நான் அறிவேன். அவர்கள் உறுதியளித்த அடிப்படையில் அவர்கள் நம்பிக்கையோடு இருக்கிறார்கள். விலையை நிர்ணயிப்பதிலே கொஞ்சம் அனுசரணையோடு விலை நிர்ணயம் செய்ய வேண்டும். ஏறத்தாழ ஒரு மூட்டைக்கு 145 ரூபாய் என்ற லெவலில் இருந்தால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறார்கள். அதற்கு நான் இப்போது விவரமாகச் சொல்ல இயலவில்லை.

அதோடு இன்னொரு மிக முக்கியமான விஷயம் அன்னிய முதலீடுகள். அன்னிய முதலீடுகள் குறித்து நான் நிர்மூடத்தனமாக அதை எதிர்க்கவில்லை. முற்று முழுக்க நான் நிராகரிக்கவில்லை.



அன்னிய தொழில் நுட்பத்தையும் சரி, அன்னிய முதலீடுகளையும் சரி, நம்முடைய பொருளாதார வளர்ச்சிக்குத் தக்கபடி அனுமதிக்கலாம், பயன்படுத்தலாம் என்பதில் எனக்கு மாறுபட்ட கருத்துக்கள் இல்லை. அட்சர இலட்சம் பெறும் என்று கூறுகிற ஓர் உதாரணமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் சொன்னதைத்தான் நான் திரும்பத் திரும்பப் பொதுக் கூட்டங்களிலும் சரி, வேறு பல இடங்களிலும் சரி, இங்கேயும் சரி நான் குறிப்பிடுகிறேன். அது கழுத்து மாலையாகவே இருக்கட்டும். கழுத்தை இறுக்குகிற கயிறாக மாறிவிட வேண்டாம் என்பதைத்தான் நான் திரும்பவும் வலியுறுத்த விரும்புகிறேன். தென் கிழக்கு ஆசிய நாடுகள், இந்தோனேஷியா, சௌத் கொரியா போன்ற நாடுகளுடைய அனுபவங்கள் நமக்கு எச்சரிக்கின்றன. அந்த எச்சரிக்கையை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக அவை எந்த அளவுக்குப் பயன்படுகின்றன என்பதையும் பார்க்க வேண்டும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொண்டு இறுதியாக ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். அதாவது மின்சாரத்தைப்பற்றி நான் முன்னாலே குறிப்பிட்டேன். அதேபோல இப்போது தொழில் வளர்ச்சியில், தடையாகவுள்ள ஒரே ஒரு விஷயத்தைக் கூறி இத்தோடு முடித்துக் கொள்கிறேன். சுற்றுச்சூழல் ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கிறது. அதில் ஏறத்தாழ நான் மனநிறைவோடு இந்த அரசைப் பாராட்ட விரும்புவது, திருப்பூரிலும் சரி, கரூரிலும் சரி, சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்ட நிலையில் இலட்சக்கணக்கான, ஏறத்தாழ 10 இலட்சம் தொழிலாளர்களைப் பாதிக்கின்ற ஒரு பிரச்சினை வந்தபோது, அங்கு வந்தவர்களும் பாராட்டினார்கள். ஏறத்தாழ 3-1/2 மணி நேரம் மாநில முதலமைச்சர் தலைமை தாங்கி முழுமையாக விவாதத்தை அனுமதித்து கன்சியூமர்களானாலும், தொழிற்சாலைகளானாலும், தொழிற்சங்கங்களானாலும் எல்லாத் தரப்பின் குறைகளையும் கேட்டறிந்து ஜனநாயக பூர்வமாக செவிமடுத்து ஆக்கபூர்வமான முடிவை வெளிப்படுத்தியதை நன்றியோடு நான் இந்த நேரத்திலே நினைவு கூர்கிறேன். அத்தகைய கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயங்கள் தமிழ்நாடு முழுவதும் மாநில முதலமைச்சருடைய கட்டுப்பாட்டிற்குள் இல்லை என்றாலும் கோர்ட் தலையிட்டு பிரச்சினைகள் ஏற்படுத்தினாலும் அதில்கூட தன்னுடைய நீண்ட அரசியல் அனுபவங்களின் முத்திரையைப் பதித்திருக்கிறார் முதலமைச்சர் என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

அதையும் கவனத்தில் கொண்டு எதிர்காலத்தில் தமிழ்நாட்டின் தொழில்களுக்கு இந்தச் சுற்றுச் சூழல் என்ற பெயரால் ஆபத்து ஏற்படாமலும் அதேநேரத்தில் சுற்றுச் சூழலை உத்தரவாதப் படுத்துவதற்குப் பொருத்தமான கொள்கைகளை உருவாக்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில்கள் துறையிலே பேசுகின்ற வாய்ப்பினை அளித்த தானைத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் தங்களுக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்து என்னுடைய பேச்சைத் தொடங்குகின்றேன். இந்தக் கொள்கைக் குறிப்பேட்டிலே கோவை மாவட்டத்தில் முட்டை மற்றும் கோழிக்கறி பதனிடும் தொழிற்சாலை 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'டிட்கோ' நிறுவனம் இணைத் துறையில் நிறுவி வருவதையும் அடுத்த ஆண்டில் இது செயல்படும்பொழுது 300 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும் 3,000 பேருக்கு மறைமுகமான வேலைவாய்ப்பும், கிடைக்கும் என்று அறிவித்ததை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று 39 கோடி ரூபாய் செலவில் 20,000 டன் தேங்காய் பதனிடும் தொழிற்சாலையை பொள்ளாச்சியிலும் நாங்குநேரியிலும் 'டிட்கோ' மூலமாக நிறுவ அறிவித்திருப்பதை நான் பாராட்டுகிறேன். சுமார் 3,000 கோடி ரூபாய் செலவில் ஆந்திர மாநிலத்தில் நாகார்ஜுனா குழுவும் டிட்கோவும் இணைந்து கடலூரில் அமைத்து வரும் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலை நிறுவப்பட்டால் 1,500 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும் 5,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் உருவாகும் வகையில் அரசு அறிவித்திருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-15*

அதேபோல் என்னுடைய தொகுதியில் உள்ள சில முக்கியமான கோரிக்கைகளை நான் இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆரணி தொகுதியில் அரசின் சார்பில் சிட்கோ, டிட்கோ போன்ற எந்தவிதமான தொழிற்பேட்டைகளும் அமையப்பெறவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் மக்களுடைய சுய முதலீட்டில் சுமார் 140 பட்டு முறுக்கேற்றும் ஆலைகள் ஏற்பட்டும் அதிலே பணியாற்றும் 5 ஆயிரம் தொழிலாளர்கள்



வேலையின்றி அவர்களுடைய வாழ்க்கை ஒரு பிரச்சினையாக அமைந்திருக்கின்ற காரணத்தால் அந்தத் தொழில் இன்று அழிந்து விடும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த அரசின் கவனத்திற்கும், மாண்புமிகு கலைஞர் அவர்களின் கவனத்திற்கும் நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், பட்டு விலை ஏற்றம் ஒரு காரணமாக இருக்கிறது. ஆரணியைப் பொறுத்தவரையில் 140 ஆலைகளுக்கும் சுமார் 15 ஆயிரம் கிலோ ஒரு மாதத்திற்கு இன்றைக்கு கச்சாப் பட்டு தேவைப்படுகிற காரணத்தால் இங்கே தமிழகத்தில் அந்த உற்பத்தி இல்லை. அதனால் அதை கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களிலிருந்துதான் கொள்முதல் செய்ய வேண்டியிருக்கிறது. அப்படிக் கொள்முதல் செய்கின்றபோது அதிகமாக உற்பத்தி இருக்கின்றபோது அவர்கள் விலையைக் குறைத்தும், உற்பத்தி குறைவாக இருக்கிற நேரத்தில் மிகவும் அதிக இலாபம் வைத்தும், அந்த இலாபத்தை அவர்கள் சம்பாதிக்கின்ற காரணத்தால், இங்கே கச்சாப் பட்டு தட்டுப்பாடு ஏற்படுகிறது, விலை ஏற்றம் ஏற்படுகிறது. இதனால் ஆலைகள் சரியாக இயங்க முடியவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதைப் போக்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து ஒரு பட்டு விற்பனை மையத்தை ஆரணியில் ஏற்படுத்தி அதன் மூலமாக அந்த கச்சாப்பட்டு கொள்முதல் செய்து - மையத் தொகுப்பில் வைத்து அதன் மூலமாக நெசவாளர்களுக்கு தருவதைப்போல, கூட்டுறவுச் சங்கங்களில் தருவதைப்போல 12 சதவீதம் வட்டியில் கடன் உதவி அளித்து அந்தத் தொழிலைக் காப்பாற்ற வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இதுபோன்ற கச்சாப் பட்டு கிடைப்பதில் தட்டுப்பாடு இருக்கின்றபோது எல்லாம் சீனா போன்ற வெளிநாட்டிலிருந்து பட்டு இறக்குமதி செய்து அந்தத் தொழிலைக் காப்பாற்றுவதற்கு தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் கருணை உள்ளத்தோடு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், இந்தத் தொழிலில் மிகவும் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இதுபோன்ற நிலைகளில் இருக்கின்ற ஆலைகளின் உரிமையாளர்கள் தொழிலை நடத்தவும் முடியாமல், தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கவும் முடியாமல் அந்தத் தொழிலை விட்டுவிடவும் முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் உள்ள சிறு, சிறு

தொழில் அதிபர்கள் தாங்கள் தொழில் செய்து கொண்டிருக்கின்ற ஆலைகளை எல்லாம் இரவோடு இரவாகக் கழற்றி, மானம் போய் விடுமே என்ற நிலையில் மற்றவர்கள் யாருக்கும் தெரியாத வகையில் வெளியூரில் இருக்கின்ற பழைய இரும்புக் கடையில் அந்த ஆலைகளை எல்லாம் விற்கின்ற அவல நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் இந்தத் தொழில் மூலமாக, சுமார் 5 ஆயிரம் பேர் நேரடியாகவும், மேலும் மறைமுகமாக பல ஆயிரம் பேரும் ஈடுபட்டு இருக்கின்ற காரணத்தால் இந்தத் தொழிலைக் காப்பாற்ற வேண்டும் என்று மாண்புமிகு கலைஞர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ஆரணியில் இன்னொரு பெரிய முக்கியமான தொழில் நெல் அரிசி ஆலைகள். அந்தப் பகுதியில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட நவீனமாக்கப்பட்ட அரிசி ஆலைகள் இருக்கின்றன. அந்த ஆலைகளில் இன்று தொழில் செய்ய முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம், உற்பத்தி செய்கின்ற அரிசிக்கு சரியான விற்பனை கிடைப்பது இல்லை. வாங்குகின்ற நெல்லை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் பணத்தைக் கட்டி மூட்டையை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். ஆனால் அதை அரிசியாக விற்கின்றபோது 3 மாதக் கடன், 2 மாதக் கடன் என்று போட்டு அந்தக் கடனை வசூல் செய்ய முடியாத நிலையில் இன்று வியாபாரிகள் மிகவும் தடுமாறுகிறார்கள். இந்த நிலையில் அந்த அரிசியை அரசே கொள்முதல் செய்யலாம். ஏன் என்றால் நல்ல சுத்தமான அரிசி, நவீன அரிசி ஆலையின் மூலமாக உற்பத்தி செய்யப்பட்ட அந்த அரிசி கல் நீக்கப்பட்டு, குருணை நீக்கப்பட்டு அப்படியே உலையில் போடுகின்ற வகையில் தயாரிக்கப்பட்ட அரிசியை கொள்முதல் செய்து நியாய விலைக் கடைகளில் விற்கலாம். ஐ.ஆர். 50, ஐ.ஆர். 20 போன்ற அரிசி எல்லாம் குவிண்டால் 800 ரூபாய்க்கு விற்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதேபோல், குண்டு அரிசி குவிண்டால் 675 ரூபாய், உயர்தர பொன்னி அரிசி குவிண்டால் 1,000 ரூபாய். இந்த விலைக்கு வாங்குவதற்கு நிலை இல்லாமல் ஆரணியில் மட்டும் சுமார் 20 ஆயிரம் அரிசி மூட்டைகள் தேங்கியிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, அவர்களுடைய ஆலைகள் எல்லாம் முறையாக நடைபெற்று தொழிலாளர்களுக்கு



எல்லாம் வேலை கிடைக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட வேண்டுமானால் அங்கே நெல்லை வெளிமாநிலங்களிலிருந்து தாராளமாக கொள்முதல் செய்வதற்கும், அரசுக்குத் தேவையான அரிசியை அரசு கொள்முதல் செய்துகொண்டு மற்றதை வெளி மாநிலங்களில் விற்பதற்கும் அதை விற்பனை செய்து அந்தத் தொழிலை நடத்துவதற்கும் அரசு உதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், அரசு கொள்முதலுக்கு வேண்டிய நெல்லை எல்லாம் அரைப்பதற்கு 15 ஆண்டுகளுக்கு முன்பாக இருந்த அந்த ஊதிய நிர்ணயமே இப்போதும் இருக்கிறது. அதை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரிசி ஆலை உரிமையாளர்களெல்லாம் கோரிக்கையை என்னிடத்திலே தந்திருக்கிறார்கள். அதை இந்தச் சபையின் மூலமாக மாண்புமிகு முதல்வரவர்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(முற்பகல் 11-20

அதேபோன்று, எம்.ஆர்.எம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அணைகளும் ஆலைகளுமே உண்மையான கோயில்கள் என்று அன்றைய பாரதப் பிரதமர் நேரு அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை நினைவுகூர்ந்து அணைகளையும், ஆலைகளையும் பெருக்குவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளிலே தமிழ்நாடு அரசு முழுமையாக இறங்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துவதற்காக நான் சில முக்கியமான கருத்துக்களைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தியப் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கக்கூடிய அதிகாரம் மாநில அரசுக்கு இல்லையென்றாலும்கூட, தாராளமயமாக்கப்பட்ட இந்தியப் பொருளாதாரம் இப்பொழுது எப்படிப்பட்ட தாக்குதலுக்கு ஆளாகியிருக்கிறது? அந்தத் தாக்குதலிலேயிருந்து தமிழகத்தை நாம் - தமிழகத்தையாவது நாம் பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் இந்தத் தொழில் துறை மானியத்திலே புதிய தமிழகத்தினுடைய கருத்தாக நான் வைக்க விரும்புவது.

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [1998 மே 14

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு, புத்த பௌர்ணமி அன்று இந்திய அரசு நடத்திய அணுகுண்டு சோதனையைத் தொடர்ந்து, அமெரிக்க நாடு, ஜப்பான், ஆஸ்திரேலியா போன்ற அன்னிய நாடுகளெல்லாம் இந்திய அரசுக்கு கொடுத்திருக்கக்கூடிய நிதியுதவிகள், கடன் வசதிகள் இவற்றையெல்லாம் நிறுத்தியிருப்பதன் மூலமாக இப்பொழுது பங்குச் சந்தைகூட வீழ்ச்சியடைந்திருப்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அன்னிய முதலீடுகள் அதிகமாக வருவது ஒரு பக்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தாலும்கூட, அன்னியப் பொருளாதாரத்தை நம்பியிருப்பது எவ்வளவு பெரிய ஆபத்து என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் அதனால்தான், முன்கூட்டியே சொல்லுகின்றபொழுது, தமிழ்நாடு அரசு தக்க நடவடிக்கையெடுத்து, சுய சார்பு பொருளாதாரத்திலே மிக முக்கியமாகக் கவனம் செலுத்த வேண்டும். அன்னிய பொருளாதாரத்திற்கு அதிகமாகக் கவனம் செலுத்தவதன் மூலமாக எதிர்காலத்திலே நாமும் அந்தப் பாதிப்பிற்கு ஆளாக வேண்டிய சூழ்நிலை வந்துவிடும்.

தாராளமயமாக்கப்பட்ட இந்தியப் பொருளாதாரத்தினுடைய விளைவுகள் எந்த நிலைக்குப் போயிருக்கிறது என்றால், அன்புச் சகோதரர் சுப்பராயன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள், ஏறக்குறைய 3 தலைமுறைகளுக்கு மேலாக நல்லமுறையிலே நடந்து கொண்டிருந்த ஆலைகளெல்லாம், குறிப்பாக நூற்பாலைகளெல்லாம்கூட இப்பொழுது பொலிவிழந்து, மூடக்கூடிய அளவிற்குப் போராடிக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக 5 ஆயிரம் பேரிலிருந்து 13 ஆயிரம் பேர்—13 ஆயிரம் பேருக்கு மேலாக வேலை செய்து கொண்டிருந்த பி அன்டு சி மில்—பக்கிங்காம் அன்டு கர்நாட்டிக் ஆலையில் இப்பொழுது ஆயிரம் பேர்தான் வேலை செய்யக்கூடிய நிலைக்கு தேய்ந்து போயிருக்கிறோம். மிக நல்லமுறையிலே நடந்து கொண்டிருந்த நூற்பாலைகளெல்லாம் இப்பொழுது பல பாதிப்புக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றன. இவைகளெல்லாம் தாராளமயமாக்கப்பட்ட கொள்கையால் வந்த விளைவுகள். எனவே, நாம் ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம். பொருளாதாரம் என்பது



1998 மே 14] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

நம்மைச் சார்ந்த பொருளாதாரமாக இருக்க வேண்டுமென்பதுதான் நான் வைக்கக்கூடிய கோரிக்கை.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், கடந்த மூன்றாண்டு காலத்திற்கு முன்பு கோவையிலே எல்.எம்.டபிள்யூ—லட்சுமி மெஷின் ஒர்க்ஸ் என்று மிகப்பெரிய தொழிற்சாலை. 5 ஆண்டு காலத்திற்கு முன் பணத்தை கட்டி, காத்திருக்க கூடியவர்களெல்லாம் இருந்தார்கள். ஆனால், இப்பொழுது அந்த ஆலையிலே உற்பத்தியாகக்கூடிய மெஷின்களை வாங்குவதற்கு எந்த மில் அதிபரும் தயாராக இல்லாத ஒரு நிலை வந்திருக்கிறது.

எனவே, அன்னிய ஆலைகள் கோடிக் கணக்கிலே வருகின்ற நிலை ஒரு பக்கம். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஆலைகள் மூடக்கூடிய அபாயம் ஒரு பக்கம். எனவே, அந்த அபாயத்தை உணர்ந்து நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எத்தனை ஆலைகள் திறக்கப்பட்டாலும் வரவேற்கலாம்; ஆனால் திறக்கப்பட்ட ஆலைகள், எந்த ஆலையும் மூடப்படக்கூடாது, ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதை நாம் வரவேற்கலாம். ஆனால் ஒரு தொழிலாளர்கூட வேலையிழந்து விடப்படக்கூடாது. இதற்கான நடவடிக்கையைத்தான் நாம் எடுக்க வேண்டும்.

முற்பகல் 11-25

அதேபோல, சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதிக்கக்கூடிய பல ஆலைகள் ஏற்கெனவே வந்திருக்கின்றன. குறிப்பாக, தூத்துக்குடியிலே ஸ்டெர்லைட் ஆலை. கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் பலபேர் அந்த ஆலையிலே இறந்திருக்கிறார்கள். அந்த ஆலையால் பாதிப்பு வருமென்று பலபேர் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். இருந்தாலும்கூட அவையெல்லாம் கவனத்தில் கொள்ளப்படாததன் காரணமாக, குறிப்பிட்ட சில நாட்களிலே பலபேர் இறக்கின்ற சூழ்நிலை, கிட்டத்தட்ட 12 பேருக்கு மேலே அந்த ஆலையிலே இறந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

நான் கடந்த இரண்டு சட்டமன்ற கூட்டத் தொடரிலேயும் தமிழக முதல்வர் அவர்களிடத்திலே கேட்டிருக்கிறேன். ஒட்டப்பிடாரம் தொகுதி வறட்சியான பகுதி, அங்கே ஒரு நூற்பாலை தொடங்கப்பட்டு ஏழை

எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். கடந்த மாதம் ஓட்டப்பிடாரத்திலே நடந்த நிகழ்ச்சியிலேயும் வற்புறுத்தியிருக்கிறேன். அவர்கள் தொழில் துறை மானியத்திலே அறிவிப்பதாகக்கூடச் சூசகமாகச் சொன்னார்கள். நிச்சயமாகக் கனிவுகூர்ந்து அந்தத் தொகுதி மக்கள் மீது பற்றுக்கொண்டு ஒரு ஆலை திறப்பதற்கு இந்தத் தொழில் மானியத்திலே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறையில் நாம் அபரிமிதமான முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம் என்பதில் ஐயமில்லை. 1956ஆம் ஆண்டு தொழில் கொள்கைக்குப் பிறகு நம்முடைய நாட்டில் பல்வேறு தொழில்கள் பரவலாக நாடு முழுவதும் வேரூன்றியிருக்கின்றன என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரை எப்பொழுதுமே தொழில் துறையிலே தனக்கென்று ஒரு தனி இடத்தைத் தக்க வைத்துக் கொண்டு வந்திருக்கிறது. அதுவும், குறிப்பாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையை எப்பொழுதுமே நிருவகித்து வந்திருக்கிறார்கள். நான் சென்னையிலேயிருந்து வாணியம்பாடிக்குப் போகும்போதெல்லாம் சென்னை, பூந்தமல்லி, இருங்காட்டுக்கோட்டை என்றெல்லாம் இந்த வழியாகத்தான் செல்வேன். கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு, அந்தப் பகுதி இருந்ததை என்னால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை, அந்த அளவிற்கு வெறிச்சோடிக் கிடந்தது. இருங்காட்டுக்கோட்டை எனக்கு நன்றாகத் தெரியும், இந்த இருங்காட்டுக்கோட்டை, தொழில் இருக்கும் கோட்டையாக மாறியிருக்கிறது. பல புதிய தொழிற்சாலைகள் நாமே வியக்கும் வகையில் அங்கெல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. வேலூர் வரையிலே இதே நிலையை நான் காண்கிறேன். இந்த வழியில் இப்படி என்றால், செங்கல்பட்டுக்குப் போகும் வழியிலேயும் புதிய புதிய தொழில்கள் இன்றைக்கு உருவகம் பெற்றிருக்கின்றன. மிக வேகமாக அவையெல்லாம் உருவாக்கப்பட்டு வருகின்றன. பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அங்கே வேலை செய்வதை நம்மால் பார்க்க முடிகிறது.

அந்த வகையிலே தொழிற்சாலைகள் மிக அசுர வேகத்திலே முன்னேறியிருக்கின்றன ஆனால் இந்த வேகத்தில் மின்சாரம் சரியாகக் கிடைக்கவில்லை. மின்சார உற்பத்தி முன்னேறியிருக்கிறது என்று



சொன்னாலும், தொழில் முன்னேற்றத்திற்கு ஏற்ப மின்சார உற்பத்தி பெருகவில்லை என்ற காரணத்தினாலேதான் இன்றைக்கு மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக, தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு அடிப்படையான மூலப்பொருள், அதற்கான அடிப்படைகள் எல்லாம் இருக்கின்றனவா என்பதை கணக்குப் பார்த்துதான் தொழிற்சாலைகளை நாம் உருவாக்குவதிலே முனைப்பு காட்ட வேண்டும். மின்சாரம் குறைந்திருக்கிறது, அல்லது மின்சார உற்பத்தியை நாம் நிறைவு செய்திருக்கிறோம். ஆனால், தொழில் துறையில் நாம் காட்டிய முனைப்பின் காரணமாக தொழில் முன்னேற்றம் எவ்வளவு ஏற்பட்டதோ அந்த அளவிற்கு மின்சார உற்பத்தி பெருகவில்லை என்ற காரணத்தினாலே இந்த நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. நம்மைப் பொறுத்தவரையிலே புனல் மின்சாரத்திற்கான வாய்ப்பு என்பது தமிழகத்திலே மிகக் குறைந்திருக்கிறது. அணைக்கட்டுகளையெல்லாம் கட்டி முடித்துவிட்டோம். அதே நேரத்திலே தெர்மல் பவர், அது குறித்துதான் இப்போது நாம் என்ன வாய்ப்பு இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். அட்டாமிக் எனர்ஜி, அந்த எனர்ஜியில் நாம் கல்பாக்கத்திலே ஒரு நிலையம் ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால், மற்ற இடங்களிலே அதைப்போலவே அதற்கான வாய்ப்புகள் என்ன இருக்கின்றன. புராஸ்பெக்ட்ஸ் என்ன இருக்கிறது என்பதைப் பற்றி மேலும் ஆராய வேண்டிய கட்டாயத்திலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 11-30

பொதுவாக, கச்சாப் பொருள் எங்கே கிடைக்கிறதோ அங்கேதான் தொழிலை ஏற்படுத்துவது எல்லாவகையிலேயும் பயனுள்ளதாக இருக்கும் என்பது தொழில் துறையிலே கையாளப்படுகிற ஒரு அடிப்படை நெறியாகும் பெருந்தொழில்களுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற நம்முடைய அரசு சார்புடைய நிறுவனங்களுக்கு நாம் மானியம் அளிக்கிறோம். கடன் அளிக்கிறோம். இந்த மானியங்களும், இந்தக் கடன்களும் எந்த அளவிற்கு, எதிர்பார்க்கப்படுகிற உற்பத்தியைப் பெருக்குவதற்கு, வேலைவாய்ப்பை அதிகமாககுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பார்க்கக்கூடிய கடமை நமக்கு இருக்கிறது. ஆகையினாலே, இந்த அரசு சார்புடைய — அரசு மானியத்தை, அரசு கடனைப் பெற்று நடத்துகின்ற — தொழிற்பேட்டை, தொழிற் பூங்கா அல்லது தொழிற்சாலைகள் பெருந்தொழில்கள், நடுத்தரத் தொழில்கள்-இந்தத் தொழில்களுக்கு எல்லாம் நாம்

அளிக்கின்ற மானியத்திற்கு ஏற்ப உற்பத்தி பெருகியிருக்கிறதா? வேலைவாய்ப்பு அதிகமாகியிருக்கிறதா? அதிலே ஏதாவது நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றதா? நஷ்டம் ஏற்பட்டால் அதற்கு என்ன காரணம் என்றும், பொறுப்பை யார் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் நிர்ணயம் செய்ய வேண்டும்.

There should be a great responsibility on the part of the industries, particularly those who are financed directly or indirectly by the Government, இல்லாவிட்டால், sense of responsibility இல்லையென்று சொன்னால் இந்தத் தொழில் துறையிலே பல சிக்கல்கள் உருவாகும். நாம் செய்ய வேண்டியது, புதுத் தொழிலையும் ஏற்படுத்த வேண்டும். ஏற்கெனவே இருக்கின்ற தொழிற்சாலைகளையும் செம்மைப்படுத்தி செழுமைப்படுத்தி, அவற்றினுடைய உற்பத்தித் திறனை, வேலைவாய்ப்புக் கொடுக்கின்ற அவற்றினுடைய தன்மையை அதிகமாக்க நாம் ஒரு பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அதேநேரத்தில் புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு முன்பு, அந்தத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான அடிப்படைச் சாதனங்கள் இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து, இதையும் அதையும் corzelate பண்ணி, தொடர்புபடுத்தி, இப்படிப்பட்ட ஒன்று ஏற்பட்டால் அதற்கு இவ்வளவு மின்சாரம் தேவை, இவ்வளவு நிலம் தேவை, இவ்வளவு கேபிட்டல் தேவை, அதனுடைய உற்பத்தித் திறன் இவ்வளவு இருக்க வேண்டும். அந்த உற்பத்தித் திறனில் எவ்வளவு பேருக்கு வேலை கிடைக்கும். வேலை கிடைத்தால் அவர்களுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும். அந்த வருமானத்தில் அவர்கள் எவ்வளவு சேமிப்பார்கள், அதில் எவ்வளவு திரும்பி வரும் என்கின்ற ஒரு perspective assessment இல்லாமல் செய்வதால்தான் பல தொல்லைகள் வருகின்றன. அதனால்தான் இன்றைக்கு பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன. தொழிலாளர்கள் பிரச்சினை ஒரு பக்கம் நம்மை பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. நேரத்திற்கு உற்பத்தியைப் பெருக்கி வெளிக்கொணருவது இல்லை, வருமானமும் தொழிற்சாலைகளுக்கு வருவதில்லை. அதே நேரத்திலே தொழிலாளர்களுடைய பிரச்சினை அடிக்கடி ஏற்படுகிறது என்று சொன்னால் தொழில் முன்னேற்றத்திற்கு அது பெரும் தடங்கலை ஏற்படுத்தும். எனவேதான், ஒரு கூட்டுப் பொறுப்பு எல்லோரிடத்திலேயும் இருக்க வேண்டும். நம்முடைய தொழில் வளம் பெற வேண்டும். நம்முடைய தொழில் முன்னேற வேண்டும். பிரச்சினைகள் இல்லாமல் நடக்க வேண்டும். இவை



நாட்டுக்குப் பயன்பட வேண்டும் என்று சொன்னால் ஒரு கூட்டுப் பொறுப்பு இருக்க வேண்டும். முதலாளியும் பொறுப்பு ஏற்க வேண்டும். தொழிலாளியும் பொறுப்பு ஏற்க வேண்டும். அதிலே பணி செய்கின்றவர்களும் பொறுப்பு ஏற்க வேண்டும். அதற்கான Technical advice செய்யக்கூடியவர்களும் பொறுப்பு ஏற்க வேண்டும். இப்படி பொறுப்பு இல்லாமல்தான், தான் என்று தனியாக அவர்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தால் நிச்சயமாக ஒரு தொழிலும் முன்னேறாது. அதனாலேதான் இன்றைக்கு 'பின்னி' தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகளிலும், ஸ்டாண்டர்டு மோட்டார் போன்ற தொழிற்சாலைகளிலேயும் பிரச்சினைகள் எல்லாம் உருவாகியிருக்கின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே ஏற்கெனவே விவரத்தை அளித்திருக்கிறேன். Income-tax exemption இந்தியா முழுவதும் சில மாவட்டங்களில் வழங்கப்படுகின்றது. தொழிலில் பிற்படுத்தப்பட்ட மாவட்டங்கள் என்று அறிவிக்கப்பட்ட காரணத்தாலே நூற்றுக்கு நூறு Income-tax exemption அரசால் அளிக்கப்பட்டிருக்கிறது. அதிலே, பீகார் மாநிலத்திலே 20 மாவட்டங்கள், மகாராஷ்டிராவிலே 1, உத்தரபிரதேசத்திலே 11, மத்திய பிரதேசத்திலே 5, வங்காளத்திலே 6, ஒரிசாவிலே 2, இப்படி எல்லா..

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் மாவட்டத்திற்குள்ளாக, பின்தங்கியிருக்கிற, மிகவும் பின்தங்கியிருக்கிற வட்டாரங்களைப் பிரித்து சலுகைகளை அளிப்பதைப்போல, இந்திய பூபாகத்திற்குள்ளாக உள்ள மாநிலங்களில் எவையெவை தொழிலில் பின்தங்கியிருக்கின்றன என்பதை எண்ணிப்பார்த்து அதற்கேற்ப அவர்கள் சலுகைகளை அளிக்கின்றார்கள். அந்தச் சலுகைகளிலே ஒன்றுதான் இந்த வருமான வரிச் சலுகை. எனவே, மாநிலங்களுக்குப் பொருந்துகிற அந்தச் சலுகை, ஒவ்வொரு மாநிலத்திற்குள்ளே இருக்கின்ற மாவட்டங்களுக்கோ அல்லது மாவட்டத்திற்குள்ளே இருக்கின்ற வட்டங்களுக்கோ அல்லது வட்டாரங்களுக்கோ பொருந்தாது என்பதை இன்று திரு நிஜாமுதீன் என்னிடத்திலே காட்டிய பிறகு, அதைப்பற்றி நான் விசாரித்து அறிந்து, திரு. அப்துல் லத்தீப் வாயிலாக இங்கு அந்தப் பதிலைச் சொல்கிறேன்.

முற்பகல் 11-35

**திரு. ம. அப்துல் லத்தீப்:** ஒரு ஆதங்கம் அல்ல. ஒரு கேள்வியாக, உண்மையிலேயே தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் அதைக் கேள்வியாகக் கேட்கிறேனே தவிர, மத்திய அரசும் இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பதற்காக, என்னுடைய கணிப்பின்படி இது தேவையாக இருக்கும் என்று நினைத்த காரணத்தால் சொல்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில மாநிலங்களில் மாவட்டங்களே பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. அதற்காகத்தான் மத்திய அரசு அந்தப் பின்தங்கிய மாவட்டங்களுக்கு என்று சொல்லி அந்தச் சலுகையைக் கொடுத்து இருக்கிறது. நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் அவர்களுடைய அலகுப்படி பின்தங்கிய மாவட்டம் என்ற வரைமுறைக்குள் வரமுடியாமல் இருக்கலாம். ஆனால் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, நாங்கள் இதுபோன்று வட்டங்களாகப் பிரித்திருக்கிறோம். ஆகவே இதுபோன்ற வட்டங்களில் ஆரம்பிக்கக்கூடிய தொழில்களுக்கு அந்தச் சலுகையை நீங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்பது நம்முடைய உரிமை. மற்ற மாநிலங்களுக்கு அவர்கள் சலுகையைக் கொடுப்பதுபோல, நம்முடைய மாநிலத்திற்கு நம்முடைய சலுகையைக் கோரிப் பெறவேண்டும். அந்த வட்டங்களில் ஆரம்பிக்கக்கூடிய தொழில்களுக்கு இதுபோன்ற சலுகையை நீங்கள் விரிவுபடுத்திக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில் நம்முடைய அரசு மத்திய அரசிடம் கோர வேண்டுமென்பது என்னுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ம. அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே படித்துக்காட்டிய அந்த மாநிலங்கள் உண்மையிலேயே தொழிலில் மிகவும் பின்தங்கியிருக்கின்ற, பிற்போக்கான நிலையிலே உள்ள மாநிலங்களாகும். மராட்டியம் போன்ற மாநிலங்கள் அவர்களுடைய பட்டியலில் இல்லை என்பதை நீங்கள் தெளிவாக அறிந்துகொள்ளலாம். இருந்தாலும், 'சொன்னோம், நீங்கள் கேட்கவில்லை' என்ற குறை இருக்கக்கூடாது என்பதற்காக, அதையும் கேட்டுப் பெறுகிறோம்.



**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேண்டுகோளெல்லாம் தமிழகம் தன்னுடைய முயற்சியாலே தொழிலில் முன்னேறியதற்கு அதற்குக் கொடுக்கப்படுகின்ற தண்டனையா இது என்பதுதான். Income-tax exemption- There should be equitable distribution of whatever the facilities or concessions that are made available to the States. Tamil Nadu also is entitled to get it, and it is for us to insist upon that.

அதைத்தான் நான் சொல்கிறேன். அவர்கள் ஏற்கெனவே, கொடுத்திருக்க வேண்டும். இன்னொன்று, நம்முடைய சுப்பராயன் அவர்களும் சொன்னார்கள் (மணியடிக்கப்பெற்றது) சுற்றுப்புறச் சூழலின் அடிப்படையிலே நம்முடைய தொழில் துறை நாசமடையக்கூடாது, அதனுடைய வருமானம் கெடக்கூடாது, ஏற்றுமதி இல்லாமல் ஆகக்கூடாது, பொருளாதாரம் நசிந்துவிடக்கூடாது. அப்படிப்பட்ட பயங்கரமான ஒரு சூழ்நிலையைச் சந்தித்துக் கொண்டிருப்பவர்களில் நானும் ஒருவன். நம்முடைய சுப்பராயன் அவர்களும் அதைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, பல தொழிற்சாலைகள் இன்றைக்கு மூடப்பட்டுவிட்டன. தொழிலாளர்களைப் பற்றிதான் நான் அஞ்சுகிறேன். தெரு வீதியிலே நின்று கொண்டு திட்டுகிறார்கள். 'என்னடா செய்கிறாய்' என்று கேட்கிறார்கள். எனக்கு வேறு வழியில்லை. உங்களிடம் அடிக்கடி முறையிடுகிறேன். தேர்தலுக்கு முன்பே அதிலே கவனம் செலுத்தினீர்கள். அதைப்பற்றி உங்களுடைய கருத்துக்களைச் சொன்னீர்கள். எந்த வகையிலே செய்ய முடியுமோ அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்கிறேன். எங்கள் பகுதியில் எந்த 'சிட்கோவும்' இல்லை, எந்த 'தாட்கோ'வும் இல்லை. எந்த 'டான்செமும்' இல்லை. எங்களுக்கு இருப்பது ஒரே ஒரு கச்சாப் பொருள். அது சந்தனம். சந்தனம் அங்கே உற்பத்தி ஆவதற்காக நாங்கள் பெரும்பாடுபடுகிறோம். ஒருபக்கம் அதை அவர்கள் ஏதோ கள்ளத்தனமாக எடுத்துச் செல்கிறார்கள் என்று போலீசார் நடமாட்டம். வனத்துறையினரால் மிகப்பெரிய சிரமம். ஏன் இவ்வளவு சிரமம் என்றால், உற்பத்தி அங்கே ஆகிறது. ஒரு வருடத்திற்கான வருமானம் உங்களுக்கு 4 கோடி ரூபாய். இந்த 4 கோடி ரூபாய் வருமானத்தை வைத்து, எங்களுக்கு தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடாதா? இதைத் திருப்பித் திருப்பி எங்கள் தொகுதியில் கேட்கிறார்கள். குமரிதோப்பு, நிம்மியம்பட்டு பற்றி அவர்கள் கனவிலே இருக்கிறார்கள். இது ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட, நிதிநிலை

அறிக்கையிலே சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒன்று (மணியடிக்கப்பெற்றது) அந்தத் தொழிற்சாலை தெற்குப்பட்டில் இருந்தால் இருக்கட்டும். அதை வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் ஒரு பெரிய தொழிற்சாலையை ஜவ்வாது மலையில் நீங்கள் அந்த நிம்மியம்பட்டில் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று மிகுந்த அன்போடு, மன்றாடி கேட்டுக் கொண்டு, முதல்வர் அவர்கள் அதற்கு ஒப்புதல் தருவார்கள் என்ற நம்பிக்கையில், இந்த மானியத்தை ஆதரித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

***திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு மகிழ்ச்சியடைகிறேன். சாதாரணமாக ஒரு மாநிலத்தில் தொழில் பெருக முக்கியத் தேவையாக இருக்கவேண்டியது அந்தத் தொழிலுக்குத் தேவையான Raw-materials.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. ரா. சேதுநாதன் தலைமை)**

*முற்பகல் 11-40*

அந்தத் தொழிற்சாலைகளுக்குச் செல்வதற்குச் சாலை வசதி, தொலைத் தொடர்பு வசதி, தண்ணீர் வசதி போன்றவை வேண்டும். முக்கியமாக தொழிலாளர்கள் அதிகமாக இருக்க வேண்டும். அதுபோன்று அந்தப் பகுதியிலே மின்சார வசதியும் அதிகமாகச் செய்து தரப்பட வேண்டும். இந்தச் சலுகைகளையெல்லாம் அரசு செய்து கொடுத்தால், இந்தப் பகுதிகளிலே பலர் தொழில் தொடங்குவதற்கு ஆர்வமாக வந்து கொண்டிருப்பார்கள். ஆனால், நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில், கடந்த காலத்தை எடுத்துக் கொள்வோமானால், கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்ததன் காரணமாக, இரண்டு கார் தொழிற்சாலைகள், கண்ணாடி இழைத் தொழிற்சாலை, இறைச்சி ஏற்றுமதிக்கான தொழிற்சாலை, சிபா கம்பெனியோடு தொடர்பு கொண்டு, அதன் மூலமாக மருந்து உற்பத்தி செய்கின்ற ஒரு தொழிற்சாலை, கப்பல் பிரிக்கும் தொழிற்சாலை போன்ற பல பெரிய தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பல தொழிற்சாலைகள் உருவாவதற்கு இந்த மாநில அரசு முழு முயற்சி எடுத்துக் கொள்வதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன். பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில், இந்த மாநிலத்தில் கடந்த காலத்தை எடுத்துக் கொண்டால், மத்திய அரசின் மூலமாக தமிழகத்திலே ஆவடி டேங்க் தொழிற்சாலை, சேலம் ஸ்டீல்





தொழிற்சாலை, திருச்சியிலே எடுத்துக் கொண்டால், பாரத் ஹெவி எலெட்ரிக்கல்ஸ் தொழிற்சாலை, துப்பாக்கித் தொழிற்சாலை ஆகிய தொழிற்சாலைகளும், தமிழக அரசு எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக கல்பாக்கம் அணு மின் நிலையம், நெய்வேலி தெர்மல் நிலையம் போன்ற பெரிய தொழில் நிறுவனங்களும் இந்த மாநிலத்திலே தொடங்கப்பட்டிருக்கின்றன. கடந்த 1989-90 ஆம் ஆண்டினுடைய மானியக் கோரிக்கையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, தமிழகத்திலே 1969-70 ஆம் ஆண்டு மத்திய அரசினுடைய முதலீடாக ரூ. 311 கோடி இருந்தது என்றும், அதற்குப் பின்னால், 1986-87 ஆம் ஆண்டு அது ரூ. 3,018 கோடியாக உயர்ந்து இருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, பல்வேறு மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, குறிப்பாக, மகாராஷ்டிரத்தை எடுத்துக் கொண்டால், 1969 முதல் 1986 வரை எடுத்துக் கொண்டால், அந்த மாநிலத்தில் மத்திய அரசினுடைய முதலீடு 91 மடங்கு உயர்ந்திருப்பதாகவும், பஞ்சாபை எடுத்துக் கொண்டால் 19 மடங்கு உயர்ந்திருப்பதாகவும், இராஜஸ்தானை எடுத்துக் கொண்டால் 21 மடங்கு உயர்ந்திருப்பதாகவும், அதேநேரத்தில் தமிழகத்தில் மட்டும் 10 மடங்குதான் மத்திய அரசினுடைய முதலீடு உயர்ந்திருக்கிறது என்றும் வேதனையோடு குறிப்பிட்டிருக்கிறார்கள். இருந்தாலும், மாநில அரசு எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக இன்று தமிழகத்திலே ஒரு ஸ்பிக் தொழிற்சாலை வந்திருக்கிறது. ஆலங்குளம், அரியலூர் ஆகிய இடங்களில் 'சிமெண்ட்' தொழிற்சாலையும், 'ஆஸ்பெஸ்டாஸ்' தொழிற்சாலையும் தொடங்கப்பட்டிருக்கிறது என்பதிலே மகிழ்ச்சி அடைகின்றோம்.

இவ்வாறு தொழிற்சாலைகளெல்லாம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும்கூட, இன்று இருக்கின்ற நிலைமையிலே, விவசாயத்தை நம்பி மட்டுமே விவசாயிகள் இலாபம் பெறக்கூடிய அளவிலே இல்லையென்று சொன்னாலும்கூட, இளைஞர்கள் பயன்பெறும் வகையில், மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப பல தொழிற்சாலைகளைத் தமிழகத்திலே உண்டாக்குவதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும். இதுபோன்ற தொழிற்சாலைகள்கூட, புதிய டெக்னாலஜியோடு, பல்வேறு நாடுகளுடைய ஒத்துழைப்போடு, பெரிய பெரிய ஆலைகளுடைய ஒத்துழைப்போடு கூடியவிரைவிலே தொடங்கிட வேண்டும் என்பதுதான் சாலச்சிறந்ததாக இருக்கும். அப்படி பார்க்கின்றபோது, தமிழகத்திலே புதிய தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு கடந்த இரண்டு ஆண்டுகளிலே ஒப்பந்தங்கள்

செய்யப்பட்டிருந்தாலும்கூட, இன்னும் பல இடங்களிலே, நம்முடைய அரசின் முயற்சி இல்லாததன் காரணமாக, ஸ்டாண்டர்டு கார் தொழிற்சாலை, மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ், அரக்கோணம் ஸ்டீல்ஸ் போன்ற தொழிற்சாலைகளெல்லாம் மூடப்பட்டிருக்கின்றன என்பதை நாம் நன்றாக அறிவோம். இங்கேகூட, நண்பர் இராமச்சந்திரன் அவர்கள் பேசுகின்றபோது, கடந்த மாதத்திலே தஞ்சாவூர் டெக்ஸ்டைல்ஸ் மூடப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர், திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே பேசுகின்றபோது தமிழகத்திலே இருக்கக்கூடிய நூற்றுக்கணக்கான நூற்பாலைகள் மூடப்படக்கூடிய நிலைமை இருப்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த நிலைமைகளுக்கு தீர்வு என்ன என்பதை தொழில் துறையிலே இருக்கின்ற அதிகாரிகளும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் அதிகக் கவனம் செலுத்திக் கண்டறிய வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இரஷ்ய ஒத்துழைப்போடு செய்யப்பட்ட அரக்கோணம் ஸ்டீல் தொழிற்சாலையை எடுத்துக் கொண்டால், கடந்த ஆகஸ்ட் மாதத்திலேயிருந்து மூடிக்கிடக்கிறது. கிட்டத்தட்ட ஓராண்டு காலமாக மூடிக்கிடக்கின்ற இந்த ஆலையிலே 2,500-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியிழந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் மின்சாரமும் துண்டிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். அது மீண்டும் தொடங்கப்படுமா என்பதையும், அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படுமா என்பதையும் இந்த அரசு அறிவிக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தொழிற்சாலையிலே பணிபுரிகின்ற பல தொழிலாளர்களுக்குச் சம்பளமோ, கிராஜுவிட்டியோ, பி.எஃப்-ஓ. எந்தவிதமான சலுகைகளும் இதுவரை கொடுக்கப்படவில்லை என்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-45

அதேபோல், தமிழகத்திலே இருக்கக்கூடிய பல தொழிற்சாலைகள், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், 'Sugar Factories' – அது கூட்டுறவுத் துறையிலே இருக்கக்கூடிய தொழிலாக இருந்தாலும் சரி, அல்லது பொதுத் துறையிலே இருக்கக்கூடிய தொழிலாக இருந்தாலும் சரி, கடந்த ஆண்டை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், அதனுடைய உற்பத்தித் திறன், அதனுடைய தேவைக்கு அதிகமாக,



ாவது 125 சதவீதம் அதனுடைய உற்பத்தித் திறனைக் ட்டியிருக்கிறது. அதேநேரத்தில், அதனுடைய 'recovery' – 'sugar covery' 9.37 சதவிகிதம் இருந்திருக்கிறது. தனியார் துறையைக் ட்டிலும், அதனுடைய recovery rate அதிகமாக இருந்தாலும்கூட, அத்தனை sugar factories-களும் சேர்ந்து, 20 கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், தனியார் துறையிலே இருக்கக்கூடிய அத்தனை sugar factories-களும் குறைவான recovery-யைப் பெற்றிருந்தாலும், குறைவான முறையிலே உற்பத்தித் திறன் இருந்தாலும், இலாபத்தைக் காட்டுகிற நல்ல முறையிலே இயங்குகின்றன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் குறிப்பிடுகிறபோது, 'டான்செம்' நிறுவனத்தைப் பற்றி சொன்னார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, உற்பத்தித் திறனைக் கூட்ட வேண்டும் எனத் தெரிவித்தார்கள். அதையொட்டி கடந்த ஆண்டு 160 கோடி ரூபாய் அளவுக்கு புதிய 'டெக்னாலஜி'-யோடு wet process - ஆக இருந்ததை, dry process - ஆக ஆக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். நான் ஒன்றை இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திநிநிலை அறிக்கையைப் பார்க்கிறபோது, மற்ற தொழிற்சாலைகள் எல்லாம், மற்ற சிமெண்ட் போன்ற தொழிற்சாலைகள் எல்லாம்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே 5 நிமிடங்கள் உங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மேற்கொண்டு, 2 நிமிடங்கள் நீங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. என்.ஆர். அழகராஜா:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் சிறிது நேரத்தில் முடித்து விடுகிறேன். மற்றத் தொழிற்சாலைகள் எல்லாம் ஒரு டன் உற்பத்தி செய்வதற்கு, 80 முதல் 90 யூனிட்டுகள் என்ற அளவிற்குதான் ஆகிறது என்றால், கூட்டுறவு மற்றும் பொது தொழிற்சாலைகளுக்கு 120-லிருந்து 140 யூனிட்டுகள் ஆகிறது. அதேபோல் 'coal' உற்பத்திக்கு 'கன்ஸம்ஷன்' என்று எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், கிட்டத்தட்ட மற்ற தொழிற்சாலைகளிலே 20 சதவிகிதம் என்றால், இது 30 சதவிகிதமாக இருப்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் சொல்ல

கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக இங்கே ஒரு சிறிய வேண்டுகோள் ஒன்றை வைக்கிறேன். கடந்த 1989ஆம் ஆண்டு, மதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பல சலுகைகளை, தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்காகக் கொடுத்து வந்தார்கள். உதாரணமாக, மின்சாரத்தைப் பொறுத்தவரையில், ஐந்தாண்டுகளுக்கு 'சப்சிடி' கொடுத்து வந்ததை, தமிழக அரசு, 1989 ஆம் ஆண்டு 3 ஆண்டுகளாகக் குறைந்து விட்டது. தற்சமயம் அந்தச் சலுகைகூட நிறுத்தப்பட்டுவிட்டது. அதேபோன்று, Sales Tax concession, I.F.S.T. Loan ஆகியவை எலலாம் மீண்டும் அனுமதிப்பதற்கு நம்முடைய அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மகாராஷ்டிரா மாநிலத்திலே..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. என்.ஆர். அழகராஜா:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு பாயிண்டுடன் முடித்து விடுகிறேன். மகாராஷ்டிரா மாநிலத்திலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 5 நிமிடங்கள் என்று சொல்லி, அதற்கு மேலும் பேசியிருக்கிறீர்கள். நீங்கள் உட்காருங்கள். அடுத்து திரு. பி.ஆர். சுந்தரம்.

***திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெருந்தொழில்கள் பற்றிய மானியக் கோரிக்கையில் பேச அனுமதித்த உங்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, எனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தை 10 நிமிடங்கள் என்பதை 15 நிமிடங்களாவது ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மற்றவர்களுக்கு 5 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டன. உங்களுக்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதற்குள்ளாகப் பேசி முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கீடுகள் இருந்தால், இன்னும் நேரம் அதிகமாகத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறுக்கீடுகள் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்.



**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே, ஃபோர்டு, யூண்டாய், மற்றும் எச்.எம். மிட்சுபிஷி ஆகிய 3 பெரிய கார் தொழிற்சாலைகள் எல்லாம் இந்த ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டதாக கூறப்பட்டிருக்கிறது. சமைத்து வைத்த சாப்பாட்டிற்கு சொந்தம் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். இவையெல்லாம் எங்களுடைய ஆட்சிக் காலத்திலே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு, இப்போது உங்களுடைய ஆட்சிக் காலத்தில் [illegible] ஆரம்பித்திருக்கிறீர்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிரு[illegible]றன். உங்களுடைய கவனக் குறைவால், இந்த ஆட்சியினுடைய அணுகுமுறை சரியாக இல்லாத காரணத்தினால், 'டொயோட்டா' கார் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையானது இங்கே வராமல் டெல்லிக்குச் சென்றுவிட்டது. அடுத்ததாக, 'வோல்கோ' டிரக் தயாரிக்கின்ற தொழிற்சாலையானது, மைசூருக்கு...

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன். இன்றைக்கு ஒரு அறிக்கை வந்திருக்கிறது. வெளிநாட்டு மூலதனங்களை எல்லாம் இந்த ஆட்சிதான் கொண்டு வந்து, நம்முடைய பொருளாதாரத்தைக் கெடுத்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி என்றால் உங்கள் ஆட்சியிலேதான் வெளிநாட்டு மூலதனம் வருவதற்கு வழிவகுத்ததாகச் சொல்கிறீர்கள். ஆனால் அப்படி வெளிநாட்டு மூலதனம் வருவதற்கு ஏற்பாடு செய்தது இந்த ஆட்சிதான் என்று குற்றம்சாட்டப்பட்டிருக்கிறது இன்றைக்கு ஒரு அறிக்கையின் மூலமாக. இந்த இரண்டில் எது சரி என்பதை நாங்கள் அறிய விரும்புகின்றோம்.

முற்பகல் 11-50

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கீடுகள் எதையும் என்னுடைய பேச்சிலே விரும்பவில்லை. அதைத்தான் நான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். அடுத்து, வோல்கோ என்ற டிரக் தயார் செய்யும் தொழிற்சாலையானது இங்கே வருவதாக இருந்தது. அவர்கள் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு, சரிவராத காரணத்தினால் அந்தத் தொழிற்சாலை மைசூருக்குச் சென்றுவிட்டது. அடுத்தபடியாக உலகத்தினுடைய மிகப் பெரிய பணக்காரர் என்று சொல்லக்கூடிய பில் கேட்ஸ் என்பவரின் உதவியோடு 'மைக்ரோ ஸாஃப்ட்வேர் டெவலப்மெண்ட்' என்ற கம்பெனி 1,000 கோடி ரூபாய் செலவில் இங்கே தொடங்கப்பட இருந்தது.

அந்தக் கம்பெனியானது உங்களுடைய உற்ற நண்பர் ஆந்திர முதல்வர் மாண்புமிகு சந்திரபாபு நாயுடு அவர்களுடைய முயற்சியால் ஆந்திராவிலுள்ள ஹைதராபாத்திற்கு சென்றுவிட்டது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த இரண்டு ஆண்டுகளில் இங்கு உங்களுடைய முயற்சியால் என்னென்ன தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக டிட்கோ மூலம் முட்டைப் பவுடர் தயார் செய்யும் தொழிற்சாலை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அனுமதிக்கப்பட்டு, அந்த முட்டைப் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை நாமக்கல்லில் ஆரம்பிப்பதாக இருந்தது. அதற்கு இடம்கூட வாங்கிவிட்டார்கள். ஆனால் ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு அந்த இடத்தை ஈரோட்டிற்கு மாற்றிக் கொண்டுவிட்டார்கள். எனவே, அதிகமாக முட்டை கிடைக்கக்கூடிய எங்களுடைய பகுதியில் முட்டை தயாரிக்கும் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முட்டையை மனிதர்கள் தயாரிக்க முடியாது. கோழிதான் முட்டை போடும். (சிரிப்பு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முட்டைப் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, கோழிக் கறியைப் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை இராசிபுரத்தில், அமைத்துத்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'டான்செம்'-ஐப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அதிலே அதிகமாக நான் பேச விரும்பவில்லை. ஆனால் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சிமெண்ட் விலை குறைந்ததன் காரணமாக இந்தியா சிமெண்ட் நிறுவனத்திலே சிமெண்ட் தேங்கிக் கிடக்கின்ற நிலை ஏற்பட்டது. அந்த சிமெண்ட் எல்லாம் விற்கப்பட வேண்டுமென்பதற்காக முன்னாள் மத்திய அமைச்சர் அவர்களுடைய முயற்சியால் அந்தச் சட்டம் மாற்றப்பட்டு அரசு நிறுவனங்கள் எல்லாம் அந்த ஆலையிலிருந்துதான் சிமெண்ட் வாங்க வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டிருப்பதாக கருதப்படுகிறது. அதுபோல மாயானூரிலே செயல்படுகிற பைப் கம்பெனியும்......



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் மத்திய அமைச்சர் திரு. முரசொலி மாறன் மூலமாக இந்த அரசாங்கம், இந்தியா சிமெண்ட் நிறுவனத்திலேயிருந்துதான் சிமெண்ட் வாங்க வேண்டும் என்று உத்தரவு போட்டதாகச் சொல்கிறார்கள். எந்த கம்பெனிக்கு எங்கே உத்தரவு போட்டிருக்கிறார்கள்? எந்த இலாகாவிற்கு உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்ற விவரங்கள் தெரிந்தால் நன்றாக இருக்கும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது 'டான்செம்' கம்பெனியில் சிமெண்ட் விலை அதிகமாக இருப்பதால் அங்கே வாங்குவதைவிட தனியார் கம்பெனிகளிலே வாங்கலாம் என்று கூறியிருப்பதைச் சொல்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மற்றும் சில துறைகள் பல்வேறு திட்டங்களை அமல்படுத்துகின்ற நேரத்தில் 'டான்செம்'-ல் சிமெண்ட் விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் நாங்கள் Open Market-ல் வாங்கிக் கொள்கிறோம் என்று கேட்கிறார்கள். அங்கே வேண்டாம் இங்கேதான் வாங்க வேண்டுமென்று சொன்னால், குறைந்த விலைக்கு சிமெண்ட் விற்கும்போது ஏன் அதிக விலை கொடுத்து வாங்கினீர்கள் என்றும் திரு. சுந்தரம் பேசுவார். இப்படி எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று நினைக்கக்கூடாது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இங்கே தான் சிமெண்ட் வாங்க வேண்டுமென்று எந்தவித ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை. இன்றையதினம் சிமெண்ட் தொழிலதிபர்கள் சிமெண்டை competitive rates-லே விற்றுக் கொண்டிருக்கிறார்கள். யார் வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும் இப்போது வாங்கிக் கொள்ளலாம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சர்க்கரைத் தொழிலைப் பொறுத்தவரையில் 1995-96ஆம் ஆண்டிலே 7-1/4 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. உங்களுடைய ஆட்சிக் காலத்திலே அதாவது 1996-97-லே அது 4 இலட்சம் டன்னாகக் குறைந்திருக்கிறது. விவசாயிகளுக்கு ஒரு டன் கரும்புக்கு 1,000 ரூபாய் கொடுப்பதாகச் சொல்லி கொடுக்காத காரணத்தினால் அவர்கள் அந்தக் கரும்பை சரியாகப் பயிர் செய்யவில்லை. அதனால்தான் இந்த அளவுக்கு சர்க்கரையின் உற்பத்தி குறைந்துவிட்டது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-55

அடுத்தபடியாக 'டிட்கோ'-வைப் பொறுத்தவரையில், 1994-95-இல் எங்களுடைய ஆட்சியில், 16.79 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியிருந்தது. அதற்கு அடுத்த ஆண்டு 1995-96-ல் 3.21 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியிருந்தது. ஆனால் தற்போது 1997-98- லே அதனுடைய நஷ்டம் 3.53 இலட்சமாக இருக்கிறது. இந்த நஷ்டத்திற்கு என்ன காரணம் என்பதைச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அந்தச் செய்தித்தாள் நிறுவனமானது முன்பு 1996-97-இல் 17 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியிருந்தது. அது குறைந்து, தற்போது 1997-98-இல் அந்த நிறுவனமானது கிட்டத்தட்ட 5 கோடி ரூபாய் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் 5 நிர்வாக இயக்குநர்கள் அங்கே மாற்றப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளில் 5 மேலாண்மை இயக்குநர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். ஆர்.கே. கன்னா என்பவர் 4 மாதமும், கோபால் என்பவர் 7 மாதமும், ஜேக்கப் என்பவர் 9 மாதமும் பதவியில் இருந்துள்ளார்கள். அதற்குப் பின்பு ** கிட்டத்தட்ட 78 கோடி ரூபாய் அளவுக்கு இருந்த இலாபமானது குறைந்து தற்போது 5 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். **

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு அதிகாரியினுடைய பெயரைக்கூறி, தரக்குறைவாக விமர்சிப்பது அவையினுடைய மரபுக்கு அழகல்ல. எனவே, அந்த அதிகாரியைப் பற்றி குறிப்பிட்டுச் சொன்ன வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் ஓர் அதிகாரியைப் பற்றிக் குறிப்பிட்ட வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** கிட்டத்தட்ட 70 கோடி ரூபாய் அளவுக்கு இலாபத்தில் இருந்த அந்த நிறுவனம் தற்போது 5 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கும் நிலைக்கு வந்தது. வேண்டுமானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைப்பற்றி ஒரு விசாரணைக்கூட வைக்கலாம். யார் யாரோ எதற்கெதற்கோ விசாரணை வைக்கிறார்கள். எந்தெந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மீதோ விசாரணை வைக்கிறார்கள். இந்த அதிகாரியைப் பொறுத்தவரையில் நான் குற்றம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். ஒரே ஒரு ஊழலைப்பற்றி மட்டும் நான் விளக்கமாகச் சொல்லுகிறேன்.

1997 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆயிரம் டன் காகிதக் கூழ், அதாவது 'பல்ப்' வாங்குவதற்காக விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்காக இந்தோனேஷியாவில் உள்ள ஒரே ஒரு கம்பெனிக்கு மட்டும் ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. சுமார் 5 ஆயிரம் டன் காகிதக் கூழ் அப்போது இருப்பிலே இருந்திருக்கிறது. அந்த இருப்பானது, அந்த ஆலைக்குக் கிட்டத்தட்ட 5 மாத காலத்திற்குப் போதுமானதாகும். அந்தக் கூழை வாங்கவேண்டாமென்று எவ்வளவோ எடுத்துக்கூறியும், அந்த அதிகாரி அதை வாங்குவதற்காக உத்தரவிடுகிறார். என்ன விலைக்கு என்றால் 505 யு.எஸ். டாலர் கொடுத்து வாங்குவதற்கு உத்தரவிடுகிறார். ஆனால், அப்போது அதனுடைய விலை 390 யு.எஸ். டாலர்தான். (மணியடிக்கப்பெற்றது) ஆனால் 505 யு.எஸ். டாலருக்கு வாங்கப்பட்டிருக்கிறது. இது குறித்து நான் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன். அதற்காக பொறுப்பேற்றும் கொள்கிறேன். வேண்டுமென்றால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த அதிகாரியின்மீது விசாரணை வைக்கட்டும். அதை நான் சந்திக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வா. சந்தானம், (குறுக்கீடு) திரு. சுந்தரம், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது. மேற்கொண்டும் ஒரு நிமிடம் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு மேல் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் பேசவேயில்லை.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படியென்றால் இவ்வளவு நேரம் பேசியது என்ன? (குறுக்கீடு) நான் திரு. சந்தானம் அவர்களைப் பேசுவதற்கு அழைத்திருக்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முக்கியமான பிரச்சினையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன், அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் இப்போது சொன்ன அந்தக் குற்றச்சாட்டுகளை எல்லாம் விவரமாக, ஆதாரத்தோடு தருவாரேயானால், அப்படி நடந்திருக்கும் பட்சத்தில், எந்த அதிகாரியாக இருந்தாலும் அவர்மீது விசாரணை வைக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே 5 கோடி ரூபாய் நஷ்டம் என்று சொன்னார்கள். அது 5 கோடி ரூபாய் அல்ல. 2½ கோடி ரூபாய் ஆகும். ஏற்கெனவே 70 கோடி ரூபாய் இலாபம் என்றார். 1993-94-இல் 54 கோடி ரூபாய்தான் இலாபம் இருந்தது.

நண்பகல் 12-00

பொதுவாக, இன்றைக்கு உலகம் முழுவதும் காகிதத் தொழிலில் ஓர் இறக்க நிலை ஏற்பட்டு, அதன் காரணமாக எல்லா ஆலைகளுமே இலாபத்திலே இயங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தாக்கம்தான் இந்த ஆலைக்கும் ஏற்பட்டிருக்கிறதே அல்லாமல், அவர் சொல்வதுபோல் இல்லை, அதிகாரிகளுடைய தவறு என்றால் அதையும் விசாரிக்க இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது, நிச்சயமாக விசாரிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், நீங்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னீர்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆதாரம் கொடுங்கள், விசாரித்து, தவறு என்றால் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லிவிட்டார்கள். எனவே, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்று குறுக்கீடுகள் இருந்தன.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறுக்கீடுகள் எல்லாவற்றையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்றவர்கள் எல்லாம் ஆளுங்கட்சியை ஆதரித்துப் பேசுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், உங்களுக்கு ஒரு நீதி, மற்றவர்களுக்கு ஒரு நீதி என்று இருக்கக்கூடாது. மற்றவர்களுக்கெல்லாம் 5 நிமிடங்கள்தான் பேசுவதற்கு அனுமதி என்று சொல்லி, அவர்களும் அந்த 5 நிமிடங்களில் பேசி முடித்து விட்டார்கள். நீங்கள் உட்காருங்கள், திரு. லா. சந்தானம், நீங்கள் பேசலாம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஜனநாயக உரிமை பறிக்கப்படுகிறது. எனக்கு மைக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், உங்களை நான் உட்காருங்கள் என்று சொல்லிவிட்டேன். திரு. லா. சந்தானம், நீங்கள் பேசுங்கள்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் 7 நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன். முக்கியமான பிரச்சினை பற்றிச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் உங்களை உட்காரச் சொல்லிவிட்டேன். அதையும் மீறி நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நான் உங்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வரும், உட்காருங்கள். திரு. லா. சந்தானம், பேசுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே......

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை, தயவுசெய்து இரண்டு நிமிடங்கள் பேசுவதற்கு அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். ஒவ்வொரு முறையும் இப்படித்தான் குறுக்கிட்டு, அவையினுடைய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கிறீர்கள். இன்னொரு உறுப்பினர் பேசுகின்றபோது, அதற்கு இடையூறாக இருக்காதீர்கள், உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றும் குந்தகம் விளைவிக்கவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவருக்கு இரண்டு நிமிடங்கள் பேசுவதற்கு அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, நீங்கள் உட்காருங்கள். திரு. பி.ஆர். சுந்தரம், நீங்களும் உட்காருங்கள். திரு. லா. சந்தானம், நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா? இல்லையென்றால், அடுத்த உறுப்பினரைப் பேசுவதற்கு அழைக்கட்டுமா?

**திரு. லா. சந்தானம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுத் துறையை ஊக்கப்படுத்துவதைக் காட்டிலும், தனியார் துறையை ஊக்கப்படுத்துவதற்கான நிலை இன்றைக்கு இருக்கிறது...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவைக் காவலர்கள் திரு. பி.ஆர். சுந்தரத்தை வெளியேற்ற வேண்டும்.

(அவைக் காவலர்கள் திரு. பி.ஆர். சுந்தரத்தின் அருகே சென்று அவரது கையைப் பிடித்தனர்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவைக் காவலர்கள் அவரை விட்டுவிடவும். அவர் உட்காரட்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேசுவதற்கு அதிக நேரம் கொடுக்காததால், நான் அவையை விட்டு வெளிநடப்புச் செய்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது உங்கள் இஷ்டம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேசுவதற்கு 10 நிமிடங்கள் கொடுத்தும், குறுக்கீடுகள் இருந்த காரணத்தால், இன்னும் கொஞ்சம் நேரம் பேசுவதற்கு அனுமதி கொடுங்கள் என்று கேட்டும், நீங்கள் அனுமதி கொடுக்காத காரணத்தால் நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. பி.ஆர். சுந்தரம் அவையை விட்டு வெளிநடப்புச் செய்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு தொழில்கள் தமிழகத்திலே இயங்கி வருகின்ற நேரத்தில், சர்க்கரைத் தொழில் என்பதும் மிக முக்கியமான தொழிலாக இருந்து வருகிறது என்று சொல்ல வேண்டும். அதிலே அரசு சார்பிலே 18 ஆலைகள் இயங்கி வருகின்றன. அந்த ஆலைகளிலே கடந்த 3 ஆண்டுகளாக உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்தித் திறனைப் பார்க்கின்றபோது, ஆண்டுக்காண்டு குறைந்து கொண்டே வருகிறது. விவசாயம் செய்கின்ற மொத்த நிலத்திலே 2 சதவீதம்தான் கரும்பு உற்பத்தி செய்கிற நிலை இருந்தும்கூட, அதுவும் 1994-95 ஆம் ஆண்டுகளில் 107 இலட்சம் டன்கள் உற்பத்தியானது 1995-96-லே 90 இலட்சமாகக் குறைந்து 1996-97-லே 44 இலட்சமாக ஏறத்தாழ 50 சதவீதத்திற்கும் மேலாகக் குறைகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணங்களை நாம் நன்கு கவனிக்க வேண்டும்.

இன்றைக்கு எத்தனையோ பஞ்சாலைகள் அரசுத் துறையிலே இயங்கி வருகின்றன. பஞ்சு பற்றாக் குறையால் ஓடாது இருப்பதைப்போல அரசுத் துறையிலே ஏறத்தாழ 18 சர்க்கரை ஆலைகள் ஓடாமல் இருக்கின்ற நிலையில் விவசாயிகளை ஊக்கப்படுத்துகிற நிலை இல்லாமல் போனால் இதுபோன்ற உற்பத்தி குறையுமேயானால், வருகின்ற காலத்தில் ஓரிரு ஆண்டுகளில் அந்தச் சர்க்கரை ஆலைகள் இயங்க முடியாத நிலை ஏற்படும் என்பதை நமது அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். எனவே, விவசாயிகளை ஊக்கப்படுத்துகின்ற வகையில், இந்த ஆண்டு ஏதாவது கரும்புப் பருவத்திலே ஒரு டன்னுக்கு 1,000 ரூபாய் என்கிற இலக்கை விவசாயிகளுக்கு வழங்குவோமானால்,

விவசாயம் சீராகி ஆலைகள் எல்லாம் ஒழுங்காக இயங்குகின்ற அளவுக்கு உற்பத்தி இலக்கை அடைய முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நாம் பொதுத் துறையிலே இயக்குகின்ற தொழில்கள் அத்தனையும் நட்டத்திலே ஓடுகின்றன என்று சொன்னால் அதற்குக் காரணத்தைப் பார்க்க வேண்டும். நான் சீனாவுக்கு சென்றிருந்தபோது, அங்கே ஒரு பெரிய சிகரெட் தொழிற்சாலையைப் பார்க்க நேரிட்டது. அந்தத் தொழிற்சாலையில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியாகின்ற பொருள்கள், அந்த அரசினுடைய கண்காணிப்பிலே விற்கப்படுகின்றன. அந்த அரசு அந்தத் தொழிற்சாலைக்குரிய மூலதனத்தைக் கொடுத்து, அந்த மூலதனத்தின்மூலம் தொழிலாளர்கள் எல்லாம் வேலை செய்து, வருகின்ற இலாபத்திலே தங்களுடைய பங்கை எடுத்துக்கொண்டு, மீதி ஒரு தொகையை அரசுக்கு — இவ்வளவு செலுத்த வேண்டுமென்று நிர்ணயித்து, அந்தத் தொகையை — செலுத்துகிறார்கள்.

பிற்பகல் 12-05

அந்த ஆலையில் வேலை செய்கின்ற ஒவ்வொரு தொழிலாளியும் மாதம் ஒன்றுக்கு 18,000 ரூபாய் சம்பளமாகப் பெறுகின்ற ஒரு நிலையைக் காண முடிகிறது. அந்த அளவுக்கு, 4 ஆண்டுகளில் அந்த அரசு கொடுத்த மூலதனத்தை முழுமையாக எடுத்திருக்கிறது. ஓராண்டுக்கு 25 சதவிகிதம் இலாபம் என்ற முறையிலே 4 ஆண்டுகளில் அரசு கொடுத்த மூலதனத்தை எடுத்து, அங்கு வேலை செய்கின்ற தொழிலாளர்கள் மட்டும் இன்றைக்கு 18,000 ரூபாய் சம்பளமாகப் பெறுகிறார்கள். அந்த அளவிற்கு பொதுத் துறை நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன. நம் நாட்டில் அதுபோலச் செயல்படவில்லை என்று சொன்னால் அதற்குரிய காரணத்தை நாம் ஆராய்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இங்கு இருக்கிற தொழிலாளர்கள் உண்மை நிலையோடு நிர்வாகத்தில் இருக்கிறவர்களும் சரி, தொழிலாளர்களும் சரி, தங்களுடைய உழைப்பை, இது தங்களது நாடு, அந்த நாடு முன்னேறுவதற்கு நாம் எல்லாம் எந்தவித இடையூறு இல்லாமல் மனப்பூர்வமாக உழைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு செயலாற்றினால் பொதுத் துறை நிறுவனங்கள் சிறப்பாக செயல்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அதை இந்த அரசு கவனத்தில் கொண்டு, பொதுத் துறை நிறுவனங்கள் வருகின்ற காலத்தில் சிறப்பாக செயல்படுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து என்னுடைய தொகுதி குறித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் ஏற்கெனவே நான் விண்ணப்பமாக கொடுத்திருக்கிறேன். என்னுடைய தொகுதியில் பெருவாரியான தேங்காய் உற்பத்தியாகிறது. தென்னை மரங்கள் அதிகம் நிறைந்த தொகுதி சோழவந்தான் தொகுதி. அந்தத் தொகுதியில் நிறைய தேங்காய் உற்பத்தியாகின்ற காரணத்தால் அந்தத் தேங்காய்களை பதப்படுத்தி செயற்முறைப்படுத்தும் தொழிற்சாலை வேண்டுமென்று விண்ணப்பித்து இருந்தேன். அவர்களும் உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி அதனுடைய உண்மை நிலை என்ன, அப்படி அங்கே தொழிற்சாலை ஏற்படுவதற்கு மூலப்பொருள்கள் இருக்கிறதா, வாய்ப்புகள் இருக்கிறதா என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து பதில் அனுப்பும்படியாகக் கேட்டுக்கொண்டார்கள். அந்தத் துறையினுடைய அதிகாரிகள், அவற்றையெல்லாம் பார்வையிட்டு அங்கு மூலப்பொருள்கள் நிறைய இருக்கின்றன, பொள்ளாச்சியில் தேங்காய் தொழிற்சாலை நிறுவியது போல, சோழவந்தானிலும் நிறுவுவதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைச் சொல்லியிருக்கிறார்கள்.

அதுபோலப் பழங்களைப் பதப்படுத்தும் ஒரு தொழிற்சாலை. அங்குப் பழங்கள் நிறைய விளைகின்றன. எனவே, இந்த இரண்டில் ஏதாவது ஒரு தொழிற்சாலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடுத்து எனக்கு நல்ல பெயரினை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில்கள் மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு மானிய கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனம் செய்வோம் என்று சொல்வார்கள். அதுபோல ஒரு நாடு முன்னேற வேண்டுமென்று சொன்னால் உழவுத் தொழில் சிறந்தோங்க வேண்டும். அதுபோல நாட்டிலே பல்வேறு தொழில் வளங்கள் பெருகிக்கொண்டிருந்தால்தான், அந்த நாடு சிறந்த நாடாக அமையும் என்று பெரியோர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

அதுபோல,

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு".

என்று வள்ளுவர் அழகாகச் சொல்லி இருக்கிறார். அதுபோல 'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்' என்ற பாடலின் வரிக்கேற்ப நம்முடைய தமிழகத்தில், இந்திய நாட்டில் எல்லா வளங்களும் நிரம்பி இருக்கின்றன. தமிழ்நாட்டில் நிலவளம் இருக்கிறது; நீர்வளம் இருக்கிறது; நிலத்திலே கனிம வளம் இருக்கிறது; காட்டு வளம் இருக்கிறது; கடல் வளம் இருக்கிறது, இத்தனை வளங்கள் இருந்தும்கூட பண்டைய தமிழகத்தில் கடல் கடந்து வாணிபம் செய்தபோது ஏற்பட்ட முன்னேற்றம்கூட இன்றைய நிலையில் இல்லை என்பது பெரிய வருத்தமாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. இரா. சேதுநாதன் தலைமை)**

அதைப் போல நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்று தொழில் துறையில் எவ்வளவோ முன்னேறி வருகிறது, நாங்கள் அதை மறுக்கவில்லை. இருந்தாலும்கூட மற்ற மாநிலங்களான கர்நாடகத்தை, ஆந்திரத்தை, மராட்டியத்தைப் பார்க்கின்றபோது, மத்திய அரசு அங்கெல்லாம் பொதுத் துறை வாயிலாக என்னென்ன தொழில்களை எல்லாம் அமைத்து வருகிறதோ அதுபோல, மற்ற மாநிலங்களில் செய்ததைப்போல தமிழ்நாட்டுக்கு இதுவரை செய்யவில்லை அல்லது அப்படிப்பட்ட தொழிற்சாலைகளையெல்லாம் உருவாக்கவில்லை என்பது நமக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்திருக்கிறது என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே அப்படிப்பட்ட நிலையிலே தொழில் துறை முன்னேறுவதற்கு ஆதாரத்தை இங்கு பெருக்க வேண்டும். தொழில் துறைக்கு இன்ஃபிராஸ்ட்ரக்சர் என்று சொல்லக்கூடிய கட்டுமானங்களை உருவாக்க வேண்டும். அந்தக் கட்டுமானங்களைப் பொறுத்தவரையிலே, நீர் ஆதாரம், மின்சாரம், சாலை வசதி, இரயில் பாதை, விமானப் போக்குவரத்து, துறைமுகங்கள் மேம்பாடு போன்ற கட்டுமானங்கள் இன்றைய அளவில் இருப்பதைவிட இன்னும் மேம்படுத்தப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

V21,3'N98 N98.53'1



பிற்பகல் 12-10

விவசாயத்தைப் பொறுத்தவரையிலே, அஞ்சுகத்தைப் பயிரிட்ட விவசாயிகள் அஞ்சு கத்தை மிஞ்சவில்லை என்கிறார்கள். பஞ்சை சாகுபடி செய்த உழவர்கள் எல்லாம் இன்று பஞ்சாய்ப் பறக்கிறார்கள், வறுமையினாலே. பஞ்சு பயிரிடும் விவசாயிகள் இன்று கஞ்சிக்குக் கஷ்டப்படும் அவல நிலை. இப்படிப்பட்ட நிலையில் இருக்கக்கூடிய விவசாயிகள் எல்லாம் தங்களுடைய குழந்தைகள் மீண்டும் உழவுத் தொழிலைச் செய்யக் கூடாது; பிற தொழில்களுக்குச் செல்ல வேண்டும் என்று சொல்லி, அவர்களை வெளிநாடுகளுக்கு எல்லாம் அனுப்பக் கூடிய நிலை இந்த நாட்டிலே இருந்து கொண்டு இருக்கிறது. அப்படிப் பட்ட நிலையிலே என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலேகூட, நான் அடிக்கடி இந்த மாமன்றத்திலே சொல்லி இருக்கிறேன்; ஐரோப்பாவின் நோயாளி துருக்கி என்பார்கள்; அதைப்போல தமிழகத்தின் நோயாளியாக இருக்கக்கூடியது என்னுடைய தர்மபுரி மாவட்டம். எங்களுடைய தர்மபுரி மாவட்டத்திலேகூட படுத்த படுக்கையிலே இருக்கக்கூடிய தொகுதி, மிகவும் பின்தங்கிய தொகுதி, தொழில் வசதி இல்லாத தொகுதி என்னுடைய பெண்ணாகரம் தொகுதி; அங்கு ஒரு தொழிற்பேட்டை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லி, பல முறை நான் வேண்டுகோள் விடுத்து இருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கருணை உள்ளத்தோடு அதுபற்றி பரிசீலிப்பதாக பலமுறை சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, இப்படி தொழில் வளம் இல்லாத, பின்தங்கிய பகுதியான பெண்ணாகரத்திலே நடப்பாண்டிலேயாவது ஒரு தொழிற்பேட்டையை உருவாக்க வேண்டும் என்று சொல்லி நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்று சொன்னால், அங்கே விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள், விவசாயம் இல்லாத மற்ற நாளிலே, வறுமையிலே இருக்கக்கூடியவர்கள் பிற மாநிலங்களுக்குச் சென்று கல் உடைப்பது, அங்கே கட்டட வேலைகள் செய்வது, கடலை, பொறி விற்பது, பழம் விற்பது போன்ற பல்வேறு தொழில்களைச் செய்கிறார்கள். பிற மாவட்டங்களில் நெல், கரும்பு போன்ற தொழில்களை செய்வதற்காக மாதக் கணக்கிலே சென்று வாழக்கூடிய நிலையும் அவர்களுக்கு இருக்கிறது. இதையெல்லாம் போக்குவதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்...

219099

தொழில் துறையைப் பொறுத்தவரையிலே, அதிலும் குறிப்பாகச் சர்க்கரை ஆலையை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், இன்று எல்லாச் சர்க்கரை ஆலைகளுமே நஷ்டத்தில் இருப்பதாக முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், எங்களுடைய தர்மபுரி மாவட்ட கூட்டுறவுச் சர்க்கரை ஆலை இந்த ஆண்டு மாத்திரம் 3 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டி இருக்கிறது. கரும்பினுடைய விலை தமிழகம் முழுவதும் ஒன்றாக இருக்கிறது. அந்த ஆலையிலே உற்பத்தி நடைபெறுகிறது; தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். எப்படி இந்த ஆலைகள் எல்லாம் நஷ்டத்தில் இயங்குகின்றன என்று சொன்னால், அதற்கு அங்குள்ள நிர்வாகத்தினுடைய கோளாறு என்றுதான் சொல்ல முடியும். அதிகாரிகளை நான் குறை சொல்வதற்காக இப்படிச் சொல்லவில்லை. அதிகாரிகள் இன்னும் திருந்தவில்லை; ஊழலிலே திளைத்துக் கொண்டிருக்கிறார்கள்; அதில் ஊறிப்போய்க்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய கவனக் குறைவினாலும் ஊழலினாலும்தான் இப்படிப்பட்ட ஆலைகளிலே நஷ்டம் ஏற்படுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமாத்திரமல்ல, குறிப்பிட்ட காலங்களிலே கரும்பு வெட்டுவது இல்லை. அந்த ஆலை குறிப்பிட்ட நேரத்திலே அரைவையைத் தொடங்குவது இல்லை. இந்தக் காரணங்களினாலே அங்கே நஷ்டம் ஏற்படுகிறது.

அதேபோலச் சர்க்கரை விற்பனை என்று வருகின்றபோது, பொதுமக்களுக்கு விற்பனை செய்கின்ற நேரத்திலே எல்லாம் சர்க்கரையினுடைய விலை கூடுதலாக இருக்கிறது. ஆனால் லெவிக்கு சர்க்கரை கொடுக்கிறபோது இதுவரையிலே அதன் விலையைக் கூட்டவில்லை. இப்படி பல்வேறு காரணங்களினாலே இந்தச் சர்க்கரை ஆலைகள் எல்லாம் நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, நட்டத்திலே இயங்கக்கூடிய சர்க்கரை ஆலைகள் எல்லாம் இலாபம் ஈட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று 18 கூட்டுறவு/பொதுத் துறை சர்க்கரை ஆலைகளும், 14 தனியார் ஆலைகளும் இருக்கின்றன. இன்று இந்தத் தனியார் ஆலைகள் எல்லாம் விவசாயிகளை உறிஞ்சிக் கொண்டு இருக்கிறார்கள். அரசாங்கத்தை ஏமாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். வருடக் கணக்கிலே விவசாயிகளினுடைய கரும்புக்கு அவர்கள் பணம் பட்டுவாடா செய்வது இல்லை. அரசும் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பது இல்லை. அதிலும்





குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தரணி சர்க்கரை ஆலை, அருணா சர்க்கரை ஆலை போன்ற ஆலைகள் எல்லாம் விவசாயிகளை உறிஞ்சிக் கொண்டும், அரசை ஏமாற்றிக் கொண்டும் இருக்கிற காரணத்தினாலே, அதுபோன்ற ஆலைகளை எல்லாம் அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று சொல்லி இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இந்தச் சர்க்கரை ஆலைகளிலே பணியாற்றக் கூடிய தொழிலாளர்களுக்கு ஊதியம் மிகவும் குறைவாக இருக்கிறது. மற்றவர்களுக்கு எல்லாம் ஊதியம் உயர்த்தியதுபோல, அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல தற்காலிகப் பணியாளர்கள் நிரந்தரம் ஆகாமல் நீண்ட காலமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சிமெண்ட் ஆலைகள். அவற்றைப் பொறுத்தவரையிலே சில ஆலைகள் இலாபத்திலே இயங்குகின்றன. தமிழ்நாடு சிமெண்ட் ஆலையைப் பொறுத்தவரையிலே. அதிலே இருக்கக்கூடிய குறைபாடுகளை எல்லாம் களைந்து முழுமையாக இலாபம் ஈட்டக்கூடிய வகையிலே, செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே தற்காலிப் பணியாளர்கள் நீண்டகாலமாக நிரந்தரம் செய்யப்படாமல் இருந்து வருகிறார்கள். அவர்களையும் பணி நிரந்தரம் செய்வதற்கு ஆவன செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

தமிழகத்தினுடைய பொருளாதாரத்தைப் பெருக்குவதற்கும் அன்னியச் செலாவணியைப் பெருக்குவதற்கும் கிரானைட் தொழில் ஒரு சிறந்த தொழிலாக இன்றைக்கு இருக்கிறது. இருந்தாலும்கூட, நடப்பு ஆண்டிலும் சரி, கடந்த காலத்திலும் சரி, இந்த கிரானைட் தொழில் முடக்கி வைக்கப்பட்டதைப் போலவே இருக்கிறது. இன்னும் வனத் துறையில், காடுகளில் ஏராளமான கிரானைட் கற்கள் இருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது.) ஒரே ஒரு நிமிடம். மத்திய அரசினுடைய அனுமதியை எப்படியாவது பெற்று, நமது காடுகளில் இருக்கக்கூடிய கிரானைட் கற்களையெல்லாம் நாம் வெட்டினால், தமிழகத்திற்கு அது

நிறைய வருமானத்தைப் பெற்றுத் தரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதையெல்லாம் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் ஒசூரில் மிகப் பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் அந்தத் தொழிற்சாலைகளால் அந்த மாவட்ட மக்களுக்கோ நமது மாநிலத்திற்கோ பயன் இருக்கிறதா என்றால் இல்லை. அது நமது மாநில எல்லையோரப் பகுதியாக இருப்பதால், அங்கே பணியாற்றக்கூடியவர்கள் எல்லாம் கர்நாடகத்திலிருந்தும், ஆந்திராவிலிருந்தும் வந்தவர்கள்தான். தமிழ்நாட்டவர்களுக்கு அங்கே போதுமான வேலைவாய்ப்பு கிடைப்பதில்லை. ஆகவே மற்ற மாநிலத்தவர்களைப் பணியமர்த்துவதை நான் குறையாகச் சொல்லவில்லை. என்றாலும்கூட நமது மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கும், அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

இப்போதுகூடத் தனியார் தொழிற்சாலைகளை வளர்க்கின்ற நேரத்தில், மேட்டூரில் மிகப் பிரசித்தி பெற்ற Beardeel என்ற மேட்டூர் டெக்ஸ்டைல் மில், அந்த ஆலை மிக நீண்டகாலமாக மூடப்பட்டு கிடக்கிறது. அதன் காரணமாக 2,500 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் அந்த ஆலை திறக்கப்படும் என்று அந்தப் பகுதி மக்கள் எல்லாம் எதிர்பார்த்தார்கள். இன்னும் அது திறக்கப்படாததால் மக்கள் ஏமாற்றமடைந்திருக்கிறரார்கள். அதைத் திறந்து அவர்களுக்கு வாழ்வளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். தனியார் தொழிற்சாலைகளைத் தொடங்குகிற நேரத்தில் அரசிலே பல கோடிக்கணக்கான ரூபாய் கடனாகப் பெற்று அரசை ஏமாற்றுவதற்காக சிக் யூனிட் என்ற வகையில் நலிவடைந்த ஆலையாக பல்வேறு வகையான சான்றிதழ்களைப் பெற்று அரசாங்கத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைக் கண்டுபிடித்து உடனடியாக நடவடிக்கை எடுத்து அவைகளை அரசே மேற்கொள்ள வேண்டும். அதிலும் சில ஆலைகள் உண்மையிலேயே நலிவடைந்திருக்கின்றன. ஆகவே அப்படிப்பட்ட நலிவடைந்த



ஆலைகளுக்கு அரசு உதவி அளிப்பதோடு, ஏமாற்றக்கூடியவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரமாகி விட்டது, உட்காருங்கள். அடுத்து, திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது சுருக்கமாக சில விபரங்களை மட்டும் சொல்கிறேன். எங்களுடைய மாவட்டத்தின் பிரச்சினை என்ற முறையில் நீண்டகாலமாக நாங்கள் வைத்துக் கொண்டிருக்கிற ஒரு கோரிக்கை - அங்கே ஒரு தொழிற்சாலை இல்லை என்பதுதான். எனவே இரப்பரைப் பயன்படுத்தி அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான டயர் மற்றும் டியூபையும், இருக்கைகளையும் தயார் செய்கின்ற ஒரு தொழிற்சாலையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, நீரோடி என்ற இடத்திலிருந்து ஈத்தாமொழி வரைக்கும் தேங்காய் மட்டை நார் அதிகமாகக் கிடைக்கின்ற பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியிலே அரசினுடைய துறை மூலமாகவோ அல்லது தனியாரை ஊக்குவிக்கின்ற வகையிலோ ஒரு பேக்டரியை உருவாக்கினால் சிறந்ததாக இருக்கும் என்ற கோரிக்கையை நான் இரண்டாவதாக வைக்கிறேன்.

மூன்றாவது, நம்முடைய மாநிலத்திற்குக் கோடிக்கணக்கான ரூபாய் அந்நியச் செலாவணியைத் தேடித் தருகின்ற மணவாளக்குறிச்சியிலிருந்து அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற மணலில் இருந்து ஏதாவது ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமா என்று பார்க்கவேண்டும். குறிப்பாக சொல்லவேண்டுமானால் டைட்டானிக் ப்ராடக்ட்ஸ் உற்பத்தி செய்யமுடியும் என்ற விவரங்களையெல்லாம் அங்கே சொல்கிறார்கள். அதற்கான முயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த இரப்பரைப் பொறுத்தவரையில் அதற்கான வாய்ப்புகள் சம்பந்தமாக சில கருத்துக்களை எல்லாம் சொல்லியிருந்தார்கள். ஆனால் இந்த அறிக்கையிலே பார்க்கும்போது எந்த விபரமும் இல்லை. எனவே நான் மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்வது எல்லாம், அங்கே கிடைக்கின்ற மூலப்

பொருட்களைப் பயன்படுத்தி இப்படி ஒரு தொழிற்சாலை உருவாக்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். இதற்குத் தேவையான இடம் என்பது தக்கலையில் அரசினுடைய நிலப் பகுதியாக இருக்கிறது. தனியார் பகுதியை நாம் நாடவேண்டிய அவசியமில்லை. அதையாவது பயன்படுத்தி அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்வது உசிதமாக இருக்கும். அதுபோல அந்தப் பகுதியிலிருந்து கற்கள் ஜப்பானுக்கு ஏற்றுமதியாகிறது. அதை எந்த அளவிலே நம்முடைய மாநிலத்திலே நம்முடைய மாவட்டத்திலே சீரமைப்பது அல்லது அந்தக் கற்களைப் பயன்படுத்துவது, எந்தத் துறையில் அதை நாம் சரிசெய்வது என்று பார்த்து, எப்படிச் சரி செய்யமுடியுமோ அப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலையை உருவாக்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

பிற்பகல் 12-20

ஏதோ பல ஆண்டுகளுக்கு முன்னாலே ஆரம்பிக்கப்பட்ட ஆரல்வாய்மொழியிலே இருக்கக்கூடிய கூட்டுறவு நூற்பாலை மட்டும்தான், அங்கே ஒரு தொழிற்சாலை என்று இருக்கிறது. அந்தவகையிலே அந்த மாவட்டத்தில், தொழிலில் பின்தங்கியிருக்கின்ற அந்தப் பகுதியில் தொழில் முன்னேற்றத்திற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாகத் தொழில் மானியத்தில் பேசுவதிலே மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். அதற்கான வாய்ப்புக்கு நன்றி கூறுகிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலே சென்ற ஆட்சியிலேயிருந்த பல சடங்குகள் இந்த ஆட்சியிலே இல்லை. எளிதாக அணுகக்கூடிய முதலமைச்சர் என்ற வகையிலே பல்வேறு வகைகளிலே வெளிநாட்டு நிறுவனங்களெல்லாம் இங்கே வந்து தொழில் துறையில் முதலீடுகளைச் செய்து தொழில் ஆரம்பிக்கக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பல்வேறு கார் தொழிற்சாலைகள், ஃபோர்டு,



யூண்டாய், மிட்சுபிஷி போன்ற பல்வேறு நிறுவனங்களெல்லாம் இங்கே வருகை தந்து தங்களுடைய முதலீடுகளை இங்கே வைத்து நல்ல நிலையிலே பல தொழிற்சாலைகளைத் தொடங்கி இருக்கின்றன. நல்ல சாலை வசதிகளும், துறைமுகமும், விமான நிலையமும் பல்வேறு நிலையில் இருக்கக்கூடிய வசதிகளையெல்லாம் பெறக்கூடிய நிலையிலே இத்தகைய சர்வதேச நிறுவனங்கள் இங்கே வந்து தங்களுடைய தொழில் குடையை விரிக்க ஆரம்பித்திருப்பது நல்ல தருணம் என்று நான் நினைக்கிறேன். ஆனால் அதேநேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் அவர்கள் சொன்னதைப்போல, ஆங்கிலத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள்.

"In horse riding, the exercise is not for the rider but for the horse." குதிரை சவாரியிலே, உடற்பயிற்சி சவாரி செய்பவருக்கு அல்ல, குதிரைக்குத்தான் என்று சொல்வார்கள். அந்த வகையிலே சர்வதேச நாடுகளெல்லாம் சர்வதேச நிறுவனங்களெல்லாம் இங்கே வந்து தங்களுடைய முதலீடுகளை இங்கே போடும்போது அவர்களுடைய ஆதிக்கம் அதிகமாக ஆகிவிடக்கூடாது என்பதிலே நாம் கவனமாக இருக்க வேண்டும். அதிலே அரசு எந்தவொரு சுணக்கமும் காட்டக்கூடாது என்று நான் எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கும்போது Labour-oriented பல்வேறு நபர்களுக்கு பல்வேறு தரப்பினருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய நல்ல வாய்ப்புகள் அதிலே கிடைக்க வேண்டும்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அதிலே பல குடும்பங்கள் வாழ வேண்டும். அத்தகைய நிலைமையில்தான் தொழிற்சாலைகள் இங்கே திறக்கப்பட வேண்டும். புதிதாகத் தொழிற்சாலைகளைத் திறக்கும்போது, இருக்கின்ற தொழிற்சாலை மூடப்படக் கூடாது என்பதிலே அரசு கவனமாக இருக்க வேண்டும். குறிப்பாக என்னுடைய பகுதியிலே இருக்கின்ற அரக்கோணம் எஃகுத் தொழிற்சாலையைப் பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அன்புத் தலைவர், ஐயா மூப்பனார் அவர்கள் அந்தத் தொழிற்சாலையிலே இருக்கின்ற பிரச்சினைகளைப் பற்றிப் பேசவும், ஆராய்வதற்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அழகிரி அவர்களுடைய தலைமையிலே ஒரு குழுவை அனுப்பினார்கள். அந்தக் குழுவுடன் நானும் சென்றேன். அங்கிருக்கின்ற 1,500 குடும்பங்களுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தங்களுடைய வாழ்க்கை நிலையை, தங்களுடைய வாழ்க்கையை இழந்து வேதனையில் உருகுகிறார்கள்.

அதற்குப் பல்வேறு காரணங்கள் சொல்லப்பட்டன. பல்வேறு காரணங்கள் என்றால் அங்கே தொழிற்சாலை நடத்துகின்ற நிர்வாகத்திலே இருக்கும் உயர் அதிகாரிகள் எல்லாம் கச்சாப் பொருள் வாங்குவது முதற்கொண்டு, பிறகு விற்பது வரை பல்வேறு தவறுகள் செய்தார்கள். அதனால்தான் அந்த ஆலை நலிவுற்றது என்று சொன்னார்கள். காரணம் எதுவாக இருந்தாலும் நலிவுற்ற குடும்பங்களை வாழ்விக்கும் வண்ணமாக இந்த அரசு அந்த ஆலையை மீண்டும் நவீனப்படுத்த வேண்டும். அப்படி நவீனப்படுத்துவதன் மூலமாக நிச்சயமாக வாழ்விழந்து இருக்கின்ற அத்தனை குடும்பங்களும் தங்களுடைய வாழ்க்கையைப் பெற வேண்டும் என்பதை நான் இங்கே கூற விரும்புகின்றேன். ஏறக்குறைய 200 கோடி ரூபாய் தேவைப்படும் என்று அவர்கள் சொன்னார்கள். பல்வேறு தரப்பினரும், தொழிற் சங்கத்திலே இருக்கின்ற பல்வேறு தரப்பினரும் சொன்னார்கள். 200 கோடி ரூபாய் என்பது நம்முடைய அரசுக்குப் பெரும் சுமையாக இருந்தாலும்கூட. மத்திய அரசிடமிருந்தோ அல்லது வேறு நிதி நிறுவனங்களிடமிருந்தோ கடனாகப் பெற்று அந்த எஃகுத் தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைக்க வேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பெரிய பரப்பளவிலேயிருக்கின்ற அந்தத் தொழிற்சாலையை நவீனப்படுத்த வேண்டும் என்பதிலே நாம் கவனமாக இருக்க வேண்டும். நவீனப்படுத்துகின்றபோது. பொதுவாக ஒரு தொழிற்சாலையைத் தொடக்கும்போதே, நவீனப்படுத்த வேண்டும் என்பதை தேய்மானம் என்ன என்பதை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

பொதுவாக **Depreciation** என்பது ஒரு பொருளை வாங்கும்போதே கணக்கில் கொள்ள வேண்டும். பொதுவாக ஒரு காரை வாங்குகிறோம் என்றால் அடுத்த ஆண்டு அதனுடைய விலை குறைவாகத்தான் இருக்கும். அந்த வகையிலே நவீனப்படுத்த வேண்டும் என்ற முனைப்பு அதை நாம் தொடக்கும்போதே இருக்க வேண்டும். ஆகவே அதற்கான பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய சிறந்த முயற்சியால மீண்டும் அந்த அரக்கோணம் எஃகுத் தொழிற்சாலையைத் திறப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். பல்வேறு நீண்டதொலைநோக்குத் திட்டங்களெல்லாம் இந்தத் தொழில் துறையிலே தீட்டப்படும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. குறிப்பாக லாரி ஸ்ட்ரைக்கின்போது பல இலட்சக்கணக்கான, பல கோடி ரூபாய் மதிப்புள்ள முட்டைகளெல்லாம் பாழாகிப் போயின என்று சொன்னார்கள். கோழிக்கறியெல்லாம் வீணாகிப் போனது



என்று சொன்னார்கள். அந்த வகையில் அவற்றையெல்லாம் தவிர்க்கும் வண்ணம் இன்றைக்கு முட்டை பதனிடும் தொழிற்சாலையை நாமக்கல் போன்ற பகுதிகளில் ஆரம்பிப்பது நல்ல பலனைத் தரும்.

அதேபோல, வேளாண் தொழிலைப் பொறுத்தவரையில் பல்வேறு கனிகளை, காய்களையெல்லாம் பாதுகாத்து, பதப்படுத்தி ஏற்றுமதி செய்யக்கூடிய வகையிலே பல்வேறு தொழிற்சாலைகளை நாம் தொடங்க முடியும்.

'கோல்ட் ஸ்டோரேஜ்' என்பது மிகப் பெரிய தொழிலாக இன்றைக்கு கடல் சார்ந்த பிராணிகளை, கடல் சார்ந்த வளங்களை அனுப்புவதிலே வெற்றி பெற்றிருக்கிறது. ஆகவே அத்தகைய மிகச் சிறந்த ஒரு நிலையை தமிழகத்திலே வேளாண் பொருட்களுக்கும் நாம் தோற்றுவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-25

சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில், 19 சர்க்கரை ஆலைகள் கூட்டுத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் இருக்கின்றன; 16 தனியார் தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆனால் **Performance-ஐ** பார்க்கும்போது தனியார் தொழிற்சாலைகள் இயங்குகின்ற வண்ணம், நம்முடைய அரசு சார்பிலே இயங்குகின்ற கூட்டுறவுத் தொழிற்சாலைகளும், கூட்டு நிறுவனத் தொழிற்சாலைகளும் இயங்கவில்லை என்பதை நான் கண்கூடாக காண்கின்றேன். அந்தவகையில் இல்லாமல் அவைகளும் தனியார் சர்க்கரை ஆலைகள் இயங்குகின்ற வண்ணம் மிகச் சிறப்பாக இயங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இணைமின் திட்டம். சர்க்கரை ஆலையில் இருக்கின்ற கச்சாப் பொருட்களான, சக்கையைக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற மின்சாரம் பலவகைகளிலே பயன்படுகிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்: மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் இருக்கின்ற எல்லா சர்க்கரை ஆலைகளிலும் அத்தகைய திட்டங்கள் தொடங்கப்பட்டால், நிச்சயமாக இருக்கின்ற மின்சாரப் பற்றாக்குறை தீர்க்கப்படும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

என்னுடைய துறையைப் பற்றி நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய பார்வையெல்லாம், அரசினுடைய பார்வையெல்லாம் இருக்கின்ற பெருந்தொழில்கள், கார் தொழிற்சாலைகள், Computer Software என்று சொல்லப்படுகின்ற அந்த வகையில், இருக்கின்றதேயொழிய மருந்து Pharmaceutical என்ற வகையிலே ஒரு முனைப்பு இல்லை என்பதை நான் இங்கே கூறவேண்டும். இன்றைக்கு மருந்து என்று எடுத்துக்கொண்டால், Drugs என்று எடுத்துக்கொண்டால், இன்றைக்கு மும்பையைப்போல, அகமதாபாத்போல, மராட்டியத்தைப்போல எந்த ஒரு மாநிலமும் செழுமையாக இல்லை. அந்தத் துறை நம்முடைய மாநிலத்திலே சிறந்து விளங்க வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். Bulk drugs என்று சொல்லப்படுகின்ற, முழுமையாக தயாரிக்கப்படுகின்ற அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் இங்கே வரும்போது நிச்சயமாக பல்வேறு வகைகளிலே முழுப் பயனுள்ளதாக இருக்க முடியும் என்று கூற விரும்புகிறேன்.

நம்முடைய அளப்பரிய செல்வங்கள் எல்லாம் வீணாக இருக்கின்றன. குறிப்பாக மூலிகைகளைப் பொறுத்தவரையில், பல்வேறு தொழிற்சாலைகளை, பல்வேறு பெரிய தொழிற்சாலைகளை நாம் தொடங்க முடியும். இங்கே 'சுடுகாட்டு மல்லி' என்று சொல்லப்படுகின்ற, 'நித்திய கல்யாணி' என்று வேறு வகையில் வழங்கப்படுகின்ற அந்த செடியைக் கொண்டு, அந்தச் செடியின் வேரைக் கொண்டு, இலைகளைக் கொண்டு புற்று நோய்க்காக Win Christin, Win Blastin போன்ற மருந்துகளையெல்லாம் வெளிநாட்டில் தயாரிக்கிறார்கள். இங்கே சாதாரணமாக, மிக மலிவாக இருக்கின்ற அந்தத் தாவரங்களைக் கொண்டு மூலிகைகளைக் கொண்டு வெளிநாட்டில் தயாரித்து இங்கே திரும்பவும் அனுப்புகிறார்கள். அதை நாம் பெரும் விலை கொடுத்து வாங்குகிறோம். அத்தகைய தொழிற்சாலைகளை நாம் இங்கே ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் நிறையவே இருக்கின்றன. ஆகவே இதை ஆராய்ந்து அதற்கு ஒரு தனி வல்லுநர் குழுவை அமைத்து அதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல திருநெல்வேலியில் விளையக்கூடிய 'சென்னா' என்று சொல்லப்படுகின்ற 'நிலாவரை' இன்றைக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகி பல்வேறு வகையிலே அன்னியச் செலாவணியை ஈட்டித்





தருகிறது. அந்த மூலிகைகளைக் கொண்டு இங்கே நாம் மருந்துத் தொழிற்சாலையை ஆரம்பித்தோமானால் நிறையப் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும், நிறைய வருவாயும் கிடைக்கும் என்பதை இங்கே நான் I.D.P.L. நிறுவனம் இருக்கிறதோ, அதைப்போல தமிழ்நாட்டில் அரசின் சார்பிலே இத்தகைய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு பல்வேறு தொழிற்சாலைகளை தொடங்குவதற்கு நாம் முனைப்பு காட்ட வேண்டும். அந்த முனைப்பு காட்டும்போது, பல்வேறு வகைகளிலே நம்முடைய மக்களுடைய வளம், குறிப்பாக வேளாண் மக்களுடைய வாழ்வு வளம் பெறும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பொதுவாக இன்றைக்கு வேளாண் துறையிலே மிகுந்த இருள் சூழ்ந்திருக்கிறது. நெல்லுக்கு விலை இல்லை, பல்வேறு வகையிலே நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். அதைப் போக்குகின்ற வண்ணம் ஒரு diversion— ஒரு மாற்றுப் பாதையாக மூலிகைகளைப் பயன்படுத்துகின்ற தொழிற்சாலையை நம்முடைய மாநிலத்திலே ஊக்குவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு உதாரணங்களை நான் சொல்ல முடியும். அமெரிக்க நாட்டிலே இன்றைக்கு செழிப்பாக விற்பனை ஆகின்ற கொடுக்காபுளி என்று தமிழிலே சொல்லப்படுகின்ற Carcinia என்ற மூலிகைக்கு அங்கே மிகப் பெரிய கிராக்கி இருக்கிறது. அத்தகைய மூலிகைகளை எல்லாம் இங்கே பயன்படுத்தி நாமே இங்கே மருந்துகளைத் தயாரித்தோமானால் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும். ஆகவே அந்தத் துறையிலே தனிக் கவனத்தை நாம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக நம்முடைய அரசுத் துறையைப் பொறுத்தவரையில், பல்வேறு வகையிலே இருக்கக்கூடிய அளப்பரிய செல்வங்களாக இருக்கக்கூடிய தனியாருடைய திறமையை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அந்தவகையில்தான் Tata Consultancy போன்ற பல்வேறு நிறுவனங்களுடைய தொழில் வல்லன்மையை நம்முடைய அரசு பயன்படுத்திக்கொள்வதைப் பார்க்கும்போது, மகிழ்ச்சியாக இருக்கிறது.

அதைப்போல பட்டுத் தொழிலைப் பொறுத்தவரையில்கூட, ஒருங்கிணைந்த பட்டுப்புழு வளர்ப்பில் இங்கே இருக்கின்ற Tata Group-ஐ சேர்ந்த Tata Seritech Ltd நிறுவனத்தையும், நல்லி சில்க் நிறுவனத்தையும் சேர்த்து மிகப் பெரிய வகையிலே ஒரு தொழில்

திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஏறக்குறைய 4 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய அந்தத் திட்டம் பாராட்டத்தக்கது. இதை ஏன் சொல்கிறேன் என்றால் தனியார் துறையில் இருக்கின்ற வல்லன்மையை அவர்களுடைய திறமையை நாம் பயன்படுத்திக்கொள்வதில் தவறில்லை.

பிற்பகல் 12-30

மத்திய அரசுகூட. இந்தியன் ஏர்லைன்ஸ், ஏர் இந்தியா போன்ற நிறுவனங்களுக்கு தனியார்களைத்தான், டாட்டா போன்ற நபர்களைத்தான் சேர்மனாக நியமித்தது. அந்த வகையிலே 'நான்-அபிசியல்' என்று சொல்லப்படுகின்ற மிகத் திறமை வாய்ந்த, அந்தத் துறையிலே மிகத் திறமை வாய்ந்த, செறிந்த அறிவு வாய்ந்த பல்வேறு நபர்களைத் தலைவர்களாகக் கொண்டுவந்து, அவற்றை நாம் செம்மைப்படுத்தினால், நிச்சயமாக நம்முடைய அரசு நிறுவனங்கள் இலாபத்தோடு இயங்கக்கூடிய நிறுவனங்களாக மாறும் என்பதிலே ஐயமில்லை என்பதை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இன்று சர்க்கரைத் தொழிலைப் பற்றிய செயல் விளக்கத் திட்டத்தை எல்லாம் தந்திருக்கிறீர்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், நான் மாண்புமிகு முதல்வர் அவர்களை, பல்வேறு நிலைகளிலே, அவரே சொன்னதைப்போல, பல்வேறு வடிவங்களிலே பல்வேறு ரூபங்களிலே அவர்கள் கேட்கிறார்கள் என்று சொன்னார்கள் அந்த வகையிலே-இன்றைக்கு மிகவும் பிற்பட்ட பகுதியாக இருக்கின்ற பள்ளிப்பட்டு பகுதி மீண்டும் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் என்றால், வளர்ந்து இருக்கின்ற பகுதிகள் எல்லாம் வளர்ந்து கொண்டிருக்கின்றன. வளராத பகுதிகளாக இருக்கின்ற என்னுடைய பகுதியைப் போன்ற பகுதிகள் எல்லாம் தேய்ந்து கொண்டு இருக்கின்றன. அந்தத் தேய்வை நிறுத்தி, வளமைக்கு வழிகாட்டுவார்கள் என்று நம்பி, இந்த வாய்ப்புக்கு நன்றி, கூறி உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கியுள்ள கருத்துக்களின் அடிப்படையிலும், தமிழகத்திலே தொழில் வளர்ந்துள்ள நிலையின் அடிப்படையிலும்,



சில கருத்துக்களை இங்கே கூறி, சில முக்கியமான அறிவிப்புக்களையும் தெரிவிக்க இருக்கின்றேன்.

விவாதத்தைத் தொடங்கி வைத்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள், இதுவரையிலே அறிவிக்கப்பட்ட தொழில் துறைத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றினீர்களா என்ற கேள்வி கேட்டு, அந்தப் பட்டியலை நான் இங்கே வெளியிடவேண்டிய அவசியத்தை எனக்கு உருவாக்கி இருக்கின்றார்கள். எனவே, அதுபற்றி என்னுடைய உரையிலே நான் விளக்க இருக்கின்றேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் தொழில் வளர்ச்சிக்கு மின் உற்பத்திதான் அடிப்படையிலே மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறிப்பிட்டு, அதற்காக இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகள் எல்லாம் எவை எவை, தேவைக்கு ஈடுகொடுக்கக்கூடிய அளவுக்கு மின் உற்பத்தியை நாம் செய்திருக்கிறோமா, ஏன் செய்யவில்லை என்ற வினாவினை அவர்களும் எழுப்பியிருக்கின்றார்கள்.

பல உறுப்பினர்கள் அவரவர்களுடைய தொகுதிக்கு, மாவட்டத்திற்குத் தேவையான தொழிற்சாலையைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஒன்றிரண்டை மாத்திரம் நான் இங்கே சொல்வதால், மற்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் புறக்கணித்துவிட்டதாகப் பொருள் அல்ல.

குறிப்பாக நம்முடைய இந்திய தேசிய லீக்கினுடைய தலைவர் திரு. லத்தீப் அவர்கள், சந்தனத் தொழிற்சாலை கேட்டு, பல ஆண்டுகாலமாக சங்கடத்தோடு இங்கே போராடி வருகின்றார்கள். எப்படியாவது அவருடைய ஆசையை நிறைவேற்றுவதற்காகவாவது, நட்டம் வந்தாலும் சரி, இலாபம் வந்தாலும் சரி, பரவாயில்லை என்ற அளவில் அதைத் தொடங்கிட இந்த ஆண்டு முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியினுடைய தலைவர், திரு. சந்தானம் அவர்கள், தன்னுடைய தொகுதியில் தேங்காய் அதிகமாக உற்பத்தியாகிறது; தேங்காய்த் தொழில் அங்கே தொடங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதுபற்றியும் அரசு பரிசீலித்து ஆவன செய்யும் என்று நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய ஒட்டப்பிடாரம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள், நூற்பாலை ஒன்று கேட்டு இருக்கின்றார்கள். அந்தத் தொகுதியிலே நூற்பாலை வைப்பதிலே உள்ள நன்மை, தீமைகள், சாத்தியக்கூறுகள், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள், கிடைக்கக்கூடிய இலாபம், பயன்பெறக்கூடிய வேலைவாய்ப்பு, அந்த வேலைவாய்ப்பைப் பெறக்கூடியவர்களுடைய எண்ணிக்கை, இவற்றை எல்லாம் ஆய்ந்து பார்த்து, நூற்பாலைதான் வேண்டும் என்ற கட்டாயம் இல்லாமல், அந்த வறண்டு இருக்கின்ற பகுதியில் வேலை வாய்ப்பைத் தரக்கூடிய ஏதாவது ஒரு தொழிற்சாலையை உருவாக்க இந்த அரசு முன்வரும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் மணி அவர்கள் இரப்பர் தொழிற்சாலையைப் பற்றி அடிக்கடி இந்த அவையிலே குறிப்பிட்டு, நானும், சென்ற ஆண்டு அதற்கான உறுதி அளித்து, நானே முன்நின்று அந்த முயற்சியிலே ஈடுபடுவேன் என்று உறுதி அளித்ததை, நல்லவேளையாக அவர் அதை இங்கே குறிப்பிட்டுக் காட்டவில்லை. ஆனால் எனக்கு நினைவு இருக்கிறது. நான் அவருக்கு விளக்கமாகச் சொல்ல விரும்புகின்றேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு இரப்பர் தொழிற்பேட்டை தொடங்குவதற்காக `Consultancy' செய்வதற்கு `Rubber Board, Kottayam` என்ற நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. அந்த ஆய்வு செய்வதற்கான உரிமை அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. 3 மாதங்களுக்குள் அந்த இரப்பர் போர்டின் அறிக்கை பெறப்பட்டுவிடும். அதன் பேரில் முதலீடு எவ்வளவு செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, உடனடியாக மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-35

பாட்டாளி மக்கள் கட்சி 1-இன் உறுப்பினர் திரு. மணி அவர்கள் பெண்ணாகரத்திலே ஏதாவது ஒரு தொழில் வளாகம் அமைய வேண்டுமென்று சொன்னார்கள். நான் தமிழகத்திலே அமைந்துள்ள தொழில் வளாகங்கள் எல்லாம் எப்படி இயங்குகின்றன என்று பட்டியலிட்டுக் காட்டிவிட்டு, அதன் தொடர்ச்சியாக அங்கே ஒரு





தொழில் வளாகம் அமைவதற்குச் சாத்தியக்கூறு இருக்கிறதா என்பதையும் ஆராய்ந்து, அதற்கேற்ப அரசு முடிவு எடுக்கும் என்பதை நான் திரு. மணி அவர்களுக்கு இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இறுதியாக உரையாற்றிய திரு. இராமன் அவர்களும், தொடக்கத்திலே உரையாற்றிய திரு. ரங்கநாதன் அவர்களும் அரக்கோணம் ஆலையைப் பற்றி இங்கே சொன்னார்கள். அங்கே தொழிலாளர்கள் வேலையிழந்து வாழ்கிற நிலையை எடுத்துக்காட்டினார்கள். அந்தக் கவலை இந்த அரசுக்கு இல்லாமல் இல்லை. ஆனால் அதைப் பற்றிய சில விவரங்களை இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் அறிந்துகொள்வது நலம் என்று நான் கருதுகின்றேன்.

அரக்கோணத்திலே உள்ள தமிழ்நாடு எஃகு நிறுவனம் 1972ஆம் ஆண்டு பொதுத் துறையாக நிறுவப்பட்ட நிறுவனமாகும். இந்த அரசுதான் அதை நிறுவியது. இந்த நிறுவனம் இரண்டு பகுதிகளாக இயங்கி வந்தது. ஒன்று, இரும்பு உருக்குப் பட்டறை - Steel Melting Shop, மற்றொன்று மீள் உருளை ஆலை - Re-rolling Mill. ஆரம்பக் கட்டங்களில் இலாபகரமாக இயங்கி வந்த இந்த ஆலை தற்போது மிகவும் நலிவடைந்த நிலையை எய்தியது. இதற்கான காரணம் வழக்கொழிந்த மற்றும் செயலிழந்த கருவிகள். இடைக்காலத்திலே இவை எல்லாம் வழக்கொழிந்தும், செயலிழந்தும் ஆகிவிட்ட கருவிகளாக மாறின.

அதுமாத்திரமல்ல, உற்பத்திக்கான மூலப் பொருள்களுடைய விலை அதிகரித்தது. பராமரிப்பு இடைக்காலத்தில் சரியாக இல்லாதது; இன்னொன்று, விற்பனை விலையைவிட உற்பத்தி விலை அதிகமாக ஆனது. இவை எல்லாம் இந்த ஆலையினுடைய அவலத்திற்குக் காரணங்களாக ஆகிவிட்டன. தொடர்ந்து இழப்பிலேயே இந்த ஆலை இயங்கி வந்தது. 1994-95-இல் நட்டம் ரூ.1.88 கோடி, 1995-96-இல் நட்டம் ரூ. 5.91 கோடி, 1996-97-இல் நட்டம் ரூ.11.78 கோடி. 1997-98-க்கான கணக்கு இன்னும் முடிக்கப்படவில்லை. எனவே, 1996-97 வரையிலும் மொத்த நட்டம் ரூ.19.57 கோடி.

தமிழ்நாடு எஃகு நிறுவனத்திலே உற்பத்தியாகும் பொருட்களுக்கு அரசே விலை நிர்ணயம் செய்வதால்—administered price—உற்பத்தி விலைக்கும், விற்கப்படுகிற விலைக்கும் உள்ள வித்தியாசத்தை அரசே மானியமாகவும் வழங்க நேரிடுகின்றது. உற்பத்தி விலைக்கும், விற்கின்ற

விலைக்கும் உள்ள அந்த இடைப்பட்ட தொய்வை நிறைவு செய்ய அரசாங்கமே மானியம் வழங்க நேருகின்றது. இந்த முறையில் இதுவரையிலே வழங்கப்பட்ட ரூ. 53 கோடியைச் சேர்த்தால் மொத்த நட்டம் ரூ.72 கோடியே 57 இலட்சமாகும்.

இரும்பு உருக்குப் பட்டறையின் செயல்பாட்டை 25-6-1997 முதல் ஒரு பகுதியை நிறுத்தி வைத்து ஊழியர்கள் மீள் உருளை ஆலையில், அதாவது முறுக்குதல் - twisting பணி - இன்னொரு பகுதி இருக்கிறதல்லவா? Twisting பணி செய்கின்ற பகுதி. அங்கே பணி செய்யுங்கள் என்று நிர்வாகம் சொன்னபோது ஊழியர்கள் அப்பணியைச் செய்ய மறுத்துவிட்டார்கள்.

பிற்பகல் 12-40

இதன் தொடர் விளைவாக மீள் உருளை ஆலையும் 18-8-1997 முதல் இயங்கவில்லை. இந்த ஆலையைப் புனரமைக்க அமைக்கப்பட்ட வல்லுநர் குழு எஃகு நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்களை விற்று, அதன் கடன்களையெல்லாம் செலுத்திவிடலாம் என்று கருத்து தெரிவித்தது.

அதாவது எஃகு நிறுவனத்தினுடைய சொத்துக்களை விற்றுவிட்டு, இந்த twisting பணியை மாத்திரம் செய்யலாம் என்று ஒரு யோசனை சொன்னது அந்த வல்லுநர் குழு. தமிழ்நாடு எஃகு நிறுவனத்திற்கு வர வேண்டிய வரவு ரூ.5.75 கோடி மாத்திரம்தான் என்றிருந்ததால், இந்நிறுவனம் செலுத்த வேண்டிய கடன் ரூ. 40 கோடியாக இருந்ததால் அதுவும் சரிப்பட்டு வரவில்லை. இந்நிலையில், இந்த ஆலையைச் சீரமைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலன் அளிக்காததாலும், தொழிலாளர்களும் ஒத்துழைக்காததாலும், இந்த ஆலையை மூடிவிடுவது என அரசு முடிவு செய்தது. என்றாலும்கூட, தொழிலாளர்களைத் தவிக்க விட்டுவிடக் கூடாது என்ற காரணத்தினால், எப்படி பி அண்டு சி மில்லில் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டதோ, விருப்பப்படுகிற தொழிலாளர்கள் விலகிக் கொள்ளலாம் என்ற அந்த அடிப்படையிலே பி அண்டு சி மில் தொழிலாளர்களுக்குத் தரப்பட்டதைவிட, அதிகமாக,—அரக்கோணம் உருக்காலைத் தொழிலாளர்களுக்கு தரப்பட்டது. ரூ..1.25 இலட்சம் பிளஸ் கிராஜுவட்டி— இது போன்ற இந்தச் சலுகைகள் எல்லாம் அவர்களுக்கு வழங்கப்பட்டன. அவர்களிலே ஏறத்தாழ 90 சதவிகிதம் பேர் அதற்கு உடன்பட்டு அந்த



விண்ணப்பங்களைப் பெற்று, விண்ணப்பங்களையும் திருப்பி அளித்து. அதற்கு உடன்படுகிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள்.

அதேபோல, இந்தச் சுய விருப்பு ஓய்வுத் திட்டத்தை அங்கே அமல்படுத்த எண்ணியபோது, தொழிலாளர்கள், இங்கே பி அண்டு சி மில்லிலே தந்ததைவிட எங்களுக்கு அதிகமாகத் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அப்படித் தருவதற்கும் நாம் சம்மதித்து இருக்கின்றோம். இங்கே ரூ.1.25 இலட்சம் என்றால் அதைவிட அதிகமாக, அவர்கள் நிறைவு கொள்ளத்தக்க அளவிற்குத் தருவதற்கும் ஒத்துக்கொண்டிருக்கின்றோம். ஆனால், மிக, மிக அதிகமாக அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இது இன்றைக்கு நிறைவேற்றப்பட்டுவிட்டால் அடுத்து மற்ற தொழிற்சாலைகளிலே உள்ள தொழிலாளர்களுக்கு இதே போன்ற ஒரு கோரிக்கை வைக்கின்ற நிலைமை ஏற்படும் என்ற காரணத்தினால் அரசு இதுபற்றி யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தக் காரணங்களினாலேதான் அரக்கோணத்திலே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல 200 கோடி ரூபாய் செலவிலே மீண்டும் அரசே அந்த ஆலையை நடத்த வேண்டும் என்ற நிலை இயலாததாக இருக்கிறது என்பதை நான் மீண்டும் மீண்டும் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. சுந்தரம் அவர்கள் இங்கே பேசும்போது பல குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள். கடைசியாக, தொகுதியைப் பற்றிப் பேச நேரம் இல்லாத காரணத்தினால் அவர் பிடிவாதம் செய்து, நானே விரும்பாத சூழ்நிலையில், வேண்டாமே என்று எண்ணிய சூழ்நிலையில், துணைச் சபாநாயகருக்கு வேறு வழியில்லாமல் அவர் வெளியேற்றப்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அதற்காக நான் வருந்துகின்றேன்; அவர் இருந்து என்னுடைய பதிலைக் கேட்டிருக்க வேண்டும் என்பதற்காக; இருந்தாலும் அவர் கேட்கக் கூடும் என்பதால் நான் சொல்கின்றேன். அவர் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார், காகித ஆலையைப் பற்றிய ஒரு அதிகாரியின்மீது. நான் அப்போதே உறுதி அளித்து இருக்கின்றேன். இப்படி ஒரு குற்றச்சாட்டை இன்றைக்குத் துணைச் சபாநாயகராக வீற்றிருக்கின்ற மாண்புமிகு திரு. பரிதி அவர்கள், அல்லது வேறு யாராவது இந்த அவையிலே இதற்கு முன்பு சொல்லியிருந்தால் என்ன ஆகியிருக்கும் என்று அவர்களுக்கே தெரியும். அப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டை இங்கு இருக்கின்ற

டாக்டர் செல்லக்குமார் ஒருமுறை சொல்லியிருக்கிறார் சென்ற ஆட்சியில். நம்முடைய திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் சொல்லியிருக்கின்றார். நம்முடைய திரு. சி. ஞானசேகரன் எல்லாம் சொல்லி, அவர்கள் எல்லாம் என்ன பாடுபட்டார்கள் என்பது எல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும்.

ஆனால், இங்கே இந்தக் குற்றச்சாட்டு இந்த ஆட்சியிலே சொல்லப்பட்டவுடன், அந்த அதிகாரி யாராக இருந்தாலும், விவரங்களை எழுதிக் கொடுங்கள், நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்று உறுதி அளித்திருக்கின்றேன். அந்தக் குற்றச்சாட்டு உண்மையா, உண்மைக்கு மாறானதா என்பது விசாரணையின்போதுதான் தெரிய வரும். தெரிய வருகின்ற அந்த விளக்கத்தை இந்த அவைக்கு நிச்சயமாக அறிவிப்பேன். ஏனென்றால், அவையிலே நான் ஏற்றுக்கொண்ட ஒன்று. அதனால் இந்த அவைக்கு அறிவிப்பேன்.

அவர் ஒன்று சொன்னார். டிட்கோ பெரும் நஷ்டத்திலே இருக்கிறது என்று சொன்னார். அது தவறான தகவல். டிட்கோவிற்கு 1995-96-ஆம் ஆண்டு ரூ.3.21 கோடி இலாபம். 1996-97-இல் ரூ.2.35 கோடி இலாபம். 1997-98-இல் ரூ. 4.26 கோடி இலாபம். எனவே, திரு. சுந்தரம் சொன்னது மெய் அல்ல. நான் வேறு வார்த்தையைப் பயன்படுத்தக் கூடாது என்பதற்காக மெய் அல்ல என்று சொல்லுகின்றேன். ரூ.4.26 கோடி 1997-98-லே டிட்கோவிற்கு இலாபம் என்ற செய்தியை அவருக்குச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நண்பர் திரு. அழகராஜா அவர்கள் இங்கே பேசும்போதும், திரு. இராமன் அவர்களும் மற்றும் சிலரும் இங்கே பேசும்போதும் கூட்டுறவு மற்றும் பொதுத் துறைச் சர்க்கரை ஆலைகளுக்கு நஷ்டம் ஏன் ஏற்படுகிறது. அதே நேரத்திலே தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு இலாபம் ஏற்படுகிறதே என்று சுட்டிக்காட்டினார்கள்.

பிற்பகல் 12-45

நம்முடைய திரு. சந்தானம் அவர்கள்கூட அவர்களுடைய பேச்சில் சர்க்கரை ஆலைகளில் நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம் நீங்கள் விவசாயிகளுக்கு கரும்புக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்காதுதான் என்று சொன்னார். அதாவது அதிக நஷ்டம் ஏற்பட வேண்டும் என்பதற்காக அவர் அந்தக் கருத்தைச் சொன்னார் என்று நான் கருதுகிறேன். ஆயிரம் ரூபாயைத் தருவதாகத் தேர்தல் நேரத்திலே, தேர்தல் அறிக்கையிலே திராவிட முன்னேற்றக் கழகம் தெரிவித்தது உண்மை.



கரும்பு விவசாயிகளுக்கு ஆயிரம் ரூபாய் தரப்பட வேண்டும் என்பது ஒரு கொள்கை, ஒரு குறிக்கோள். அதை நோக்கி நடைபோடுகிற காரணத்தால்தான் மாநில அரசு, மத்திய அரசு நிர்ணயிக்கின்ற விலையைவிட அதிக விலை தமிழகத்திலே கரும்புக்குத் தந்து வருகின்றது. உதாரணமாக 450 ரூபாய், 470 ரூபாய் அளவிலேதான் மத்திய அரசு விலை நிர்ணயிக்கிறது. இங்கே தமிழக அரசு அதை 650 ரூபாய் என்ற அளவுக்கு, அதாவது பிழி திறனுக்கு ஏற்றவாறு 650 ரூபாய் என்றும், நல்ல பிழி திறன் உள்ள கரும்புக்கு 700 ரூபாயைத் தாண்டுகின்ற அளவுக்கும் இங்கே நாம் விலை கொடுத்து வருகின்றோம். அதனால் இந்த ஆயிரம் ரூபாயை எப்போது தருவீர்கள் என்றால் 2 ஆண்டுதான் முடிந்திருக்கிறது. இன்னும் 3 ஆண்டு இருக்கிறது. இந்த 3 ஆண்டு காலத்திற்குள்ளாக இந்த ஆயிரம் ரூபாயை கரும்பு விலையாகத் தந்து உங்களுடைய பாராட்டுக்களை எல்லாம் பெறுவோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர்கள் கேட்டார்கள்: தனியார் சர்க்கரை ஆலைகளில் இலாபம் ஏற்படும்போது ஏன் கூட்டுறவு, பொதுத் துறைச் சர்க்கரை ஆலைகளிலே இலாபம் இல்லை என்று திரு. அழகராஜா அவர்கள் கேட்டார்கள். அதற்கான சில விளக்கங்களைத் தர விரும்புகிறேன். 1994-95 மற்றும் 1995-96 ஆம் ஆண்டு அகில இந்திய அளவிலும், அதேபோல மாநில அளவிலே தமிழகத்திலும் கூடுதலான கரும்பு உற்பத்தி, கூடுதலான சர்க்கரை உற்பத்தி ஆகியவற்றின் காரணமாக சர்க்கரையினுடைய விற்பனை விலை சர்க்கரையினுடைய உற்பத்திச் செலவைவிடக் குறைந்து போய்விட்டது. அது நஷ்டத்திற்கு முக்கியமான காரணம். 1994-95 மற்றும் 1995-96ஆம் ஆண்டில் தனியார் ஆலைகள் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கூட்டுறவு ஆலைகளிலே பதிவு செய்யப்பட்ட கரும்பைச் சம்பந்தப்பட்ட தனியார் ஆலைகள் அரைவைக்கு எடுத்துக்கொள்ளாததால் அவற்றையும் கூட்டுறவு ஆலைகளிலே அரைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. தனியார் ஆலைக்காக ஒதுக்கப்பட்டு வைக்கப்பட்ட அந்தக் கரும்பை அவர்கள் எடுத்துக்கொள்ளாத காரணத்தால் அவற்றையும் கூட்டுறவு ஆலைகளே ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் கரும்பு விவசாயிகள் பயிரிட்டுவிட்ட கரும்பை எப்படியாவது அரைவை செய்ய வேண்டும் என்ற நோக்கில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைகளில் கரும்பு அரைவைக் காலத்தை நீட்டிக்க வேண்டும் என்ற அரசாங்கத்தினுடைய ஆணையின் அடிப்படையில் நீட்டித்த அரைவையின் காரணமாகவும் நஷ்டம் ஏற்பட்டது என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

தனியார் ஆலைகளைப் பொறுத்தவரை சர்க்கரைத் தொழில் மட்டும் அல்லாமல், அதைச் சார்ந்த எரிசாராயத் தொழிற்சாலை போன்ற இதர தொழில்களின் வருவாயும் தனியார் ஆலைகளுக்கு இருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. இருப்பினும் அரசு எடுத்த பல நடவடிக்கைகளின் காரணமாக அவர்கள் இங்கே வருத்தப்பட்டார்கள்; அதற்கு மாறாக 1996-97-இல் 108 கோடி ரூபாய் நஷ்டமாக இருந்த நிலை மாறி 1997-98-இல் 50 கோடி ரூபாய்தான் நஷ்டம் என்கின்ற அளவிற்கு இழப்பின் அளவு குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். சர்க்கரை விலை, கழிவுப் பாகு விலை ஆகியவை இலாபகரமாக இருக்கும் பட்சத்தில் சர்க்கரை ஆலைகளை மீண்டும் இலாபத்திலே இயக்க வாய்ப்பு உள்ளது என்பதையும் நான் இங்கே திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய திரு. ரங்கநாதன் அவர்கள் தன்னுடைய தொடக்க உரையிலே, அறிவித்ததை எல்லாம் நிறைவேற்றினீர்களா, புதிதாக எத்தனை தொழிற்சாலைகள் என்றெல்லாம் கேட்டார்கள்.

திரு. சுப்பராயன் அவர்கள் அன்னிய முதலீட்டிலே சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று நான் ஓராண்டுக்கு முன்பு சொன்ன அந்த வாசகத்தை நினைவு வைத்துக்கொண்டு திரும்ப இங்கே சொன்னார்கள். அன்னிய முதலீடுகள், அவர்களை நாம் இங்கே ஆதரிப்பது எந்த அளவிலே இருக்க வேண்டும் என்றால், நான் அப்போது சொன்னேன், கழுத்திலே விழும் மாலை என்கின்ற அளவிற்கு இருந்தால் ஏற்றுக்கொள்ளலாம். அதுவே கயிறாக ஆகிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டினார். அதிலே மிகுந்த எச்சரிக்கையோடு இந்த அரசு இருக்கும் என்பதும், இந்த அரசைத் தலைமையேற்று நடத்திச் செல்கின்ற நான், இந்தப் பிரச்சினையிலே எந்த அளவிற்கு முற்போக்கான கொள்கை உடையவன்; இந்த அமைச்சரவையிலே இருக்கின்ற அமைச்சர்கள் எல்லாம் எத்தகைய முற்போக்கான கொள்கை உடையவர்கள்; யாரால் வளர்க்கப்பட்டவர்கள் என்பது திரு. சுப்பராயன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

பிற்பகல் 12-50

எனவே அந்தக் கவலை அவருக்குத் தேவையில்லை. நம்முடைய திரு. இராமன் அவர்கள் கூட ஒரு உதாரணத்தைச் சொன்னார்கள். குதிரையிலே சவாரி செய்யும்போது உடற் பயிற்சி குதிரைக்குத்தான், சவாரி செய்பவனுக்கு அல்ல; அதை மறந்துவிடக்கூடாது; எனவே



அன்னிய முதலீடு செய்கின்ற வெளிநாட்டுக்காரர்களுக்குத்தான் இலாபம் ஏற்படும், நமக்கு ஒன்றும் ஏற்படாது என்ற உவமையைச் சொன்னார்கள். அவர்கள் சரியாகச் சொன்னார்களா அல்லது ஏறிப் பார்த்துச் சொன்னார்களா என்று எனக்குத் தெரியாது. குதிரைக்கும் உடற்பயிற்சி உண்டு. அதே நேரத்தில் ஏறிச் செல்கிறவனுக்கும் ஒரு இலாபம் உண்டு. ஏறிச் செல்கிறவனுக்கு அவன் எண்ணுகின்ற தூரத்திற்குச் செல்லலாம்; குறிப்பிடுகின்ற அந்த இடத்திற்கு அவன் செல்லலாம் குதிரையிலே இருந்தால். குதிரைக்கு உடற்பயிற்சி இருக்கலாம், அது வேறு விஷயம். அதற்காகக் குதிரையிலேயே ஏறாமல் இருந்துவிட முடியாது. குதிரையிலேதான் ஏற வேண்டும் என்ற சூழ்நிலை வரும்போது, கழுதையிலே ஏறாமல், குதிரையிலே ஏறுகின்ற அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நாம் நம்முடைய தொழில் வளத்தை, பொருளாதார வளத்தைப் பெருக்கிக் கொள்கின்ற முயற்சியில் ஈடுபடுவது தவறு அல்ல என்று நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே குற்றச்சாட்டுக்களைச் சொல்லியே இந்தத் தொழில் துறை மானியத்திலே பேச வேண்டும் என்ற முனைப்போடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் வந்து இருந்தார்கள். ஆனால் கடந்த காலத்திலே தமிழகத்தினுடைய பொருளாதாரம், தொழில் வளம் எப்படி எல்லாம் கெட்டது என்பதை நம்முடைய திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே அதிக நேரம் இல்லாத காரணத்தால் ஓரிரு வரிகளில் விளக்கினார்கள்.

நான் ஒன்றை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 1994-ஆம் ஆண்டு 'பிசினஸ் இந்தியா' என்ற ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளிவந்திருந்தது. அந்தக் கட்டுரையிலே வந்த ஒரு பகுதியைப் படித்துக் காட்டுகிறேன்.

Says one Madras-based Industrialist. 'You need not cultivate every Tom, Tick and Harry. If you can please the Presiding Deity, your interests are taken care of. But if you fall out ever, your life is a mess. Jayalalitha's whimsical behaviour has reported to put off several major industrial houses.

Although Tamil Nadu's infrastructure is one of the best, Jayalalitha's behaviour has put off businessmen.'

"சென்னையைச் சார்ந்த தொழில் அதிபர் சொல்லுவது, குப்பன், சுப்பன், முனியனை எல்லாம் நீங்கள் தாஜா செய்ய வேண்டிய

அவசியம் இல்லை. மூல விக்கிரகத்தை, ஜெயலலிதாவை, தாஜா செய்து விட்டாலே போதும், உங்களுடைய நலன்கள் பாதுகாக்கப்படும். ஆனால் அதிலிருந்து தவறி விட்டாலோ உங்களுடைய வாழ்க்கை முழுவதுமேகூட குழப்பம்தான். ஜெயலலிதாவின் வினோதமான குணாம்சங்கள் பல பெரிய தொழிலகங்களை வர விடாமலேயே செய்து விட்டன.

தமிழ்நாடு மிகச் சிறந்த கட்டமைப்பு வசதிகளைப் பெற்றிருந்தும் ஜெயலலிதாவின் செயல்பாடுகள் தொழில் அதிபர்களைத் தடுத்து விட்டது என்று "Business India"-வில் வந்த ஆங்கிலக் கட்டுரை குறிப்பிடுகின்றது.

அது மாத்திரம் அல்ல, நான் சென்ற ஆண்டே சுட்டிக்காட்டியிருக்கிறேன். இந்த அவையிலே. Economic Intelligency Unit என்ற ஒரு Research Unitனுடைய Report-ல் India Uncaged என்ற தலைப்பில், "Seeking opportunities in the South" "தெற்கே உள்ள வாய்ப்புகள்" என்ற தலைப்பில் நவம்பர் 1995-இல் இந்தக் கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

The report says:

If there is any State with a reputation for corruption, it is Tamil Nadu'

ஊழலிலே, Corruption-னிலே சிறந்து விளங்குகிறது என்று சொல்ல வேண்டுமானால் அந்த repeetation உள்ள மாநிலம் எது என்றால் அது தமிழ்நாடுதான் என்று 1995-ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சி நடைபெற்றபோது Economic Intelligency Unit என்ற Research Unit-னுடைய Report குறிப்பிடுகின்றது. இந்த பிரக்ஞாதி பெற்ற அம்மையார்தான் இன்றைக்கு முன்னாள் நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் பற்றியும், முன்னாள் தொழில் அமைச்சர் திரு. முரசொலி மாறன் பற்றியும், ஏதோ அவர்கள் தமிழ்நாட்டையே கெடுத்துக் குட்டிச்சுவர் ஆக்கிவிட்டார்கள் என்று அறிக்கை விட்டிருக்கிறார்கள். நான் அந்த அறிக்கைக்குள்ளே அதிகமாகச் சென்று விளக்கம் அளிக்க விரும்பவில்லை. ஏதோ வரி விதிப்பார்கள், இறக்குமதிக்கு ஒரு வரி, ஏற்றுமதிக்கு ஒரு வரி விதிப்பார்கள் என்றெல்லாம் சொல்லி அதற்கு உடந்தையாக திரு. முரசொலி மாறன் இருந்தார் என்று சொல்லி, இருவரும் சேர்ந்து தமிழ்நாட்டு மக்களை, ஏன் இந்திய நாட்டு மக்களையே வேதனைப்படுத்தி விட்டார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் என்ன வேடிக்கை என்றால் ஊழலின் நிலைக்களமாக, லஞ்ச அவதாரமாக, தமிழ்நாட்டினுடைய தொழில்



வளம் உள்ளிட்ட எல்லா வளங்களையுமே பாழ்படுத்திய ஒருவர், இந்தியாவினுடைய அமைச்சர்களாக இருந்தாலும் கூட, இந்தியாவிலே உள்ள மாநிலங்கள் அனைத்திற்கும் நன்மை செய்ய வேண்டும் என்பதோடு, சொந்த மாநிலம் இந்த மாநிலம் என்கிற எண்ணத்தோடு, தமிழ்நாட்டுக்குப் பல தொழில் வளங்களைத் தருவதற்கு நிதியும் தந்து, உரிமைகளும் தந்த திரு. சிதம்பரத்தையும், முரசொலி மாறனையும் குறை கூறியிருப்பது தமிழ்நாட்டிற்கு இவர்கள் செய்கின்ற பெரும் துரோகம் என்றுதான் நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-55

அவர்கள் - சிதம்பரமும், மாறனும் - ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று பேசவில்லை என்ற குறை அவர்களுக்கு இருக்கலாம். இப்பொழுது அமைச்சர்களாக மத்தியிலே இருப்பவர்களுக்கெல்லாம் - நான் எல்லா அமைச்சர்களையும் சொல்லவில்லை - அ.தி.மு.க. அமைச்சர்களுக்கெல்லாம் - மற்ற அமைச்சர்களெல்லாம் நம்மையும் திட்டுகிறார்கள், அவர்களுடைய வேலையையும் பார்க்கிறார்கள். இப்பொழுது திரு. வாழப்பாடி இராமமூர்த்தி என்று எடுத்துக் கொண்டாலும், திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் என்று எடுத்துக் கொண்டாலும், திரு. தலித் எழில்மலை என்று எடுத்துக் கொண்டாலும், ஏதோ சில நேரங்களில் நம்மைப் பற்றியும் பேசுகிறார்கள், அதேநேரத்தில் அவர்களுடைய இலாகா சம்பந்தமான வேலைகளையும் கவனிக்கிறார்கள். மற்ற அ.தி.மு.க. அமைச்சர்களுக்கு அவர்களுடைய இலாகா வேலையே இங்கேயிருக்கின்ற ஆட்சியைக் கவிழ்ப்பதுதான்; அம்மாவைக் காப்பாற்றுவதுதான். அந்த வேலையை அவர்கள் செய்துகொண்டிருக்கின்றார்கள். அதுபோன்ற வேலையிலே ஈடுபடாமல், நாட்டினுடைய வளத்திற்காக, நாட்டினுடைய மேன்மைக்காக, தொழில் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்கள் என்பதற்காக இரண்டு அமைச்சர்களைக் குறை கூறி, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்ற அம்மையார் அவர்கள், இன்றைக்கும் பார்த்து ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார்கள்.

இவர்களைப் பற்றி நாடு என்ன நினைத்தது, நாட்டிலே உள்ள தொழிலதிபர்கள் என்ன எண்ணினார்கள், தொழில் வளர்ச்சியிலே அக்கறை கொண்ட ஏடுகள் என்ன எண்ணின என்பதற்காகத்தான் இந்த இரண்டையும் நான் இங்கே படித்துக் காட்டினேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், பொதுத் துறை நிறுவனங்களில் நமக்கு மிகுந்த அக்கறை உண்டு என்பதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமேயானால், தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், அரியலூர், ஆலங்குளம் இங்கே நிறுவப்பட்டது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்.

தமிழ்நாடு மேக்னசைட், சேலம், தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் அந்தப் பொதுத் துறை நிறுவனம் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனம், அது அருமை நண்பர் எம்.ஜி.ஆர். காலத்திலே நிறுவப்பட்டது; பொதுத் துறை நிறுவனம்.

சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் நிறுவனம், பொதுத் துறை, தி.மு.க. ஆட்சியில் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு மினரல்ஸ் - கனிம நிறுவனம் (டாமின்), தி.மு.க. ஆட்சியில் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்), திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம், அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்), திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு தொழில் அடிப்படை மேம்பாட்டு நிறுவனம் (டாசிட்), அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலே நிறுவப்பட்டது.



பிறகு நான் அதிலே சில விவரங்களைச் சொல்ல வேண்டுமேயானால், இராணிப்பேட்டையிலே உள்ள 'சிப்காட்' - அந்த வளாகம் 1971 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே உருவாக்கப்பட்டது. நான் பலமுறை இங்கே சொல்லியிருக்கிறேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே இடம் வாங்கப்பட்டு, பிறகு அந்த இடம் தொழில் வளாகம் அமைப்பதற்குத் தகுதி அல்ல என்று அதை விற்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்கான கோப்பு வருகிற நேரத்திலேதான் - 1967-லே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்றது. அண்ணா மறைவிற்குப் பிறகு, நான் பொறுப்பேற்ற பிறகு, நானும், அன்றைய தொழிலமைச்சர் திரு. மாதவனும் அந்த இடத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு, இதை எதற்காக விற்க வேண்டும், இங்கே ஒரு வளாகத்தை ஏற்படுத்தலாம் என்று முடிவு செய்து, இராணிப்பேட்டையிலே சிப்காட் வளாகம் 1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

உங்களுக்கு ஒரு விவரம் சொல்லுகின்றேன். 3 ஆண்டு காலத்தில், 1971-லே ஆரம்பிக்கப்பட்ட 'சிப்காட்' வளாகம், 1973-லேயிருந்து 1976 வரை, மூன்றாண்டு காலத்தில் 168 கோடி ரூபாய் முதலீட்டில் 107 தொழில் நிறுவனங்களை 729 ஏக்கர் பரப்பிலே அங்கே தொடங்கி நடத்திக் கொண்டிருக்கின்றது. அதற்குப் பிறகு 12 ஆண்டு காலம், 1976-லேயிருந்து 1988 வரை அங்கே உருவான தொழில் நிறுவனங்கள் 49 தான். பிறகு 1989-லேயிருந்து 90 மீண்டும் நாங்கள் ஆட்சியிலே இருந்தபோது, 1989, 1990 - இரண்டு ஆண்டுகளில் 25 தொழில் நிறுவனங்கள் 1991 முதல் 1996 வரை 5 ஆண்டு காலத்தில், கடந்த ஜெயலலிதா ஆட்சியில் 30 தொழில் நிறுவனங்கள், 5 வருஷத்திலே. 1996 மே முதல் 1998 மார்ச் வரை 65 தொழில் நிறுவனங்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்.

பிற்பகல் 1-00

1974 ஆம் ஆண்டு 500 கோடி முதலீட்டில் 186 தொழில் நிறுவனங்கள் ஓசூரில் தொடங்கப்பட்டன 1991-96, 5 ஆண்டு காலத்தில் ஜெயலலிதா ஆட்சியில் 35 தொழில் நிறுவனங்கள். 1996-98 இந்த இரண்டு ஆண்டு காலத்தில் 133 நிறுவனங்கள். புதுக்கோட்டை சிப்காட், 1991-96, 5 ஆண்டுகளில் 13 தொழில்கள். 1996-98 இந்த இரண்டு ஆண்டு காலத்தில் 14 தொழில் நிறுவனங்கள். கும்மிடிப்பூண்டியில் 1991-96 வரை 5 ஆண்டுகளில் 65 தொழில் நிறுவனங்கள். 1996-98, இந்த இரண்டு ஆண்டுகளில் கழக ஆட்சியில் 78 தொழில் நிறுவனங்கள்.

நமது அரசு மத்தியிலே உள்ளவர்களிடத்திலே வலியுறுத்தி சில பொதுத் துறை நிறுவனங்களை, தொழில்களைப் பெற வேண்டுமென்று திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நெய்வேலி என்ன ஆயிற்று என்று கேட்டார். நான் கடந்த ஆண்டு தொழில் மானியத்திற்குப் பதில் அளிக்கும்போது குறிப்பிட்டிருக்கின்றேன். ஏறத்தாழ 20 ஆயிரம் கோடி ரூபாய்க்கான பொதுத் துறை நிறுவனங்கள் தமிழக அரசால் இன்றைக்குப் பரிபாலிக்கப்படுகின்றன என்றாலும்கூட மேலும் 16 ஆயிரம் கோடி ரூபாய்க்கான தொழில்கள் பொதுத் துறையிலே வர வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்துகிறோம் என்று குறிப்பிட்டேன். அப்படிக் குறிப்பிட்ட 4, 5 பெரிய தொழில்களில் ஒன்றாக நெய்வேலி சுரங்கம், Third mine cut, அவர்கள் கேட்டார்களே, அந்த Third mine cut-க்கு 6,100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன், தொடர்ந்து வற்புறுத்தியதன் காரணமாக. (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப்போலவே, எம்.ஆர்.எல். எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம். அதனுடைய உற்பத்தித் திறனை அதிகரிக்கும் திட்டம், அதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுவிட்டது. 1,200 கோடி ரூபாய் அதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், எண்ணெய்க் கசடு வருகிறதே. அதிலேயிருந்து மின்சாரம் தயாரிக்கலாம். 250 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்று அந்தத் திட்டத்திற்கு விரைவில் அனுமதி தேவை என்று முறைப்படி நம்முடைய அலுவலர்கள், அதிகாரிகள் எல்லாம் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். அதைப் பற்றிப் பல நேரங்களிலே மத்திய அரசிடம் பேசும்போது எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. தொடர்ந்து வலியுறுத்தி அந்த எண்ணெய்க் கசடு மூலமாக 250 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்கின்ற திட்டத்திற்கு விரைவில் அனுமதி பெறுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இஃதன்னியில், சிப்காட் வாயிலாக உருவாக்கப்படும் புதிய தொழில் வளாகங்கள் என்று எடுத்துக் கொண்டால் — புதியவை என்ன என்று கேட்டார் திரு. ரங்கநாதன். அதற்கு விளக்கம் அளிக்க வேண்டுமேயானால் — 1996-97 ஆம் ஆண்டினுடைய அறிவிப்புகள், 



செய்யாறு தொழில் வளாகம், இருங்காட்டுக்கோட்டை தொழில் வளாகம், கும்மிடிப்பூண்டி இரண்டாம் கட்டத் தொழில் வளாகம்; இதிலே செய்யாறைப் பொறுத்தவரையில் 600 ஏக்கர் நிலப்பரப்பில் செய்யாறு தொழில் வளாகத்தின் முதல் கட்டம் நிறைவேற்றப்படத் திட்டமிடப்பட்டது. 260 ஏக்கர் நிலம் அதற்காகக் கையகப்படுத்தப்பட்டுள்ளது. செய்யாறு தொழில் வளாகத்திற்குரிய முதன்மைத் திட்டம், மாஸ்டர் பிளான் தயாரிக்க, ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார். பாலாற்றுப் படுகையிலிருந்து செய்யாறு தொழில் வளாகத்திற்குத் தண்ணீர் கொணருவது குறித்து ஆராயுமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இருங்காட்டுக்கோட்டை தொழில் வளாகம்—1,829 ஏக்கர் நிலப்பரப்பில் இருங்காட்டுக்கோட்டைத் தொழில் வளாகம் அமைக்கத் திட்டமிடப்பட்டது. 1,314 ஏக்கர் நிலம் அதற்காகக் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 700 ஏக்கர் நிலம் தொழில் முகவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதிலேதான் யுண்டாய் மோட்டார் கார் தொழிற்சாலைக்கு மாத்திரம் 532 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகின்றேன். இருங்காட்டுக்கோட்டையிலே சிப்காட் மேம்படுத்தியுள்ள உள்கட்டமைப்பு வசதிகள், 10 கிலோ மீட்டர் நீளத்திற்குச் சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மெயின் சாலைப் பணிகள் 1998 ஜுன் மாதத்திற்குள் முடிவடைய இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கும்மிடிப்பூண்டி இரண்டாம் கட்டத் தொழில் வளாகத்தில் ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழில் பூங்கா அமைக்க 224 ஏக்கர் நிலப்பரப்பு; அதிலே 160 ஏக்கர் நிலம் ஒதுக்கீட்டிற்குத் தயாராக ஆக்கப்பட்டுள்ளது. 15 ஏக்கர் நிலம் வாசனைத் திரவியப் பொருள்களை உற்பத்தி செய்யும் 'புஷ்போக் ஆலன்' கம்பெனிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சாலைப் பணிகள் ஜுன் மாதத்திற்குள்ளே முடிவடையவிருக்கின்றன.

அடுத்து, 1997-98 ஆம் ஆண்டுக்கான அறிவிப்புகளும் நிறைவேற்றமும். 1997-98 ஆம் ஆண்டு திருப்பெரும்புதூர், நெமிலி, வடமங்கலம் ஆகிய இடங்களில் தொழில் வளாகங்கள் உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அவற்றின் முன்னேற்ற விவரங்களைச் சொல்ல வேண்டுமேயானால் திருப்பெரும்புதூர் சிப்காட் தொழில் வளாகம்

2,469 ஏக்கரில் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 292 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதில், 125 ஏக்கர் நிலம் செயின் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டுள்ளது. வளாகம் உருவாக்கத்திற்கு ஆலோசகர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுவிட்டன. சாலை முதலிய உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட விலைப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. மண், தண்ணீர் குறித்த ஆரம்ப நிலை ஆய்வு முதலியன மேற்கொள்ளப்பட்டுள்ளன. நெமிலி சாட்டிலைட் நகரையும் 2,429 ஏக்கர் பரப்பிலும், வடமங்கலம் தொழில் பூங்கா 1,408 ஏக்கர் பரப்பிலும் — தொழில் வளாகங்கள் — அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றுக்கான நில எடுப்புப் பணிகளும் நடைபெற்று வருகின்றன என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிற்பகல் 1-05

மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது நம்முடைய மாநிலத்தினுடைய நிலையை நாம் சற்றுக் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். 1991 ஜூலை முதல் 1996 ஏப்ரல் வரை தமிழக தொழில் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்த முதலீடு 90,609 கோடி ரூபாய் ஆகும். அதாவது 60 மாதத்திலே 90,609 கோடி ரூபாய். அப்போது இம்மாநிலம் அகில இந்திய அளவில் ஐந்தாவது இடத்தைப் பெற்றிருந்தது. கழக ஆட்சியில், 1998 சனவரி வரை, 20 மாதங்களில் இம்மாநிலம் 33,560 கோடி ரூபாயை முதலீடாகப் பெற்று, அது நாட்டின் மொத்த மூலதனத்தில் 17.6 சதவீதம் என்ற நிலையில், மூன்றாவது இடத்தை அடைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

1991-92-இல் 6,781 கோடி ரூபாயாக இருந்த தமிழ்நாட்டின் ஏற்றுமதி 1996-97-இல் 18,500 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது 1997-98-இல் 20,000 கோடி ரூபாயைத் தாண்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவின் ஏற்றுமதியிலே தமிழகம் 17 சதவீதத்தை அடக்கியதாக இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

'பி.டி. கேலம்' 1997 டிசம்பரில் வெளியிட்ட முதுநிலை வணிக நிர்வாக ஆய்வு அறிக்கையில் முதலீட்டாளர்களை மிகவும் கவருவதில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது எனக்



குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும்கூட, Business Today 'the best States to invest in' என்ற இந்தப் பத்திரிகையில், முதல் இடத்திலே திரு. மனோகர் ஜோஷி அவர்களுடைய படத்தைப் போட்டு மகாராஷ்டிரா மாநிலத்திற்கு முதல் இடமும், இரண்டாவது இடம் குஜராத் - அதிலே திரு. திலீப் பரீக் அவர்களுடைய படத்தைப் போட்டு இரண்டாவது இடமும், தமிழ்நாடு என்று என்னுடைய படத்தைப் போட்டு, தமிழ்நாடு மூன்றாம் இடம் என்றும் (மேசையைத் தட்டும் ஒலி) வெளியிட்டு இருப்பதை உங்களுக்கு எல்லாம் நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறேன். அதிலே ஒன்றைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த இடங்களிலே ஒரு சிறு தகராறு. என்னவென்றால், மகாராஷ்டிரா, Objective-லும் 1, Perception-லும் 1, Rank-லும் 1; இந்தப் புள்ளிவிவரம் காட்டுகிறது. குஜராத் Objective-லே 3, Perception-லே 2, Rank-லே 2; தமிழ்நாடு Objective-லே 2, Perception-லே 3, Rank-லே 3; இதற்கு என்ன விளக்கம் என்றால் Objective என்றால், உண்மை, உண்மையான நிலை. Perception என்றால் பார்வையிலே பார்க்கும்போது உள்ள நிலை. நாம் உண்மையிலேயே இரண்டாவது இடத்திற்கு வந்திருக்கிறோமாம். ஆனால், வெளி உலகத்திற்கு நாம் மூன்றாவது இடமாகத் தெரிகிறோமாம். காரணம், அந்த அளவிற்கு விளம்பரம் இதுவரையிலும் செய்துகொள்ளாமல் இருந்ததினாலே நாம் மூன்றாவது இடத்திலே இருக்கிறோமாம். (மேசையைத் தட்டும் ஒலி) இதையும் அது குறிப்பிட்டுக் காட்டுகிறது.

மகாராஷ்டிரா Objective-ல் 1, Perception-ல் 1, Rank-ல் 1; குஜராத் Objective-ல் 3, Perception-ல் 2, Rank-ல் 2; தமிழ்நாடு Objective-ல் 2, Perception-ல் 3, Rank-ல் 3; ஆனால், உண்மையிலேயே நாம் இரண்டாவது இடத்திலே இருக்கிறோம். முதல் இடத்திற்குச் செல்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என்று நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

பிற்பகல் 1-10

அயல்நாட்டினுடைய நேரடி முதலீடுகளின் காரணமாக இருக்கக்கூடிய சாதக பாதகங்கள் இவைகளைப்பற்றி நம்முடைய கிருஷ்ணசாமி அவர்கள்கூட இங்கே பேசினார்கள். அதிகமாக நாம் அவர்களிடத்திலே பலியாகி விடக்கூடாது என்பது போன்ற

கருத்துக்களையெல்லாம் இங்கே எடுத்துரைத்தார். அணுகுண்டு சோதனை பற்றி எடுத்துரைத்தார். அயல்நாடுகளெல்லாம் எந்த அளவுக்கு இந்தியாவை இன்றைக்கு எச்சரித்துக் கொண்டிருக்கின்றன என்பதைப் பற்றியும் எடுத்துச் சொன்னார். ஆனால் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, 1996 ஆம் ஆண்டு மே மாதம் முதல் 1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை உத்தேசிக்கப்பட்டுள்ள மற்றும் செயலாக்கத்திலே உள்ள அயல் நாட்டு நேரடி முதலீடுகளின் அளவு மொத்தம் 43,515 கோடி ரூபாய் ஆகும். இதில் காலகட்டத்திலே கணக்கு முடிக்கப்பட்டவை, கைவிடப்பட்ட முதலீடு இவைகளின் அளவுகளையெல்லாம் கழித்தால், 8,522 கோடி ரூபாய் கழிக்கப்பட்டால் 1998 ஆம் ஆண்டு ஜனவரி வரை 34,993 கோடி ரூபாய். அது அப்ரூவ்டு முதலீடு. இதற்கான ஒப்புதல் கிடைக்கப் பெற்றிருக்கிறது. இந்த 34,993 கோடி ரூபாய்க்குள் பல தொழில்கள் இங்கே முதலீடு செய்வதற்கும், வருவதற்குமான வாய்ப்புக் கூறுகள் நிறைய இருக்கின்றன. அப்படி வருகின்ற தொழில்கள் என்னென்ன என்று பார்த்தால், அடிப்படை இரசாயனத் தொழில் 16,329 கோடி ரூபாய், பெட்ரோலியப் பொருள் 2,264 கோடி ரூபாய், உரம் 1,125 கோடி ரூபாய், உலோகம் அல்லாத கனிமப் பொருள் 936 கோடி ரூபாய், தொழில் இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் தொழில் 913 கோடி ரூபாய், மின்னணுத் தொழில் 242 கோடி ரூபாய், போக்குவரத்துச் சாதனத் தொழில் 1,157 கோடி ரூபாய், கனிமத் தொழில் 412 கோடி ரூபாய், மின் உற்பத்தித் திட்டம் 18,392 கோடி ரூபாய், இரயில்வே தொழில்களில் 765 கோடி ரூபாய், சாலைகள் மற்றும் பாலங்கள் 480 கோடி ரூபாய், தொலைத் தொடர்புத் தொழில்கள் 100 கோடி ரூபாய். அயல்நாட்டு நேரடி முதலீட்டால் ஏற்படக்கூடிய சமூக விளைவுகள் என்னவென்று பார்த்தால், இந்தியப் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டதன் விளைவாக, இந்தியாவில் அயல்நாட்டு நேரடி முதலீடு ஏறுமுகமாக உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. அயல்நாட்டு நேரடி முதலீடு உலகின் பல்வேறு இடங்களிலிருந்தும் நவீன தொழில் நுட்பத்தை மாநிலத்திற்குக் கொண்டுவர உதவுகிறது என்பதை யாரும் மறுக்க இயலாது. அந்த நுட்பம்கூடத் தேவையில்லை என்கின்ற அளவிற்கு இன்றைக்கு அரசியல் வட்டாரத்திலே சில பகுதிகளிலே பேசப்பட்டாலும்கூட, அந்தத் தொழில்நுட்பம் இன்றைய விஞ்ஞான உலகத்தில், வளரும் விஞ்ஞான உலகத்தில் எவ்வளவு தேவை என்பதை அதிலும் இந்தியா போன்ற வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்ற ஒரு நாட்டு மக்கள், அதிகம்



பேர் அடங்கிய நாட்டுக்கு எவ்வளவு தேவை என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

மாநிலத்தினுடைய சொந்த நிதி ஆதாரத்திற்குக் கூடுதலாக கணிசமான வெளிநாட்டு நிதியாதாரங்களை இந்த அயல்நாட்டு மூலதனம் மூலமாகக் கொண்டுவர முடிகிறது. வெளிநாட்டின் சிறந்த வர்க்கத்தையும், நிர்வாகத் திறமையையும் கொண்டு வெற்றிகரமாக இயங்கி வரும் நிறுவனங்கள் தங்களுடைய தொழிலைத் தமிழ்நாட்டில் விரிவாக்கம் செய்ய முடிகிறது. பல்வேறு நிலையிலே உள்ள நம்முடைய பொறியாளர்கள், இளநிலை மேற்பார்வையாளர்கள், பணியாளர்கள் போன்றவர்களின் தொழில் திறமைகள் மற்றும் தொழில் அறிவுத் திறமைகள் கணிசமாக உயர்வடைகின்றன. அவர்களது மதிப்பும் வேலைவாய்ப்பும் அதிகரிக்கின்றன. மாநிலப் பொருளாதாரத்தில் ஒட்டுமொத்தமான உற்பத்தித் திறன் அதிகரிப்பதோடு, ஏராளமான புதிய வேலைவாய்ப்புகள் உருவாகவும் வழிகோலப்படுகிறது.

வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பணியாளர்கள் மாநிலத்திற்கு வருவதன் காரணமாக, அவர்களுடைய உறைவிடம், உணவு, பொழுதுபோக்கு முதலிய தேவைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. இன்றைய தேதியில் சென்னையில் மாத்திரம் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் தங்கியிருக்கின்றார்கள். இத்தாலி, மெக்சிகோ, ஜப்பான், தாய்லாந்து, மற்றும் கொரியா உணவு வகைகளைத் தயாரிக்கும் பலதரப்பட்ட உணவகங்கள் சென்னையிலே தொடங்கப்பட்டு, நல்ல வர்த்தகங்கள் புரிந்து வருகின்றன. வெளிநாட்டினருடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய மிகச் சிறந்த உறைவிடங்கள் தோன்றியுள்ளன. பன்னாட்டுப் பாடத் திட்டங்களை அளிக்கும் புதிய பள்ளிகளும் தொடங்கப்பட்டுள்ளன. மாநிலத்திலே வசிக்கும் வெளிநாட்டினருடைய பயண விருப்பம் காரணமாக சுற்றுலாத் துறையும் பயனடைகிறது. சுற்றுலா விரிவடைந்தால், அதன்மூலமாக அன்னியச் செலாவணி அதிகமாக ஒரு நாட்டுக்குக் கிட்டும் என்பது அனைவரும் அறிந்த பொருளாதார இலக்கணம். வெளிநாட்டு நேரடி முதலீட்டால் அதிக அளவில் வேலைவாய்ப்புகள், அதிக உற்பத்தி, பொருளாதாரம், உள்ளூர் பணியாளர்களுடைய திறமை உயர்வு, தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக ஆதாரங்கள் மேம்பாடு ஆகியவை பெருகிட வாய்ப்பு ஆகிறது. இவ்வளவு நிலங்களையும் சொல்கின்ற காரணத்தால் சிக்கிக் கொள்வீர்களா என்று திரு. சுப்பராயன் கேட்கத் தேவையில்லை. சிக்கிக் கொள்ளாமலேதான்

இவற்றையெல்லாம், இந்தப் பயன்களையெல்லாம் நாம் அனுபவிக்க இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

மின் திட்டங்களைப் பற்றி இங்கே திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். மற்றவர்களும் அதைப்பற்றிப் பேசியிருக்கின்றார்கள். 900 கோடி ரூபாய்த் திட்ட மதிப்பீட்டில் சேலம் உருக்காலையிலே அமைய இருக்கின்ற ஒருங்கிணைந்த எஃகு உற்பத்தித் திட்டத்திற்கு மத்திய எஃகு அமைச்சகத்தினுடைய அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு வருகின்றோம்.

குறுகிய காலத்திலே மின்சார உற்பத்தி செய்யும் 20 மின் திட்டங்களைத் தமிழகத்திலே அமைக்கத் திட்டமிடப்பட்டது இந்த அவையிலே ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட செய்திதான். இவற்றிலே தூத்துக்குடியிலே இரண்டு திட்டங்கள், எண்ணூர், கள்ளிக்குடி, ஓசூர் ஆகிய இடங்களில் மூன்று திட்டங்கள், ஆக மொத்தம் ஐந்து மின் திட்டங்களுக்கு எரிவாயு இணைப்புகள் வழங்கிட மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த ஐந்து மின் திட்டங்களின் மூலம் மொத்தம் 480 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். ஏறத்தாழ 2,300 மெகாவாட் திறனுள்ள மின்சாரத்தை உற்பத்தி செய்யும். எஞ்சிய 15 திட்டங்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்கப்படுவதில் மத்திய அரசின் அனுமதி தாமதமாகிக் கொண்டே வருகிறது. இப்பொழுது மாத்திரம் அல்ல, கடந்த ஐக்கிய முன்னணி ஆட்சியிலேகூட பலமுறை வலியுறுத்தியும், பிரதமரிடத்திலே நான் சென்று வலியுறுத்தியும், மின்சாரத் துறை அமைச்சர் சென்று வலியுறுத்தியும், அங்கிருந்த நம்முடைய அமைச்சர்கள் எல்லாம் வலியுறுத்தியும்கூட, இந்த ஐந்து திட்டங்களுக்கு மேல் அங்கிருந்து நமக்கு அனுமதி கிடைக்கவில்லை. மற்ற 15 திட்டங்களுக்காக நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம். அந்த 15 திட்டங்கள், துவாக்குடியிலே பிரிஸ்டன் ஸ்ட்ரக்சர் கம்பெனி, இந்தத் திட்டம் நிறைவேறினால் 102 மெகாவாட்ஸ். இராணிப்பேட்டையில் எம்.கோான் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், திட்டம் நிறைவேறினால் 242 மெகாவாட்ஸ், மணலியில் பி.டி. விஷ்மக்கார்ய பிரசட்யா, திட்டம் நிறைவேறினால் 138 மெகாவாட்ஸ், சிறுமுகையில் டி.சி.எம். ஸ்ரீராம் கன்சாலிடெட் லிமிடெட், திட்டம் நிறைவேறினால் 103 மெகாவாட்ஸ். வாடிப்பட்டியில் பாலாஜி பவர் கார்ப்பரேஷன் லிமிடெட், திட்டம் நிறைவேறினால் 118 மெகாவாட்ஸ், திருப்பெரும்புதூர்-1-இல் சாம்சங் கார்ப்பரேஷன், திட்டம்



நிறைவேறினால் 109 மெகாவாட்ஸ், திருப்பெரும்புதூர்-2-இல் சாம்சங் கார்ப்பரேஷன், திட்டம் நிறைவேறினால் 109 மெகாவாட்ஸ், கும்மிடிப்பூண்டியில் டி.என்.பி. என்ஜினியரிங் அண்டு கன்சல்டன்சி எஸ்.டி.என்.பி.எச்.டி., திட்டம் நிறைவேறினால் 162 மெகாவாட்ஸ். செங்கல்பட்டில் டி.எல்.எப். பவர் லிமிடெட், திட்டம் நிறைவேறினால் 53 மெகாவாட்ஸ், கும்மிடிப்பூண்டி-2-இல் அசோக் லேலண்டு, திட்டம் நிறைவேறினால் 225 மெகாவாட்ஸ், செங்கல்பட்டு-1-இல் அசோக் லேலண்டு, திட்டம் நிறைவேறினால் 231 மெகாவாட்ஸ், பெருந்துறையில் டி.என்.பி. என்ஜினியரிங் அண்டு கன்சல்டன்சி எஸ்.டி.என். பி.எச்.டி., திட்டம் நிறைவேறினால் 154 மெகாவாட்ஸ், கடலூரில் அசோக் லேலண்டு, திட்டம் நிறைவேறினால் 225 மெகாவாட்ஸ். அரக்கோணத்தில் ஸ்ரீராயலிசிம்தா ஐ டிரான்ஸ் ஐப்போ லிமிடெட், திட்டம் நிறைவேறினால் 118 மெகாவாட்ஸ், பள்ளிப்பாளையத்தில் அசோக் லேலண்டு, திட்டம் நிறைவேறினால் 219 மெகாவாட்ஸ், ஆக, 15 மின் திட்டங்களிலும் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ள மின்சாரம் 2,307 மெகாவாட்ஸ் ஆகும். இந்தத் திட்டங்களுக்கு மத்திய அரசினுடைய ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகின்றது. தொடர்ந்து வலியுறுத்துவோம். இதுவரையிலும் ஐந்து திட்டங்களுக்கான அனுமதியைப் பெற்றிருக்கிறோம். அந்தப் பணியை முடுக்கிவிட்டு, விரைவிலே முடிப்போம். இந்தத் திட்டங்களுக்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ள, நம்முடைய அமைச்சர், சமீபத்திலேகூட டெல்லிக்கு சென்று மின்சாரத் துறை அமைச்சர், மாண்புமிகு குமாரமங்கலம் அவர்களைச் சந்தித்துப் பேசி வந்திருக்கின்றார். விரைவிலே இந்தத் திட்டங்களுக்கு எல்லாம் மத்திய அரசு அனுமதியைத் தரவேண்டுமென்று இந்த அவையிலே உங்கள் அனைவரின் மூலமாகவும் நான் மத்திய அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுக்கு, கட்சி மாறுபாடுகளுக்கு இடமில்லாமல் பணியாற்றுவேன் என்று எனக்கு குமாரமங்கலம் அவர்கள் எழுதிய கடிதத்திலேகூட குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதை அவர் நிறைவேற்றுவார் என்று நான் நம்புகின்றேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் சிப்காட் நிறுவனம் செய்துகொண்ட தொழில் ஒப்பந்தங்களை மாத்திரம் இங்கே வரிசைப்படுத்த விரும்புகின்றேன். என்னென்ன தொழில் என்ற பட்டியலை திரு. ரங்கநாதன் அவர்கள் கேட்டார்கள். ஆகவே, அவற்றை மாத்திரம் நினைவுபடுத்துகின்றேன்.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மே 14

யூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட், கொரியா நாட்டைச் சேர்ந்த யூண்டாய் மோட்டார் நிறுவனம் கார் தொழிற்சாலை ஒன்றை நிறுவ, 18-7-1996 அன்று சிப்காட் நிறுவனத்தோடு ஒப்பந்தம் செய்து கொண்டது. 18-7-1996-லே ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தாரா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. திரு. சுந்தரம்தான் சொல்ல வேண்டும். என்னவோ, "நாங்கள்தான் கொண்டு வந்தோம்; நாங்கள் சமைத்து வைத்தோம்; நீங்கள் சாப்பிட்டு விட்டீர்கள்" என்று சொன்னார்கள். யாரோ சமைத்ததை யாரோ சாப்பிடுகின்ற நிலை இன்றைக்கு இல்லை. 18-7-1996 அன்று சிப்காட் நிறுவனத்தோடு ஒப்பந்தம் செய்து கொண்டு, யூண்டாய் மோட்டார் நிறுவனம் கார் தொழிற்சாலையை நிறுவியது.

பிற்பகல் 1-20

இருங்காட்டுக்கோட்டை 'சிப்காட்' வளாகத்தில், 543 ஏக்கர் பரப்பில் அமையும் 'யூண்டாய் கார் தொழிற்சாலை', 2,450 கோடி ரூபாய் மூலதனத்தோடு அமைக்கப்படுகிறது. தொழிற்சாலை அமைக்கும் பணி முடிவடைந்து, 1998 ஜூன் திங்களில் சோதனை அளவில், கார் உற்பத்தி தொடங்கப்பட இருக்கிறது. அக்டோபர் திங்களில், வணிக முறையிலான கார் உற்பத்தி தொடங்க இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், ஏறத்தாழ 2,500 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 20 ஆயிரம் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

Integrated Iron and Steel Plant தொழிற்சாலை. இத்திட்டத்தை, 'டிட்கோ' நிறுவனம், அமெரிக்காவைச் சேர்ந்த Rynex International என்ற நிறுவனத்தோடு இணைந்து, இணைத் துறையில் சுமார் 3,300 கோடி ரூபாய் செலவில், சேலத்தில் நிறுவ உள்ளது. தொழில் முனைவோருக்கான ஒப்பந்தம், 3-3-1997 அன்று கையெழுத்தானது. அதுவும் எங்கள் ஆட்சியில்தான். திரு. சுந்தரம் சொன்னதுமாதிரி, அந்த ஆட்சியில் அல்ல. இந்தத் திட்டத்திற்கான ஆய்வு அறிக்கையை 'Mega' நிறுவனம் தயாரித்துள்ளது. இந்தத் தொழிற்சாலை மூலம் 1,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், சுமார் 3,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

Fenner Refineries Limited தொழிற்சாலை. ஹைதராபாத்திலுள்ள நாகார்ஜுனா குரூப் நிறுவனத்தினை சக தொழில் முனைவோர்களாகக் கொண்டு, 6 மில்லியன் டன் எண்ணெய் சுத்திகரிப்புத் திட்டம்



1998 மே 14] [கலைஞர் மு. கருணாநிதி]

ஒன்றை, இணைத் துறையிலே 'டிட்கோ' நிறுவி வருகிறது. தொழில் முனைவோர்களுக்கான ஒப்பந்தம், 9-1-1998 அன்று கையெழுத்தாகியுள்ளது. இத்தொழில் பிரிவு, கடலூர் மாவட்டம் திரிச்சுவபுரம் கிராமத்தில் நிறுவப்பட்டு வருகிறது. முதற் கட்டத்திற்குத் தேவையான நிலத்தை வாங்கும் பணி, முடிவடையும் தருவாயில் உள்ளது. இத்திட்டம் ஏறத்தாழ 3,000 கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவப்படுகின்ற ஒரு திட்டமாகும். இத்திட்டத்திற்குத் தேவையான கட்டட வேலை, வரும் ஜூன் மாதம் தொடங்கும்.

உயர்தர தொழில்நுட்பத் தொழில் பூங்கா — Hi-Tech Technology Industrial Park (TNFAC) மற்றும் Axes Technologies ஆகிய அமெரிக்க நிறுவனங்களோடு, 'டிட்கோ' இணைந்து, தனியார் ஏற்றுமதி வளாகப் பூங்கா ஒன்றை, நெல்லை மாவட்டம் நாங்குனேரி தாலுகாவில் நிறுவி வருகிறது. 800 கோடி ரூபாய் முதலீட்டில் இப்பூங்காவிற்குத் தேவையான நிலம், அடிப்படை வசதிகள் உருவாக்கப்படும். இப்பூங்காவில் அமையவிருக்கும் தொழில் நிறுவனங்களின் மொத்த முதலீடு, சுமார் 7 ஆயிரம் கோடி ரூபாய். இத்திட்டத்தின் தொழில் முனைவோருக்கான ஒப்பந்தம் 24-2-1998 அன்று கையெழுத்தாகியுள்ளது. சுமார் 2,500 ஏக்கர் நிலம், ஜூன் மாதத்தில், ஆர்ஜிதம் செய்வது முடிவடையும். 5 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும், 10 ஆயிரம் பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

ஆட்டோ உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் Mahindra Industries Park Limited தொழில் வளாகம். இத்தொழில் வளாகத்தை, 'Mahindra Reality and Infrastructural Development Limited' என்ற நிறுவனம் மற்றும் ILFS நிறுவனம் ஆகியோருடன் இணைந்து உருவாக்க, 'டிட்கோ' நிறுவனம், 12-6-1997 அன்று ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

இத்தொழில் வளாகம், சென்னையை அடுத்த மறைமலைநகரில் 1,200 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படுகிறது. இத்தொழில் வளாகத்தில், மோட்டார் வாகனங்களுக்குத் தேவையான உதிரிப் பாகங்களைத் தயாரிக்கும் பல்வேறு தொழிற்சாலைகள் தொடங்கப்படவுள்ளன. 3,000 பேருக்கு நேரடியாகவும், 5,000 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும். நடப்பாண்டு இறுதியில், இவ்வளாகத்தின் பணிகள் முடிவடையும்.

'செயின்ட் கோபைன்' கண்ணாடித் தொழிற்சாலை, பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த 'செயின்ட் கோபைன்' கண்ணாடித்

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மே 14

தொழிற்சாலையோடு, இத்தொழிற்சாலையை அமைப்பதற்கான ஒப்பந்தம், 6-1-1997 அன்று நடைபெற்றது. 450 கோடி ரூபாய் முதலீட்டில் அமையும் இந்தக் கண்ணாடித் தொழிற்சாலை திருப்பெரும்புதூர் தொழில் வளர்ச்சிப் பூங்காவில் அமைகிறது. 1999 ஆம் ஆண்டு இறுதியில் இது உற்பத்தியைத் தொடங்கும்.

பி.வி.சி. ரெக்ஸின் தொழிற்சாலை. டென்மார்க் நாட்டைச் சேர்ந்த 'நார்த் சைட்டோ' நிறுவனத்தினரின் பி.வி.சி. தொழிற்சாலை திட்டத்தை, எண்ணூர் பெட்ரோலியம் தொழில் வளாகத்தில், இணைத் துறையில் அமைக்கும் திட்டத்திற்கான ஆய்வறிக்கை 'டிட்கோ'-விடம் வழங்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் டன் எடையுள்ள பி.வி.சி. பொருள்கள் தயாரிக்கத் தேவைப்படும் மூலப் பொருள்களை, இத்தொழிற்சாலை உற்பத்தி செய்யும். இத்திட்டத்தின் முதலீடு 350 கோடி ரூபாய். இத்திட்டத்திற்கான ஒத்துழைப்பு ஒப்பந்தம் 10-3-1997 அன்று நடைபெற்றுள்ளது.

பிஸ்-பினால்-ஏ இரசாயனத் தொழிற்சாலை. புது டில்லியிலே உள்ள மோடி கார்ப் நிறுவனம், 'டிட்கோ'-வுடன் சேர்ந்து ஆண்டுக்கு 40 ஆயிரம் டன் பிஸ்-பினால்-ஏ என்ற இரசாயனத்தை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்றை கடலூர் மாவட்டத்தில் தொடங்கவுள்ளது. இந்தத் திட்டத்திற்கான தொழில் முனைவோருக்கான ஒப்பந்தம் 16-7-1997 அன்று கையெழுத்தாகியுள்ளது. 250 கோடி ரூபாய் முதலீட்டில் 300 நபர்களுக்கு நேரடியாகவும், 500 பேர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் இத்தொழிற்சாலை அமையும். ஜப்பானிய தொழில்நுட்பத்தோடு இணைத் துறையில் தொடங்கப்படவுள்ள இந்தத் தொழிற்சாலை இரண்டு ஆண்டுகளில் உற்பத்தியைத் தொடங்கும்.

பிற்பகல் 1-25

தமிழ்நாடு சாலை மேம்பாடு மற்றும் வரிவசூல் நிர்வாகத் திட்டம். **Tamil Nadu Toll Road Management Company Ltd.,** நெடுஞ்சாலைகள், பாலங்கள் மற்றும் குறுக்கு வழிச்சாலைகள் ஆகியவற்றை அமைக்க 'டிட்கோ', ஐ.எல்.எப்.எஸ். மற்றும் பிரான்சு நாட்டைச் சேர்ந்த டிரான்ஸ்ரூட் இண்டர்நேஷனல் நிறுவனம் மற்றும் சி.சி.எஃப். நிறுவனம் ஆகியோரை சக முனைவராகக் கொண்டு இணைத் துறையிலே இந்தத் திட்டத்தை நிறுவி வருகிறது. இந்தத் திட்டத்திற்கு தொழில் முனைவோருடனான ஒப்பந்தம் 21-1-1998 அன்று கையெழுத்தாகியுள்ளது. முதல்கட்டமாக 160 கோடி ரூபாய் செலவில் சென்னைத் துறைமுகத்திலிருந்து எண்ணூர் செல்லும் சாலையை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



1998 மே 14] [கலைஞர் மு. கருணாநிதி]

ஃபையாக்சிலி ஓரியண்டட் பாலிப் புரொஃபிளின் தொழிற்சாலை. புதுடில்லியிலே உள்ள திருவாளர்கள் மோடி கார்ப் நிறுவனமும், இத்தாலியிலே உள்ள விபாக் நிறுவனமும் சேர்ந்து தமிழ்நாட்டில் ஆண்டிற்கு 15,000 டன் உற்பத்தி செய்யக்கூடிய திட்டத்தை டிட்கோவுடன் இணைத் துறையிலே தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

விபாக் நிறுவனம் உலகில் இத்தொழிலில் மூன்றாம் இடத்திலுள்ளது. இத்திட்டத்திற்கான தொழில் முனைவோர் ஒப்பந்தம் 16-7-1997 அன்று கையெழுத்தாகியுள்ளது. இத்திட்டத்திற்கான தொழில் திட்ட அறிக்கை தயாரிக்கப்படுகிறது. இதற்கு 150 கோடி ரூபாய் முதலீடு.

இல்ஜின் ஆட்டோமோட்டிவ். உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை. கார்களுக்கு வேண்டிய பாகங்களைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலையை அமைப்பதற்காக கொரியாவைச் சேர்ந்த இல்ஜின் தொழிற்சாலை நிறுவனம் சிப்காட்டோடு 2-7-1997 அன்று ஒப்பந்தம் செய்துகொண்டது. 40 கோடி ரூபாய் செலவிலே அமையும் இந்தத் தொழிற்சாலைக்கு ஒரு ஏக்கர் நிலம் இருங்காட்டுக்கோட்டை சிப்காட் வளாகத்திலே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் முடிவடைந்து இயந்திரங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

மசூஸ்த்தா ஏர்கண்டிஷன் இந்தியா தொழிற்சாலை. ஜப்பான் நாட்டைச் சேர்ந்த மசூஸ்த்தா எலக்ட்ரிக்கல் தொழிற்சாலையும் இந்தியாவைச் சேர்ந்த ஸ்ரீதுத் வாணிப நிறுவனமும் இணைந்து 59.40 கோடி ரூபாய் முதலீட்டில் மசூஸ்த்தா ஏர்கண்டிஷன் தொழிற்சாலையை அமைத்திட 12-9-1997 அன்று ஒப்பந்தம் செய்துகொண்டது. இருங்காட்டுக்கோட்டை வளாகத்தில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் அமையும் இத்தொழிற்சாலையின் கட்டுமானப் பணி விரைவில் முடிவடையவுள்ளது.

டைனமேட்டிக் தொழிற்சாலை. கொரியா நாட்டைச் சேர்ந்த டேரிம் எண்டர்பிரைசஸ் கம்பெனி, அதேபோல் ஜே.கே.எம். ஆட்டோமோட்டிவ் நிறுவனம், இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த யாங்கோப் தொழில் நிறுவனம் ஆகிய மூன்று நிறுவனங்களும் இருங்காட்டுக்கோட்டையில் 23 கோடி

ரூபாய் முதலீட்டில் அமைக்கும் தொழிற்சாலைகளுக்கு ஒப்பந்தங்கள் 7-1-1998 அன்று கையெழுத்தாயின. 1,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 2,000 நபர்களுக்கு மறைமுகமாக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

மார்க்யூப் இந்தியத் தொழிற்சாலை. மொரீஷியஸ் நாட்டைச் சேர்ந்த மார்க்யூப் ஏசியா நிறுவனம், மார்க்யூப் இந்தியத் தொழிற்சாலையை அமைத்திட முன்வந்துள்ளது. இதற்கான ஒப்பந்தம் 7-1-1998 அன்று நடைபெற்றது. 36 கோடியே 50 இலட்சம் ரூபாய் முதலீட்டில் இருங்காட்டுக்கோட்டை தொழில் வளாகத்தில் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் அமையும் இத்தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன. இத்தொழிற்சாலை அட்டைப் பெட்டிகளைத் தயாரிக்கும் இயந்திரங்களை உற்பத்தி செய்யும். இது 100 விழுக்காடு ஏற்றுமதித் தொழிற்சாலையாகும்.

மேண்டோ பிரேக் சிஸ்டம் தொழிற்சாலை. கொரியா நாட்டைச் சேர்ந்த மேண்டோ மிஷினரி கார்ப்பரேஷன் நிறுவனம், மேண்டோ பிரேக் சிஸ்டம் தொழிற்சாலையை 30 கோடி ரூபாய் முதலீட்டில் இருங்காட்டுக்கோட்டையில் அமைக்கிறது. ஏறத்தாழ 9 ஏக்கர் நிலப்பரப்பில் அமையும் இத்தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து இயந்திர சாதனங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. இத்தொழிற்சாலை கார் உதிரி பாகங்களைத் தயாரிக்கும். இதற்கான ஒப்பந்தம் 9-1-1998 அன்று ஏற்பட்டது.

போஸ் யூண்டாய் ஸ்டீல் மேனுஃபேக்சரிங் இந்தியா தொழிற்சாலை. கொரியா நாட்டைச் சேர்ந்த யூண்டாய் கார்ப்பரேஷனின் போஸ் ஸ்டீல் மற்றும் போஸ் கோ நிறுவனம் போஸ் யூண்டாய் ஸ்டீல் மேனுஃபேக்சரிங் இந்தியா தொழிற்சாலையை 44 கோடியே 19 இலட்சம் ரூபாய் முதலீட்டில் அமைக்க முன்வந்துள்ளது. இருங்காட்டுக்கோட்டை தொழில் வளாகத்தில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் அமையும் இத்தொழிற்சாலைக்குரிய ஒப்பந்தம் 9-1-1998 அன்று கையெழுத்தானது. கார்களுக்குப் பயன்படும் இரும்புத் தகடுகளைத் தயாரிக்கும் இந்தத் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் முடிந்து இயந்திர சாதனங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

மறைமலை நகரில் ஆப்டிக்கல் ஃபைபர் கேபிள் தொழிற்சாலை. காஞ்சிபுரம் மாவட்டம் மறைமலைநகரில் ஆப்டிக்கல் ஃபைபர் கேபிள்ஸ் சிஸ்டத்தை டிட்கோ மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள்



Telecommunication Consultant India Limited, ஜப்பானைச் சேர்ந்த ப்யூஜிகுரா லிமிடெட் ஆகியவற்றோடு இணைந்து கூட்டுத் துறையில் தொடங்குவதற்குரிய ஒப்பந்தம் 2-8-1996 அன்று கையெழுத்தானது. மொத்த மதிப்பீடு இந்தத் திட்டத்திற்கு 40 கோடி ரூபாய். இத்தொழிற்சாலைக்காக 10 ஏக்கர் நிலம் மறைமலைநகருக்கு அருகில் ஒதுக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரங்களை வாங்குவதற்கும், கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 1999 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இந்தத் தொழிற்சாலை செயல்படத் தொடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** MCC Scrab Agro Limited தேங்காய் பதப்படுத்தும் தொழிற்சாலை 38 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவில் 'டிட்கோ' நிறுவனம் கூட்டுத் துறையில் திருவாளர்கள் MCC Scrab Agro Limited உடன் இணைந்து, கோவை மாவட்டம், பொள்ளாச்சி அருகே, கிணத்துக்கடவு என்ற கிராமத்தில் தேங்காய்ப் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ 29-8-1996 அன்று ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தத் தொழிற்சாலையில் தேங்காய் எண்ணெய், தேங்காய்ப் பால் மற்றும் தேங்காய் நார் சம்பந்தப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை 44 ஏக்கர் நிலப்பரப்பில் அமைகிறது. ஜூன் 1999-இல் உற்பத்தி தொடங்கப்படும்.

Metal Halide Lamp தொழிற்சாலை. தமிழக அரசு இத்திட்டத்திற்கு 27-1-1997 அன்று ஒப்புதல் அளித்தது. தொழில் முனைவோரோடு ஒப்பந்தம் 10-3-1997 அன்று கையெழுத்தானது. இத்திட்டத்தின் மதிப்பு 28.6 கோடியாகும். இந்நிறுவனம் 'டிட்கோ' மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த Advanced Lighting Technology மற்றும் Axes Technology ஆகியோரால் இணைத் துறையில் நிறுவப்பட்டுள்ளது. இது 100 சதவிகிதம் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட தொழிலாகும். தாம்பரத்தில் உள்ள சென்னை ஏற்றுமதி வளாகத்தில் அமைந்துள்ள இத்தொழிற்சாலை 26-3-1998 அன்று என்னால் திறந்து வைக்கப்பட்டது.

அடுத்து, Tauraus Novelties Limited தென்கொரியா நாட்டு தொழில் நுட்பத்தோடு இத்திட்டத்தை 'டிட்கோ' பெங்களூரைச் சேர்ந்த Srivathsan and Associates நிறுவனத்தோடு இணைந்து இணைத் துறையிலே தர்மபுரி மாவட்டத்திலேயுள்ள, ஓசூரிலே நிறுவியுள்ளது. இத்திட்டம் dolomite மற்றும் stoneware பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஆகும். இதன் மதிப்பீடு 10 கோடி ரூபாய் ஆகும். இதற்கான தொழில் முனைவோர் ஒப்பந்தம் 30-5-1997 அன்று கையெழுத்தானது. ஜூன் மாதம் முதல் வணிக அளவிலான உற்பத்தி நடைபெறும். சோதனை அடிப்படையில் தற்போது உற்பத்தி தொடங்கப்பட்டுவிட்டது.

100 சதவிகிதம் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட கோழி இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலை. இத்திட்டம் 32 கோடி ரூபாய் முதலீட்டில் Pioneer Breeding Farms நிறுவனத்தால் இணைத் துறையில் கோவை மாவட்டம், பொங்கலூரில் அமைய உள்ளது. இதற்கான தொழில் முனைவோர் ஒப்பந்தம் 7-1-1998 அன்று கையெழுத்தானது. இத்தொழிலுக்கான சந்தை நிலவரம் ஆய்வு செய்யப்படுகிறது. இத்திட்டத்திற்குத் தேவையான நிலம் தேர்வு செய்யப்பட்டுவிட்டது. இன்னும் ஓராண்டு காலத்தில் இத்திட்டம் உற்பத்தியைத் தொடங்கும்.

100 சதவிகிதம் ஏற்றுமதி செய்யும் Frozen French Fries நிறுவனம் குவைத் நாட்டைச் சேர்ந்த ஆர்.சி. சுரேஷ் மற்றும் அசோசியேட் நிறுவனத்தோடு 'டிட்கோ' இணைந்து, இணைத் துறையில் சுமார் 32 கோடி ரூபாய் முதலீட்டில் உருளைக் கிழங்கு பதப்படுத்தும் திட்டம் நிறுவப்பட உள்ளது. இத்திட்டம் கோயம்புத்தூர் மாவட்டத்தில், மேட்டுப்பாளையத்தில் அமைய உள்ளது. இதற்கான ஒப்பந்தம் 7-1-1998 அன்று கையெழுத்தானது.

PVC foamed sheets — செயற்கை மரப்பொருள் திட்டம். இத்திட்டம் இத்தாலியைச் சேர்ந்த வினோத் சகாய் என்பவரால் இணைத் துறையிலே சுமார் 45 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் சென்னையை அடுத்த இருங்காட்டுக்கோட்டையில் அமையவுள்ளது. இதற்கான தொழில் முனைவோர் ஒப்பந்தம் 25-2-1998-இல் கையெழுத்தானது. இத்திட்டத்திற்குத் தேவையான 6 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது. தேவையான இயந்திரங்கள் இத்தாலியிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

Sriram Auto Components (Madras) Limited தொழிற்சாலை. 'டிட்கோ' சென்னையைச் சேர்ந்த ஸ்ரீராம் உறுப்பு நிறுவனத்துடன் இணைந்து



வாகனங்களுக்குத் தேவையான நுட்பமான உதிரிப் பாகங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையை காஞ்சிபுரம் மாவட்டம் திருப்போரூரில் அமைத்துள்ளது. இத்திட்டம் இணைத் துறையில் 21 கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் 7-1-1998-இல் கையெழுத்தானது. 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்த நிறுவனம் சோதனை உற்பத்தியைத் தொடங்கியிருக்கிறது.

ரமண சேகர் ஸ்டீல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை. 19-6-1997 அன்று ஒப்பந்தம் செய்யப்பட்ட இத்தொழிற்சாலையை 'டிட்கோ' ரமண சேகர் அசோசியேட்ஸ் உடன் இணைந்து, இணைத் துறையில் அமைத்துள்ளது. இத்தொழிற்சாலை உருட்டுச் சுருள்களாக வரும் இரும்பினைத் தகடுகளாக மாற்றும். இது சென்னையை அடுத்த மணலியில் ரூ. 10 கோடியே 18 இலட்சம் முதலீட்டில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. சோதனை உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. வணிக உற்பத்தி ஜூன் மாதத்திலே தொடங்கப்படும்.

எஸ்.கே.எம். முட்டை பதப்படுத்தும தொழிற்சாலை. ஈரோட்டில் 100 சதவிகிதம் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட முட்டை பதப்படுத்தும் தொழிற்சாலை 40 கோடி ரூபாய் செலவில் 12-2-1997 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இத்தொழிற்சாலையில் நாள்தோறும் 10 இலட்சம் முட்டைகளிலிருந்து albumen powder, yolk powder ஆகியவை தயாரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இவை எல்லாம், அறிவிக்கப்பட்டவை எத்தனை, நடப்பவை எத்தனை என்ற கேள்விக்கு விளக்கமான பதில்கள் ஆகும். இன்னும் இரண்டொரு விஷயங்களை மாத்திரம் குறிப்பிட விரும்புகிறேன். கழக ஆட்சியிலே, கடந்த இரண்டு ஆண்டு காலத்திலே மொத்தம் 33 புதிய தொழிற்சாலைகள் 'டிட்கோ'-வுடன் சேர்ந்து இணைத் துறையிலும், தனியாகவும் நிறுவுவதற்கு ஒப்பந்துங்கள் கையெழுத்தாயின. அதில் 8 தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கிவிட்டன. 6 தொழிற்சாலைகள் 1998 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்க உள்ளன. மூன்று தொழிற்சாலைகளில் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து இயந்திர சாதனங்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 12 தொழிற்சாலைகளில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மூன்றே மூன்று தொழிற்சாலைகளில்தான் இன்னும் எந்தப் பணியும் தொடங்கப்படவில்லை. 33-இல் 30 தொழிற்சாலைகளில் நான் சொன்ன இந்த வளர்ச்சிகள். மூன்று தொழிற்சாலைகளில் எந்தப் பணியும்

தொடங்கப்படவில்லை. இதில்தான் யூண்டாய் மோட்டார் தொழிற்சாலையும் ஒன்று.

பிற்பகல் 1-35

நான் சொன்ன இந்த 30 தொழிற்சாலைகளில் யூண்டாய் உள்பட எல்லாம் நிறைவேறி முடிந்தால் — (முடிப்பதற்கு நாம் எல்லாம் இருக்கக்கூடிய சூழ்நிலை தமிழ்நாடு மக்களால் அளிக்கப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அந்த நம்பிக்கையோடு இவற்றையெல்லாம் நாம் நிறைவேற்றினால் — இந்தத் தொழிற்சாலைகள்மூலம் மாத்திரம், மூன்றரை இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சில அறிவிப்புகளை இந்த மகிழ்ச்சியான நேரத்தில் நான் சொல்ல விரும்புகின்றேன். டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களை அனைவரும் அறிவீர்கள். நல்ல விஞ்ஞானபூர்வமான கருத்துக்களைச் சொல்லக்கூடியவர், செயல்பாடுகளைச் செய்யக்கூடியவர், அவரோடு கலந்து பேசியதில் விளைந்த ஒன்று இந்த அறிவிப்பு. 1998-99 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பத்தி 108-இல் கேளம்பாக்கம் அருகே உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா நிறுவுவதுபற்றிக் குறிப்பிட்டிருந்தேன். டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சியகம், மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறை மற்றும் டிட்கோவும் இணைந்து ஒரு கூட்டு நிறுவனம் அமைத்து, சிறுசேரியில் ஓர் உயர்தர உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவை நிறுவி வருகின்றன. இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இதற்கென 20 ஏக்கர் நிலம் சிறுசேரியில் தமிழக அரசாங்கத்தால் இந்நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. விவரமான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இன்னும் ஓரிரு மாதங்களில் கட்டுமானப் பணிகள் தொடங்கும். இந்தப் பூங்கா உயிரியல் தொழில்நுட்பத் துறையில் மிக நவீன அம்சங்களான 'டிஷ்யூ கல்ச்சர்' (tissue culture) காய்கறி மற்றும் பழ உற்பத்தியை பன்மடங்கு அதிகரிப்பது, கலப்பின உயர்ரக விதைகளைத் தயாரித்து எண்ணிக்கையைப் பெருக்குவது, (seed multiplication) அரிய மூலிகைகளை வளர்த்து பரப்புவது ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். 21 ஆம் நூற்றாண்டிற்கான முக்கியமான துறைகளில் இத்துறையும் ஒன்று என்பதை நான் இங்கே பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



இரண்டாவது அறிவிப்பாக மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் தயாரிப்பதில் தமிழ்நாடு ஏற்கெனவே ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. ஃபோர்டு, யூண்டாய், மிட்சுபிஷி போன்ற பெரிய கார் நிறுவனங்களும், அசோக் லேலண்ட், இத்தாலி நாட்டைச் சேர்ந்த 'இவெகோ' (IVECO) நிறுவனத்தோடு சேர்ந்து ஆரம்பிக்கும் புதிய தொழிற்சாலை ஆகியவற்றின் விளைவாக மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் துறை வேகமாக வளர்ந்து வருகின்றது. இவற்றை மேலும் ஊக்குவித்து புதிய முதலீடுகளைத் துறையிலே ஈர்க்கும் பொருட்டு டிட்கோ நிறுவனம், ஐ.எல்.எப்.எஸ். என்ற சர்வதேச நிதி நிறுவனம் (International Finance Corporation) ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த டி.இ.ஜி. (D.E.G.) நிறுவனம் ஆகியவற்றுடன் கூட்டுச் சேர்ந்து புதிய தொழில் முனைவோர்க்கு உதவ venture capital அட்வென்சர் என்பதுபோல venture capital துணிந்து முதலீடு செய்ய வருகின்றது. venture capital என்ற திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இதன் ஆரம்ப மூலதனம் சுமார் 20 கோடி ரூபாய். டிட்கோவும், ஐ.எல்.எப்.எஸ்-ம் சேர்ந்து ஒவ்வொன்றும் 10 கோடி என்ற அளவில் 20 கோடி ரூபாய் ஆரம்ப மூலதனம்.

தமிழ்நாட்டில் மிக வேகமாக வளர்ந்து வரும் மென்பொருள் துறையை ஊக்குவித்து, தொழில்முனைவோருக்கு உதவி செய்ய டிட்கோ, ஐ.எல்.எப்.எஸ். நிறுவனங்கள் கூட்டுச் சேர்ந்து ஒரு புதிய 'venture capital-ஐ நிறுவி உள்ளன. இதனுடைய ஆரம்ப மூலதனம் 30 கோடி ரூபாய் ஆகும். தமிழக அரசு ஏற்கெனவே மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் தயாரிப்பு, மென்பொருள் தகவல் தொழில் நுட்பம் மற்றும் உணவு பதப்படுத்தும் துறை ஆகியவற்றை முந்துதல் துறைகளாக, thrust sector-ஆக அறிவித்துள்ளது.

உணவு பதப்படுத்தும் துறையைப் பொறுத்தவரையில் விரைவில் தமிழக அரசு தன்னுடைய கொள்கை அறிவிப்பை வெளியிடும். இத்துறைக்கும் தொழில் முனைவோருக்கும் உதவும் நிதி வசதி - venture capital - அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது. தமிழ்நாட்டில் மேற்கூறிய துறைகளில் நிறுவப்படும் - venture capital - நிதித் திட்டம் இத்துறைகளில் முதலீடு செய்யும் சிறு தொழில் முனைவோருக்கு குறிப்பாக முதல் சந்ததி தொழில் முனைவோருக்கு மிக்க பயன் அளிக்கும். இதைச் சரியாகப் பயன்படுத்துவதன் மூலம் ஏராளமான புதிய தொழில் முனைவோர்கள் தமிழ்நாட்டில் உருவாகிவிடுவார்கள் என்று நம்ப இடமிருக்கிறது.

1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒன்றைக் குறிப்பிட்டு இருந்தேன். அன்றைய மத்திய தொழில்துறை அமைச்சரோடு கலந்து பேசி எடுக்கப்பட்ட முடிவின்படி 1997-98 நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தேன்.

அதாவது தகவல் தொழில்நுட்பம். (Information Technology) நம்முடைய மாநிலத்தின் விரைவான வளர்ச்சிக்குத் திறவுகோல் என்று கருதப்படுகிறது. தகவல் தொடர்புகளில் ஏற்பட்டுவரும் புரட்சிகரமான மாற்றங்கள் காரணமாக இந்தப் பூமிப் பந்தே குக்கிராமங்களாக Global Village ஆகக் குறுகிக் கொண்டு வருகிறது. அந்தத் துறையில் ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு வாரமும், குறிப்பிடும் மாற்றங்கள் தோன்றி, நேற்றைய தொழில்நுட்பத்தைப் பத்தாம்பசலியாக மாற்றிவிடுகின்றன.

பிற்பகல் 1-40

அடுத்த நூற்றாண்டு, தகவல் துறை தொழில்நுட்ப நூற்றாண்டு ஆகும். அதற்கேற்ற அடிப்படையை உருவாக்கும் வகையிலும், 21-ஆம் நூற்றாண்டுக்கேற்ப தகவல் துறை தொழில்நுட்பத் துறையில் உலகத்தின் முன்னோடியாக இருக்கும் விதத்திலும், இந்தியாவிலேயே முதல் முறையாக, சென்னையில் Information Technology Institute of Tamil Nadu (ITIT) என்ற அமைப்பு நிறுவப்படும். முதலில், பதிவு செய்யப்பட்ட சுயநிதி அமைப்பாக Registered society ஆகத் தொடங்கப்பட்டு, படிப்படியாக அது ஒரு சுயநிதி பல்கலைக்கழகமாக மாற்றப்படும். இத்துறையில் முன்னணியிலே இருக்கும் அமெரிக்கப் பல்கலைக் கழகங்களோடும், புகழ்பெற்ற தனியார் அமைப்புகளோடும் இந்த அமைப்பு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு, Computer Graphics, Software Engineering and Hardware Systems, Multimedia, Telecommunications, Information Technology, Digital Technology போன்ற தகவல் தொழில் நுட்பத் துறையின் அனைத்து அம்சங்களிலும் தன்னிகரற்று விளங்கும் இளைஞர்கள் உருவாக்கப்படுவார்கள். இதற்காக, வரும் ஆண்டு 10 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று அப்போது அறிவித்திருந்தேன். அதற்கேற்ப, இப்போது அதன் பெயர் மாற்றப்படுகிறது தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பக் கல்வி மையம் என்று. TANITEC என்று சுருக்கமாக அதனுடைய பெயர் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையம் நிறுவ, தொழில் நிறுவனங்களின் உதவிகளுக்காகவும், நடைமுறை வசதிகளுக்காகவும், இந்திய நிறுவனங்கள் சட்டம் 56-ன் பிரிவு 25-ன் கீழ், தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பக்



கல்வி மையம் பதிவு செய்யப்பட்டது. இந்த மையம், முதலில் அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைந்து செயல்பட்டு, பின்னர் படிப்படியாக, சுயநிதிப் பல்கலைக்கழகமாக வளர்ச்சியடையும். இந்த மையம் தொடக்கத்தில் 1998-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் தகவல் தொழில் நுட்பப் பட்ட மேற்படிப்பு, பட்ட வகுப்புகளை சென்னைக்கு அருகிலே உள்ள பெருங்குடியில் 'எல்காட்' நிறுவனத்தின் கட்டடத்திலே தொடங்க உள்ளது. இளங்கலை மற்றும் முதுகலைத் தொழில் நுட்பப் பட்டப் படிப்புகளை படிப்படியாக ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மையத்திற்காக 1997-98 ஆம் ஆண்டு பங்குத் தொகையாக தொடக்கத்தில் 5 கோடி ரூபாயை அரசு அளித்தது. 1998-99 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மேலும் 5 கோடி ரூபாயை இந்த மையத்திற்கு அரசு ஒதுக்கியுள்ளது.

'எல்காட்' நிறுவனத்தின், விற்பனையின் சாதனையை எடுத்துக்கொண்டால், 1995-96 ஆம் ஆண்டு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசில், அதனுடைய டர்ன்-ஓவர் 7.86 கோடி ரூபாய். 1997-98 இல் 'எல்காட்'-டினுடைய மொத்த விற்பனை-டர்ன்-ஓவர்-38.79 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) 'எல்காட்' ன் நிகர இலாபம் 1995-96 இல் ரூ.2.71 இலட்சம். 1996-97 இல் ரூ. 33.59 இலட்சம். 1997-98 இல் 4-1/2 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி)

மற்றொரு அறிவிப்பு. `Software' பற்றியது. இப்படி, `Software', `Software' என்று சொல்லும்போது, பல பேருக்கு என்ன என்று தெரியாது. எனக்குக்கூட ஆரம்பத்திலே அந்தக் காலத்திலே புரியாமல் இருந்தது. என்ன இது, `Software', `Software' என்று சொல்லுகிறார்களே என்று. ஒருவரிடம், பையன் என்ன செய்கிறான் என்று கேட்டால், `Software' தொழிலில் இருக்கிறான் என்பார். `Hardware', `Software `Software' என்று சொல்லுகிறோம். `Software' என்றால் என்ன என்பதை—மன்னித்துக்கொள்ள வேண்டும், உறுப்பினர்கள் யாருக்காவது தெரியாமல்கூட இருக்கும். இருந்தாலும், ஆங்கிலப் படம் பார்ப்பது மாதிரி, என்னோடு சேர்ந்து அவர்களும் தலையாட்டக் கூடும். `Software' என்றால் என்ன என்பதைச் சொல்ல வேண்டுமென்றால்- கணினி மற்றும் அதைச் சார்ந்த Monitor, Key Board, Printer ஆகியவை `Hardward' என்று சொல்லப்படுகிறது. இந்தக் கணினியை இயக்குவதற்காகக் கொடுக்கப்படுகின்ற தொகுப்புக்குத்தான் 'மென்பொருள்' என்று பெயர். தற்போது, மென்பொருள் துறையில்,

உலகத்திலேயே பரபரப்பாகப் பேசப்படுவது, 2000-ஆவது ஆண்டு -Y2 K-1 பிரச்சினையாகும்.

கடந்த 30 ஆண்டுகளாக, கணினி மொழியிலே இடச் சிக்கனத்தைக் கருதி, ஆண்டுகளைக் குறிப்பிடும்போது, இரண்டு இலக்கங்களை மாத்திரம்தான் பயன்படுத்துகிறார்கள். அது ஆபத்தாகப் போய்விடுமோ என்ற பயம் இப்போது வந்திருக்கிறது. நான் கோப்புகளில் கையெழுத்துப் போடும்பொழுது எல்லாம், உதாரணமாக 7-2-98 என்று போடுவதில்லை. 7-2-1998 என்றுதான் போடுவேன். என்னிடம், செகரட்டரி எல்லாம்கூட கேட்டார்கள். "எல்லா மினிஸ்டர்களும் '98' என்றுதான் போடுகிறார்கள், ஏன் நீங்கள் மாத்திரம் '1998' என்று போடுகிறீர்கள் என்று கேட்டார்கள்". எல்லா மினிஸ்டர்களும் இந்த வருடம் '98' என்று போடுவார்கள். அடுத்த வருடம் '99' என்று போடுவார்கள். அதற்கு அடுத்த வருடம், இரண்டு இலக்கம் என்ன போடுவார்கள் என்று கேட்டேன். 2000 என்று வரும்போது, இரண்டு சைபர்கள்தான் போடவேண்டும். (சிரிப்பு) அதனால்தான் இப்போதே நான் பழகிக்கொள்கிறேன். இரண்டாயிரத்திற்குத் தயாராகி, இப்போதே '1998' என்று போடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது 'Software'-ன் தத்துவம். 30 வருடங்களாக கணினி மொழியிலே இடச்சிக்கனத்தைக் கருதி எல்லோருமே இந்த இரண்டு இலக்கங்கள், இரண்டு சைபர்களைப் போடுவதா அல்லது போடாமல் விட்டு விடுவதா, '98', '68', '78' என்று போடுவதா — இதன் விளைவு என்னவாகும் என்றால் 2000-ஆவது ஆண்டு வரும் காலத்தில் கணினி துறையில் '00' என்ற எண்கள் மாத்திரம் வரும்பொழுது அனைத்து கணினிகளைச் சார்ந்து நடக்கும் அத்தனை நடவடிக்கைகளும் திடீரென்று நின்றுபோக நேரிடும். விமானம் போய்க் கொண்டிருக்கிறது என்றால் — அப்படி நடக்கப் போவதில்லை; உதாரணத்திற்காகச் சொல்கிறேன்-விமானம் போய்க் கொண்டிருக்கிறது என்றால் அந்த இரண்டு '00' மாத்திரம் வைத்திருந்தால், விமானம் போய்க்கொண்டிருக்கும்பொழுது, 2000 ஆவது வருடத்தில், இந்தக் கணக்குத் தவறிவிட்டால், 4 இலக்கத்தில் இல்லாமல் இரண்டு இலக்கத்தில் இருந்தால், விமானம் நடுவழியில் வானத்தில நின்றுவிடும். நின்றால் என்ன ஆகும் என்று உங்களுக்குத் தெரியும். அப்படிப்பட்ட ஆபத்து இந்த கணினி யுகத்தில் ஏற்படக்கூடும். இதன் விளைவாக மிகவும் முன்னேற்றமடைந்துள்ள மேலை நாடுகளில்கூட வாழ்க்கை ஸ்தம்பித்துப் போகும் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது.



பிற்பகல் 1-45

இதைச் சரிசெய்யும் பணி நம் நாட்டில் உள்ள மென்பொருள் நிறுவனங்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்பை அளிக்கும் என்று நம்பப்படுகிறது. சென்னையில் மாத்திரம் தற்பொழுது 2000 மென்பொருள் (Software) வல்லுநர்கள் இந்தப் பணியிலே ஈடுபட்டுள்ளார்கள். இதேபோல் ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் ஒரே நாணய முறைக்கு மாறும்போது கணினித் துறையில் ஏராளமான வேலைவாய்ப்புகள் உருவாகும். ஒரு மதிப்பீட்டின்படி சுமார் 2 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்குப் பணிகளின் மதிப்பு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்மூலமாகவும் நமது நாட்டில் மென்பொருள் துறையில் ஏராளமான வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதை அடிப்படையாக வைத்துத்தான் இந்த அறிவிப்பை நான் செய்கின்றேன்.

டைடல் மென்பொருள் பூங்கா, தரமணி. 1998-99 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் 74-ஆவது பத்தியில் டிட்கோ நிறுவனம் சென்னையில் தரமணியில் மென்பொருள் தொழில் பூங்கா ஒன்றினை நிறுவுவதுபற்றிக் குறிப்பிட்டிருந்தேன்.

தமிழ்நாட்டில் தற்பொழுது மென்பொருள் (Software) துறையில் தங்களது அலுவலகங்களையும், வசதிகளையும் நிறுவுவதற்கு பல்வேறு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் (Information Technology Companies) உலகின் பல பாகங்களிலிருந்தும் வந்து கொண்டிருக்கின்றன. இவற்றின் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு தரமணியில் 7.5 ஏக்கர் பரப்பளவில் டிட்கோவும், எல்காட்டும் இணைந்து 160 கோடி ரூபாய் முதலீட்டில் 8 இலட்சம் சதுர அடி அளவில் மிக நவீன மென்பொருள் பூங்கா ஒன்றை நிறுவி வருகின்றன. வேலை ஆரம்பமாகிவிட்டது. நிலத்தைச் சுத்தப்படுத்தும் பணி தற்பொழுது நடந்து வருகின்றது. இதற்கான அனைத்து ஆய்வுகளும் முடியும் தருவாயிலே உள்ளன. ஜூலை மாதத்தில் கட்டுமானப் பணி தொடங்கி பன்னிரண்டே மாதங்களில் நிறைவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பூங்காவில் மிக நவீன தொழில் நுட்ப வசதிகளைக் கொண்டு மற்றும் வி.எஸ்.என்.எல். மூலமாக உலகின் அனைத்துப் பகுதிகளோடும் தொடர்புகொள்ள ஏதுவாக தொடர்பு வசதி அளிக்கப்படும். இப்பூங்காவில் ஏறத்தாழ 8,000 மென்பொருள்

தொழில் வல்லுநர்கள் Software Professionals பணிபுரிவார்கள். இதன்மூலம் கணிசமான அன்னியச் செலாவணி ஈட்டப்படும். மற்றும் மென்பொருள் துறையில் நாட்டில் சென்னை ஒரு முன்னோடியான இடத்தை அடைய முடியும் என்று நான் உறுதியாகக் கூறுகின்றேன்.

சென்னையை அடுத்து, கோவை மாநகரிலும் பல தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் தங்கள் அலுவலகங்களையும் கிளைகளையும் நிறுவி வருகின்றன. இவற்றின் தேவைகளைக் கவனத்தில் கொண்டு எல்காட் நிறுவனமும், சிப்காட் நிறுவனமும் இணைந்து கோவை விமான நிலையம் அருகே அமைந்துள்ள 6 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் நவீன மென்பொருள் பூங்கா ஒன்றை நிறுவி வருகின்றன. சுமார் 50 கோடி ரூபாய் செலவில், 2.5 இலட்சம் சதுர அடி கட்டட அளவில் அமையவிருக்கும் இப்பூங்காவின் கட்டுமானப் பணி அடுத்த மாதம் தொடங்கி 12 மாதங்களில் முடிவுறும். இப்பூங்காவில் ஏறத்தாழ 2,500 மென்பொருள் தொழில் வல்லுநர்கள் பணிபுரிவார்கள் என்ற அறிவிப்பையும் இங்கே நான் செய்கிறேன்.

கடைசியாக, உறுப்பினர் திரு. ரங்கநாதன் தொடங்கிய விஷயம். தொடங்கியதோடு முடிக்கின்றேன். 'Single Window System' தொழில் துறையை வளர்ப்பதற்கும், மேலும் முன்னேற்றுவதற்கும் தேவை என்ற அரிய கருத்தை அவர் சொன்னார். பிற மாநிலங்களில், நம்முடைய அண்டை மாநிலங்களில் எல்லாம் அந்த 'Single Window System' இப்போது கடைப்பிடிக்கப்படுகின்றது. இதிலே முக்கியமாக, தொடங்கிய பெரிய தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், உதாரணமாக யூண்டாய், செயின்ட் கோபைன், மிட்சுபிஷி போன்றவைகளில் அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகளைப் பரிசீலிக்க தொழில் துறைச் செயலாளர் தலைமையில் ஒவ்வொரு திங்களும் அனைத்துத் துறைகளையும் சேர்ந்த அதிகாரிகளும், சம்பந்தப்பட்ட தொழில் முதலீட்டாளர்களும் சந்தித்து pending issues பற்றிப் பரிசீலித்துப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்துக்கொள்கிறார்கள். மேலும் புதிதாகத் தொழில் தொடங்க வருபவர்களுக்கு எளிதாக அனுமதி கிடைக்கத்தக்க வகையில் 100 கோடி ரூபாய்க்குமேல் ஒரு தொழிற்சாலைக்கு முதலீடு செய்து தொழில் தொடங்கும் திட்டத்தைப் பரிசீலித்து அதற்கு சம்பந்தப்பட்ட துறையின் அனுமதியையும் உடனுக்குடன் பெற்றுத் தருவதற்கு முதலமைச்சர் தலைமையிலே ஓர் உயர்மட்டக் குழு உடனடியாக அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 1-50

அதைப்போலவே, 100 கோடி ரூபாய்க்குக் குறைவாக முதலீடு செய்து தொழில் தொடங்குவோருக்கு விரைவில் அனைத்துத் துறையின் அனுமதியையும் பெற்றுத்தர தலைமைச் செயலாளர் தலைமையிலே ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்த அறிவிப்புகளை ஏற்றுக்கொண்டு, அக மகிழ்ச்சியோடு இருக்கிற நீங்கள் வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு இந்த அளவில் கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** Hon. Speaker Sir, Please . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** You please sit down.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** Hon. Speaker Sir, Please . . . .

**HON. SPEAKER:** Hon. Chief Minister has not sat down. You please resume your seat. (Interruption) I said you please resume your seat. Thiru Subbarayan.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய பொருளாதார வாழ்வில் மிக முக்கியப் பங்கு வகிப்பது பஞ்சாலைகள். அங்கு கடுமையான நெருக்கடி நிலவுவதாக தொடர்ந்து செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. பஞ்சாலைகளும் அத்தகைய பிரச்சினையை வெளிப்படுத்துவதற்கு, ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்து மாநில அரசின் கவனத்தை ஈர்த்து இருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய குறைபாடு என்ன என்பதையும், பஞ்சு நெருக்கடிக்கு என்ன காரணம் என்பதையும், அவர்களை அழைத்துக் கேட்டு அறிந்து, அவர்களுடைய பிரச்சினைக்கு தீர்வு காண மாநில அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே பேசும்போது சொன்னார்கள். பஞ்சு நெருக்கடியைத் தீர்க்க வேண்டுமானால், பருத்தி அதிகமாக விளைவிக்கப்பட வேண்டும் என்றும், அப்போதுதான் நெருக்கடி தீரும் என்றும் சொன்னார்கள். ஆகவே, அந்த வகையிலே அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நீண்டகாலமாக—413 ஏக்கர், 413 ஏக்கர் என்று சொல்லிக்கொண்டு இருந்தேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய காலத்திலேதான் அது எடுக்கப்பட்டது. இப்போது அங்கே என்ன இருக்கிறது? நான், ஒரு கனரகத் தொழிற்சாலை வரும் என்று ஆவலோடு காத்துக் கொண்டு இருந்தேன். சோழவந்தான் தொகுதியில் அலங்காநல்லூர் சுகர் பேக்டரி கொண்டுவந்த காரணத்தினால்—அது எங்களுடைய காலத்திலேதான் கொண்டுவரப்பட்டது; 2,500 பேர் அங்கே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையை இந்த 1999-லும் ஏற்படுத்தலாம் என்று நான் கனவு கண்டேன். அதை விடுத்து, இன்றைக்கு அங்கு என்ன போட்டு இருக்கிறீர்கள்? இந்த குறிப்பிலே, 380 ஏக்கர் கையகப்படுத்தப்பட்டு இருப்பதாக இருக்கிறது. இதிலே தொழில் வளாகம் அமைக்கப்படும் என்று இருக்கிறது. இன்னும் எத்தனை ஆண்டுகளில் இது அமைக்கப்படும்? இது எப்போது அமைக்கப்படும்? இதற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதுபற்றி எல்லாம் சொல்லாமல், வேலைவாய்ப்புப்பற்றி எல்லாம் சொல்லாமல் இருக்கிறீர்கள். இதையும் சும்மா கண் துடைப்பு வேலையாகத்தான் நான் கருதுகிறேனே தவிர, வேறல்ல. அதைப்பற்றி நான் சொல்வதற்காகத்தான் தங்களிடத்திலே கேட்டேன். இதில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னை ஏமாற்றி விட்டார்களா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் இரண்டு வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள். கனவு கண்டேன் என்பது ஒன்று; கண் துடைப்பது என்பது மற்றொன்று. கனவு கண்டு விழித்தவர்கள் கண்ணைத் துடைத்துக்கொள்ள வேண்டியதுதான். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பொன்னம்மாள் அவர்கள் கருத்துச் சொல்ல வேண்டும் என்றால், அவர்கள் கட்சி சார்பிலே பேசி இருக்க வேண்டும். கட்சி சார்பிலே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுப்பது நான் அல்ல. அடுத்து திரு. பி. வெங்கடசாமி.

***THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, Hon. Chief Minister was telling that the ELCOT, Hosur has earned a profit of Rs. 4 crores. But I am sorry to state that the ELCOT which was started in Hosur, now



**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். ஆர். சேகரன்.

**திரு. ஆர். ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.15,78,35,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பிற்பகல் 1-55

## (ஆ) கோரிக்கை எண் 53 — தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 53—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.



converted into ELNET is now under the process of closure because of the mis-management of the Managing Director, who was posted there. So, I request our Hon. Chief Minister to rectify this. I am also giving a letter to the Hon. Chief Minister to set right the things.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஹோசூர் எல்காட் பற்றித்தானே? என்ன பிரச்சினை?

**திரு. பி. வெங்கடசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு வேறு எம்.டி.-ஐப் போட்டு விட்டார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றித் தனியாக என்னிடத்திலே விவரம் தருவார்களேயானால், உடனடியாக விசாரித்து அதைப்பற்றிக் கூற இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 24 - தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 24--தொழில்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.



## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

145. 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில உடைமைக்குரிய (உச்ச வரம்பினை ஒழுங்குமுறைப்படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்தது குறித்து வருவாய்த் துறையின் 20-2-1998 ஆம் நாளிட்ட 140 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில உடைமைக்குரிய (உச்ச வரம்பினை ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1978) 47 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

146. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1998-99 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1997-98 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு. (1948 ஆம் ஆண்டு மின்சார (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

173. மானியக் கோரிக்கை எண்கள் 24 மற்றும் 53 - பெருந் தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

174. தொழில்கள் பற்றிய செயலாக்கத் திட்டம், 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

175. பெருந் தொழில்கள் பற்றிய செயல் திட்ட ஆய்வுரை, 1997-98. (தமிழ், ஆங்கிலம்)

176. புவியியல் மற்றும் சுரங்கத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

177. சர்க்கரைத் தொழில் பற்றிய செயல்முறைத் திட்டம், 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

178. தமிழ்நாடு அரசு சர்க்கரைத் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

179. தமிழ்நாடு அரசு புவியியல் மற்றும் சுரங்கவியல் இயக்ககத்தின் 'குடிமக்கள் உரிமை ஆவணம்' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

180. தமிழ்நாடு கனிம வளர்ச்சிக்கான நிறுவன சாசனம். (தமிழ், ஆங்கிலம்)

181. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஒன்பதாவது அறிக்கை, 1997-98.

182. பொதுக் கணக்குக் குழுவின் நூற்றுப் பத்தாவது அறிக்கை, 1997-98.

183. பொதுக் கணக்குக் குழுவின் நூற்றுப் பதினொன்றாவது அறிக்கை, 1997-98.

184. பொதுக் கணக்குக் குழுவின் நூற்றுப் பன்னிரண்டாவது அறிக்கை, 1997-98.

185. பொதுக் கணக்குக் குழுவின் நூற்றுப் பதிமூன்றாவது அறிக்கை, 1997-98.

186. பொதுக் கணக்குக் குழுவின் நூற்றுப் பதினான்காவது அறிக்கை, 1997-98.

187. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பத்தாவது அறிக்கை, 1997-98.



**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.1,18,64,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, நாளை (15-5-1998) இரண்டு மானியங்கள் ஒன்றாக எடுத்துக் கொள்ளப்படுகின்ற காரணத்தால், அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுப்படி நாளை வினாக்கள்-விடைகள் நேரம் தவிர்க்கப்படும். அதற்கான தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களை முன்மொழியுமாறு அழைக்கிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 15-5-1998 அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை வினாக்கள்-விடைகள் நேரம் தவிர்க்கப்படும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (15-5-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை, பிற்பகல் 1-56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



ஈரோடு அருகில் முட்டை பதனிடும் தொழிற்சாலை டிட்கோ-வினால் இணைத் துறையில் நிறுவப்பட்டு, வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. இது ஒரு 100 விழுக்காடு ஏற்றுமதி வாய்ப்புள்ள நிறுவனமாகும்.

இம்மாநிலத்தில் கோழி வளர்ப்புத் தொழில் பாராட்டத்தக்க வகையில் வளர்ந்துள்ளது. இது அவ்வப்போது முட்டை மற்றும் கறிக்கோழி உற்பத்தியில் உபரி நிலையைத் தோற்றுவிக்கிறது. இக்காரணத்தால் ஏற்படும் விலைச்சரிவைத் தடுக்கும்பொருட்டு, கோழிக் குஞ்சுகள், உற்பத்தியாளர்களால் பொரிப்பு நிலையிலேயே அழிக்கப்படுகின்றன. இந்நிலையை மாற்றி இவற்றின் உற்பத்தியை மேலும் பெருக்கிட 100 விழுக்காடு ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட கோழிக்கறி பதனிடும் தொழிற்சாலை ஒன்றை 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டிட்கோ நிறுவனம் இணைத் துறையில் நிறுவி வருகிறது. கோழி வளர்ப்பில் முன்னோடியாகத் திகழும் பண்ணை ஒன்றை சக தொழில் முனைவோராகக் கொண்டு, கோவை மாவட்டத்தில் இத்தொழிற்சாலை நிறுவப்படுகிறது. அடுத்த ஆண்டு இது செயல்படும்பொழுது 300 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பையும், 3,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பையும் இத்தொழிற்சாலை வழங்கும்.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில், 32 கோடி ரூபாய் திட்டச் செலவில் "உறைய வைக்கப்பட்ட" பிரெஞ்சு வறுவல்கள் தயாரிப்பதற்கு, 100 விழுக்காடு ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழிற்சாலை ஒன்றை, வெளிநாடுவாழ் இந்தியர் தம் நிறுவனம் ஒன்றுடன் இணைந்து, டிட்கோ நிறுவி வருகிறது. இதற்கு ஆண்டுக்கு ஏறத்தாழ 18,000 டன் உருளைக்கிழங்கு தேவைப்படும். இந்த வறுவல் பொருள்களை ஜப்பான், சிங்கப்பூர், மலேசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்புகள் உள்ளன. இதன் மூலம் 120 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும் 1,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

டிட்கோவும், மும்பையைச் சேர்ந்த என்.கே. டெக்ஸோபுட் நிறுவனமும் சேர்ந்து, மணிக்கு 50 டன் எடையுள்ள மாம்பழத்தைப் பதனிடும் திறனுடையதும், முழுவதும் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டதுமான, பெரிய தொழிற்சாலை ஒன்றை ஏறத்தாழ 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தர்மபுரி மாவட்டம் ஓசூர் வட்டத்தில் நிறுவும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

ஏறத்தாழ 39 கோடி ரூபாய் செலவில் கல்கத்தா நிறுவனம் ஒன்றுடன் பொள்ளாச்சி அருகில், 100 விழுக்காடு ஏற்றுமதியை

நோக்கமாகக் கொண்ட, 20,000 டன் தேங்காய் பதனிடும் தொழிற்சாலை ஒன்றை டிட்கோ நிறுவ உள்ளது. இதன் கட்டுமானப்பணி விரைவில் தொடங்கும்.

தமிழ்நாட்டின் வேளாண் வணிகம் குறித்த விவரங்களை அறிய டி.ஈ.சி.எஸ். (Tata Economic Consultancy Services) மூலம், டிட்கோ விரிவான ஆய்வு ஒன்றைத் தொடங்கியுள்ளது. இதன்மூலம் அத்தொழிலுக்கு உள்ள பிரச்சினைகள், தோட்டப்பயிர் பொருள்களின் சேமிப்பு மற்றும் போக்குவரத்துக்கு ஆதரவான அடிப்படை வசதிகள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ளவும், அவற்றின்மூலம் புதிய தொழில்களுக்கான வாய்ப்புகளைக் கண்டறியவும் முடியும். பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றைப் பதப்படுத்துதல், கோழிக்கறியைப் பதப்படுத்துதல் போன்ற துறைகளில், சுமார் 300 கோடி ரூபாய் மொத்த முதலீட்டில், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படுவதற்குத் தயார் நிலையில் உள்ளன.

இத்தாலியைச் சேர்ந்த நோவா சி.எம்.பி. நிறுவனம், நுரை இரப்பருடன் கூடிய மற்றும் நுரை இரப்பர் அற்ற பி.வி.சி. தகடுகள், ஆண்டுக்கு 8,400 டன் உற்பத்தி செய்யும் வகையில், புதிய தொழிற்சாலை ஒன்றை, சென்னையில் டிட்கோவுடன் சேர்ந்து இணைத் துறையில், 45 கோடி ரூபாய் செலவில் நிறுவி வருகிறது. இதன் உற்பத்தியில் 50 விழுக்காடு ஏற்றுமதி செய்யப்படும்.

சென்னைக்கருகே 75 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், விமானம் மூலம் சரக்குகளை ஏற்றுமதி/இறக்குமதி செய்வதற்கென்றே தனியாக மாநகர வளாகம் ஒன்றை ரூ.75 கோடி மதிப்பீட்டில் நிறுவ டிட்கோ உத்தேசித்துள்ளது. சென்னை விமான நிலையத்திற்கு அருகில் சுங்கத் தீர்வைக்குட்பட்ட பல்வேறு வகைச் சரக்குகளுக்குச் சேமிப்பு கிடங்குகள் மற்றும் சேமிப்பு இடங்கள் ஆகியவற்றை உருவாக்குதல், விரைவாகச் சரக்குகளை ஏற்றி இறக்குதல், ஒப்பந்த அடிப்படையில் போக்குவரத்துப் பணிகளுடன் சரக்குக் கட்டணம் வசூல் செய்தல், சரக்கு முகவர்கள் அப்பகுதியில் சேமிப்புக் கிடங்குகளையும், அலுவலகங்களையும் அமைத்துக்கொள்ள வாய்ப்புகளை ஏற்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும்.

சென்னைக்கருகே புதிய பன்னாட்டு விமான நிலையம் ஒன்றை நிறுவ அல்லது தற்போது சென்னை விமான நிலையத்திற்கு அருகில்,



## இணைப்பு

*(56 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**தமிழ்நாடு அரசின் தொழில் கொள்கையும் - திட்டங்களும் 1998-99**

**கோரிக்கை எண் 24—தொழில்கள்**

**கோரிக்கை எண் 53 - தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு**

இந்தியாவின் தொழில் முன்னேற்றத்தைப் பொறுத்தமட்டில் தமிழ்நாடு முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இம்மாநிலம் பலதரப்பட்ட தொழில் அடிப்படை ஆதாரங்களைப் பெற்றுள்ளதோடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டினையும் பெற்று உள்ளது. இந்நிலையில் ஏற்கெனவே அடைந்த முன்னேற்றத்தினை மேலும் பெருக்கும் வகையில் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் இவ்வரசு தீவிரமாக எடுத்து வருகிறது.

2. தாராளமயமாக்கப்பட்ட இன்றையப் பொருளாதாரச் சூழ்நிலையில், அடிப்படை வசதிகள் சிறப்பாக உள்ள மற்றும் அவற்றில் அதிக கவனம் செலுத்தும் மாநிலங்கள் தொழில் துறையில் வெளியார் முதலீடுகளை ஈர்ப்பதில் வெற்றி கண்டு வருகின்றன என்ற உண்மையைக் கவனத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் மின்சாரம், சாலைவசதிகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதிலும் அதிகப்படுத்துவதிலும் தமிழ்நாடு அரசு இன்று முன்னைவிட அதிக முனைப்பும் கவனமும் செலுத்துகிறது.

3. ஃபோர்டு, யூண்டாய் மற்றும் எச்.எம். மிட்சுபிஷி ஆகிய மூன்று பெரிய கார் தயாரிக்கும் தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இவற்றின் மூலமாக, தமிழ்நாட்டின் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிலும் வேகமாக முன்னேறி வருகின்றது. நாட்டில் தயாரிக்கப்படும் மற்றும் ஏற்றுமதி ஆகும் உதிரி பாக உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு தற்போது கணிசமான அளவில் அதிகரித்து உள்ளது. பல்வேறு உதிரி பாகங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் தற்போது நிறுவப்பட்டு வருகின்றன. இதனைக் கருத்தில்கொண்டு தமிழ்நாடு ஒரு "முந்துதல் துறை" (Thrust Sector) ஆக இதனை அறிவித்துள்ளது. உணவு பதனிடும் துறை (Food Processing) மற்றும் தகவல்

தொழில்நுட்பத் துறை (Information Technology) ஆகியவையும் "முந்துதல் துறைகள்" ஆக அறிவிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் தொழில் கொள்கை. வேகமாக வளர்ந்துவரும் இத்துறைகளில் தனியார் துறை முதலீட்டை ஈர்க்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் தொழில் முனைவோர்களை மிகுந்த அளவில் தமிழகத்தின்பால் ஈர்க்கும் நோக்கத்துடன் பல்வேறு நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4. இந்த உயரிய இலக்கை அடைவதற்குப் பின்வரும் ஐந்து பயனுள்ள கொள்கைகளை அரசு செயல்படுத்தி வருகிறது:—

1. பொதுவான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேலும் அதிகப்படுத்துதல்.

2. தொழில் முனைவோர்க்கு எளிதில் நிலம் கிடைக்கும் வகையில், பல்வேறு தொழிற் பேட்டைகளையும், பூங்காக்களையும் உருவாக்குதல்.

3. குறிப்பிட்ட தொழில் வகைகளுக்கெனத் தனியே கொள்கை விளக்கக் குறிப்புகளை உருவாக்குதல்.

4. புதிதாகத் தொடங்கப்படும் தொழில்களுக்கும், பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் தொடங்கப்படும் தொழில்களுக்கும் பலதரப்பட்ட சலுகைகளை அளித்தல்.

5. புதிய வழிகாட்டும் நெறிகளை உருவாக்குதல் மற்றும் புதிய தொழில்களில் பங்கு ஏற்றல்.

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ)**

தனியார் துறை தொழில் முனைவோருடன் கூட்டு சேர்ந்து இணைத் துறைத் திட்டங்களைக் கண்டறிந்து அவற்றைச் செயல்படுத்துவது தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முக்கிய திட்டமாகும். தனியார் துறை முதலீடுகளைப் பெரிதும் ஈர்த்திடும் விதத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசின் கொள்கைகளுக்கு இணங்க, இம்மாநிலத்தில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் மற்றும் அதிகப்படுத்தும் நோக்கத்துடன் 'டிட்கோ' தனது செயல்முறைக் கவனத்தை (FOCUS) திருத்தி அமைத்துப் பணியாற்றி வருகிறது.

தமிழ்நாட்டில் உணவு பதனிடும் தொழிலுக்கு எதிர்காலத்தில் சிறந்த வாய்ப்பு உள்ளது என்று ஆய்வுகள் (studies) வெளிப்படுத்தி உள்ளன. கடந்த ஆண்டு ஜூலை மாதம் 41 கோடி ரூபாய் முதலீட்டில்



டன் என்பதை 5 இலட்சம் டன் என உயர்த்துவதற்கான செயற்குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி மற்றும் அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும். இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி இச்செயல் திட்டத்திற்கு 110 கோடி ரூபாய் வரை உதவிசெய்திட அதன் ஒப்பந்த இசைவுக் கடிதத்தை ஏற்கெனவே வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள ரூ. 50 கோடி அரசு/உள்நிதி ஆதாரங்கள் மூலம் சரிவிகித முறையில் திரட்டப்படும்.

**மாயனூரில் உள்ள அழுத்தப்பட்ட கல்நார் குழாய் தயாரிக்கும் ஆலையை பல்திறப்படுத்துதல்**

விற்பனை பெருகி வருமானமும் அதிகரித்து வரும் நிலையில், இந்த ஆலை அதன் பழைய நிலையிலிருந்து மாறி ஆதாயம் ஈட்டத் தொடங்கியுள்ளது. எனினும், இந்த ஆலை நிரந்தரமாக ஆதாயம் ஈட்டும் வகையில் சிமெண்ட் தகடு தயாரிக்கும் பணியையும் மேற்கொள்ள தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் முடிவு செய்து, கூட்டு முயற்சி நிறுவனமாக இதனை மாற்ற உத்தேசித்துள்ளது. கூட்டு முயற்சிக்கான பங்கு நிறுவனத்தைத் தேர்வு செய்வதில் ஆலோசனை வழங்கவும், நடைமுறைகளைக் கண்டறியவும் ஏற்ற ஆலோசனை அமைப்பைத் தேர்வு செய்யும் முயற்சியில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

**தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் (டெல்)**

இந்த நிறுவனம் தொழில் வெடி மருந்து, வெடி ஊக்கி மற்றும் வெடித்திரி தயாரிக்கவும் அவைகளை விற்பனை செய்யவும் தோற்றுவிக்கப்பட்டது. இது டிட்கோவின் துணை நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் இப்போதைய வருட நிர்மாணத் திறன் பின்வருமாறு:—

| | |
|---|---|
| என்.ஜி. வெடிமருந்து/கலவை | 16,000 டன்கள் (ஒரு வருடத்திற்கு) |
| வெடி ஊக்கிகள் எண்ணிக்கை | 4.50 கோடி |
| வெடித்திரி | 90 இலட்சம் மீட்டர்கள் (ஒரு வருடத்திற்கு) |

[1998 மே 14

## 1996-97 வருடத்திற்கான செயல்திறன்

1996-97 ஆம் ஆண்டு இந்நிறுவனம் முந்தைய ஆண்டிற்கான விற்பனை 50.56 கோடி ரூபாயைத் தாண்டி 52.40 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்து சாதனை புரிந்துள்ளது. 1996-97 இல் இந்நிறுவனம் நடப்பு இலாபமாக 18.79 கோடி ரூபாயையும், நிகர இலாபமாக 92.64 இலட்சம் ரூபாயையும் ஈட்டியுள்ளது.

## நிறுவனத்தின் சீரமைப்புத் திட்டத்திற்கான பி.ஐ.எப்.ஆர்.-ன் பரிசீலனையும், அரசாங்கத்தின் பரிந்துரைகளும்

இந்நிறுவனம் ஒரு நலிந்த நிறுவனமாக அறிவிக்கப்பட்டு, முதலில் தமிழ்நாடு அரசு, நிறுவனத்தை சீர் அமைப்பதற்காக ஒரு தொழில் முனைவோரைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்தது. இதற்கிடையில் நிறுவனத்தைச் சீரமைக்க ஐ.டி.பி.ஐ. நிறுவனத்தைச் செயல் ஏஜெண்டாக பி.ஐ.எப்.ஆர். நியமித்தது.

இதற்கிடையில் நிர்வாகத்தின் சீரிய நடவடிக்கைகளின் விளைவாக, இந்நிறுவனத்தின் செயல்திறன் சிறப்படைந்து உற்பத்தி மற்றும் விற்பனை அதிகரித்து ரொக்க இலாபம் ஈட்டியுள்ளது. எனவே, தமிழ்நாடு அரசு இந்நிறுவனத்தைத் தொடர்ந்து பொதுத் துறை நிறுவனமாக நடத்த முடிவு செய்து, பி.ஐ.எப்.ஆர் மூலம் நலிந்த நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளைப் பெற்றிட ஒரு சீரமைப்புத் திட்டத்தை உருவாக்கி செயல் ஏஜெண்டிடம் சமர்ப்பித்துள்ளது. இத்திட்டம், செயல் ஏஜெண்ட் மற்றும் பி.ஐ.எப்.ஆர்-ன் பரிசீலனையில் உள்ளது.

## ஏற்றுமதி

1997-98 ஆம் ஆண்டு இந்நிறுவனம் கிரீஸ் மற்றும் வங்காள தேசத்திற்கு 90 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வெடி மருந்து மற்றும் வெடி ஊக்கிகளை ஏற்றுமதி செய்தது. மேலும் சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்களை ஜோர்டான், மஸ்கட் மற்றும் இதர நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு, இந்நிறுவனத்தின் செயல்திறன் மேலும் முன்னேற்றம் அடையும். மொத்த விற்பனை 60 கோடி ரூபாய் அளவை எட்டி, ரொக்க இலாபமாக 3 கோடி ரூபாய் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.



1998 மே 14]

நவீன பன்னாட்டு விமான நிலைய வசதிக் கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்கு டிட்கோ திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் விமான நிலைய அடிப்படை கட்டமைப்பு வசதி குறித்து மத்திய அரசு வகுத்துள்ள புதிய கொள்கையை ஒட்டி அமையும்.

மலர்ச்செடி வளர்ப்பு அடிப்படை கட்டமைப்பு பூங்கா ஒன்றினை, ஓசூர் பகுதியில், 200 ஏக்கர் பரப்பளவில், சுமார் 20 கோடி ரூபாய் திட்ட முதலீட்டில் டிட்கோ அமைக்க உள்ளது. இதற்குரிய இணைத் தொழில் முனைவர் விரைவில் தேர்ந்தெடுக்கப்படுவார்.

பெரிய மாநகரங்களுக்கு வெளியே தொழில்களையும், தொழில் வளர்ச்சிக்கான வசதிகளையும் முதலீட்டாளர்கள் உருவாக்குவதனை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், டிட்கோ திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரி வட்டத்தில் ஓர் உயர் தொழில்நுட்பப் பூங்காவை நிறுவுகிறது. இந்தப் பூங்கா, அமெரிக்காவைச் சேர்ந்த இரண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து 700 கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவப்பட்டு வருகிறது. இந்த உயர் தொழில்நுட்பப் பூங்காவிற்குள் அமைக்கப்படும் புதிய தொழில்களில் செய்யப்படும் முதலீடு 7,000 கோடி ரூபாய் அளவுக்கு இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த உயர் தொழில் நுட்பப் பூங்காவிற்கான நிலத்தைக் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இந்த உயர் தொழில்நுட்பப் பூங்கா, 1999 ஆம் ஆண்டின் மத்தியில் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்கு தமிழகத்தில் மிகச் சிறந்த வாய்ப்புகள் உள்ளன. வெளிநாடுகளிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும் இத்துறையிலுள்ள பல்வேறு நிறுவனங்கள் சென்னையில் தங்களது அலுவலகங்களையும் வசதிகளையும் அமைத்து வருகின்றன. இவற்றின் தேவையைக் கருத்திற்கொண்டு, தரமணியில், 7 ஏக்கர் நிலத்தில் சுமார் 140 கோடி ரூபாய் செலவில் மென்பொருள் தொழில் நுட்பப்பூங்கா (Software Technology Park) ஒன்றை எல்காட் நிறுவனத்துடன் இணைந்து டிட்கோ அமைத்து வருகிறது. இந்தப் பூங்காவிற்கென சுமார் 7.5 இலட்சம் சதுர அடி கட்டடம் கட்டும் பணிகள் வரும் ஜூன் மாதம் தொடங்கி 1999 செப்டம்பர் மாதம் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வேகமாக வளர்ந்து வரும் இத்துறைக்கு தேவையான அடிப்படை வசதிகளை, இந்தப் பூங்கா வழங்கும். மேலும் தமிழ்நாட்டின் தொழில் துறை வளர்ச்சிக்கு, தொழில் மூலதன நிதி (Venture Capital) வசதியின் பங்கு மிக முக்கியமானது. ஆரம்ப நிலையில் உள்ள தகவல் தொழில்நுட்பத் துறையில், தொடக்க நிலையில்

[1998 மே 14

உள்ள தொழில் முனைவோருக்கு உதவி, அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு டிட்கோ, கட்டமைப்பு வசதிகளைக் குத்தகைக்கு விடுதல் மற்றும் நிதி நிறுவனம் (ILFS), பாரத சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் (SIDBI), நிறுவனங்களுடன் சேர்ந்து 30 கோடி ரூபாய் அளவில் கட்டமைப்புத் தொழில் முதலீடு ஒன்றை அமைத்துள்ளது. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் இத்தகைய நிதி வசதி முதன்முதலாக உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய சாலை வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன், ஐ.எல்.எப்.எஸ். (ILFS) நிறுவனம், உலகிலேயே கட்டணச் சாலை நிர்வாகத்தில் (Toll Road Management) ஈடுபட்டுள்ள மிகப் பெரிய நிறுவனங்களில் ஒன்றான, பிரான்சு நாட்டைச் சேர்ந்த, டிரான்ஸ்ரூட் இன்டர்நேஷனல் ஆகிய நிறுவனங்களுடன் டிட்கோ ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. தற்பொழுது 6 சாலைப் பகுதிகளை மேம்படுத்துவதற்கான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. விரைவில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த சாலைகளில் பணிகள் தொடங்கும்.

சுமார் 3,000 கோடி ரூபாய் செலவில் ஆந்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த நாகார்ஜுனா குழுமம், டிட்கோவும் இணைந்து கடலூரில் அமைந்து வரும் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட, ஆண்டிற்கு 6 மில்லியன் டன் உற்பத்தித் திறன் கொண்ட, பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலையின் கட்டுமானப் பணிகள் இப்பொழுது தொடங்கும். இப்பணி 2000 ஆம் ஆண்டு இறுதியில் முடிவுற்று, ஆலை இயங்க ஆரம்பிக்கும் போது 1,500 பேருக்கு மேல் நேரடி வேலைவாய்ப்பும் சுமார் 5,000 பேருக்கு மேல் மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்)

### நவீனப்படுத்துதல்/விரிவுபடுத்துதல்/பல்திறப்படுத்துதல் குறித்து செயற் குறிப்புகள்

ஆலங்குளம் சிமெண்ட் ஆலை

160 கோடி ரூபாய் திட்ட செலவில் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை ஈரசெய்முறையிலிருந்து நவீன உலர் செய்முறைக்கு மாற்றி, அதன் தற்போதைய உற்பத்தித் திறனான ஆண்டொன்றுக்கு 4 இலட்சம்



1998 மே 14]

## தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்)

தமிழ்நாட்டில் புதிய தொழில்கள் உருவாவதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்வதற்காக அரசின் முகவராக இயங்கச் செய்யும் நோக்குடன், 1971 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) தொடங்கப்பட்டது.

புதிய தொழில்களுக்குக் காலக்கடன் (Term Loan) வழங்குவது, தேவையான அடிப்படை வசதிகளுடன் புதிய தொழில் வளாகங்களை (Industrial Estates) அமைத்துத் தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்வது போன்ற முக்கிய பணிகளை இந்நிறுவனம் கவனித்து வருகிறது. இவை தவிர, பின்வரும் பணிகளையும் சிப்காட் நிறுவனம் ஆற்றி வருகின்றது:-

1. தொழிற்சாலைகளுக்கான விற்பனை வரி வசூல் தள்ளிவைப்பு - தள்ளுபடித் திட்டத்தின்கீழ் தகுதிச் சான்றிதழ் வழங்குதல்.

2. சென்னை ஏற்றுமதி செயல்முறை மண்டல தொழிற் சாலைகளுக்கும் 100 சதவிகிதம் ஏற்றுமதியை (E.O.U.) நோக்கமாகக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் விற்பனை வரி (TNGST) ஈடு செய்யும் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

3. குறிப்பிட்ட பகுதி மற்றும் தொழிற் பிரிவுகளுக்காக மாநில மூலதன மானியம் தவிர மின் உற்பத்திச் சாதனங்கள் மற்றும் மகளிருக்கான வேலைவாய்ப்பு போன்றவற்றிற்குக் கூடுதல் மானியம் அளித்தல்.

4. பெருந்தொழில் மற்றும் நடுத்தர தொழில்களுக்கு வழிகாட்டும் சேவைப்பணி.

### 1. வளாகங்களின் வளர்ச்சி

#### (அ) தற்போதுள்ள வளாகங்கள்

1. சிப்காட் நிறுவனம் இராணிப்பேட்டை, ஓசூர், கும்மிடிப்பூண்டி, கடலூர், மானாமதுரை, புதுக்கோட்டை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் தொழில் வளாகங்களை வெற்றிகரமாக நிறுவியுள்ளது.

2. கும்மிடிப்பூண்டி தொழில் வளாகத்தில் 587.83 ஏக்கர் பரப்பளவில் இரண்டாவது திட்டம் மேம்படுத்தப்படுகின்றது. இதில் 224 ஏக்கர்

பரப்பில் உருவாகும் ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழில் பூங்கா ஒன்றும் அடங்கும். இந்த இரண்டாவது திட்டம், மேலும் 246 ஏக்கர் பரப்பளவில், விரிவாக்கம் செய்யப்பட உள்ளது.

3. ஏறத்தாழ 220 ஏக்கரில் கடலூரில் இரண்டாவது மையத்திற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது. ஏறத்தாழ 105 ஏக்கர் நிலம் வருவாய்த் துறையால் சிப்காட் வசம் இதுவரை ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதில் சுமார் 35.34 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது.

4. ஒசூர் இரண்டாவது திட்டத்தை விரிவாக்குவதற்காக 128 ஏக்கர் பட்டா நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 56 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்திற்கான உரிமை மாற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது. ஒசூர் இரண்டாம் கட்டத்தின் இரண்டாவது விரிவாக்கத்திற்கென மேலும் 212 ஏக்கர் நிலம் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டு நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5. சுமார் 798 ஏக்கரில் இராணிப்பேட்டையில் மூன்றாவது திட்டம் மேம்படுத்தப்படுகின்றது. நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் அவசரப் பிரிவின்கீழ் நிலம் எடுக்கப்பட்டு வருகிறது.

6. சுமார் 1,616 ஏக்கரில் தூத்துக்குடியில் இரண்டாவது திட்டம் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான அரசின் நிர்வாக ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

**(ஆ) புதிய தொழில் பூங்காக்கள் (New Industrial Parks)**

1. தொழில் துறையில் பின்தங்கிய திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டத்தில், ஒரு புதிய தொழில் வளாகம் சிப்காட் நிறுவனத்தால் மேம்படுத்தப்படவுள்ளது. இதற்காக 1,350 ஏக்கர் நிலத்தை சிப்காட் நிறுவனம் தேர்வு செய்துள்ளது. மாநில அரசு, முதல் கட்டமாக 600 ஏக்கர் நிலத்தில் 17.80 கோடி ரூபாய் திட்டச் செலவில் இவ்வளாகத்தை அமைக்க அனுமதி அளித்துள்ளது.

2. காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம் இருங்காட்டுக் கோட்டையில் ஒரு புதிய தொழில் பூங்கா அமைக்கப்படுகிறது. இதற்காக 1,829 ஏக்கர் நிலம் சிப்காட் நிறுவனத்தால் தேர்வு செய்யப்பட்டு, நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.



**2. திருப்பெரும்புதூர் தொழில் பூங்கா**

காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர் வட்டத்தில் போண்டூர், திருப்பெரும்புதூர்-சி, இருங்குளம், மாம்பாக்கம், திருமங்கலம், சிறுமாங்காடு, சண்டவல்லூர் ஆகிய கிராமங்களைச் சார்ந்த சுமார் 2,469 ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட் நிறுவனத்தினால் ஒரு தொழில் பூங்கா அமைக்க முடிவு செய்யப்பட்டு - தமிழக அரசு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் அவசரப் பிரிவின்கீழ் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**3. நெமிலி தொழில் துணை நகரம்**

காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர் வட்டத்தில் நெமிலி, திருப்பெரும்புதூர் - ஆ ஐயக்கொளத்தூர், மன்னூர், வளர்புரம் ஆகிய கிராமங்களைச் சார்ந்த சுமார் 2,429 ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட் நிறுவனத்தினால் ஒரு தொழில் துணை நகரம் அமைக்க முடிவு செய்யப்பட்டு - தமிழக அரசினால் நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் அவசரப் பிரிவின்கீழ் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**4. வடமங்கலம் தொழில் பூங்கா**

காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர் தாலுகாவில் திருப்பெரும்புதூர்-சி. வடமங்கலம், மாம்பாக்கம் மற்றும் ஏனைய கிராமங்களைச் சார்ந்த சுமார் 1,200 ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட் நிறுவனத்தினால் இக்கி ரிசார்ட்டின் பின்புறத்தில் ஒரு தொழில் பூங்கா அமைக்க முடிவு செய்யப்பட்டு, அதற்காக தமிழக அரசு நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் அவசர பிரிவின்கீழ் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**5. புதிய தொழில் வளாகம்**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கோயம்புத்தூர் (தெற்கு) வட்டத்தில் சுமார் 3,800 ஏக்கர் நிலப்பரப்பில் புதிதாக தொழில் வளாகம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு, நிர்வாக ஒப்புதல் அரசினால் அளிக்கப்பட்டுள்ளது.

**6. கும்மிடிப்பூண்டி மூன்றாம் வளாகம் - துணை நகரம்**

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் மூன்று கிராமங்களைச் சார்ந்த சுமார் 1,787 ஏக்கர் நிலப்பரப்பில் தொழில் நகரியம் ஒன்றும்,

கும்மிடிப்பூண்டி மூன்றாம் வளாகம் ஒன்றும் சிப்காட் நிறுவனத்தினால் அமைக்க நிலத்தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் இந்த ஆண்டில் செயல்படுத்தப்படும்.

### இ. ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழிற் பூங்கா (EPIP)

மத்திய அரசு 10 கோடி ரூபாய் பங்குத் தொகையுடன் ஒரு ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழிற் பூங்கா அமைக்க அனுமதி அளித்து உள்ளது. இதற்காக கும்மிடிப்பூண்டி இரண்டாவது திட்டத்தில் 19.90 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 224 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அடிப்படை வசதிகள் அளிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. தொழில் முனைவோருக்கு விரைவில் இங்கு தொழிற்சாலைகள் அமைக்க நிலம் ஒதுக்கப்படும்.

### மாபெரும் தொழில்களின் தற்போதைய வளர்ச்சி (Mega Projects)

கடந்த மூன்று ஆண்டுகளில் சிப்காட் நிறுவனம் மூன்று மாபெரும் தொழில்களை இம்மாநிலத்தில் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு உள்ளது. அவை ஸ்டெர்லைட் இண்டஸ்டிரிஸ் (இந்தியா) லிமிடெட், டூபாண்ட் லிமிடெட், யூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் ஆகியனவாகும்.

தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடியில் உள்ள சிப்காட் தொழில் வளாகத்தில் செம்பு உருக்கு மற்றும் மசகு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளை 1,300 கோடி ரூபாயில் ஸ்டெர்லைட் இண்டஸ்டிரீஸ் (இந்தியா) லிமிடெட் நிறுவனம் உருவாக்கியுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் உள்ள சிப்காட் தொழில் வளாகத்தில் டூபாண்ட் என்ற நிறுவனம் நைலான் 6.6 தொழிற்சாலையை 600 கோடி ரூபாய் முதலீட்டில் (முதல் கட்டம் 200 கோடி ரூபாய்) உருவாக்கியுள்ளது. கடந்த ஜனவரி மாதம் இங்கு உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர் வட்டம் இருங்காட்டுக்கோட்டையில் உள்ள சிப்காட் தொழில் வளாகத்தில், யூண்டாய் மோட்டார் (இந்தியா) லிமிடெட் என்ற நிறுவனம் 2,450 கோடி ரூபாய் முதலீட்டில் மோட்டார் வாகன தொழிற்சாலையை உருவாக்கி வருகிறது. 1997 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை 488.87 ஏக்கர் நிலத்தை இந்நிறுவனத்திற்கு சிப்காட் ஒதுக்கியுள்ளது. கட்டுமானப்



பணிகளை முடித்து, வரும் அக்டோபர் மாதத்தில் இந்நிறுவனத்தில் மோட்டார் வாகன உற்பத்தி தொடங்க இருக்கிறது.

இம்மூன்று மாபெரும் தொழில்கள்மூலம் 4,350 கோடி ரூபாய் முதலீடும், சுமார் 3,800 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 5,350 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் உருவாகிறது.

### திட்ட நிதியுதவி (Project Finance)

1997-98-ம் ஆண்டிற்கு 125 கோடி ரூபாய் ஒப்புதல் வழங்க நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 30-11-1997 வரை 27 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஊக்குவிப்பின் மூலம் 400 கோடி ரூபாய் வரை முதலீடும், 7,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 1. இயந்திரத்தின் மீதான குத்தகைக் கடன் உதவி

இத்திட்டத்தின்கீழ் தொழில் முனைவோர் இயந்திரம் கொள்முதல் செய்வதற்கு, இயந்திரத்தின் விலையில் 100 சதவிகித தொகையும் குத்தகைக் கடனாக வழங்கப்படவுள்ளது.

### 2. இயந்திரப்பட்டியின் மீதான கடன் உதவி (Bill Discounting Scheme for Capital Goods)

இத்திட்டத்தின்கீழ் தொழில் முனைவோர் மூலதனப்பொருள் கொள்முதல் செய்வதற்கு அவற்றின் விலையில் 90 சதவிகிதம் கடனாக வழங்கப்படவுள்ளது.

### இல்ஜின் தொழிற்சாலை

திருப்பெரும்புதூருக்கு அருகில் இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் கார்களுக்குத் தேவைப்படும் உதிரி பாகங்களைத் தயாரிப்பதற்காக தென்கொரியா நாட்டைச் சேர்ந்த இல்ஜின் கம்பெனி 40 கோடி ரூபாய் முதலீட்டில் புதிய தொழிற்சாலை ஒன்றை அமைத்து வருகிறது.

இத்தொழிற்சாலையை அமைப்பதற்கான ஒப்பந்தம் 2-7-1997 அன்று என்னுடைய முன்னிலையில் கையொப்பமானது. இத்தொழிற்சாலை தமிழகத்திற்கு வருவதைத் தொடர்ந்து, கார்களுக்குத் தேவைப்படும் உதிரி பாகங்களைத் தயாரிப்பதில் அனுபவம் வாய்ந்த கொரியா

[1998 மே 14

நாட்டைச் சேர்ந்த சுமார் 15 நிறுவனங்கள் மோட்டார் வாகனங்களுக்கான உதிரப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் அமைத்து வருகின்றன.

## தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (டாசிட்)

தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் தொழில் வளர்ச்சி மையங்களையும், தொழில் வளாகங்களையும் அமைப்பதுடன் தொழிற்சாலைப் பகுதிகளில் அடிப்படை வசதியிலுள்ள குறைகளை நிறைவு செய்வதிலும் கவனம் செலுத்தி வருகின்றது.

2. இந்நிறுவனம் ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறையிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் கங்கைகொண்டானிலும் இரு வளர்ச்சி மையங்களை அமைத்து வருகிறது. கங்கைகொண்டான் வளர்ச்சி மையத்திற்காக 2,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. பெருந்துறையிலும் சுமார் 2,500 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. பெருந்துறையில் மீதமுள்ள 300 ஏக்கர் நிலம் விரைவில் கையகப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பெருந்துறை வளர்ச்சி மையத்தில், 4 எம் ஜி டி. அளவு நீர் வழங்கும் திட்டம் செயல்பாட்டில் உள்ளது, இவ்வாண்டு முடிவடையும். கங்கை கொண்டான் வளர்ச்சி மையத்தில் 1 எம் ஜி டி நீர் வழங்கும் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. பெருந்துறை வளர்ச்சி மையத்தில் சாலை அமைத்தல், கழிவுநீர் கால்வாய்கள் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கான பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்திலுள்ளது.

3. இந்நிறுவனம் நிலக்கோட்டையில் ஒரு தொழில் வளாகம் அமைப்பதற்காக 380 ஏக்கர் நிலத்தினைக் கையகப்படுத்தியுள்ளது. இந்நிறுவனத்தால் அமைக்கப்படவுள்ள பர்கூர் தொழில் வளாகத்திற்காக 1,053 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. நிலக்கோட்டையில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணி முன்னேற்ற நிலையில் உள்ளது. பர்கூரில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

4. டாசிட், மணலி தொழிற்பகுதியில் சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கான செலவில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ள அங்குள்ள தொழிற்சாலைகளைச் சம்மதிக்க வைத்துள்ளதில் வெற்றி கண்டுள்ளது.



1998 மே 14]

முதற்படியாக 49 இலட்சம் ரூபாய் செலவில் மணலி-மாத்தூர் சாலையை மேம்படுத்தும் பணி செயல்படுத்தப்படவுள்ளது. அரசு மொத்த செலவில் 50 சதவிகிதத்தை ஏற்றுக்கொள்ள முன்வந்துள்ளது. மீதியை மணலி தொழிற்சாலைகள் சங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும். மணலி-மாத்தூர் சாலையை மேம்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

5. டாசிட், சென்னை நந்தம்பாக்கத்தில் ஒரு நிரந்தரக் கண்காட்சி மையத்தை அமைக்கவுள்ளது. இதற்காக வடிவமைத்தல், கட்டுமானம், தனதாக்குதல், நிர்வகித்தல், ஆகியவற்றிலும் அயல்நாட்டில் கண்காட்சிகளை நடத்தியது போன்றவற்றிலும் அனுபவம் நிறைந்த நிறுவனங்களிடமிருந்து வெளிநாட்டு நிறுவனங்கள் உட்பட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. இத்திட்டம் அமைத்தல், தனதாக்குதல் மற்றும் இயக்குதல் (BOD) அடிப்படையில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனையில் உள்ளன. இத்திட்ட செயல்பாடு 1998-ஆம் ஆண்டு தொடங்கும்.

6. டாசிட், கடலூர், செய்யூர் மற்றும் குளச்சல் துறைமுகங்களை மேம்படுத்தும் பணிக்கு முன்னோடி முகவராக அரசால் அமர்த்தப்பட்டுள்ளது. முதல்படியாக இரு தொழில்நுட்பப் பொருளாதார இயக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளன. அந்த ஆய்வுகளுக்கு 189 இலட்சம் ரூபாய் செலவாகும். இதன் முதற்கட்டமாக கடலூர் துறைமுகத்தை மேம்படுத்தவும், செய்யூரில் சிறு துறைமுகத்தை ஏற்படுத்துவதற்கான ஆய்வுகளை மேற்கொள்ளவும் அரசு முடிவு செய்துள்ளது.

7. அரசு தற்போது சென்னை சைதாப்பேட்டையில் கால்நடைத் துறையின் கீழுள்ள கால்நடை மருத்துவ வளாகத்திலுள்ள 13.30 ஏக்கர் நிலத்தில் 10 ஏக்கர் நிலத்தை வர்த்தக மற்றும் நிதி மையம் ஒன்று (Business-cum-Financial Centre) அமைக்கப்படுவதற்காக டாசிட்டுக்கு மாற்ற ஆணை பிறப்பித்துள்ளது.

8. தொழிற்சாலைகள் அமைவதற்கான நிலங்கள் உடன் கிடைக்காததுதான் தொழில் வளர்ச்சிக்கான முக்கிய நெருக்கடியாகும். இந்த அகற்றுவதற்காக அரசு 50 கோடி ரூபாயை மூன்று தவணைகளாக 1996-97-ஆம் ஆண்டு முதல் 1998-99 வரை ஒதுக்கீடு செய்து, அதன்மூலம் இனிவரும் தொழில் முனைவர்களுக்கு நிலம் வழங்குவதற்கு நிலம் கையகப்படுத்த டாசிட் பணிக்கப்பட்டிருக்கிறது.

[1998 மே 14

12,000 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, கையகப்படுத்தும் பணி தொடங்கப்பட்டு, பல்வேறு நிலைகளிலுள்ளது. ஒரு "நில வங்கியை" (Land Bank) உருவாக்கி அதன் மூலம் இனிவரும் முதலீட்டாளர்களுக்கு உடன் ஒதுக்கீடு செய்யவும் மற்றும் தொழில் நகரம், தொழில் வளாகம் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்திட ஆகும் செலவு சுமார் ரூ.300 கோடி என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசு நிதி ஒதுக்கீடு அன்றி, மற்ற வழிவகைகளில் நிதி திரட்டுவதும் ஆய்விலுள்ளது.

9. டாசிட் தோல் பதனிடும் தொழிற்சாலை அமைப்பதற்கெனத் தனிப்பட்ட தொழில் வளாகம் ஒன்றை அமைப்பதற்காக கடலூர் மாவட்டம், சிதம்பரம் தாலுக்காவிலுள்ள சிலம்பிமங்களம் கிராமத்தில் 300 ஏக்கர் நிலத்தை தேர்வு செய்துள்ளது. சென்னை மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தால் ஒரு தொழில்நுட்பப் பொருளாதார ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இதனுடன் ஒரு சுற்றுப்புற பாதிப்பு நிலவர அறிக்கையைத் தயாரிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்)**

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) முழுவதும் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான நிறுவனமாகும். மின்னணு மற்றும் அதன் தொடர்பான தொழிற்சாலைகளை உருவாக்குவது இதன் நோக்கமாகும். மேலும் கூட்டு/இணை/வழிகாட்டுத் துறை நிறுவனங்களையும் உருவாக்கி உள்ளது. தொலை தொடர்புச் சாதனங்கள் மின்னணு உதிரிபாகங்கள் மற்றும் கணினி மென்பொருள் சாதனங்கள் ஆகிய திட்டங்கள் இந்நிறுவனத்தால் ஏற்கெனவே உருவாக்கப்பட்டவைகளில் அடங்கும். தொழில்களுக்கான அடிப்படை வசதிகளை அமைத்துத் தருவதில் இந்நிறுவனம் தற்சமயம் ஈடுபட்டுள்ளது.

1997-98-ஆம் ஆண்டில், இந்நிறுவனம் 100 கோடி ரூபாய் விற்பனையை எட்டியுள்ளது.

**செயல்படுத்தவுள்ள புதிய திட்டங்கள்**

**தகவல் தொழில் நுட்பப் பூங்கா-அடிப்படை வசதிகள்**

மூன்று இலட்சம் சதுர அடி கட்டடத்தில் எல்காட் நிறுவனம் மூன்று இணைத் தொழில் முனைவோர்களுடன் சேர்ந்து மென்பொருள்



1998 மே 14]

பூங்கா (Software Technology Park) ஒன்றினைக் கோயம்புத்தூரில் நிறுவி வருகிறது.

எல்காட் நிறுவனம் கடந்த 9 வருடங்களாகத் தொடர்ச்சியாக நிகர இலாபம் ஈட்டி வருகிறது. இந்த ஆண்டும் இலாபம் ஈட்டி பொருளாதார ரீதியில் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

மைய அரசினால் நியமனம் செய்யப்பட்ட நிறுவனமாக இருந்து, எல்காட் நிறுவனம் EHTP ஏற்றுமதிப் பிரிவுகளை உருவாக்கி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 16 பிரிவுகள் ஏற்பளிக்கப்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்பத் துறையில் தனியார் துறையினரின் முதலீடுகளைப் பெருமளவில் ஊக்குவிக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு அரசு அண்மையில் "தகவல் தொழில்நுட்பத் தொழில் கொள்கை" ஒன்றை வெளியிட்டது. தொழில்களுக்குத் தேவைப்படும் அனைத்து அனுமதிகளையும் பெற்றுத்தர எல்காட் நிறுவனம் தொடர்பு அமைப்பாகச் செயல்படும்.

வெளிநாடுகளிலிருந்தும் நம்நாட்டின் பிற பகுதிகளிலிருந்தும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்களது அலுவலகங்களையும், வளர்ச்சி மையங்களையும் சென்னையில் அமைக்கும்பொருட்டு இங்கு வந்துள்ளன. இந்நிறுவனங்களுக்குத் தேவையான நிலம், அடிப்படை வசதிகள், தொலைபேசித் தொடர்பு ஆகியவற்றைப் பெற்றுத்தர எல்காட் உதவி புரிந்து வருகிறது.

செங்கல்பட்டு வட்டம், சோளிங்கபுரம் கிராமத்தில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மின்னணு நகரம் (இரண்டாவது கட்டம்) நிறுவுவதற்கு எல்காட் நிறுவனம், நிலத்தைக் கையகப்படுத்தி வருகிறது. இங்கு தொழில்கள் அமைக்க பல்வேறு பெயர் பெற்ற மென்பொருள் நிறுவனங்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன.

அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்காளர் அட்டை தயாரித்தல், கணினியில் ஓட்டுநர் உரிம அட்டை, குடும்பப் பொருள்கள் வழங்கு அட்டையில் மேல் அட்டை ஆகிய அரசு அளித்த பணிகளை எல்காட் மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பத் தலைமை நிறுவனமாக "தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பக் கல்வி மையம்" (டானிடெக்) அமைப்பதற்கு எல்காட் நிறுவனம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

[1998 மே 14

**புவியியல் மற்றும் சுரங்கத் துறை.**

புவியியல் மற்றும் சுரங்கத் துறை பின்வரும் முக்கியப் பணிகளைத் தொடர்ந்து செயலாற்றி வருகின்றது:-

1. கனிம ஆராய்ச்சி மற்றும் கனிம இருப்பு மதிப்பீடு செய்தல்.

2. உறுதி செய்த கனிமப் படிவங்களின் இருப்பினை மீண்டும் மதிப்பிட்டு அரசு சார்ந்த அல்லது தனியார் தொழிற்சாலைகளின் விரிவாக்கத் திட்டத்திற்கு வகை செய்தல்.

3. மலைப்பாங்கானப் பகுதிகளில் புவியியல் தொழில்நுட்ப ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

4. கனிம நிர்வாகம்.

5. சுரங்கத் துறை வருவாயைப் பெருக்குதல்.

6. தொழிற்சாலைகளுக்குத் தொழில் பணிகள் செய்தல்.

1996 ஆம் ஆண்டில் இந்த அரசு உருவாக்கிய ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலமுறை மிகவும் ஒளிவுமறைவற்ற நடைமுறையை உண்டாக்குவதோடு, ஏலம் கேட்போர் எண்ணிக்கையையும் உயர்த்துகிறது.

கொத்தடிமைப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட பெண் தொழிலாளர்களுக்கு உதவிடும் பொருட்டு, ஊரகப் பகுதிவாழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டக் குழுவினர் (டோகரா) ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலமுறையில் கலந்து கொள்ளாமல், 1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளில் விதி 8-ன் கீழ் நேரடியாகவே கல்குவாரிகளுக்கான குத்தகை வழங்கும் விதிகள் திருத்தி அமைக்கப்பட்டன.

சுற்றுப்புறச் சூழல் மற்றும் பாலங்கள் ஆகியவற்றைப் பாதுகாக்க, ஆற்றுப்படுகைகளில் மண்ணெடுப்பதற்கு இயந்திரங்களைப் பயன்படுத்துவது, விதிகளில் குறிப்பான சரத்துகளை ஏற்படுத்தி தடை செய்யப்பட்டுள்ளது. விதிகளை மீறுவதற்கும் மற்றும் விதிக்குப் புறம்பாக சிறு கனிமங்களை வெட்டியெடுப்பதற்கும் குறைந்தபட்ச அபராதத் தொகை 15,000/- ரூபாய்க உயர்த்தப்பட்டு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கனிம நிர்வாகம் இலகுவாகவும் மற்றும் சுமுகமாகவும் செயல்பட புதிய கிரானைட் கொள்கையை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.



1998 மே 14]

பட்டா நிலத்தில் பெருங்கனிமங்களுக்குச் சுரங்கக் குத்தகை வழங்குவதைப் பொறுத்தவரை புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**II. 1998-99 ஆம் ஆண்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள்**

பின்வரும் இடங்களில் புவியியல் ஆய்வு மேற்கொள்ளப்படும்:

1. பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள கிரிடேசியஸ் பாறை பள்ளங்களில் சுண்ணாம்புக் கல்லுக்கான ஆய்வு.

1998-99 ஆம் ஆண்டிற்கான செலவு ரூ.11.03 இலட்சம்.

2. தமிழகத்தில் சுரங்கப் பணியின்போது அப்புறப்படுத்தப்பட்ட கனிமக் கழிவுகளின் ஆய்வு.

1998-99 ஆம் ஆண்டிற்கான செலவு ரூ.4.21 இலட்சம்.

3. சேலம், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் பிளாட்டினம் வகையைச் சார்ந்த கனிமங்களைப் பற்றிய ஆய்வு.

1998-99 ஆம் ஆண்டிற்கான செலவு ரூ.5.34 இலட்சம்.

**தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்)**

தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) அறிவியல் ரீதியாக தமிழ்நாட்டில் பெருமளவில் கிடைக்கும் கருப்பு, சாம்பல், வெள்ளை மற்றும் பல வண்ணப் பாறைகள், குவார்ட்ஸ், பெல்ஸ்பார், வெர்மிகுலைட், சுண்ணாம்புக் கல், சிலிகா மணல், கிராபைட் போன்ற கனிமங்களை வெட்டியெடுத்து வருகிறது.

1997-98 ஆம் ஆண்டில் சுமார் 12,750 கன மீட்டர் கருப்பு மற்றும் பல வண்ணப் பாறைகளையும் 25,800 சதுரமீட்டர் முடிவடைந்த கிரானைட் பொருட்களையும் 1,14,250 மெட்ரிக் டன் உயர்வகை கனிமங்களையும் டாமின் நிறுவனம் உற்பத்தி செய்துள்ளது.

1997-98 ஆம் ஆண்டில் மொத்த விற்பனை ரூ.45 கோடியாகவும் இலாபம் ரூ.6 கோடியாகவும், அன்னியச் செலாவணி பெறப்பட்டது 26 கோடி ரூபாயாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

[1998 மே 14

பின்தங்கிய கிராமப்புறங்களில் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்திய வேலை வாய்ப்புகளை அதிகரிக்கலாம் என்ற அரசின் கொள்கைக்கிணங்க பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

**1) மாலிப்டினம் திட்டம்**

100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாலிப்டினம் செழுமைப்படுத்தும் திட்டம் ஒன்றினைச் செயல்படுத்த டாமின் நிறுவனம் முயற்சி எடுத்து வருகிறது. அரூர் வட்டம் வேலம்பட்டி கிராமத்தில் மாலிப்டினம் தாதுவை கண்டறிவதற்காக இந்தியப் புவியியல் துறை தீவிரமான ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறது. இவ்வாராய்ச்சிப் பணிக்காக டாமின் நிறுவனம் அத்துறைக்கு ரூ.1.11 கோடி கொடுத்துள்ளது. தமிழக அரசும் தனது பங்காக ரூ.1.80 கோடியை டாமின் நிறுவனம் மூலமாக இந்தியப் புவியியல் துறைக்கு ஒப்பளித்துள்ளது. மாதிரி இயந்திரங்களை அமைத்து தீவிர அகழ்வாராய்ச்சிப் பணியை மேற்கொள்வதற்காக கனிம அகழ்வாராய்ச்சி நிறுவனத்திற்கு ரூ.4.71 கோடி வழங்க மைய அரசு கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது.

**2) கூட்டு முயற்சியில் சிலிகா மணல் செழுமைப்படுத்தும் திட்டம்**

பிரான்சு நாட்டைச் சார்ந்த திருவாளர்கள் செயின்ட கோபெய்ன் என்ற நிறுவனத்துடன் இணைந்து ரூ. 15 கோடி முதல் ரூ.20 கோடி வரையிலான செலவில் ஆண்டு ஒன்றுக்கு 1,50,000 மெட்ரிக் டன் உற்பத்தித் திறனுடன் கூடிய சிலிகா மணல் செழுமைப்படுத்தும் திட்டத்தைக் கூட்டு முயற்சியில் செயல்படுத்த டாமின் நிறுவனம் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

**2) கூட்டு முயற்சியில் கிரானைட் தொழிற்சாலைகள் நிறுவுதல்**

பயன்படுத்தப்படாமல் உள்ள குத்தகை நிலங்களில் கிரானைட வெட்டியெடுத்து அவற்றை ஒழுங்குபடுத்தும் ஆலைகளைக் கூட்டு முயற்சியில் அமைக்க டாமின் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. கூட்டுத் தொழில் முனைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான வரையறை மற்றும் நிபந்தனைகள் இறுதியாக்கப்பட்டுள்ளன. இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் விரைவில் கோரப்படும்.



1998 மே 14]

**4) கார்னட் மணல் ஆலை**

கார்னட் மணலுக்கான குத்தகை டாமின் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. கார்னட் மணலைச் செழுமைப்படுத்தி கார்னட் பொருட்களைத் தயாரிப்பதற்காக கூட்டு முயற்சித் திட்டம் ஒன்றினைச் செயல்படுத்த டாமின் நிறுவனம் எண்ணியுள்ளது. கூட்டுத் தொழில் முனைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான வரையறை மற்றும் நிபந்தனைகள் பரிசீலனையில் உள்ளன.

**5) குவார்ட்ஸ் பொருட்களுக்கான கூட்டு முயற்சித் திட்டம்**

டாமின் நிறுவனத்தின் வசம் தரமான குவார்ட்ஸ் அமைந்துள்ள பகுதிகள் உள்ளன. தற்சமயம் இக்கனிமம் மதிப்பு கூட்டப்படாமல் கச்சாப் பொருளாகவே விற்கப்பட்டு வருகிறது. தரமிக்க குவார்ட்ஸ் துகள்கள், உருவாக்கிய குவார்ட்ஸ் ஆகியவற்றை உற்பத்தி செய்ய கூட்டு முயற்சியில் ஒரு ஆலை அமைக்க டாமின் நிறுவனம் எண்ணியுள்ளது.

**தமிழ்நாடு கிராபைட் நிறுவனம் (டான்கிராப்)**

சிவகங்கைக்கருகில் கிடைக்கும் கிராபைட் படிவங்களைப் பயன்படுத்தி கிராபைட் அடிப்படையிலான திட்டங்களை அமைத்து அவற்றில் முதலீட்டைப் பெருக்குவதற்காக, 1 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் முழுவதும் அரசுக்குச் சொந்தமான ஒரு நிறுவனமாக தமிழ்நாடு கிராபைட் நிறுவனம் 19-3-1997 அன்று நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தில் அரசு தனது தகைமைமுறை பங்காக (Equity Shares) ரூ.10 இலட்சம் அளித்துள்ளது. தற்போது இந்நிறுவனம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கிராபைட் பயன்படுத்துவோரிடம் தொடர்பு கொண்டு கிராபைட் தொழில் வளர்ச்சிக்கான பணிகளில் ஈடுபட்டு வருகிறது. மேலும் சிவகங்கைப் பகுதியில் கூட்டுமுயற்சியில் கிராபைட் திட்டங்களை அமைப்பதற்கான வாய்ப்புகளை ஆராய்ந்து வருகிறது.

**தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (டான்மாக்)**

தமிழ்நாடு அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (டான்மாக்), சேலத்தில் உள்ள மேக்னசைட் கனிமத்தை வெட்டியெடுப்பதற்காகவும் அதைக் கொண்டு மதிப்பு கூட்டப்பட்ட மேக்னசைட் பொருட்களைத் தயாரிக்கும் நோக்கத்துடனும் 1979ஆம்

[1998 மே 14

ஆண்டு ஜனவரித் திங்களில் ஏற்படுத்தப்பட்டது. ஆண்டொன்றுக்கு 30,000 மெட்ரிக் டன் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் உற்பத்தி செய்வதற்காக ரூ.8.57 கோடி செலவில் சுழற்சூளை ஒன்று 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தொடங்கி வைக்கப்பட்டது. மற்றொரு பிரிவான நிலைச்சூளை ஆலை, மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட், ரேமிங் மாஸ் ஆகியவற்றை உற்பத்தி செய்கிறது. 1997-98 ஆம் ஆண்டில் கச்சா மேக்னசைட் உற்பத்திக் குறியீட்டளவு 70,000 மெட்ரிக் டன் ஆகும். 31-3-1998 முடிய 60,525 மெட்ரிக் டன் கச்சா மேக்னசைட் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதே காலகட்டத்தில் கச்சா மேக்னசைட்டின் விற்பனைக் குறியீட்டளவு 85,000 மெட்ரிக் டன்கள் 31-3-1998 முடிய 71,445 மெட்ரிக் டன் கச்சா மேக்னசைட் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ள உற்பத்திக் குறியீட்டளவுகள் பின்வருமாறு:

(மெட்ரிக் டன்களில்).

| | |
|---|---|
| கச்சா மேக்னசைட் | 70,000 |
| முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 30,000 |
| மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 9,000 |
| ரேமிங் மாஸ் | 300 |

## தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்.

தமிழக அரசு, கரும்புச் சக்கையை முக்கிய மூலப் பொருளாகக் கொண்டு ஆண்டொன்றுக்கு 50,000 டன் செய்தித்தாள் காகிதமும், 40,000 டன் அச்சு எழுது காகிதங்களும் தயாரிப்பதற்காக கரூர் மாவட்டம் புகளூரில் ஒருங்கிணைந்த காகித ஆலை ஒன்றை நிறுவியுள்ளது.

இந்தக் காகித ஆலை 1985 ஆம் ஆண்டில் வணிக அளவிலான உற்பத்தியைத் தொடங்கியது.

### விரிவாக்கத் திட்டம் :

முதல் ஆலை செயல்படத் தொடங்கிய எட்டு ஆண்டுகால அளவிற்குள் இந்நிறுவனம் 585 கோடி ரூபாய் மூலதனச் செலவில், 90,000 டன்களாக இருந்த உற்பத்தியளவை 1,80,000 டன்களாக, அதாவது இரண்டு மடங்காக ஆக்குவதற்கான திட்டம் ஒன்றைத் தொடங்கியது.



1998 மே 14]

இந்த விரிவாக்கத் திட்டத்திற்கு உலக வங்கி 75 மில்லியன் அமெரிக்க டாலரை நேரடி வெளிநாட்டுக் கரன்சி கடனாக வழங்கியுள்ளது.

இந்நிறுவனம் 1995 நவம்பரில் மூலதனப் பங்குகளை பொதுமக்களின் விற்பனைக்குக் கொண்டு வந்து விரிவாக்கத் திட்டத்திற்கு ஒரு பகுதி நிதியாக 216 கோடி ரூபாய் திரட்டியுள்ளது. இத்திட்டச் செலவுக்கான எஞ்சிய தொகை, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, உலக வங்கி ஆகியவற்றிடமிருந்து தவணைக் கடன் பெறுவதன் மூலமும் நிறுவன நிதியை கொண்டும் ஈடு செய்யப்பட்டுள்ளது.

### செயல்பாடு மற்றும் நிதி விளைவுகள்

இந்நிறுவனம் தொடர்ந்து, கடந்த எட்டு ஆண்டுகளாகக் கணிசமான அளவிற்கு ஆதாயம் ஈட்டி, 1991 ஆம் ஆண்டிலிருந்து ஆதாயப் பங்கு அளித்துள்ளது.

1996-97 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் மொத்த இலாபம் ரூ.135.13 கோடியும் நிகர இலாபம் ரூ.17.38 கோடியும் ஈட்டி 15 சதவீத ஆதாயப் பங்கு அறிவித்துள்ளது.

### ஏற்றுமதி

கடந்த 31-3-1997 வரை 20,459 மெட்ரிக் டன் அச்சு, எழுது காகிதத்தை ஏற்றுமதி செய்து ரூ.50.28 கோடிக்கு நிகரான அன்னியச் செலாவணி ஈட்டியது. இந்நிறுவனம் வரும் ஆண்டுகளில் புதிய அங்காடிகளைக் கண்டறிந்து ஏற்றுமதி செயல்பாட்டை மேம்படுத்த உத்தேசித்துள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் 5,020 மெட்ரிக் டன் காகித்தை ஏற்றுமதி செய்து ரூ.11.22 கோடி அன்னிய செலாவணி ஈட்டியுள்ளது.

### காற்றாலை

இந்நிறுவனம், இந்திய மாற்றத் தக்க எரிசக்தி மேம்பாட்டு முகவரமைப்பிடமிருந்து Indian Renewable Energy Development Agency (IREDA) நிதியுதவி பெற்று 47.69 கோடி ரூபாய் மூலதனச் செலவில் திருநெல்வேலி மாவட்டம் தேவர்குளம், பெருங்குடி ஆகிய இடங்களில் நவீன, தூய்மைக் கேடற்ற - காற்று சக்தி ஆதாரத்தைப் பெற 15 மெகா வாட் காற்றாலைத் திட்டம் ஒன்றை நிறுவியுள்ளது. 1995-96 மற்றும் 1996-97 ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட மின் சக்தியின்

அளவு முறை 236.35 இலட்சம் யூனிட்டுகள் மற்றும் 191.65 இலட்சம் யூனிட்டுகள் ஆகும். நடப்பாண்டில், 1997 நவம்பர் வரை 147.82 இலட்சம் யூனிட்கள் மின் சக்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இறைவைப் பாசனத் திட்டம்

இந்நிறுவனத்திலிருந்து வெளிப்படும் கழிவு நீரைச் சுத்தம் செய்து 1,200 ஏக்கர் நிலத்திற்கு 2.86 கோடி ரூபாய் செலவில் இறைவைப் பாசனத் திட்டம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

மூலப் பொருட்களுக்கான கூடுதல் ஆதாரங்கள்

நடப்பாண்டில் இந்நிறுவனத்திற்குத் தேவைப்படக்கூடிய மூலப் பொருட்கள் (அதாவது கரும்புச் சக்கை) கிடைப்பதை அதிகப்படுத்துவதற்காக கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் தொகுதி II இல் பல எரிபொருள் மின்சக்திக் கொதிகலன் ஒன்றை இந்நிறுவனம் 26 கோடி ரூபாய் மூலதனத்தில் நிறுவியுள்ளது.

வேலைவாய்ப்பு

இந்நிறுவனம் சுமார் 2,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும் 5,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் அளித்துள்ளது.

வருங்காலத் திட்டங்களும், வாய்ப்புகளும்

1. மதிப்பு மிக்க (value added) பொருட்களை உற்பத்தி செய்வதற்காக, காகித இயந்திரம் 1-ஐ தரம் உயர்த்துவதற்கான தொழில் நுட்பப் பொருளாதாரக் கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

2. சர்க்கரை ஆலைகளில் மின் சக்தி உற்பத்தி செய்து இதன் ஒரு பகுதியை சர்க்கரை ஆலைகளும், நிறுவனமும் பயன்படுத்திக் கொண்டு, மற்றொரு பகுதியை மாநில மின் கட்டமைப்பிற்கு வழங்க இயலும் என்ற நிலையில் உயரழுத்த மின் சக்தி கொதிகலன்களை நிறுவுவதற்கான சாத்தியக் கூறுகளையும் இந்நிறுவனம் ஆராய்ந்து வருகிறது.

## சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் நிறுவனம்

சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் நிறுவனம், 1956 ஆம் ஆண்டு தனியார் துறையில் சரக்கு ரெயில் பெட்டிகள், இரும்பு கட்டுமானங்கள் தயாரிப்பதற்காக தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் தொழிலாளர் பிரச்சனை காரணமாக 1969-70 இல் மூடப்பட்டது. எனவே, அதில் பணிபுரியும் சுமார் 1,200 நபர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு



வழங்கும் பொருட்டு, தமிழக அரசு இந்நிறுவனத்தை 1971 ஆம் ஆண்டு தன் பொறுப்பில் ஏற்றுக்கொண்டது.

அரசு இந்நிறுவனத்தை ஏற்ற பிறகு, இந்நிறுவனத்தின் பணிகள் பல திறப்படுத்தப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்டது. நிர்வாகத்தின் தொடர் முயற்சிகளின் விளைவாக நிறுவனம் இழப்பில் செயல்படுவதிலிருந்து மீண்டு 1983-84ஆம் ஆண்டு முதற்கொண்டு ஓரளவு ஆதாயத்தை ஈட்டத் தொடங்கியது. ஆனால் 1987-88ஆம் ஆண்டு முதல் தொழிற்சாலையின் முழுத் திறன் அளவிற்கு போதிய பணித் தேவை ஆணையின்மை காரணமாக மீண்டும் இழப்பில் செயல்படத் தொடங்கியது. இந்நிறுவனத்தின் நிகர மதிப்பு எதிர்மறை நிலையை அடைந்ததனால் நிதி மற்றும் மறு சீரமைப்புக் குழுமத்திடம் மே திங்கள் 1992 ஆம் ஆண்டில் அனுப்பப்பட்டது.

இந்நிறுவனத்தை மறு சீரமைக்கும் பொருட்டு அரசு கடன் வழங்கியும், முந்தைய கடன் தொகைகளை பங்குத் தொகையாக மாற்றியும் விற்பனை வரி ஊக்கு உதவித் தொகை போன்ற சலுகை மற்றும் நிவாரணங்களை 1996 ஆம் ஆண்டில் வழங்கியது. நிறுவனத்தின் மறு சீரமைப்புத் திட்டம் நிதி மற்றும் மறுசீரமைப்புக் குழுமத்தினால் சனவரித் திங்கள் 1998 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

நிர்வாகத்தைத் தொழில் முறைப்படுத்தும் நோக்கத்துடன், தனியார் துறையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் நுட்ப வல்லுநர் ஒருவர் 1997 ஏப்ரல் திங்களில் இங்கு நிர்வாக இயக்குநராகப் பதவியேற்றார்.

இந்நிறுவனம் சீரடையவும், இலாபம் ஈட்டவும், முந்தைய இழப்புகளை நீக்கவும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. அரசு இந்நிறுவனத்தின் முன்னேற்றத்தினைத் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறது. 1996-97ஆம் ஆண்டு இந்நிறுவனத்தின் மொத்த உற்பத்தியின் மதிப்பு ரூ.18.11 கோடி. அடைந்த நஷ்டம் ரூ.4.63 கோடி. 1997-98ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் உற்பத்தி ரூ.36.20 கோடியாகவும், ஈட்டிய இலாபம் ரூ.10 இலட்சமாகவும் உயர்ந்துள்ளன. வரும் ஆண்டில் இதன் பணிகள் மேலும் சீரடைந்து இன்னும் அதிக இலாபம் கிட்டும்.

## தமிழ்நாடு உப்பு நிறுவனம்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், உப்பு உற்பத்தி செய்வதோடு சத்து கலந்த உப்புகளான அயோடின் உப்பு, இரும்பு ஊட்டச்சத்து உப்பு, இரும்பு மற்றும் அயோடின் கலந்த உப்பு, செறிவூட்டப்பெற்ற நல

உப்பு ஆகியவற்றை உற்பத்தி செய்து வருகிறது. உப்பு உற்பத்தித் திறன் தற்போதைய உற்பத்தியான 1,50,000 டன்களிலிருந்து 3,00,000 டன்களாக 2,002 ஆண்டுக்குள் அதிகரிக்கப்படும்.

2. அயோடின் கலந்த உப்பினை உற்பத்தி செய்ய போதிய உள்ளமைப்பு வசதிகளை இந்நிறுவனம் பெற்றுள்ளது. அரசின் ஆணை பெற்று அயோடின் கலந்த உப்பினை பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க உள்ளது. அவ்வாறு வழங்க, மாதம் ஒன்றுக்கு சுமார் 30,000 டன்கள் அயோடின் உப்பு தேவைப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது. இந்நிறுவனம் திருநெல்வேலி, மதுரை, திருச்சி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில், மண்டல அயோடின் கலந்த உப்பு தயாரிக்கும் தொழிற்சாலைகளை அமைத்து பெரிய அளவில் அயோடின் கலந்த உப்பினை தயாரித்து வழங்கத் திட்டமிட்டுள்ளது. கூடுதலாக 500 ஏக்கர் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்யும் பணி துவங்கப்பட்டுள்ளது.

3. 1996-97 ஆம் ஆண்டு இந்நிறுவனம் ரூ.20.46 இலட்சம் (வரி நீங்கலாக) இலாபம் ஈட்டியுள்ளது. இதன் மூலம் சேர்ந்து வந்த இழப்புத் தொகையான ரூ.12.05 இலட்சம் முழுவதும் சரிக்கட்டப்படும். மேலும், இந்நிறுவனம் தமிழக அரசிடம் பெற்ற கடன் மற்றும் வட்டி மொத்தமாக 179.34 இலட்சம் ரூபாயை 1997-98 ஆம் ஆண்டு அரசுக்குச் செலுத்தி அனைத்து நிலுவைத் தொகையையும் செலுத்திவிட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**சர்க்கரைத் தொழில்**

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் சர்க்கரைத் தொழில் முக்கிய பங்காற்றி வருகிறது. தமிழ்நாட்டில் இயங்கி வரும் 34 சர்க்கரை ஆலைகளில் கூட்டுறவுத் துறையில் 15-ம், பொதுத் துறையில் 3-ம், தனியார் துறையில் 16-ம் உள்ளன. இவ்வாலைகளின் மொத்த அரைவைத் திறன் நாளொன்றுக்கு 94,050 டன்களாகும். 31-3-1998 முடிய இவ்வாலைகள் நடப்பு அரைவைப் பருவத்தில் 76.62 இலட்சம் டன் கரும்பை அரைவை செய்து. 6.69 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்துள்ளது.

**1. புதிய சர்க்கரை ஆலைகள்**

**அ. கள்ளக்குறிச்சி-II கூட்டுறவுச் சர்க்கரை ஆலை**

நாள் ஒன்றுக்கு 2,500 டன்கள் அரைவைத் திறன் கொண்ட கள்ளக்குறிச்சி-II கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் கட்டுமானப்பணிகள்



1995ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடங்கப்பட்டு தற்பொழுது முடிவடைந்து விட்டன. இவ்வாலையை இயக்குவதற்காக இயந்திரத் தளவாடங்கள் 18.28 கோடி ரூபாய் மதிப்பிற்கு வாங்கப்பட்டன. இவ்வாலையின் திருத்திய திட்டச் செலவு 46.85 கோடி ரூபாய் ஆக இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. அரசு இது வரை தனது பங்கு மூலதனமாக 13.32 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. கரும்பு விவசாயிகளிடமிருந்து அவர்களின் பங்கு மூலதனமாக 4.39 கோடி ரூபாய் முதலீடாகப் பெறப்பட்டுள்ளது. இவை தவிர மைய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் நிதி நிறுவனங்களிடமிருந்து நீண்டகால கடன் தொகை பெறவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1997 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4ஆம் நாள் அன்று இவ்வாலை தனது சோதனை அரைவையை ஆரம்பித்துள்ளது.

(ஆ) கும்மிடிப்பூண்டி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை

2,500 டன்கள், கரும்பு அரைவைத் திறன்கொண்ட மற்றொரு ஆலையை கூட்டுறவுத் துறையில், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், புதுவயல் கிராமத்தில் நிறுவிட மைய அரசு உரிமம் வழங்கியுள்ளதைத் தொடர்ந்து இவ்வாலையின் நிர்மாணப் பணிக்காக இதுவரை 80.22 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. இவ்வாலையின் நிர்மாணப் பணிக்கென அரசு இதுவரை தனது பங்கு மூலதனமாக 7 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. அப்பகுதி கரும்பு விவசாயிகளிடமிருந்து அவர்களின் பங்கு மூலதனமாக ரூ.1.47 கோடி ரூபாயை இவ்வாலை வசூலித்துள்ளது. ஆலையின் திட்டப் பணிகளைத் திறம்படச் செயல்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கிட திருவாளர்கள் எஸ்.பி.பி.பிராஜெக்ட் அண்டு கன்சல்டன்சி நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் கூட்டுறவுத் துறையில் முன் மாதிரியானத் திட்டமாக அமைக்கப்பட்டு ஆலை செயல்பட ஆரம்பிக்கும்போதே ஆலையின் அரைவைப் பருவத்திலும், அரைவை இல்லாத பருவத்திலும் மின்சாரத்தை உற்பத்தி செய்து தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு உபரி மின்சாரத்தை வழங்கும். இதற்கானத் திட்ட மதிப்பீடு 97.43 கோடி ரூபாய் ஆகும். திட்டச் செலவு அதிகரித்துள்ள நிலையில் இத்திட்டத்தினைக் கூட்டு முயற்சியில் கும்மிடிப்பூண்டி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையையும் கூட்டு முனைவராகக் கொண்டு நிறுவலாமா என அரசு ஆய்வு செய்து வருகிறது. இவ்வாலை 1999-2000 ஆம் ஆண்டில் அரைவையைத் துவக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(2) புதிய சர்க்கரை ஆலைகள் நிறுவுதல்**

தமிழ்நாட்டில் மேலும் புதிய சர்க்கரை ஆலைகள் நிறுவிட ஊக்குவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மைய அரசு பின்வரும் இடங்களில் சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்கு முன்னுரிமைக் கடிதங்களை வழங்கியுள்ளது:

| வ.எண் | வட்டம் | மாவட்டம் | துறை |
|---|---|---|---|
| **1996-97** | | | |
| 1 | திருவிடைமருதூர் | தஞ்சாவூர் | தனியார் |
| 2 | ஆத்தூர் | சேலம் | தனியார் |
| 3 | திருக்கோயிலூர் | விழுப்புரம் | தனியார் |
| 4 | அறந்தாங்கி | புதுக்கோட்டை | தனியார் |
| **1997-98** | | | |
| 1 | வலங்கைமான் | திருவாரூர் | தனியார் |
| 2. | சங்கராபுரம் | விழுப்புரம் | தனியார் |
| 3. | அம்பாசமுத்திரம் | திருநெல்வேலி | தனியார் |
| 4 | மொடக்குறிச்சி | ஈரோடு | தனியார் |

**பெரிய மின்திட்டங்கள்**

தமிழ்நாட்டில் மிக வேகமாக வளர்ந்து வரும் மின் தேவையைச் சமாளிக்க, புதிய எண்ணூர் துறைமுகத்தை ஒட்டி, திரவ நிலை எரிவாயு (Liquefied Natural Gas) நிலையம் ஒன்றும், அதைக் கொண்டு 2,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் மின் நிலையம் ஒன்றும் அமைக்கப்படுவதற்கான சர்வதேச டெண்டர்கள் கோரப்பட்டுள்ளன, ஜூலை மாத வாக்கில் இதில் முடிவு எடுக்கப்பட்டு விரைவில் கட்டுமானப் பணிகள் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்குத் தனியார் துறை முதலீடு சுமார் 8,000 கோடி ரூபாய் வரை இருக்கும்.

தமிழ்நாட்டில் ஏராளமாகக் கிடைக்கும் கனிம வளங்களில் பழுப்பு நிலக்கரி ஒன்று. பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டத்தில் முதல் கட்டமாக சுமார் 3.5 மில்லியன் டன்கள் லிக்னைட்டை தோண்டி எடுத்து 500 மெகாவாட் மின் உற்பத்தி செய்வதற்கான



D 424, 21/1998 NO1. 52-1

திட்டம் இறுதி நிலையை அடைந்துள்ளது. ஜூன் மாதத்தில் ஒப்பந்தக்காரர் (Contractor) தேர்வு செய்யப்பட்டு, பணி ஒப்படைப்பு செய்யப்படும். அடுத்த 4 ஆண்டுகளில் 500 மெகாவாட் மின்சாரம் தமிழகத்திற்குக் கிடைக்கும். அதன்பின் படிப்படியாக மொத்தம் 1,500 மெகா வாட் அளவுக்கு இத்திட்டம் மேம்படுத்தப்படும்.

**சிறுமின் திட்டங்கள்**

மிக வேகமாக அதிகரித்து வரும் தமிழகத்தின் மின் தேவையை குறுகிய காலத்தில் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன், தமிழக மின்வாரியத்தின் சார்பில், டிட்கோ கடந்த ஆண்டு அகில உலக அளவில் அழைக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் (Tender) பேரில் 2,750 மெகாவாட் உற்பத்தி செய்வதற்கு 20 மின் உற்பத்தி நிறுவனங்களைத் தெரிவு செய்து அனுமதி வழங்கியது.

ஆயினும், இவற்றில் மத்திய அரசு 5 நிறுவனங்களுக்கு 480 மெகாவாட் அளவிற்கு மட்டுமே எரிபொருள் இணைப்பு (Fuel Linkage) வழங்கியுள்ளது. இதன் அடிப்படையில் தூத்துக்குடி (2 திட்டங்கள்), எண்ணூர் (1), கள்ளிக்குடி (1), ஓசூர் (1) ஆகிய இடங்களில் இந்நிறுவனங்கள் தேவையான நிலத்தை வாங்கி அடிப்படை வசதிகளையும், தேவையான அனுமதிகளையும் பெறும் நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

ஐந்து திட்டங்களுக்கும் எரிபொருள் ஒப்பந்தம் (Fuel Supply Agreement) சம்பந்தப்பட்ட எண்ணெய் நிறுவனங்களுடன் கையெழுத்திடப்பட்டுவிட்டன. நான்கு திட்டங்களுக்கு தமிழக மின்வாரியத்துடன் மின்சாரம் வாங்கும் ஒப்பந்தம் (Power Purchase Agreement) கையெழுத்திடப்பட்டுள்ளன. மற்றும் 5 திட்டங்களுக்கான விவர திட்ட அறிக்கைகளும் நிதி நிறுவனங்கள் ஆய்வு மதிப்பீட்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மூலதனம் மற்றும் கடன் ஆகியவை (மொத்த மதிப்பீடு சுமார் ரூ.2,000 கோடி) விரைவில் இறுதி செய்யப்பட்டு இவ்வாண்டு செப்டம்பர் மாதம் கட்டுமானப் பணிகள் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 18 மாதங்களில் இவை முடிவுற்றபின் சுமார் 480 மெகாவாட் கூடுதல் மின்சாரம் தமிழகத்திற்குக் கிடைக்கும்.

2/9099